1521

T.N.L.A. Debates

Official Report

Vol.5 No. 2

1980

C

D I
V211,31 N80
N81.5.2;1
3058

வெளியீடு 10-12-1980] [Issued 10-12-1980

1521

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை 1980 ஜூலை 22

TUESDAY 22ND JULY 1980

தொகுதி V—எண் 2—VOL. V—No. 2

©
தமிழ்நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத்துறை, சென்னை-600 009
Assembly Department, Fort. St. George, Madras-600 009.

விலை 3-15 காசுகள்] [Price Rs. 3.15 Paise

Y211.31 N88

N81.5-2:1

123058

## உள்ளடக்கம்.


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 317–329

2. உரிமைப பிரச்சினை—

இந்துப் பத்திரிகை மீதும் திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியன் மீதும்—தொடர்ச்சி. 329–330

3. அரசினர் தீர்மானம்—

இந்துப் பத்திரிகை மீதும், திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியன் மீதும் உரிமை பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெறுதல். 330

4. ஒழுங்குப் பிரச்சினை—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் .. 331–332

5. கவன ஈர்ப்புகள்—

(அ) ஈரோடு, வீரம்பாளையம் கிராமத்தில் குடிசைக்குத் தீ வைக்கப்பெற்று ஐந்து பேர்கள் மரணம் அடைந்துள்ளது குறித்து. 332–335

(ஆ) ரயில்கள் ரத்து செய்யப்பெற்றுள்ளதால் பேருந்துகளைக் கூடுதலாக விடுதல். 336–339

6. வரவு–செலவுத் திட்டம் 1980–81, வாக்கெடுப்பு—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.

(ஆ) கோரிக்கை எண் 44—எழுதுபொருள் அச்சுத்துறை. } 340–437

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி .. 340–341, 424–432

திரு. என். முத்துவேல் .. .. .. 342–345

திரு. க. பாலசுப்பிரமணியன் .. .. 345–348

திரு. எல். இளையபெருமாள் .. .. 348–357

6. வரவு–செலவுத் திட்டம், 1980–81— வாக்கெடுப்பு—தொடர்ச்சி. பக்கங்கள்
திரு. த. மாரிமுத்து .. .. .. 357–359
திரு. ரா. கிருஷ்ணன் .. .. .. 360–365
திரு. செ. குப்புசாமி .. .. .. 365–367
திரு. பொ. உத்திராபதி .. .. 367–372
திரு. சீ. சிவப்பிரகாசம் .. .. 372–375
திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன் 376–378
திரு. ப. குருசாமி .. .. .. 378–380
திரு. நன்னிலம் அ. கலையரசன் .. 380–383
திரு. எ. இராமலிங்கம் .. .. 383–386
திரு. வெ. அரங்கராசன் .. .. 386–389
திரு. ஜி. மூர்த்தி .. .. .. 389–392
திருமதி டி. யசோதா .. .. .. 392–396
திரு. பி. துரைராஜ் .. .. .. 396–398
திரு. க. பாரமலை .. .. .. 399–402
திரு. ஏ. தங்கராசு .. .. .. 402–403
திரு. பி. மொக்கையன் .. .. .. 403–405
திரு. சு. பாலன் .. .. .. 405–407
திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் .. 403–411
திரு. பூ. மு. நரசிம்மன் .. .. 411–412
திரு. ஜே. எஸ். இராசு .. .. 413–424
மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் .. 432–436
7. அறிவிப்பு—
பேரவையின் 54-வது விதியின் கீழ் உறுப்பினர்கள் கொடுக்கும் அறிவிப்புகள். 412–413
8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 437–438



## செவ்வாய்க்கிழமை, 1980 ஜூலை 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி''

நல்ல முயற்சியுடனும் நிறைந்த அறிவுடனும் இடையறாது பணியாற்றுவதால் நாட்டின் குடிமக்கள் உயர்வு அடைவார்கள்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பள்ளிகளில் 'கராத்தே' பயிற்சி.

*வினா எண் 31—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

பள்ளிகளில் மாணவர்களுக்கு 'கராத்தே' பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா.?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : இவ்வமயம் இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கராத்தே பயிற்சி பாதுகாப்பிற்கான நல்ல பயிற்சி என்று சொல்கிறார்கள். குறைந்த பட்சம் பெண்களுக்காவது அந்த பயிற்சியை பள்ளிகளிலே கல்லூரிகளிலே அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது அப்படி ஒரு திட்டம் இல்லை.

திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அப்ரூவ்ட் கேம்ஸ்' என்ற பட்டியலில் அந்தப் பெயர் இல்லாமல் இருப்பதால், விளையாட்டு நேரங்களில் அதை ''கராத்தே'' பயிற்சி தருவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்ற விவரம் அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் பள்ளி மாணவர், மாணவியருக்கு அந்தப்பயிற்சி அளிப்பது பற்றி பரிசீலனையில் இல்லாவிட்டாலும் கூட, அது நல்ல திட்டமாக இருப்பதால் வரும் காலத்தில் அந்தப் பயிற்சி அளிக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா? அடுத்து, எம்.எல்.ஏ.க்களுக்கு கராத்தே பயிற்சி அளிக்கும் திட்டத்தை அரசு கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்கள் அல்லது கல்லூரி மாணவர்களுக்கு இந்தப் பயிற்சியை பெறுகின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தர முடியுமா என்பதைப் பற்றி அரசு சிந்திக்கும். எம். எல். ஏ.-க்களைப் பொறுத்தவரையில் அவர்கள் விரும்பினால் பயிற்சி பெறுவதற்கா கான இடம் சென்னையில் இருக்கிறது. இந்தியாவில் மிகச்சிறந்த கராத்தே நிபுணர் திரு. ஆர். வி. பி. மணி இங்கே பயிற்சிப் பள்ளி நடத்திக்கொண்டு இருக்கிறார். நீங்கள் பயிற்சி பெற ஆரம்பித்தால், அமைச்சர்களும் பயிற்சி பெற வேண்டி இருக்கும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, பெண்கள் சமீப காலத்தில் சமூக விரோதிகளால் தாக்கப்படுவதும், துன்புறுத்தப் படுவதும் போன்ற பல சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன இந்த நேரத்தில் சாதாரண வீட்டுப் பெண்கள் உள்பட எல்லோரும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்கிற வகையில், அந்த இடத்திலேயே எதிரியை, தாக்கி தப்பித்துக் கொள்கிற முறையில், பெண்களுக்குப் பயிற்சி தரும் நிலையங்களை ஆங்காங்கு தனி யாக 'மாஸ் ஸ்கேலில்' அமைக்க அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தங்களுடைய தற்காப்புக்கு இதுபோன்ற பயிற்சிகள் தருவது நல் லது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் விரும்பிவந்து அவர்கள் பயில வேண்டும் என்ற நிலைமை இருந்துகொண்டு இருக்கிறது. ஆகவே, அரசைப் பொறுத்தவரையில் இதுபற்றி பரிசீலித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.



திரு. மு. ப. முனுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பள்ளிகளில் இருக்கும் விளையாட்டு ஆசிரியர்களுக்கு இந்தக் கராத்தே பயிற்சி தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தற்போது பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு என்னென்ன தெரியும் என்ற விவரம் இல்லை. சில பேருக்குத் தெரிந்து இருக்கலாம். சிலபேருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

திரு. ப. நெடுமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்குக் கராத்தே பயிற்சி அளிப்பது பற்றி இங்கே உறுப் பினர்கள் கேட்டார்கள். வெளியாரால் தாக்கப்படுகிறபோது அதைப் பயன்படுத்தினால் பரவாயில்லை. குடும்பத்திற்குள்ளே ஏற்படும் தகராறில் கணவன்மார்களுக்கு எதிரான நிலையில் அதைப் பயன்படுத்தினால், அதற்கு பாதுகாப்புத் தரப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, குடும்பங்களிலே கூட தங்களைத் காத்துக்கொள்ளக்கூடிய நிலைமை ஒரு பெண்ணுக்கு ஏற்படக் கூடும்.

தேரெழுந்தூர் அருள்மிகு ஆமருவிப்பெருமாள் ஆலயம்

*வினா எண் 32—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்பு மிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாயூரம் வட்டம் தேரெழுந்தூர் அருள்மிகு ஆமருவிப் பெருமாள் ஆலய நிர்வாக அதிகாரி மீது பொதுமக்களிடமிருந்து புகார்மனு ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மனுவின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) அருள்மிகு ஆமருவிப் பெருமாள் ஆலயத்தின் செயல் அலுவலர் மீதான புகார்களின் மீது இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துள்ளார் அவ்வலுவலர் மாற்றப்பட்டு அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நாகை துணை ஆணையர் அறிவுறுத்தப்பட்டுள் ளார்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, இந்த ஆமருவிப்பெருமாள் ஆலயத்தின் நிர்வாக அதிகாரியாகப் பணி யாற்றியவர் பெயர் என்ன? அவர்மீது என்னென்ன குற்றங்கள்

சொல்லி பொதுமக்களிடமிருந்து புகார் வந்துள்ளது? வந்த புகா
ரின் அடிப்படையில் அவரை மாற்றியிருப்பதாகத் தெரிவித்தார்
கள். அவர் மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்
கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே,
அந்த நிர்வாக அதிகாரியின் பெயர் மாணிக்கம். அவர் மீது 7
புகார்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளில் 6 புகார்கள்
ஆதாரம் இல்லை என்று விசாரணையிலிருந்து தெரியவந்திருக்
கிறது. ஒரு புகாரைப் பொறுத்தவரையில் அவர் அந்தப் பகுதி
யிலே அனுமதி இல்லாமல் கோழி, ஆடுகளை வளர்த்து வந்தார்
என்பது. அது தவறு. அதை ஒட்டி மேலும் அந்தப் பகுதி
மக்கள் புகாரையும் குறைகளையும் தீர விசாரிப்பதற்காக
அவர் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, அந்த ஆல
யத்திலே மணியமாகப் பணியாற்றிய திருநாவுக்கரசு என்பவரை
அந்த நிர்வாக அதிகாரி பழிவாங்கும் நோக்கத்துடன் நீக்கிவிட்
டார் என்பதற்காக அவர் 12—7—1980 அன்று உண்ணாவிரதம்
இருந்த தகவல் அரசுக்கு வந்திருக்கிறதா? அதன்மீது அரசு
என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற மூலக்கேள்வி
புகாரைப் பற்றியது. அந்தப் புகார்களைப் பற்றிய விளக்கமும்
பதிலும் இருக்கிறது. இப்போது ஒரு புதிய விளக்கத்தைத்
தருகிறார். அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் தர
முடியும்.

## SANDAL WOOD OIL FACTORY IN NORTH ARCOT DISTRICT

*Q. 33; THIRU G. VISWANATHAN and THIRU B. SUN-
DARAM : Will the Hon. the Minister for Information and Religious
Endowments be pleased to state:

a) whether there is a proposal to start a sandal wood oil factory
in North Arcot District: and

b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :—

(அ) ஆம்.

(ஆ) ஆண்டொன்றுக்கு 5.2 டன் சந்தனத் தைலம் எடுக்கும்
திறன் கொண்ட சந்தனத் தைலத் தயாரிப்பு ஆலை ஒன்றை
ரூ. 22.85 இலட்சம் செலவில் வட ஆற்காடு மாவட்டம் திருப்
பத்தூருக்கு அருகே அமைக்க முடிவு செய்யப்பட்டு துவக்க



நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆலைக்குத்
தேவைப்படும் சுமார் 104 டன் சந்தன மரங்கள் வனத்துறையால்
வழங்கப்படும்.

திரு. தி. அன்பழகன்: தலைவரவர்களே, திருப்பத்தூரில்
அமைக்கப்பட இருக்கிற இந்தச் சந்தனத் தொழிற்சாலை எப்
போது தொடங்கப்படும்? அதிலே எத்தனை பேர்களுக்கு வேலை
வாய்ப்பு கொடுக்கப்படும் என்ற தகவலை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே,
இந்தத் தொழிற்சாலையைத் தொடங்குகின்ற 'டான்சி' தமிழ்
நாடு சிறுதொழில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.
அவர்கள் ஆரம்ப அறிக்கையை தயாரித்துக்கொண்டிருக்கிறார்
கள். அந்த அறிக்கை கிடைத்த பிறகுதான் அந்த விவரம் கிடைக்
கும்.

திரு. சி. கோபால் : தலைவரவர்களே, இப்படி ஆரம்பிக்
கிற இந்த சந்தனத் தொழிற்சாலையில் எத்தனை பேர்களுக்கு
வேலைவாய்ப்பு அளிக்கின்ற அளவிற்கு திட்டம் இருக்கிறது
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே,
முன்னாலே கேட்ட மாண்புமிகு உறுப்பினர் இதே கேள்வியைத்
தான் கேட்டிருக்கிறார். அதே பதிலை இந்தக் கேள்விக்கும்
தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்
களே, தொழிற்சாலையை ஆரம்பிப்பதாக அமைச்சரவர்கள்
சொன்னார்கள். ஏற்கெனவே சந்தன மரங்கள் ஏற்றுமதி நடை
பெறவில்லை. இங்கே தொழிற்சாலைகள் ஆரம்பிக்க வேண்டு
மென்று மத்திய சர்க்காரிலிருந்து தகவல் வந்திருக்கிறதா?
அப்படியானால் வட ஆற்காடு மாவட்டத்திலும் சந்தன மரங்கள்
அதிகமாகக் கிடைக்கின்ற வேறு பல மாவட்டங்களிலும் சந்தன
தொழிற்சாலைகள் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே,
சந்தன மரங்களை வைத்து தொழிற்சாலைகளை ஆரம்பிக்க
வேண்டுமென்று அறிவுரைகள் அல்லது ஆலோசனைகள் மத்திய
அரசிலிருந்து வரவில்லை. ஆனால் சமீப காலத்தில் மத்திய
அரசு முழுமையாக சந்தன மரம் ஏற்றுமதிக்கு தடை விதித்திருக்
கிறது. அதற்கு அவர்கள் சொல்கின்ற காரணம், இங்கேயே உற்
பத்திச் செய்யப்பட்ட பொருட்களை அனுப்பலாம்; ஆனால் மூலப்
பொருட்களை அனுப்பக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள்.
இருந்தாலும் வருடத்திற்கு 1,500 டன் மரங்கள் சேகரிக்கிறோம்
இந்த 1,500 டன் மரங்களுக்கும் அடிப்படையான தொழிற்சாலை

களை அமைப்பது என்பது சமீபத்தில் இயலாத ஒன்று. அப்படியே ஒரு வேளை தொழிற்சாலைகளை அமைத்தாலும் மரங்களாக ஏற்றுமதி செய்யும் அளவுக்கு ஆதாயம் கிடைக்குமா என்பது சந்தேகம். ஆகவே இது விரிவாக பரிசீலனை செய்யப்பட வேண் டிய ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9. 10]

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய சந்தன மரத்தில் மைசூரிலிருந்து கிடைக்கூடிய சந்தன மரத்தை விட ஆயில் சத்து குறைவு என்று சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் அரசிடம் இல்லை.

திருமங்கலம் நகராட்சிக்குக் குடிநீர் வழங்கல்.

*வினா எண் 34— திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருமங்கலம் நகராட்சிக்கு வைகை ஆற்றிலிருந்து பாது காக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : (அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) திருமங்கலம் நகராட்சி மற்றும் வழித்தட கிராமங்களா கிய (1) முள்ளிப்பள்ளம், (2) தென்கரை, (3) மேலக்கால் மற்றும் (4) கோக்குளம் ஆகியவைகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூபாய் 62.49 லட்சத்தில் திட்டம் அமைக்கவும் மேற் கண்ட திட்டத்தை வருடத்திற்கு ரூபாய் 1.524 லட்சத்தில் பரா மரிக்கவும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மேற்கண்ட நகராட்சிக்கும், ஊராட்சிகளுக்கும் திட்டம் பற்றிய விவரங்களைத் தெரிவித்து ஊராட்சிகளின் தீர்மானம் கோரப்பட்டது. திருமங்கலம் நகராட்சி திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மற்ற ஊராட்சிகளிலிருந்து தீர்மானம் எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் நகராட்சி ஆய் வாளர் அவர்களை இத்திட்டத்தை செயல்படுத்த திருமங்கலம் நகராட்சியின் நிதி நிலைமை பற்றிய விபரம் கோரப்பட்டுள்ளது



மேற்கண்ட விபரங்கள் கிடைத்த பின்பு வாரியத்தின் ஒப்புத லுடன் அரசின் ஒப்புதலும் பெற்று திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திருமங்கலம் நகரம் காசி—கன்னியாகுமரி நெடுஞ்சாலை யிலே இருக்கின்ற வளர்ந்து வருகின்ற ஒரு நகரமுமாகும். அங்கே குடிநீர் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. அங்கே கிடைக்கின்ற தண்ணீரில் கால்சியம் கன்டென்ட் அதிகமாக இருக்கின்றது. ஆகவே நிதிநிலைமை சரியாக இல்லாத நிலை மை இருந்தாலும் கூட அதன் காரணத்தால் காலதாமதம் செய் யாமல் விரைந்து செயல் படுத்தி அம்மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதில் அரசு முனைப்பாக செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வரவர்களே, நகராட்சி ஆய்வாளர் அவர்களிடம் இத்திட்டத்தை செயல்படுத்த திருமங்கலம் நகராட்சியின் நிதி நிலைமை பற்றிய விபரம் கோரப்பட்டுள்ளது. அந்த விபரத்தைப பெற்று மற்ற பிரச்சினையும் பரிசீலனை செய்த பிறகுதான் இத் திட்டத் தைச் செயல்படுத்த முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர் களின் கருத்து எந்த அளவுக்கு சாத்தியக்கூறு என்பதையும் பரி சீலனை செய்ய வேண்டும்.

திரு. என்.எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இந்தத் திருமங்கலம் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் 1964லிருந்து பரிசீலனையில் இருந்து காலதாமதம் ஆகிக் கொண்டு வருகின்றது. எனவே, இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து மற்ற குறைபாடுகள் இருந்தாலும் கூட விரைவாக இந்த ஆண்டே இத்திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வரவர்களே, திருமங்கலம் நகராட்சி மற்றும் ஊராட்சிகளில் இருந்து வரக்கூடிய பதிலைப் பொறுத்துத்தான் அரசினுடைய முடிவு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்பியாற்றின் குறுக்கே அணைகட்டும் திட்டம்.

*வினா எண் 35— திரு. இ. முத்துராமலிங்கம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் உள்ள நம்பியாற்றின் குறுக்கே மூவாற்றங்கரை என்னுமிடத்தில் அணைகட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இத் திட்டம் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. இ. முத்துராமலிங்கம்: தலைவரவர்களே, 1964-ல் இருந்து ஒவ்வொரு முறையும் இத் திட்டம் ஆய்வில் இருக்கின்றது என்ற பதில்தான் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே நடப்பாண்டிலேயாவது இத் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே 78.5 லட்சத்தில் பூர்வாங்கத் திட்டம் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டது. அதன்படி எவ்வளவு ஏக்கருக்கு பாசன வசதி கிடைக்கும் என்றெல்லாம் ஆய்வு செய்யப்பட்டு திரும்பவும் வேறு ஏதாவது அதிகமான இடங்களுக்கு நீர் கிடைப்பதற்கான சாத்தியக்கூறு இருக்கின்றதா என்பது குறித்தும் மறு ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். அந்த ஆய்வு விரைவிலே முடிந்துவிடும். அதன் பிறகு அரசு இத்திட்டத்தை மேற்கொள்ளலாமா என்பது பற்றி முடிவு செய்யும்.

திரு. இ. முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, இத்திட்டத்தினால் சுமார் எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதைக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, திட்டமே இன்னும் ஆய்வில்தான் இருக்கின்றது. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அந்த பூர்வாங்க திட்ட அறிக்கையின் படி 300 ஏக்கர் புதிய புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கும். ஏற்கெனவே பாசன வசதி பெற்று வருகின்ற 390 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி உறுதி செய்யப்படும். மற்றும் 660 ஏக்கர் நிலத்திற்கு ஒரு போகத்திற்கு நீர் விடுவதற்குரிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கின்றது.

## தஞ்சை மாவட்டத்திற்கு மின்சக்தி வழங்கல்.

* கு. கா. வி. எண் 32 திரு எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



(அ) தஞ்சை மாவட்டத்தில் மின்சக்தி பற்றாக்குறையை போக்க தூத்துக்குடி அனல்மின் நிலையத்தின் மின்சாரம்கொண்டு வரும் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) : தூத்துக்குடி அனல்மின் நிலையம் உற்பத்தி செய்யும் மின்சாரம் உட்பட தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதும் பொதுவான ஒரு இணைப்புடன் (common grid) சேர்க்கப்பட்டு மின்பங்கீட்டு (load centres) இடங்களுக்கு அனுப்பப்படுகிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலிருந்து திருவாரூருக்கு மின்சாரம் கொண்டு வரும் பணியில் காரைக்குடி வழியாக வருவதற்கான லைன் அமைக்கும் பணி இன்னும் முடிவு பெறாமல் இருப்பதாகத் தெரிகிறது. அது எப்பொழுது முடிந்து மின்சாரம் வழங்கப்பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் முடிவு அடையும் என்று எதிர்பார்க்கப் பெறுகிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் மொத்தமாக எத்தனை ஜெனரேட்டர்கள் இருக்கின்றன. இரண்டாவது மின் உற்பத்தி திட்டம் ஆரம்பிக்கப்பெற்றுவிட்டதா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 210 மெகாவாட் கொண்ட 3 யூனிட்கள் நிறுவப்படும் என்பதுதான் இத்திட்டம. ஆக மொத்தம் 630 மெகாவாட். அதில் ஏற்கெனவே ஒரு யூனிட் இயங்க ஆரம்பித்து விட்டது. இரண்டாவது யூனிட் இந்த செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்திற்குள் வரும என்று எதிர்பார்க்கப்பெறுகிறது.

## நீதித்துறையில் நடுவர் பதவிகளை ஒரு நிலைப்படுத்தும் திட்டம்.

*கு. கா. வி. எண். 33 திரு. மா. சின்னராசு : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நீதித்துறையில் குற்றவியல் நீதிமன்றங்களில் இரண்டாம் வகுப்பு நடுவர்கள் (second class magistrates)—பதவியை முதல்

வகுப்பு நடுவர்களாக (Frist class magistrates) உயர்த்தி ஒரு நிலைப்படுத்தும் (Integration) திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் என்றால், இத்திட்டம் எப்பொழுது செயல்முறைப் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) நடைபெற்றுக் கொண்டிருக்கும் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே, ஒரு சட்டத்தை உருவாக்கி, சம்பந்தப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தை அமுல்படுத்த, அரசு தீர்மானித்துள்ளது.

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி இத்திட்டம் நிறைவேற்றப்பெறுகிற நேரத்தில் சப் மாஜ்ஸ்ரேட் கோர்ட்டாக உள்ளது முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளாக மாறுகிற அளவிற்குத் தமிழகத்தில் உயர்நிலை பெறுகிற இடங்கள் ஏதாவது உள்ளனவா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் பல இடங்கள் உள்ளன,. அது பற்றி ஒருங்கிணைப்புத் திட்டம் வந்த பிறகு முடிவு மேற்கொள்ளப் பெறும்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் வகுப்பு மாஜிட்டிரேட்டுகள் வேலை நிரந்தரம் ஆக்கப்படாமல் இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இந்த ஒருங்கிணைப்புத் திட்டம் வந்த பிறகு அந்த நிலைமை சரிசெய்யப்பெறும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலமாக முன்சீப் அதிகாரத்தை சப் மேஜிஸ்டிரேட்டுக்கு மாற்ற ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, அதிகாரத்தை இருவரும் பகிர்ந்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் இந்த ஒருங்கிணைப்புத் திட்டம் ஆரம்பிக்கப் பெற்றிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் தற்காலிகமாக



பதவியில் இருப்பதாகச் சொல்லப்பட்டது. அவர்களில் 3 ஆண்டுகளுக்கு மேலாக பணியில் இருக்கிறவர்களை சர்வீஸ் கமிஷன் மூலமாக நிரந்தரமாக்க நேர்முகத் தேர்வுக்கு அனுப்பப்படுவதைப்போல, அந்த மாஜிஸ்டிரேட்டுகளின் பதவிக்காலம் எத்தனை வருடங்களாக இருந்தாலும் அவர்கள் அனைவரையும் சர்வீஸ் கமிஷனின் நேர்முகத் தேர்வுக்கு அனுப்பி அதன்மூலம் எடுத்துக் கொள்ள அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, எவ்வளவு பதவிகள் நிரந்தரம் செய்யப்பெற வேண்டும் என்று கணக்கிடப்படுகிறதோ அவ்வளவு பதவிகளும் சர்வீஸ் கமிஷனின் மூலமாகத்தான் நிரந்தரம் செய்யப்பெறும்.

## அழகர் அணைத் திட்டம்.

*கு. கா. வி. எண். 34—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) முகவை மாவட்டம் அழகர் அணைத்திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டத்தை செயலுக்கு கொண்டு வர அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) இத் திட்டத்திற்கு வைகை நதியிலிருந்து தண்ணீர் கொடுக்க வாய்ப்பில்லாததால், வேறு எவ்வகையில் இத்திட்டத்திற்கு நீர் கொண்டு வரலாம் என்பது பற்றிய சாத்திய கூறுகள் மேற்பார்வைப் பொறியாளர் (ஆய்வு), திருச்சி, அவர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. என். பெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணைக்கட்டுத் திட்டம் 1964—ஆம் ஆண்டிலே துவங்கப் பெற்றது. ஏற்கெனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஆய்வு நடத்தி பிறகு நிறைவேற்றப்படாமல் நிறுத்தி வைக்கப்பெற்றுவிட்டது. ஆகவே, கூடியவிரைவில் இத்திட்டத்தை தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர்அவர்களே, இந்தத் திட்டம் இன்னும் ஆய்வு அளவிலேதான் இருந்து கொண்டிருக்கிறது. தவிர அரசு கொள்கை ரீதியில் ஆய்வு எல்லாம் நடத்தி திட்டம் ஆரம்பிக்கப் பெற்றுவிட்டதாக அறிவிக்கப்பெறவில்லை. எனக்கு கிடைத்திருக்கிற தகவலின்

படி வைகையிலிருந்து தண்ணீர் கொடுக்க வாய்ப்புகள் இப் பொழுது இல்லை. வேறு எங்கேனும் மேற்கு நோக்கிப் பாய்கிற நதியிலிருந்து நீரைப் பெற சாத்தியக் கூறுகள் எப்படி இருக்கிறது என்றுதான் ஆராய்ந்துக் கொண்டிருக்கிறோம்.

மேலத்தொண்டியக்காடு இறைவை பாசனத்திட்டம்.

*கு. க. வி. எண் 35—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்கங்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மேலத்தொண்டியக்காடு இறைவை பாசன திட் டத்திற்கான திட்டம் தயாராகி விட்டதா?

(ஆ) ஆம் என்றால், எப்போது நிறைவேற்றப்படும்!

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மேலத் தொண்டியக்காடு இறைவைப் பாசனத் திட்டம் ஆய்வில் உள்ளது.

(ஆ) ஆய்வுகள் முடிந்த பின்னர் தேவையான மேல் நட வடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9.20)

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, இந்த மேலத்தொண்டியக்காடு என்பது என் தொகுதியில் இருக்கக்கூடிய ஒரு கிராமம். கடலோரத் தில் அங்குள்ள நூற்றுக் கணக்கான சிறு விவசாயிகள் விவசாயம் செய்ய வேண்டுமென்று சொன்னால் ஒரு தனி நபர் தனியாக இறவைப்பாசனம் வைத்து அவர்களுக்கு தண்ணீர் கொடுத்து உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கை அவர்கள் பெற்று விடுகிறார்கள். ஆகவே இந்த விவ சாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். 1978-ம் ஆண்டி லிருந்தே இந்தத் திட்டம் பரிசீலனையில் இருந்து வருவதாக அதிகாரிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தனி நபர் தான் அதிகாரிகளைச் சந்தித்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றவிடாமல் செய்து கொண்டிருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் துரிதமாக மேலத்தொண்டியக்காடில் நீர்ப்பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்க விரைவில் நடவடிக்கைகள் எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதில் அரசு உன்னிப்பாகக் கவனம் செலுத்தி விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில்(*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமைப் பிரச்சினை.

### இந்துப் பத்திரிகை மீதும் திரு ஆர். கே. பாலசுப்பிரமணி யன் மீதும்— தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 16—7—1980 அன்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரி ராஜன் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச் சனையை எழுப்பி, அது எப்படி அவை உரிமை மீறல் ஆகிறது என்பதற்கான விளக்கமும் அளித்தார். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் விளக்கத்தையும் கேட்டு எனது தீர்ப்பை பின் தருவதாக கூறியிருந்தேன்.

இப்பிரச்சினை பேரவையில் எழுப்பப்படுவதற்கு முன்பே 'இந்து' பத்திரிகையின் ஆசிரியரிடம் இருந்து இதற்கான விளக்கம் கேட்டதற்கு பின்வரும் கடிதம் எழுதியுள்ளார்.

In the letter, the Editor has stated that—

"...The views expressed in the letter are those of Mr. Balasubramanian and do not reflect the opinion of "THE HINDU."

The intention of the correspondent appears to be not to cast any aspersion on the House, but to point out it may be incorrect to describe the Secretariat of the Legislative Assembly as a department of the Government. The letter seeks to emphosise that the Assembly Secretariat should be independent of any Government control.

We feel that the publication of the letter does not constitute a breach of privileges of the House. It is far from the intention of THE HINDU either to cause disrespect to the Members or to lower the dignity of the House and its Secretariat.

பிரசுரித்தது தவறு இல்லை என்றும், என்றும் பத்திரிகை ஆசிரியர் கூறியுள்ளார். **அது நியாயமானது** செயலகத்தில் பணிபுரிவரின் பணி விதிகள் முதலியன இப்பேரவைச் லமைப்புச் சட்டம் 187-(3) பிரிவின் கீழ் ஆளுநரால் அரசிய தலைவரைக் கலந்து இயற்றப்பட்டது ஒன்றாகும். பேரவைத் இத்துறைக்கான நிதி ஒதுக்கீடு அரசு செயலக மானியம் மேலும் சேர்க்காது, மானியக் கோரிக்கை எண்.7-ன் கீழ் கீழ் வருவதையும் இச்செயலகம் பேரவைத் தலைவரின் தனியே நடப்பதால் செயலகம் சுதந்திரமாக இயங்கவில்லையெனில் பொறுப்பில் பேரவைத் தலைவரையே சாறுவதால், பேரவைத் தலைவரையே **அது** களங்கப்படுத்துவதாக அமையும் என்பதையும் நினைவுபடுத்து கிறேன்.

உறுப்பினர் அவர்கள் விளக்கத்தையும், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் விளக்கத்தையும் கேட்ட பிறகு, மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது இப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் குற்றம் இருப்பதாகத் தெரிகிறது என்று தீர்ப்பளிக் கிறேன்.

## 3. அரசினர் தீர்மானம்.

இந்துப் பத்திரிகை மீதும், திரு. ஆர். கே. பாலசுப்பிர மணியன் மீதும் உரிமை பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு எழுப்பப்பட்டுள்ள பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் உரிமை மீறல் இருக்கிறது என்று தாங்கள் தீர்ப்பு அளித்துள்ள தால், பேரவையின் 251-வது விதியின் கீழ், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

'' திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியன் அவர்கள் 'இந்து' பத்திரிகையில் கடிதம் எழுதியதின் மூலமும், 'இந்து' பத்திரிகை அக்கடிதத்தைப் பிரசுரித்ததன் மூலமும் இப் பேரவையின் உரிமையை மீறிய செயலில் ஈடுபட்டிருப்பதால், அப்பிரச்சினை குறித்து மேலும் ஆய்ந்து அவைக்கு அறிக்கை அளிக்க வேண்டுமென்பதற்காக, இப்பிரச்சினையை, அமைக்கப் பட இருக்கும் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் '' என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.



## 4. ஒழுங்குப் பிரச்சினை.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு. ப. பொன்னுரங்கம் : பாயின்ட் ஆப் ஆர்டர், **பேரவைத்தலைவர் அவர்களே,** நான் கடந்த 4 நாட்களுக்கு **முன்பு,** இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடைகள் வெகு **வாக** பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது குறித்து ஒரு ஒத்தி **வைப்புத்** தீர்மானம் கொடுத்திருந்தேன். இந்த ஆடு மாடுகள் **வாயில்லாப் பூச்சிகள்,** அவைகளிடம் ஓட்டில்லை என்பதால் **எடுத்துக் கொள்ளப்படவில்லையா ?**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப்பற்றி கேட்க **அறைக்கு** வாருங்கள்; பேசிக் கொள்ளலாம்.

திரு. கு. ரமணி : நானும் ஈரோடு பிரச்சினையைப் பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிகழ்ச்சி நிரல் அச்சிட்டுக் கொடுத்த பிறகு தாங்கள் கொடுத்திருக்கிறீர்கள். நிகழ்ச்சி நிரல் கொடுப்பதற்கு முன்பு கொடுத்திருந்தால், .சேர்த்திருக் கலாம். உறுப்பினர்களுக்கு நிகழ்ச்சி நிரல், குறிப்புகள் எல்லாம் முன்கூட்டியே கொடுக்கப்பெற வேண்டும் என்கிறீர்கள். **அதற்காக** ஒரு இயந்திரம் வாங்கியிருக்கிறோம். சுறுசுறுப்பாக செயலகம் செயல்படுகிறது. வேகமாக அச்சட்டித்துக் கொடுக்கிறோம். நீங்களும் உங்களது அறிவிப்புகளை எல்லாம் முன்கூட்டியே செயலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். நேரம் கழித்த கொடுப்பதன் மூலம் இது போன்ற குறை பாடுகள் வந்துவிடக்கூடாது. எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிக்கப் பெற்றாக வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, **அறிவிப்புக்** கொடுப்பதற்கு முன்பு அஜெண்டா அச்சிடப்பெற்று **விட்டது** என்ற ஒரு டெக்னிகல் பாயின்டைச் சொல்கிறீர்கள். **அதைப்பற்றி** எனக்குத் தெரியாது. 3 நாட்களுக்கு முன்னே தாகவே மானியக் கோரிக்கைக்கான ரிப்போர்ட்டுகள் கொடுககப் படும் என்று அறிவிப்பு செய்தீர்கள். அதற்குப் பிறகும் முந்தா நாள் வந்தது, மறுநாள் கொடுத்திருக்கிறீர்கள். இப்படி சில விதிவிலக்கு இருக்கிறது. எனவே இதில் மட்டும் இவ்வளவு ரிஜிடாக இருந்தால் அங்கத்தினர்களுக்கு இன்டரஸ்ட் போய்விடும். எனவே, இதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் விடுதி களுக்குப் போவதற்கு முந்தி 1 மணிக்குள்ளாகவே மானியக் கோரிக்கைகளுக்கான குறிப்புகளைக் கொடுப்பதற்கான

ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதை உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். அதேசமயத்தில் உறுப்பினர்களும் கொஞ்சம் சீக்கிரமாகவே தங்கள் அறிவிப்புகளையும் கொடுத்துவிட்டால் நல்லது. இதில் திரு. ‥. ரமணி பெயரும் சேர்த்தாகிவிட்டது.

## 5. கவன ஈர்ப்புகள்.

**அ. (ஈரோடு, வீரம்பாளையம் கிராமத்தில் குடிசைக்குத் தீ வைக்கப்பெற்று ஐந்து பேர்கள் மரணம் அடைந்துள்ளது குறித்து.**

மரண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மு. அம்பிகாபதி, என். எஸ். வி. சித்தன், கே. எம். தங்கமணி கவுண்டர் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. மு. அம்பிகாபதி தீர்மானத்தை மொழிவார்கள்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஈரோடு அருகில் வீரம்பாளையம் கிராமத்தில் ஒரு வீட்டில் தீ வைக்கப்பட்டு 5 நபர்கள் மரணமடைந்தது'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே. பெரியார் மாவட்டம், அரச்சலூர் காவல் நிலைய எல்லைக்குள்ளிருக்கும் வீரப்பபாளையம் என்ற கிராமத்தில், 2—7—1980 அன்று நள்ளிரவு முத்துசாமி என்பவரது ஓலை வேய்ந்த வீடானது யாரோ சிலரால் வெளிப் புறமாகப் பூட்டப்பட்டு தீ வைக்கப்பட்டது. இதன் காரணமாக அவ்வீட்டிலிருந்த முத்துசாமி கவுண்டர் (வயது 40) அவருடைய மனைவி பாப்பம்மாள் (வயது 30) அவருடைய 8 வயது மகள், 5 வயது மற்றும் ஒரு வயதான இரண்டு மகன்கள் ஆகியோர் இறந்துவிட்டனர்.

பெரியார் மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு அங்கிருந்தவர் களிடம் மேற்படி நிகழ்ச்சியைப் பற்றி விசாரித்துள்ளார். பாசனத்திற்காக, கீழ்பவானி திட்டக் கால்வாயிலிருந்து தண்ணீரை சென்னியப்பன் என்பவரது, நிலத்தின் வழியாக முத்துசாமியின் நிலத்துக்குக் கொண்டு வருவது பற்றி இறந்த வர்களது குடும்பத்தினருக்கும் சென்னியப்பன் மற்றும் சென்னி மலை கவுண்டர் ஆகியோரது குடும்பத்தினருக்கும் இடையே



நீண்ட கால பகைமையிருந்து வந்துள்ளதாக விசாரணை யிலிருந்து தெரியவருகிறது. இச்சம்பவம் குறித்து அரச்சலூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 325/80-ல் இ.பி.கோ. 436 மற்றும் 302 பிரிவுகளின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை நடந்து வருகிறது. மேற்படி நிகழ்ச்சி யினால் வீரப்பம்பாளையம் கிராமத்திலோ அல்லது அதன் சுற்றுப் புற கிராமங்களிலோ சட்டம் ஒழுங்கு பிரச்சினை எதுவும் எழவில்லை. பதட்டமான நிலையும் ஏதும் நிலவவில்லை. எனினும் நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 9.30]

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு வீரம்பாளையம் சம்பவத்தின் மூலம் ஐந்து பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சம்பவம் நடப்பது என்பது ரொம்பவும் வருந்தத்தக்கது. இந்தச் சம்பவத்தின் தொடர்பாக அதிகாரிகள் துல்லிதமாக விசாரணை செய்ய வேண்டும். காரணம், சில சம்பவங்களில் முன் சச்சரவுகள் காரணமாக இப்படிப்பட்ட நிலைமைகளைச் செய்திருப்பார்கள் என்று போலீசார் உடனடியாக முடிவு செய்து விடலாம். இந்தச் சம்பவம் நடந்த அன்று தந்தை வீட்டுக்கு வெளியே படுத்திருக் கிறார். அவர் எந்தவிதமான சத்தமும் செய்யாமல் இருந் திருக்கிறார். துல்லியமாக காவல்துறையினர் பரிசீலித்து உண்மையான குற்றவாளி யார் என்று கண்டு பிடிக்கும் முயற்சியில் காவல் துறையினரை ஈடுபடுத்த அரசாங்கம் முன் முயற்சியில் ஈடுபடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று இது ஒரு பயங்கரமான, கேட்பதற்கே வேதனை தரத்தக்க ஒரு சம்பவமாகும். நிர பராதியாக இருக்கிற குழந்தைகள் உட்பட இறப்புக்கு ஆளாக வேண்டிய ஒரு நிகழ்ச்சி உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்று. இதைப் பொறுத்து காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கள் சென்று பார்வையிட்டு விசாரித்து வருகிறார். புலன் விசாரணை நடைபெற்று வருகிறது. சிலபேர் தலைமறை வானவர்கள் தேடப்பட்டு வந்தார்கள். திரு. சுப்பிரமணியம் என்பவர் அரச்சலூர் தோட்டத்தைச் சேர்ந்தவர், வீரப்ப பாளையம் கிராம அதிகாரியிடம் சரண் அடைந்து அவரால் காவல் நிலையத்திற்கு 11—7—1980 அன்று காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டார். அவர் கைது செய்யப்பட்டார். அவர் தந்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்டு இரண்டு பேர் திரு. ராஜன், பழனிசாமி ஆகிய இருவரும் 12—7—1980-ல் கைது செய்யப்பட்டார்கள். ஆக மூவரும் கைது செய்யப் பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். மேலும் புலன் விசாரணை தொடர்ந்து நடந்துவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று சூழ்நிலைகள், சாட்சியங்கள்

மற்றவை எல்லாம் திர விசாரித்து வழக்கை நடத்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று அந்த முயற்சியில் காவல் துறையினர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

* திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு அருகே நடந்த நிகழ்ச்சி நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சி. இது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது என்பதிலே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இந்த நிகழ்ச்சியைப் பொறுத்த அளவில் பத்திரிகையில் வரும் செய்தியைப் பார்க்கும் போது ஒரு வயதுக் குழந்தையைக் காப்பாற்றலாம் என்று சென்ற தாய் குழந்தையை அணைத்தவாறே இறந்திருக்கிறார். இதிலிருந்து அந்தச் சோகத்தை உணர முடிகிறது. இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து போலீஸ் நாய் வரவழைக்கப்பட்ட தாகத் தெரிகிறது. சென்னியப்பன் என்பவருக்கும் இவருக்கும் ஏற்பட்ட நிலத் தகராறு காரணம் என்று சொன்னார்கள். சென்னியப்பன் என்பவர் கைது செய்யப்பட்டாரா ? எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் ? யாராவது தலை மறைவாக இருக்கிறார்களா ? போலீஸ் நாய் வந்ததன் தொடர் பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாதவாறு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலி லேயே சொன்னபடி புலன் விசாரணையைக் காவல் துறையினர் தொடர்ந்து செய்து வருகிறார்கள். இது சம்பந்தமாக தடப்பட்டு வந்தவர் சுப்பிரமணியம். அவர் சொன்ன கவலின் பேரில் ராஜன், பழனிசாமி ஆகிய இரண்டு பேரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சென்னிமலை கவுண்டர் கன் ராஜன். பழனிசாமியும் அவர் மகன்தான். இரண்டு பரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மேற்கொண்டு லன் விசாரணை நடைபெற்று வருகிறது. யார் யார் இதிலே டுபட்டார்கள் என்பதை ஆராய்ந்து அவர்கள் மீது கடுமையான வடிக்கை எடுக்க காவல் துறையினர் முயன்று வருகிறார்கள்.

* திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : பேரவைத் லைவர் அவர்களே, என்னதான் ஏற்கனவே இருந்த பகை ணர்ச்சி இருந்ருக் காரணம் என்றாலும் கூட திட்டமிட்டு வாங்குகிற சதிச் செயலாகத்தான் இது இருக்கிறது என்பதை றிய முடிகிறது. எதிர் காலத்திலாவது இம்மாதிரியான பவங்கள் நடக்காத சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டும். லே குற்றவாளி கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். லே தக்க நடவடிக்கை எடுக்க அரசு கவனமாக இதைப் சீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலி லேயே குறிப்பிட்டபடி இப்படிப்பட்ட சம்பவங்கள் வராமல் தடுக்கின்ற முறையிலேதான் ஆங்காங்கு பாதுகாப்பு நட வடிக்கைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் திட்டமிட்டு இந்தக் குற்றத்தைக் குற்றவாளி செய்திருக்கிறார். வீட்டை பூட்டி உள்ளே இருக்கின்றவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் தப்பித்துக் கொள்ளமுடியாதபடி செய்திருக் கிறார்கள். வீட்டைப் பூட்டிவிட்ட காரணத்தினால் உள்ளே இருந்தவர்கள் எந்தவகையிலேயும் வெளிவரமுடியாத நிலைமையில் அத்தனை பேர்களும் இறந்து இருக்கிறார்கள் என்ற சூழ்நிலை இருக்கிறது. மேற்கொண்டு விசாரணை செய்தால் தான் உண்மையான சூழ்நிலை தெரியவரும். அவற்றின் அடிப்படை யிலே வழக்குத் தொடுக்க காவல் துறையினர் முயன்று வரு கிறார்கள்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, ஐந்து பேர்களை ஒரு வீட்டுக்குள்ளே வைத்துப் பூட்டிவிட்டு தீயிட்டுக் கொளுத் தப்பட்டது பயங்கரமான கொடுமையான நிலைமை. வீடு களிலே வைத்துப் பூட்டி தீயிட்டுக் கொளுத்தி விடுவதால் அநேக பேர்களின் உயிர் நஷ்டப்படுகிறது என்ற விஷயம் பல இடங்களிலே நடப்பதை நாம் கேள்விப்படுகிறோம். இப்படிப் பட்ட நிலைமைகள் ஏற்படாமல் தடுக்க அந்தக் குற்றவாளி களுக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும். அந்த வகையிலே அரசின் சார்பிலே உஷார் தன்மையோடு செயல் பட்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இந்த கேஸிலே முதலிலே 325 செக்ஷன் போடப்பட்டிருக்கிறது. கடைசியிலே 302-வது செக்ஷன் வருகிறது. 5 பேர்களை கொலை செய்த குற்றம் பெரிய குற்றம். அந்த முறையிலே கடுமையான தண்டனையைக் குற்றவாளிக்குக் கொடுக்கின்ற முறையிலே காலத்தை நீட்டிக் கொண்டே போகாமல் கேஸை சீர்குலைத்து சாட்சியம் இல்லாமல் செய்யக்கூடிய நிலைமை இல்லாமல் போலீஸாரை எச்சரித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 325 436, 302 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. எதிர்காலத்திலே இப்படிப் பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்கின்ற வகையில் அச் சத்தை ஏற்படுத்துகின்ற வகையிலே நடவடிக்கையை எடுத்து வருகிறோம். அந்த முறையிலே காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அதே நேரத்திலே அந்த அளவுக்கு நீதியும் கிடைக்கவேண்டும். தண்டனையும் கிடைக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் அச்சம் ஏற்படும். அந்த வகையிலே இந்த வழக்கை தீவிரமாக நடத்த அரசு முயற்சியை மேற்கொள்ளும்.

[1980 ஜூலை 22

(ஆ) ரயில்கள் ரத்து செய்யப்பெற்றுள்ளதால் பேருந்துகளைக் கூடுதலாக விடுதல்.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, '' நிலக்கரி பற்றாக்குறையின் காரணமாக தமிழகத்தில் 75 பாசஞ்சர் ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதால் பயணிகளுக்கு ஏற்படும் வசதியின்மையைத் தவிர்க்க அரசு பேருந்துகள் கூடுதலாக விடப்படவேண்டிய'' அவசியம் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தமிழகத்தில் 75 பாசஞ்சர் ரயில்கள் நிலக்கரி பற்றாக்குறையின் காரணமாக ரத்து செய்யப்பட்டது பற்றி தெற்கு இரயில்வே மக்கள் தொடர்பு அதிகாரி அவர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது, ரத்து செய்யப்பட்ட 75 பாசஞ்சர் இரயில்கள் தெற்கு இரயில்வே அதிகார வரம்புக்கு உட்பட்ட எல்லா இடங்களிலாகும். தமிழகத்தைப் பற்றிய தனியான விவரம் கிடைக்கவில்லை.

தமிழகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாக இயக்குநர்கள் தங்களின் கீழ் பணியாற்றும் கிளை மேலாளர்களுக்கு இத்தகைய சமயங்களில் தத்தம் கிளைகளிலுள்ள எல்லா உதிரி வண்டிகளையும் (Spare Buses) முக்கிய தடங்களில் இயக்கி பிரயாணிகள் தங்கள் இடங்களுக்குச் செல்ல வசதியாக் இருக்கும் பொருட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்க அறிவுரைகள் வழங்கியுள்ளனர். அதன்படி கூட்டம் நெரிசல் உள்ள தடங்களில் கிளை மேலாளர்கள் நேரில் சென்று பொதுமக்கள் தேவைக்கேற்ப பேருந்துகளை இயக்குகின்றனர். பத்தி 1-ல் கூறப்பட்டுள்ள புகார் பற்றி போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர்களிடமிருந்தோ அல்லது பொதுமக்களிடமிருந்தோ எந்த விதமான புகார்களும் அரசுக்கு வரவில்லை. இருந்த போதிலும் பிரயாணம் செய்யும் பயணிகளுக்கு எவ்வித இன்னலும் இல்லாமல் தாங்கள் செல்ல வேண்டிய ஊர்களுக்குப் பயணம் செய்ய பேருந்துகள் விடப்படுகின்றன.

[முற்பகல் 9-40]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, தென் இரயில்வேயில் 75 பாசஞ்சர் ரயில்கள் ரத்து செய்யப் பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இத்தனை ரயில்கள் என்ற கணக்கு கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். நம்முடைய தரப்பிலேயிருந்து விசாரித்தபொழுது அதிகப்படியான அளவில் தமிழகத்திலே விடப்படும் பாசஞ்சர் ரயில்கள் ரத்து செய்யப்பட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. சரியாக



தகவல் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இந்த பாசஞ்சர் ரயில்கள் ரத்து செய்யப்பட்டதன் காரணமாகக் கூட்டம் அதிகமாகி, ஓவர் லோட் ஏற்றும் அளவிற்கு நிலைமைகள் உருவாகி, அதனால் ஆக்சிடெண்டுகள் ஏற்படக்கூடிய பயங்கரமான நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, இதுவரையில் எத்தனை பஸ்கள் அதிகமாக விடப்பட்டிருக்கின்றன? அப்படிப் பற்றாக்குறை உள்ள இடங்களில் பஸ்கள் விடப்படாவிட்டால் ஆய்வு செய்து அரசாங்கம் அங்கே பஸ்களை விடுவதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இரயில் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டபொழுது, தமிழகத்தைப் பற்றித் தனியாக விவரம் அவர்களால் கொடுக்க முடியவில்லை. இருந்தாலும் இங்கே இருக்கின்ற போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாக இயக்குநர்கள் கிளை மேலாளர்களுடன் தொடர்பு கொண்டு எங்கெங்கு இதன் காரணமாகப் போக்குவரத்து நெரிசல் இருக்கிறதோ அங்கெல்லாம் வண்டிகள் விட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள். அதன்படி இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். எத்தனை வண்டிகள் என்ற விவரம் இல்லை. காரணம், போக்கு வரத்து நெரிசல் எங்கெங்கு, எந்தக் காரணத்தால் ஏற்பட்டாலும் அதைப் போக்கும் அளவிற்குப் பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. மேலும் நடவடிக்கை எடுக்க நிச்சயமாக நாங்கள் முயற்சிகள் எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, உங்களிடம் நான் ஒரு பாதுகாப்பைக் கோருகிறேன். ஏற்கனவே, கேள்வியைப் பொறுத்தவரையில் பதில் வரும் என்றுதான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருகிறோம். அப்படிக் கொண்டு வரும் நேரத்தில், விவரம் இல்லை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன், தரக்கூடிய பதிலுக்கு வேண்டிய விவரங்களை அதிகப்படியாகச் சேகரித்துக் கொடுக்க வேண்டுமென்றுதான் 54-வது விதியின் கீழ் கொண்டு வருகிறோம். ஆனால் பல கிளைகளிலிருந்து தகவல்கள் வரவில்லை என்று சொல்கிறார்கள். இது சரியானதுதானா ? அதை உங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இரயில்வேயிலிருந்து சரியான தகவல் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் எங்கெங்கு போக்குவரத்து நெரிசல் இருக்கிறது என்று கணக்கிட்டு, நம்முடைய போக்குவரத்துக் கழகங்களின் இயக்குநர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆனால் இரயில்வேயைக் கேட்டபொழுது, தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட போது, ரத்து செய்யப்பட்ட 75 பாசஞ்சர்

[திரு. சு. முத்துசாமி]· [1980 ஜூலை, 22

இரயில்கள் தெற்கு இரயில்வே அதிகார வரம்புக்கு உட்பட்ட
எல்லா இடங்களிலாகும் என்று சொன்னார்கள். தமிழகத்தைப்
பற்றிய தனியாக விவரம் அவர்களிடமிருந்து கிடைக்கவில்லை·

இருந்தாலும் போக்குவரத்துக் கழக அதிகாரிகள் அதற்
கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். எனவே, அப்
படிப்பட்ட புகார்கள் எங்களுக்கு வரவில்லை. ஆகவேதான்,
தகவல் அங்கேயிருந்து வரவில்லை என்று சொன்னேன். ஆனால்
நம்முடைய அதிகாரிகள் அதற்கான நடவடிக்கைகளை எடுத்
திருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, நான் உங்
களுடைய உதவியை நாடுகிறேன். தமிழகத்திலே டச் பண்ணக்
கூடிய இத்தனை இரயில்கள் ரத்து செய்யப்பட்டன என்று
சென்ட்ரல் கவர்ன்மென்டால் சொல்ல முடியவில்லையா ?

I seek your protection. Can there be such an administration like that?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றி மத்திய
அரசிடம் கேட்க வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : They can definitely give the
information. இத்தனை டிரெயின்கள் கேன்சல் செய்யப்பட்
டிருக்கின்றன என்ற அந்த விவரத்தை அவர்களால் கொடுக்க
முடியும். எப்படி அந்த விவரத்தைக் கொடுக்காமல் அவர்கள்
இருக்கிறார்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபோன்ற பிரச்சினை
வருகின்றபோது, முன்கூட்டியே அவர்களிடம் தகவல்களை
கேட்கச் சொல்லலாம்.

திரு. பி ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே
ஒரேயொரு விவரத்தை மட்டும் கேட்க விரும்புகிறேன். பணி
மனைகளில் உள்ள மேனேஜர்கள் இத்தனை பஸ்கள் விடப்படு
கின்றன என்ற விவரத்தை தந்திருக்க வேண்டும் அல்லவா?

மாண்புமிகு பேரவைத்தலைவர்: அந்தத் தகவல் இல்லை
என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, எங்கெங்கு இம்மாதிரி நெரிசல் இருக்கிறதோ
அங்கங்கெல்லாம் வண்டிகள் விடப்பட்டு விட்டன. குறிப்பாக
இங்கே உறுப்பினர்கள் எந்த இடத்தில் போக்குவரத்து நெரிசல்
இருக்கிறது என்று சொன்னால் நிச்சயமாக அதற்கு வேண்டிய
நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆனால் இப்பொழுது அப்
படிப்பட்ட பிரச்சினை இல்லை; அதற்கு வேண்டிய நட
வடிக்கைகள் போக்குவரத்துக் கழகங்களால் எடுக்கப்பட்டு
வருகின்றன.



1980 ஜூலை 22]

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, மெயின்
பாயின்ட் என்னவென்றால். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மெயின் பாயின்ட்
என்று இப்பொழுது எழுந்திருக்க வேண்டாம். இது சம்பந்த
பட்டவரையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்த
உறுப்பினரோடு சரி. திரு. அம்பிகாபதி அவர்கள் திடீரென்று
எழுந்து 'மெயின் பாயிண்ட்' என்று சொன்னால் என்ன
செய்வது ?

திரு. மு அம்பிகாபதி : தலைவரவர்களே, தமிழகத்தைப்
பொறுத்தவரையில் எத்தனை பாசஞ்சர் ரயில்கள் ரத்து செய்யப்
பட்டன என்ற விவரத்தை சென்ட்ரல் கவர்ன்மென்டால்
கொடுக்க முடியவில்லையே. . . . . . . .

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இது
சாதாரண விஷயம். இதற்காக அவர்கள். . . . . . . .

THIRU R. UMANATH: We are entitled to get the information.

Mr. SPEAKER: I will advise the Hon. Minister to get the information.

திரு. ரா. உமாநாத் : அந்த விவரம் கொடுக்கவில்லையே
என்று நாங்கள் கேட்கக் கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்கலாம்; ஆனால்
முறைப்படி கேட்க வேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மத்திய சர்க்காரைக்
குற்றம சாட்டுவது சரியா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டே இல்லை.
திரு. அம்பிகாபதி குற்றச்சாட்டு சொல்லவில்லை. திரு.
அம்பிகாபதி குற்றச்சாட்டு சொன்னார் என்று சொல்வது
தவறு.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : நம்முடைய
பஸ்கள் இல்லை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா இடத்திற்கும்
பஸ்கள் போய்க் கொண்டிருக்கின்றன என்று அமைச்சர் சொல்
கிறார். திரும்பத் திரும்பக் கேட்டால் அவர் என்ன செய்வார் ?
பஸ் போன இடத்திற்கு அவர்தான் போக வேண்டும்.

(6) வரவு செலவுத் திட்டம், 1980-81, வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.

(ஆ) கோரிக்கை எண் 44—எழுது பொருள் அச்சுத்துறை

கோரிக்கை எண் 31.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 31.—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 20,07,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்கள், அரிசனங்கள் ஆகியோரின் நலன் குறித்து விசாரிக்க தனி குழு அமைக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை அலைக் கழிப்பது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 20,07,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 20,07,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் அவினாசி தாலூக்காவைச் சேர்ந்த நீலகிரி மலையடிவாரம் பரணி வட்டாரத்தில் உள்ள ஆதிவாசிகள் வசிக்கின்ற நூறு முகாம்களில் எந்த அபிவிருத்தி வேலைகளும் திட்டமிட்டு நடத்தப்படாமலிருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 20,07,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.



திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அன்னூர், அவினாசி வட்டாரங்களில் உள்ள அரிசனங்கள் வாழும் பகுதியில் குடி தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 20,07,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

THIRU K. PARAMALI : To discuss policy.

I move that the allotment of Rs. 20,07,37,000 under demand No 31. Welfare of Scheduled castes and Scheduled tribes be reduced by Rs. 100.

கோரிக்கை எண். 44.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 44.—எழுதுபொருள், அச்சுத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,83,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள், அச்சுத்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,83,54,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏதாவது கூறுவதாக இருந்தால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, என்னால் இந்த அரசின் சார்பிலே முன் மொழியப் பட்ட மானியக் கோரிக்கைகளும் இந்த அரசின் கொள்கை களும் திட்டங்களும் புத்தக வடிவிலே தரப்பட்டிருக்கின்றன. அவற்றை, இந்த அவையிலே நான் ஆற்றிய உரையாக எண்ணிக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை அவையிலே விளக்குமாறு கேட்டு, இறுதியிலே என் பதில் உரையை அளிக்கின்றேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(439, 481-ம் பக்கங்களில் இணைப்பு 1, 11, ஆக அச்சிடப் பெற்றுள்ளது.)

1128/170—4

திரு. என். முத்துவேல் : சட்டப்பேரவைத் தலைவர் அவர்
களே, இந்தச் சர்க்காருக்கு வரவேண்டிய வருமானம் ரூ. 980
கோடி என்று வரவு செலவு திட்டத்திலே கணக்கிட்டிருந்தார்கள்.
அதில், குறிப்பாக, சுமார் 80 இலட்சம் மக்கள் தொகை கொண்ட
அரிசனங்களின் வாழ்வுக்காக ரூ 24 கோடி ஒதுக்கியிருக்கிருர்கள்.
அது போதாது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்
கொள்ள ஆசைப்படுகின்றேன். குறிப்பாக, அரசு வீடு கட்டும்
திட்டத்திற்காக ரூ. 1 கோடி இந்த அரசாங்கம் ஒதுக்கியிருப்பது
என்பது உண்மையாக இருந்தாலும், அதுவும் கண்துடைப்பாக
இருக்கிறது என்பதை இந்த நேரததில் நான் சுட்டிகாட்டவிரும்பு
கிறேன். ஏனெனில் ரூ. 980 கோடி வருமானமுள்ள ஒரு வரவு
செலவு திட்டத்தில், 80 இலட்சம் மக்களைக் கொண்ட மெஜா
ரிட்டி சமுதாயத்தை ஏமாற்றுவதற்காக, ரூ. 24 கோடிமட்டும்
ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் குறைவு என்றுதெரிவித்துக்
துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் 1975-
ஆம் ஆண்டு, அரிசன வீட்டு வசதி வாரியத்திற்காக, ஒரு ஆண்டில்
மட்டும் சுமார் ரூ. 12 கோடி ஒதுக்கி பல்லாயிரம் வீடுகளைக்
கட்டிக் கொடுத்தார்கள். ஆனால், இந்தச் சர்க்கார் அரிசனங்
களை ஏமாற்றுவதற்காக ஒரு திட்டத்தை வைத்துக் கொண்டு
ரூ. 1 கோடிதான் ஒதுக்கியிருக்கிறது. அதற்கு எடுத்துக் காட்ட
டாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எல்லா வாரியங்களின்
தலைமை அலுவலகங்களையும் சென்னையில்தான் பார்க்கி
றோம். ஆனால், சமுதாயத்தில் எப்படி அரிசனங்கள் ஒதுக்கப்
பட்டிருக்கிறார்களோ, அதேபோல், இந்தச் சமுதாயத்தை ஒதுக்
கியுள்ள இந்தச் சர்க்கார், ஆட்சிக்கு வந்த பிறகு, அரிசன நல
வீட்டு வசதி வாரியத்தை விழுப்புரத்திற்கு மாற்றியிருக்கிறது.

[முற்பகல் 9-50]

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், எல்லா வாரியங்
களும் சென்னையிலேயே இருக்கும்போது, இந்த ஒரு வாரியம்
மட்டும் விழுப்புரத்திலே இருக்கின்றது என்று சொன்னால்
இதுவும் தீண்டப்படாத இலாகாவாக இருக்கிறது என்பதைத்
தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக இன்று தமிழகத்திலே முதலமைச்சர் அவர்கள்
சமபந்தி போஜனம் செய்து காட்டியிருக்கிருர்கள். ஆனால் ஏற்
கனவே இருந்த காங்கிரஸ்காரர்கள் ஆண்ட காலத்தில் இதை
நடத்தி காட்டினார்கள். எனவே நமது முதலமைச்சர்
செய்து இருப்பது வெறும் கண் துடைப்பு என்று சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் அரிசனங்
களை சம்மந்தி ஆக்கிக் காட்டினார்கள். எனவே முதலமைச்சர்
அவர்களுடைய சமபந்தி போஜனம் என்பது அரிசனங்களை ஏமாற்
றுகின்ற நடவடிக்கை என்பதை அரிசன மக்களின் சார்பாகத்
தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்து அரிசன நல இலாகாவுக்கு ஒரு இயக்குநனர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த இயக்குநர் இருப்பதாலே அரிசன மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை. அவர் அங்கே ஒரு பொம்மை போல இருக்கிறார். இதை நான் சொல்லவில்லை. உங்கள் இலாகாவே சொல்லிக் கொண்டிருக்கிறது. அவருக்குப் பின்னால் ஏராளமான பேர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். தாசில்தார்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்கள் பணிபுரிகின்றார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி நிர்வாகத்தில் பணிபுரிகின்றார்கள். அவர்களை மாற்றுவதோ அல்லது வேலை வாங்குவதோ எல்லாம் கலெக்டர்கள்தான். அந்த இயக்குநருக்கு எந்தவிதமான அதிகாரமும் இருப்பதாக சட்டம் இடம் தரவில்லை. அதனால் டைரக்டர் அவர்கள் கொடுக்கின்ற திட்டங்களைச் செயல்படுத்த முடியவில்லை, அந்த இலாகாவில் இன்று ஒரு தாசில்தார் இருப்பார், நாளைக்கு வேறொருவர் இருப்பார். அவர்களை மாற்றுகின்ற விஷயம் இயக்குநருக்கே தெரியவில்லை. அவ்வளவு அதிகாரமும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கே இருக்கிறது. ரெவின்யூ இலாகாவில் இருக்கின்றது. அரிசனங்களுக்கு என்று ஒரு இலாகாவை அமைத்துவிட்டு, அந்த இலாகாவில் பணிபுரிபவர்களை மாற்றுகின்ற அதிகாரம் ரெவின்யூ துறையில் வைத்திருப்பது எந்த அளவுக்கு சரி என்று எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த விஷயம் அமைச்சர் அவர்களுக்கே தெரியாது. அவர் புதிதாக வந்தவர் என்பதால் சொல்லவில்லை. அரிசன நல அமைச்சர் அவர்கள் ஒரு கிராமத்தில் சுற்றுப்பயணம் செய்தால் அவருடன் வரக்கூடிய தாசில்தார்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் அவருக்கே தெரியாமல் கூட மாற்றப்படுகிற நிலைமை இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவை மர்ற்றுத் தலைவர் தலைமை]

அடுத்து அரிசனங்களுக்காக ஒதுக்கப்படுகின்ற இந்த 18% எல்லா இலாகாவிலும் சரியான முறையில் பயன்படுத்தப்படுவதில்லை. எல்லா போக்குவரத்துக் கழகங்களிலும் பயன்படுத்தவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள் கட்டபொம்மனாக இருந்தாலும் சரி, சேரனாக இருந்தாலும், அண்ணாவாக இருந்தாலும், பல்லவனாக இருந்தாலும் சரி அங்கே பணிபுரிகின்றவர்களில் எத்தனை சதவிகிதம் அரிசனங்கள் என்பதைப் பார்க்கவேண்டும்.

அதேபோல அரிசன மக்களுக்காக பல துறைகளிலேயும் தனியார் கல்லூரிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும், தொடக்கப் பள்ளிகளிலும், அரசு மானியம் பெறுகின்ற அனைத்துப் பள்ளிகளிலும் அரிசன மக்களுக்கு ஒதுக்கப்படுகின்ற சீட்டுக்கள், அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றனவா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் விசாரித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்து சிட்கோ. டிட்கோ போன்ற நிறுவனங்களில் ஒரு அரிசன் கூட பணிபுரியவில்லை. இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால் அரிசனங்களுக்கு இத்தனை சதவிகிதம் என்று அமைத்துவிட்டு, ஆனால் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களே இல்லை என்று சொன்னால் அமைச்சர் அவர்கள் இதை ஆராய்ந்து இந்த 18 சதவிகிதம் இருக்கிறதா என்பதைப பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 31% இருந்த நேரத்தில், அவர்கள் போராட்டம் நடத்திய காலத்தில் அந்த சதவிகிதத்தை 50% மாக ஆக்கினார் நமது முதலமைச்சர் அவர்கள். அவரை நான் கேட்டுக்கொள்வது எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தற்போது இருக்கின்ற 18% விகிதத்தில் ஒரு 2% உயர்த்தி அதை 20% ஆக்கவேண்டும் என்று ஏழை அரிசன மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த போது அரிசனங்கள் ஆலயத்தில் நுழையலாம், அவர்கள் அர்ச்சகர்களாகவும் பணியாற்றலாம் என்று சட்டத்தை இயற்றியது. அது இப்போது நடைமுறையிலே இல்லாவிட்டாலும் இந்த அரசு அதை நிறைவேற்ற வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, அரிசன மக்களுக்கு நன்மை செய்வோம் என்று விளம்பரங்கள் தான் போட்டார்களே தவிர. வேறு ஒன்றும் செய்யவில்லை என்பதை இந்த அரசாங்கத்தின் நடைமுறைகளின் மூலம் நமக்குத் தெரிகிறது.

அடுத்தடுத்துச் சொல்கிறேன், இந்த இலாகாவை ரெவின்யூ இலாகாவிலிருந்து தனியாகப் பிரித்து அமைத்தால் தான் அந்தத் துறை தன்னிச்சையாக இயங்க முடியும். அதேபோல், அரிசன நலத்துறையில் பல பாலங்கள், பள்ளிகள் கட்டப்படுகின்றன. அதையெல்லாம் அரிசன நல இலாகாவில் இருக்கின்ற சூப்பர்வைசர், ஓவர்சீயர் மேற்பார்வை செய்யவும், மற்ற வேலைகளைச் செய்யவும் என்று வைத்து இருந்தபோதிலும், அந்தப்பணியிலும் கட்டுப்பாடு ஏற்படுகின்ற முறையில், ரூ. 5000-க்கு மேல் செலவாகும் திட்டங்கள் அத்தனையும பி.டபிள்யூ.டி. இலாகா அல்லது ஹைவேஸ் இலாகாவிற்குச் சென்று, அங்கே ஒப்புதல் பெறப்பட்ட பிறகு தான் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இருக்கிறது. அந்தப் பைல் அங்கே சென்று விட்டால் மூன்று மாதம், நான்கு மாதம் என்று தடைபடுகிறது. ஆகவே, அரிசன நல இலாகா தன்னிசையாக செயல்பட முடியவில்லை.

அரிசன மக்களுக்குப் பட்டா கொடுக்கிற நேரத்திலும், ஒரு கிராமத்தில் மனைப்பட்டா கொடுக்கப்பட வேண்டும் என்று சொன்னால், அதை அரிசன நல இலாகாவில் இருக்கிற ரெவின்யூ



இன்ஸ்பெக்டர், தாசில்தார் பார்த்துவிட்டுச் சென்ற பின்னால், ரெவின்யூ இலாகா அதிகாரிகள் வந்து அதை ஒப்புக்கொண்ட பின்னர்தான் அந்தக் காரியம் நிறைவேறுகிறது. அதிலும் அவர்கள் தன்னிச்சையாக இயங்க முடியவில்லை. அதுவும் கலெக்டரின் ஆளுகையில் இருந்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் இருக்கிறபோது, இந்த மானியத்தில் எவ்வளவு செலவானாலும் அது அரிசன மக்களுக்கு நேரடியாக நல்ல முறையில் வந்து சேருவதற்கு ஒரு நல்லதொரு திட்டத்தை இந்த அரசாங்கம் செய்யவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியில் பல கிராமங்களில் குடிநீர் வசதி இல்லை. குடிநீர் வசதி இல்லாத கிராமங்களில் ஏற்கனவே கிணறு வெட்டப்பட்டு இருக்கிறது. மழையும் இல்லாத காரணத்தால் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத நிலைமை இருக்கிறது. எப்படி விவசாயிகளுக்கு கடன் ரத்து என்று சொல்லியிருக்கிறார்களோ, அதைப்போலவே அரிசனங்களுக்கு— பல ஆண்டு காலத்திற்கு முன்பே—காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயே கொடுக்கப்பட்ட கடன்கள்—திருப்பிக் கட்டமுடியாமல் இருக்கிற கடன்கள்—ஆகியவற்றையும் ரத்து செய்கிறது இந்த அரசு என்கிற ஒரு ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கத்தில் பணிபுரிகின்ற அரிசன மக்கள் வீட்டு வசதி வாரியத்தில் கட்டப்படுகிற வீடுகளை வாங்குகிறபோது 4-ல் 1 பங்குத் தொகை, மற்றவர்களைப் போல் கட்டவேண்டும் என்று சொல்கிறார்கள். அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு மட்டும், ஆரம்பத்திலேயே இந்த 4-ல் ஒரு பங்கு பணம் கட்டவேண்டும் என்பதை வலியுறுத்தாமல், அந்த மொத்த பணத்தையும் மாதாந்தர தவணைகளில் பெற்றுக்கொள்வதற்கான முறையில்— கொஞ்சம் மாதந்திரத் தவணை அதிகமாக இருந்தாலும் பரவாயில்லை— அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரிசனங்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தும் திட்டத்தை விரைவாக அமல் நடத்த வேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்பமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களால் 1980-81-ம் ஆண்டுக்கான மானியக்கோரிக்கையை சபை முன் வைத்து ஒப்புதல் கேட்டுக்கொண்டு இருக்கிற இந்த நேரத்தில், அதற்கான ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று நானும் கேட்டுக்கொண்டு, ஒரு சிலகருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

[திரு. க. பாலசுப்பிரமணியன்] [1980 ஜூலை 22

தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியாவிலேயே அரிசனங்கள் எந்த அளவிற்கு பராமரிக்கப்படுகிறார்கள், எந்த அளவிற்கு கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்பதை எல்லாம் நாட்டிலே உள்ள அனைத்துத்துறை அரசியல்வாதிகளில் இருந்து அறிவாளி கள் வரையில் எல்லோரும் அறிந்த ஒன்றாகும். ஆனால் தமிழ கத்திலே மட்டும் புரட்சித் தலைவர் ஆட்சிக்குப் பிறகு தான் அரிசனங்கள் ஓரளவு பாதுகாப்பு பெற்று இருக்கின்றனர் என் பதை இந்த நேரத்தில் பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன். இந்தச் சலுகைகளால் அவர்கள் எல்லாம் செம்மையான வாழ்வு வாழ்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1950-ம் ஆண்டில் இந்தியா பரிபூரண குடியரசான அன்றைய தினத்தில் இருந்து இன்றைய தினம் வரையில் ஏறத்தாழ 30 ஆண்டுகாலமாக அரிசனங்கள் நிம்மதியாக வாழமுடியவில்லை.

[முற்பகல் 10-00.]

அப்படி அவர்கள் வாழ முடியாததற்குக் காரணம் இன்றைய தினம் இருக்கிற எந்தச் சட்டத்தை எடுத்துக்கொண்டாலும் அது ஏட்டளவிலே இருக்கிறதே தவிர அதை செயல்படுத்துவதில்கவ னம் செலுத்தப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக இருக் கிறது. ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்தபிறகுதான் இங்கே அனைத்துக் கட்சியினரும் அனைத்துப் பிரிவு மக்களும் அரிசனங்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று பேசக் கூடிய நிலைமை வந்திருக்கிறது. காரணம் புரட்சித் தலைவர் அந்த அரிசன மக்களுக்கு நல்ல பாதுகாப்பை அளிப்பார் என்ற நம்பிக்கை அனைவருக்கும் வந்திருக்கிறது.

இங்கே சில தினங்களுக்கு முன்னால் ஒரு மாண்புமிகு உறுப் பினர் ஆங்கிலத்தில் பேசினார், அவர் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் என்று கருதுகிறேன். இந்த நாட்டிலே தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப் பட்ட, சமுதாயத்தின் அடிமட்டத்திலே இருக்கிற மக்களுக்கு நல்ல சட்டங்களைக் கொண்டுவர வேண்டுமென்றும் அதற்காகத் தான் சட்டசபை இருக்கிறது என்றும் அவர் சொன்னார். அவர் அப்படி பேசியதைப்பற்றி நான் பெருமைப்படுகிறேன். ஆனால் அவர் உண்மையிலேயே அப்படிச் செய்ய வேண்டுமென்று சொன்னரா அல்லது மனதிலே ஒன்றை வைத்து, வெளியே இப் படிச் சொன்னாரா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

புரட்சித் தலைவர் ஆட்சிக்குப் பிறகுதான் அரிசனங்கள் வாழ்க்கையிலே நிம்மதியான, பாதுகாப்பான நிலைமை ஏற் பட்டிருக்கிறது. அதற்கு முன்னால் ஏதோ விளம்பரங்கள்தான் இருக்குமே தவிர வேலை இருக்காது. ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சியில் விளம்பரம் இல்லாமல் வேலை நடக்கிறது. நான் என்னுடைய முதல் பேச்சிலேயே ஒன்றை குறிப்பிட்டேன். காந்திஜி அவர்கள் அரிசனங்களை கடவுளின் குழந்தைகள் என்று சொன்னார். ஆனால் 'ஹியூமன் சன்' (Human Son) என்று யாரும் சொல்லவில்லை. புரட்சித தலைவர் ஆட்சிக்கு வந்த பிறகு அரிசனங்களை அரசுக் குழந்தைகள் என்று சொன்னார் அதை என்னுடைய முதல் உரையிலே சுட்டிக்காட்டியிருந்தேன்.



1980 ஜூலை 22] [திரு க. பாலசுப்ரமனியன்]

இன்றைக்கு புரட்சித் தலைவர் ஆட்சியில் அரிசனங்கள் எந்த அளவுக்கு பாதுகாக்கப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு பாது காக்கப்படவும், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மேம்படவும் நல்ல பல திட்டங்களை இன்றைய தினம் நாட்டு மக்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வராமல் இருந்திருந்தால் வெறும் விளம்பரங்கள்தான் இருக்குமே தவிர அவர்களுக்காக வேலை செய்யக்கூடிய நிலைமை இருந்திருக்காது. புரட்சித் தலைவர் ஆட்சியில் நல்லமுறையில் வேலை நடக்கிறது. அதனால்தான் இன்றைக்கு நாட்டு மக்கள் எல்லோரும் புரட்சித் தலைவர் ஆட்சியை மனப்பூர்வமாக வரவேற்று, ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய தினம் புரட்சித் தலைவர் ஆட்சியிலே போடுகின்ற திட்டங்கள் முறையாக மக்களுக்குப் போய்ச்சேர வேண்டும். நல்ல திட்டங்களைப் போடுகிறார்கள்; மக்கள் அதை ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இடையிலே சில கோளாறுகள் வருகின்றன. அது நிவர்த்தி செய்யப்பட வேண்டும். பல அதி காரிகள் நல்லவர்களாக இருக்கிறார்கள். சில அதிகாரிகள் தவறு செய்கிறார்கள். ஒரு மாவட்டத்தில் அரிசன நல அதிகாரி நல்ல வராக இருந்தால் அவருக்கு கீழே இருக்கும் தாசில்தார் தவறு செய்கிறார். அதனால் சில இடங்களில் மக்களுக்குப் போகிற திட்டங்களை முறையாக அனுப்புவதில்லை. அதற்கு ஒன்றை மட்டும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அரிசனங்களுக்கு பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின் றன. அதை நிறைவேற்றுவதில் சில கண்டிஷன்கள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகளால் அரிசனங்கள் அந்த சலுகைகள் பக்கம் நெருங்க முடியாத நிலை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் 10,000 ரூபாய் கடன் வழங்க 20,000 ரூபாய் ஜாமீன் கொடுக்க வேண்டுமென்று நிபந்தனை இருக்கிறது. அந்த 20,000 ரூபாய் ஜாமீன் கொடுக்க யாரும் முன்வருவதில்லை. ஆகையால் கடன் சலுகை கிடைக்கவில்லை. அதனால் என்ன ஏற்படுகிறது, அந்த பணம் மத்திய அரசுக்கு திரும்ப அனுப்பப் படுகிறது. இப்படிப்பட்ட நிபந்தனைகளைத் தளர்த்த வேண் டும்.

இன்றைக்கு நல்ல பல திட்டங்களைப் போட்டிருந்தாலும் இன்னும் சில குறைபாடுகள் இருக்கின்றன. குறிப்பாக பல இடங் களில் அரிசன மாணவர் விடுதிகள் சரியாக இல்லை. பல இடங் களில் அந்த விடுதிகள் வாடகைக் கட்டிடங்களில் செயல்படு கின்றன. அதை மாற்றி, சொந்தக் கட்டிடங்களில் அமைக்க வேண்டும். என்னுடைய சீர்காழி பகுதியில் இரண்டு மாணவர் விடுதிகள் இருக்கின்றன. ஒன்று மாணவர் இல்லம்; மற்றொன்று மாணவியர் இல்லம். இரண்டும் வாடகைக் கட்டிடத்தில்தான் இருக்கின்றன. அப்படி இருந்தாலும் சரியான பாதுகாப்பு

இல்லை. அந்த நிலைமை மாற்றப்படுவதற்கு மும்முரமாகச்
செயல்பட்டு, அரசாங்கம் புதிய கட்டிடங்கள் கட்டித்தர வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னும் ஒரே ஒரு கருத்து. இந்தக் கருத்தை நான்
இங்கே சொல்வதற்கு சற்று சங்கடப்படுகிறேன். இருந்தாலும்
சொல்லித்தான் ஆகவேண்டும். இந்தத் தமிழகத்திலே இருக்
கின்ற சமுதாயங்களிலே நரிக்குறவா சமுதாயம் இருக்கின்றது.
அவர்கள் பிற்பட்ட சமுதாயத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.
ஆனால் அவர்களுடைய நிலைமையையும் வாழ்க்கைத் தரத்தை
யும் பார்த்தால் மிகவும் பின்தங்கிய நிலையிலே அவர்கள் இருக்
கிறார்கள். அவர்கள் மிகவும் பிற்பட்ட நிலையில் இருப்பதால்
எந்தச் சலுகைகளும் அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை.
எந்த சலுகைகள் பற்றியும் அவர்களுக்கு யாரும் விளக்கமாகச்
சொல்வதில்லை. ஆகவே அவர்கள் இன்னும் இருக்க இருக்த
கீழே போய்க்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சமுதாயத்தைத்
தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே சேர்த்து அவர்களுக்கான சலு
கைகளை அதிகப்படுத்தி அந்தச் சமுதாயத்தை ஊக்குவிக்க வேண்
டும் என்று கேட்டுக் கொண்டு இன்னும் பல கருத்துக்களைச்
சொல்லலாம் என்றாலும் நேரம இல்லாத காரணத்தால், தமிழக
அரசு நல்லபல திட்டங்களைச் செய்திருக்கிறார்கள், வரப்போகும்
காலத்திலும் நல்ல திட்டங்களைச் செய்ய இருக்கிறார்கள் என்
றும் மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சரவர்கள் கோரி
இருக்கின்ற மானியத் தொகையை அரசு வழங்கவேண்டுமென்றும்
கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பை அளித்த தலைவருக்கு நன்றி
கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, இன்று
எடுத்திருக்கின்ற இந்த அரிசன நலத்துறை கோரிக்கையிலே 19
கோடியிலிருந்து 24 கோடி ரூபாயாக அரசு அதிகப்படுத்தி இருப்
பதற்காக இந்த அரசையும் அரிசனநலத்துறை அமைச்சரவர்
களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன். ஆனால் சுதந்திரத்திற்கு
முன்பும், சுதந்திரத்திற்கு பின்பும் இருந்த அவல நிலையைப்
போக்குவதற்காக மத்திய அரசும் மாநில அரசும் எத்தனை வித
மான சட்டங்களை இயற்றினாலும் அச்சட்டங்களை சரியாக
அமல்படுத்துவதில்லை என்பதை ஒத்துக்கொண்டாக வேண்டும்.
சுதந்திரத்திற்கு முன்பே நாடு ஆண்டவன் பெயராலும், மதத்தின்
பெயராலும் சீர் கெட்டுவிட்டது. சுதந்திரத்திற்குப் பின்பும் உத்
தமர் காந்திஜியும் அண்ணல் அம்பேத்கார் அவர்களும் 1919 ஆம்
ஆண்டு முதலே வெள்ளைக்காரர் காலத்திலிருந்தே இந்த நிலைக்
காகக் குரல் கொடுத்தார்கள். இந்த நாட்டிலே இருக்கின்ற அரி
சன மக்கள் வெள்ளைக்காரர்களுக்கும், முஸ்லிம் அரசர்களுக்கும்
எவ்வளவோ பணி செய்தும் அவர்கள் அந்த மக்களை, நன்றி





கெட்ட நிலையில் விட்டுச் சென்றுவிட்டார்கள். 1932 ஆம் ஆண்டு
அண்ணல் அம்பேத்கார் அவர்களாலும், இரட்டைமலை சீனி
வாசன் அவர்களாலும் எவ்வளவோ பாடுபட்டும் இதற்கு ஒரு
முடிவு காண முடியவில்லை. இன்று எல்லா அரசியல் வாதிகளும
நிச்சயமாக இந்தச் சமுதாய மக்களுக்கு கொடுமை இருக்கின்றது
என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சுதந்திரத்
திற்குப் பிறகு அவர்களுக்கு கல்வி வகையிலே அரசு உதவிகளைச்
செய்தும், சுயமரியாதை உணர்வினை பெரியார் அவர்கள் உணர்த்
திய பிறகும இன்னும் அந்த அவல நிலை இருக்கின்றது. அதை
முடிவு கட்ட முடியவில்லை என்றால் அதற்காக வருந்தாமல் இருக்
முடியவில்லை. வருங்காலத்திலே இந்தச் சமுதாய மக்களுக்கு
வாழ்வு கிடைக்குமோ கிடைக்காதோ என்ற அச்சம் ஏற்படுகின்ற
நிலை இருக்கின்றது. ஆனால் 19 கோடியை 24 கோடியாக மாற்
றிய நிலையைப் பாராட்டுவது மட்டுமல்ல. நல்ல எண்ணம் அவர்
களுக்கு வரும் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கின்றது.

அரிசன மக்களைத் தீண்டாதவர்கள் என்று சொல்கிறார்சள்.
அதுமட்டுமல்லாமல் அரசே ஆதி திராவிடர் மக்களுக்குள்ளேயே
பள்ளர், பறையர், அருந்ததியர் ஆகியோருக்கென்று தனித்தனி
யாக பிரித்து கிணறுகள் வெட்டுவது, வீடுகள் கட்டிக் கொடுப்பது
என்ற அளவிலே செய்து வருகின்றதே, அரசுக்கு ஜாதி வேற்றுமை
மைகள் அற்ற ஒரு சமுதாயத்தை உண்டாக்குவதற்கு பயமாக
இருக்கின்றதா? ஏன் தைரியமாக அவ்வாறு பிரிக்காமல் ஏற்
பாடு செய்வதற்கு அரசு முன் வரவில்லை. சுதந்திரத்திற்குப்
பிறகு 1952 ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலும் அது காங்
கிரஸ் ஆட்சியாக இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சியாக இருந்தாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும் எந்த ஆட்சியாக
இருந்தாலும் இன்றைக்கும் கூட பள்ளர், பறையர், அருந்ததியர்
என்பவர்களுக்குள்ளே வித்தியாசம் காட்டப்படுகின்றது. ஏன்
இந்த வித்தியாசம்? எந்த வகுப்பாக இருந்தாலும் ஏன் தீண்
டாமை ஒழிப்புச் சட்டப்படி ஏன் தக்க நடவடிக்கை எடுக்கக்
கூடாது? ஜாதியின் பெயரால் சில காரியங்களைச் செய்கின்றவர்
களுக்கு உதவி செய்யாமல் இருக்கக்கூடாதா? 1955ஆம் ஆண்டு
கொண்டுவரப்பட்ட தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இருந்தும் 3
அரசுகளுமே ஜாதி இந்துக்கள் தீண்டாதோர் ஆகியவர்களுக்
கிடையே உள்ள நிலையினை மாற்றி நடவடிக்கைகள் எடுக்க
வில்லை, அதிலே அக்கறை காட்டவில்லை என்பதைச் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். ஏனென்றால் நானும் இந்தக் கொடுமை
யால் பாதிக்கப்பட்டவன். ஜனநாயகத்தின் பெயரால், தேர்தல்
அச்சத்தின் பெயரால் இந்தச் கொடுமையைச் சகித்துக்கொள்
ளக்கூடாது என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. வி. வேலப்பன்):
இன்னும் 20 பேர்கள் பேசவேண்டி இருக்கின்றது. ஆகவே
கொஞ்சம் சீக்கிரமாகப் பேசினால் நல்லது.

[1980 ஜுலை, 22

Thiru L. ILAYAPERUMAL: Sir, I am i.terested i.. the subject. Kindly permit me to take some more time.

[முற்பகல் 10.10].

ஆகவே 2,500 ஆண்டுகளுக்கு முன்பே புத்தர்பிரான் காலத்தி
லேயே இந்த தீண்டாமை என்னும் கொடுமை இருந்தது.
தீண்டாமை என்னும் வார்த்தை இந்து மதப்படி இந்த நாட்டிலே
கிடையாது. இந்து மதப்படி ரிக் வேதத்திலே தீண்டாதவன்
என்று சொன்னால் நன்றி கெட்டவன், நாய்க்கறி தின்பவன்,
அல்லது பெற்ற தாயை மனைவியாக நினைப்பவன், அல்லது
தொழுநோய் பிடித்தவன் இவர்களைத்தான் தீண்டத்தகாதவன்
என்று இந்து மதத்திலே ரிக் வேதத்திலே சொல்லப்பட்டிருக்
கிறது. ஆனால்நாம் இங்கே மனிதர்களில் சிலரை தீண்டாதவன்
என்று சொல்கிறோம்.

அது மட்டுமல்ல. ஸ்காலர்ஷிப் பாரத்திலே கூட 186 ஜாதி
பிரிவுகள் போட்டிருக்கிறது. இவைகள் தேவைதானா? பேக்
வர்டு கிளாஸ், ஷெட்யூல்ட் கிளாஸ், ஷெட்யூல்ட்டிரைப்ஸ் என்று
மூன்று பிரிவு இருக்கட்டுமே, இவை இருந்தால் போதாதா?
350 ஜாதி பிரிவுகளையும் அதிலே, அந்த பாரங்
களிலே வைத்திருக்க வேண்டுமா என்று கேட்கிறேன். அவைகளை
மாற்றுவதற்கான உத்தரவுகளை அரசு இடவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக 1948 ஆம் வருஷம் மினிமம் வேஜஸ் ஆக்ட்
என்று ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. இங்கு அந்த அரசு
அதை நிறைவேற்றியிருக்கிறது. மாநிலம் பூராவும் இருக்கிற
அந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அடிப்படைக் கூலி கிடைக்
கிறதா என்று கேட்டால், கிடையாது என்பதுதான் பதில்.
அந்தச் சட்டம் தீவிரமாக அமுல் ஆக்கப்படவே இல்லை.
அதுபோலவே சில்ட்ரன்ஸ் ஆக்ட் என்ற ஒரு சட்டம் 1951 ஆம்
ஆண்டிலே கொண்டு வரப்பட்டது. அதிலே 14 வயதிற்கு
உள்ளிட்ட குழந்தைகளை வேலை செய்யவிடக் கூடாது என்று
இருக்கிறது. ஆனால் அந்தச் சட்டம் சரியாக அமுல் ஆக்கப்
பெற்றதா? நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்வேண்டும்.
இண்டஸ்டிரியல் லேபர் என்று சொல்லப்படுகிற தொழிலாளர்
களின் குழந்தைகளுக்கு அந்தச் சட்டம் செல்லுபடியாகிறது.
அமுல் நடத்தப்பெறுகிறது. ஆனால் அக்ரிகல்சுரல் லேபர்
என்று சொல்கிற விவசாயத் தொழிலாளியின் குழந்தைகளுக்கு
அந்தச் சட்டம் செல்லுபடியாகிறதா? இல்லவே இல்லை.
ஒரு விவசாயின் அத்தனை குழந்தைகளும் வயலில் வேலை செய்
கிறார்கள்.



1980 ஜுலை, 22] [திரு. எல். இளையபெருமாள்]

அது மட்டும் அல்லாமல் அகிரிகல்சுரல் தொழில் செய்கிறவன், அந்த விவசாயி, அவனுக்கே வருடத்தில் 5 மாதம் தான் வேலை கிடைக்கிறது. மற்ற 7 மாதங்கள் வேலை இல்லாமல் சும்மா இருக்கக்கூடிய நிலை தான் இருக்கிறது. இப்போது அரசாங்கம் வேலையற்றவர்களுக்கு, 1 ரூபாய் போட்டுக் கொடுத்து, உழைப்புக்கு உணவுத் திட்டம் என்று ஒரு புதிய திட்டம் கூட கொண்டு வந்திருக்கிறார்கள். மிக நல்ல இந்தத் திட்டத்தை வரவேற்கிறேன், அந்தத் திட்டத்தை இந்த அரசு நிச்சயமாக செயல்படுத்துவார்கள் என்று நம்புகிறேன். செயல்படுத்த வேண்டும் என்று கெட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே தீண்டாமை ஒழிப்புச் சட்டத்திற்குப் பிறகு கிரைம் ஸ்பெஷல் பிளையிங் போர்டு என்ற ஒன்றை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கொண்டு வந்தார்கள். அதிலே மொத்தம் உறுப்பினர்கள் 6 பேர்கள். அவர்களுக்கு எந்தவித வாகன வசதியும் கிடையாது. என்றாவது சூப்பிரண்டென்டெண்ட் மனது வைத்து ஜீப் கொடுத்தால்தான் அவர்கள் ஊருக்குள்ளே போக முடியும். அது போல் பெரிய நகரங்களில் அதாவது சென்னை, இராமநாதபுரம் திருநெல்வேலி, தென்னாற்காடு ஆகிய மாவட்ட நகரங்களில் ஏரியாக்கள் பெரிதாக இருக்கும். கொடுக்கிற ஜீப்புக்கு 200 லிட்டருக்கு மேல் பெட்ரோல் உபயோகப்படுத்தக் கூடாது. எப்படி இந்த 200 லிட்டர் பெட்ரோல் போதும். மதுரை மாவட்டத்திற்கும், தஞ்சை மாவட்டத்திற்கும் அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுக்குத் தெரியும், இந்த சங்கடங்கள் எப்படி என்று. ஆகவே அப்படிப்பட்ட வேலைகளுக்கு கொஞ்சம் அதிகமாக பேட்ரோல் சப்ளை செய்ய உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்னை அரிசன நலத்துறை ஆபிசில் அதிகாரிகள் மொத்தம் 11 பேர்கள் இருக்கிறார்கள். அங்கே தாசில்தார் ரேங்கில் ஒருவர் கூட கிடையாது. அரிசன மாணவர்களின் ஹாஸ்டலைக் கவனிக்க அரிசன நலத்துறை டைரக்டருக்கு உத்திரவு போட வேண்டும். இப்போது கலெக்டரைப் போட்டிருக்கிறார்கள். கலெக்டருக்கு எவ்வளவோ வேலைகள். இதில் மட்டும் அவர் தனிக் கவனம் செலுத்த முடியாது. ஆகவே அரிசன நல டைரக்டரைக் கவனிக்கும்படி உத்தரவு போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அரிசனங்களின் சர்வீஸ் கண்டிஷன் என்று எடுத்துக் கொண்டால், இங்கே இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் கூட நடந்த விவாதத்தில் குவாலிபைடு கேண்டிடேட்டுகளே கிடைக்கவில்லை என்று அமைச்சர் சொன்னார். ஆனால் எனக்குத் தெரிந்து 1963ஆம் ஆண்டிலிருந்து ஒரு பையன் வேலைக்கு மனு போடுகிறான். அவனுக்கு 15 முறை இண்டர்வியூ

அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் இன்னும் ஒரு வேலையும் கிடைக்கவில்லை. அப்படி என்ன வேலைக்கு முயற்சி செய் கிறான் என்று பார்த்தால், சாதாரண பியூன் வேலை, மசால்சி வேலை. அவனுக்கு இன்று வரையிலும் கிடைக்கவில்லை. ஒரு பியூன் வேலைக்கும், மசால்சி வேலைக்கும் என்ன பிரமாதமான குவாலிபிகேஷன் வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த நிலைமைகளை அரசு போக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே மலை வாய்ப்பில், அரிசனங்களுக் கென்று There is a reservation in promotion. என்று மத்திய சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆனால் 1953 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையிலும்,

There is no re ervation even in promotion in service conditions of SC and ST. என்ற நிலைதான் இங்கு இருந்து வருகிறது.

அதைப்போலவே 1976 ஆம் ஆண்டு சிவில் ரைட்ஸ் புரொடக்ஷன் ஆக்ட் என்று சொல்லப்பட்ட சட்டம் கொண்டு வரப்பட்டது. கேஸ் போடுவதற்கு வசதி இல்லை என்றால் விவசாயிகளின் கேஸை அரசாங்கமே செலவு ஏற்று நடத்துவது நல்லது. அதில் 3 மாதம் 6 மாதம் என்று கேஸை இழுத் தடித்து, அவன் அடிக்கடி வருவதற்கு கஷ்டப்பட்டுக் கொண்டு கேஸே போட வேண்டாம் என்ற எண்ணத்திற்கு வந்து விடுவான். ஏழை எளிய விவசாயி வேறு என்ன செய்வார்? சென்னை வர அவனுக்கு பணம் வேண்டாமா? அடிக்கடி வேறு, அந்த நேரத்தில் விவசாயம் செய்தாலாவது பிழைப்பு நடக்கும், அவன் வேறு என்ன செய்ய முடியும், அலைச்சல் வேண்டாமென்று விட்டு விடுவான். கேஸே

எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால் அரசு எந்த உத்தரவைப் போட்டாலும் அதை மனிதாபிமானத்தோடு போட வேண்டும். மனிதாபிமான சிந்தனையோடு ஏழை எளியவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் தான் எந்த உத்தரவும் இட வேண்டும். கோர்ட்டுகளிலே அவர்களே அங்கே தேவன், அவர்கள் வைத்ததுதான் சட்டம் என்பது எனக்குத் தெரியும். அது வேறு விவகாரம். ஆனாலும் அரசு எந்தப் பிரச்சினையையும் மனிதாபிமானத்தோடு அணுகி முடிவு எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே விழுப்புரத்தில் நடந்த சம்பவம் அதற்கு சதாசிவம் கமிஷன் வைத்து விசாரணை செய்தார்கள். ஆனால் முடிவு என்ன கிடைத்தது? அந்த விசாரணையின்



அறிக்கையின் மீது ஏதாவது நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அந்த அறிக்கைகள் அமுல் நடத்தப் பெறவே இல்லை என்பதை தெரிவித்துக் கொண்டு, அவைகளை அமுல் நடத்த அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே கல்லூரி அரிசன மாணவர்களுக்கு உதவித் தொகை அல்லது மானியத் தொகை அளிக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். இங்கே இந்த அவையில் கூட நமது மாண்புமிகு அமைச்சர் விஜயபாரதி அவர்கள் இருக்கிறார்கள். நான் வரவேற்கிறேன். இளைஞர் அவர். மன்னிக்க வேண்டும், விஜயசாரதி அவர்கள் இருக்கிறார்கள். பெயர் பொருத்தம் சரியாக இருக்கிறது. பாரத போரிலே இருந்த விஜயனும், அவனுக்குத் தேர் ஓட்டிய சாரதியும் இங்கேயே இருக்கிறார்கள். அப்படி அவர் இங்கே இருப்பதினாலேயே, பாரதத்தில் முன்பு அரிசனங்களுக்கு இருந்த கொடுமை இவர் காலத்திலாவது தீர்ந்து விடும் என்று நம்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். அரிஜனங்களுக்குக் கொடுக்க வேண்டிய கடமைகளில் நான் தவற மாட்டேன், அவர்களுக்கு நிச்சயமாகக் கொடுப்பேன் என்று உறுதி கொடுத்தார்கள். அவ்வளவு வீரத்தோடு நிற்கிற வீரப்பன் அவர்களும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து வரும் சோமசுந்தரப் பெருமான் தஞ்சை கொடுமைகளை தெரிந்தவர்களாக இருப்பதால் அவர் களும், ஆக இந்த மூவரும் சேர்ந்து சொன்னார்கள். இன்று அரிஜனங்களுக்கு ஸ்காலர்ஷீப் கொடுப்பதில் ரூ. 3,000 என்று ஒரு லிமிட் வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு ஹையர் கிரேட் டீச்சராக ஒரு புருஷனும் மனைவியும் உத்தியோகத்தில் இருப் பார்களானால் நிச்சயமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 600-வது கிடைக்கும், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 7,200 என்று வருகிறது.

You are giving benefits to the first generation after Independence. Then what is the wrong? What is the difficulty?

குறைந்த பட்சம் ரூ. 15,000 என்று வரம்பு வைத்தால்தான் உண்மையில் அரிஜன மக்களுக்கு நல்லது செய்கிறீர்கள் என்ற எண்ணம் உருவாகும். ஆகவே ரூ. 15,000 என்று உச்ச வரம்பு இருந்தாலொழிய அரிஜன மக்களை கல்வித்துறையில் முன்னேற்றம் அடையச் செய்யவோ அல்லது பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடையச் செய்யவோ முடியாது. அதோடு கூட ஜாதிமதபேதமற்ற சமுதாயத்தையும் உருவாக்கும் எண்ணத்திற்கு அஸ்திவாரம் அமைப்பது கடினம். ஆகவே குறைந்த பட்சம் இந்த வரம்பை ரூ. 15,000 என்றாவது செய்யவேண்டும். ஆகவே நிதி அமைச்சர் அவர்கள் இதில் தக்க கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

செங்கல்பட்டு மாவட்டத்தில், இடையாத்தூரில் நடந்த
சம்பவத்தைப் பற்றிச் சொன்னார்கள். அங்கே என்ன நடந்தது
என்பது பற்றி எல்லாக் கட்சி உறுப்பினர்களும் நன்றாகச் சொன்
னார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் குரல் கொடுத்
தார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்
குரல் கொடுத்தார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்த சகோதரரும்
குரல் கொடுத்தார். திரு. ஆனூர் ஜெகதீசன் என்று நினைக்
கிறேன், அவர்களும் குரல் கொடுத்தார்கள். ஆனால் அங்கே
நடந்தது என்ன? 11-6-80-ல் தகராறு நடந்திருக்கிறது. 18-6-80
வரை யாரும் கைது செய்யப்படவில்லை. முதலில் புகார் கொடுத்த
வர்கள் அரிஜன மக்கள். 18 தேதிக்குப் பிறகு பொய்யாக
அரிஜனங்கள் தப்பு செய்தார்கள் என்று மறு பெட்டிஷன்
வாங்கி இரண்டு பேர்களுமே தவறு செய்ததுபோல் செய்திருக்
கிறார்கள். நீ அரிசி கொண்டு வா, நான் உமி கொண்டு
வருகிறேன், அரிசியையும் உமியையும் ஒன்றாகச் சேர்த்து ஊதிச்
சாப்பிடலாம் என்றால் அதனால் யாருக்கு லாபம்? அரிசி
கொண்டு வந்தவனுக்கு லாபமா அல்லது உமி கொண்டு வந்த
வனுக்கு லாபமா? எந்த அதிகாரியும் தவறு செய்த இடத்திற்கு
நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற வரையில் ஜில்லா
கலெக்டரோ அல்லது ஜில்லா சூப்பிரண்டெண்டோ அந்த இடத்
திற்கே போகவில்லை. (மணியடிக்கப்பட்டது.) அந்த ஊர்
அரிஜனங்கள் பொருளாதாரத்தில் உயர்ந்தவர்கள். அந்த
ஊரில் ஒரு அரிஜன் பூசணிக்காயைத் திருடி விட்டான் என்பதற்
காக விதைகளை எண்ணி விதைகளுக்குத் தகுந்த பணத்தைக்
கொடுத்திருக்கிறார்கள். ஆகவே நான் சொல்ல விரும்புவது,
தவறு செய்பவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க
வேண்டும். அரசு என்று நான் சொல்லும்போது அரசு அதிகாரி
களைச் சொல்கிறேன்.

சர்வீஸ் கண்டிஷன்ஸ். ஐ. ஜி. ஆப் ரெஜிஸ்ட்ரேஷன்
ஆபிசில் 1972-73-ல் 122 பேர்களுக்கு உத்தியோக உயர்வு
அளிக்கப்பட்டது. அரிஜன மக்கள் 80 பேர்கள் இருந்தார்கள்.
இந்த 80 பேர்களில் ஏழு பேர்களுக்குக்கூட உத்தியோக உயர்வு
கொடுக்கப்படவில்லை. மாறாக சென்னை, எக்மோர்
பகுதியில் உத்தியோக உயர்வு கொடுக்கப்பட்ட சுலோசனா
என்ற அம்மையார் இருந்தார். அவரை ரிவர்ட் செய்து அங்
கிருந்த ஹெட்கிளார்க்குக்கு உயர்வு கொடுத்தார்கள். இதுபற்றி
அன்றைக்கே அரசுக்கு எழுதினேன். இன்றுவரை உத்தரவு
Reservation in promotion இருந்தும் இதில் அரசாங்கம் கவனம்
செலுத்தவில்லை.

சிதம்பரம் நந்தனார் பாடசாலையில் செய்ய வேண்டிய
நல்ல காரியங்களைச் செய்யவில்லை. 27—12—77-ல்
though an order has come from Centre to all Ministries and Heads of Departments.





நம் மாநில அரசு கவனம் செலுத்தி அந்த உத்தரவுக்குத் தகுந்தபடி செய்யவில்லை. 21—1—78-ல் கல்வித்துறைக்கு கருணையோடு பணம் கொடுத்து உதவி செய்பவர்கள் அரிஜன மக்களில் படித்தவர்களுக்கு, அவர்கள் பெற்ற அறிவிற்கேற்ப தகுந்த வேலைகள் கொடுப்பதில்லை. ஆனால் ஜூனியர் மோஸ்ட்டான ஒருவரை (ப்ரொபஸர்) அன்ட் ஹெட் ஆப் தி டிப்பார்ட்மென்டாகப் போட்டு இருக்கிறார்கள். ஆனால் அரிஜன வகுப்பைச் சார்ந்தவர் வெளிநாடு சென்று படித்துவிட்டு வந்தவருக்கு அந்த வாய்ப்பு தரப்படவில்லை.

Reservation to SCs. and STs for posts to be filled by deputation or by transfer

[முற்பகல் 10.20].

அதைப் போலவே தமிழ்நாட்டிலே முன்பிருந்த அரசு 18% ஷெட்யூல்ட் வகுப்பிற்கும், 5% ஷெட்யூல்ட் டிரைப்பிற்கும் ....................

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. வி. வேலப்பன்) :</u> இன்னும் நீங்கள் 5 நிமிடங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் பார்டியிலே பேசுபவருக்கு குறைந்துவிடும். நேரம் இல்லை.

<u>திரு. எல். இளையபெருமாள் :</u> ஆகவே, இப்படி 18% 5% என்று சொல்லப்பட்டிருந்தும். இந்த சதவீதம் கொடுக்கப்படவில்லை. இவர்களுக்கு குறைந்த பட்சம் 25% கொடுக்கப்பட வேண்டும். நாம் கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு, சுதந்திரம் கேட்டு சுதந்திரம் பெற்றோம். ஒரு நண்பர் அரிசன் என்று சொன்னார். இந்த அரிசன் என்ற வார்த்தையை இந்த அரசு ரிகக்னைஸ் செய்யவில்லை. இந்த வார்த்தையை காந்தி சொல்லவில்லை. குஜராத்திலே ஒரு சந்நியாசி சொன்னார். ஆனால், அம்பேத்கார் அவர்கள் இந்த ஷெட்யூல்ட் வகுப்பிலே 186 சாதிகள் இருக்கின்றன. ஆகவே, இதை, இந்த பாரத்தை சிம்பிளிபை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். இந்தத் துறைக்கு இளைஞராக இருக்கின்றவர் பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தினால், இதைக் கருத்திலே கொண்டு, இதை காபினெட்டிலே வைத்து இதற்கு ஒரு நல்ல நடவடிக்கை எடுக்கவேண்றும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரிசன நலத்துறைக்கு அதிக பணம் ஒதுக்கியிருந்தாலும், அவைகள் நல்லமுறையிலே செலவிடப்படுகின்றதா என்பதைப் பார்க்க வேண்டும். வெள்ளைக்காரனால் ஒதுக்கப்பட்ட நிலங்களிலே அரிசனங்கள் அல்லாதவர்கள் நிரம்ப இருக்கிறார்கள். குறிப்பாக, பூந்தமல்லி போன்ற இடத்தில் அந்த நிலம் அரசாங்கத்தால் வாங்கப்பட்டு, இந்த இடத்திலே

நான்கு அரிசனங்களில்லாதவர்கள் பலாத்காரமாக உட்கார்ந்து கொண்டு, அவர்களை வெளியேற்ற முடியவில்லை. அது போலவே, இடக்காட்டூர் சீக்கனாம் குப்பம் போன்ற பல இடங் களில் இருக்கிறது. 70 மைல் நடந்து வந்து சொல்லிய இடத்திலும் இவர்களுக்கு குறைந்த பட்ச கூலியும் கொடுக்கப் படுவதில்லை. இது குறித்து அமைச்சர் அவர்களுக்கும் மகஜர் எழுதிக் கொடுத்தும், இதுவரை அந்த கிராமத்தில் இந்த நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது. அதுபோலவே, சேலத்திலே கல்லூரியிலே படிக்கின்ற பிள்ளைகள் ஸ்காலர்ஷிப்பிற் காக கையெழுத்து கேட்டால், மறுக்கப்படுகிறது.

நான் இந்த அரசைப் பாராட்டுகின்ற நிலையிலே இருந் தாலும், 19 கோடி, 24 கோடி என்று நிதி ஒதுக்கியிருந்தாலும், அவைகள் நடைமுறை உபயோகத்திலே உத்தியோகத் துறைக்குப் பயனுள்ளதாக இருக்கின்றதா என்பதைப் பார்க்கவேண்டும். தென் ஆற்காடு, மதுரை, செங்கற்பட்டு போன்ற மாவட்டங் களில் இன்னும் இந்த அவல நிலை தொடர்ந்து இருந்து கொண்டு தான் இருக்கிறது. அங்குள்ள அரிசனப் பள்ளிகளில் வாத்தியார் 6 பேர்கள் இருப்பார்கள் : ஆனால் 2 மேஜை, 2 நாற்காலி தான் இருக்கும். இதைப்பற்றி அரிசன நலத் துறையைக் கேட்டால், அவர்கள் டைரக்டரைக் கேட்க வேண்டும். டிபார்டு மென்ட் செகரட்டரி உத்தரவிட வேண்டும் என்று சொல்லு கின்ற நிலைமைதான் இருக்கிறது. அவர்களே வாங்கிக் கொள் கின்ற நிலைமை இல்லை. இந்த நிலை இல்லாமல், இதை டீ-சென்ட்ரலைஸ் பண்ணிக் கொடுக்கவேண்டும். அல்லது அவர்களே வாங்கிக் கொள்வதற்கு வகை செய்ய வேண்டும். அதேபோல், புத்தகங்கள், வாங்குவதற்குகாக பணம் கொடுக்கப் படுகிறது. ஆனால், புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றதா என்றால், பல இடங்களில் கொடுக்கப்படாத அவல நிலைதான் இருக்கிறது. இந்த அவல நிலையைப் போக்க வேண்டும்.

தீண்டாமை போன்ற கடுமையான சட்டங்கள் இருந்தும், இடையாத்தூர் அதேபோல், செங்கற்பட்டு ஜில்லா, திருவள் ளூர் தாலூகா, சென்னராயன்பாளையம் போன்ற இடங்களில் அரிச்சந்திரா நாடகம் நடத்தப்படுகிறது. அந்த அரிச்சந்திரா நாடகத்தின் பெருமையை உணர்கிறேன். உண்மைக்காக தியாகம் பண்ணுகிறான். உண்மையான நடவடிக்கையை எந்த அரசு செய்தாலும், அடுத்த தேர்தலுக்கு வரமுடியாது என்பதை எல் லோரும் உணர்வார்கள் ; அரசியல்வாதிகள் உணர்வார்கள். ஆகவே, உண்மையையே அழிக்கின்ற நிலைக்கு போகக்கூடாது. அப்பேர்ப்பட்ட அரிச்சந்திரா நாடகத்திலே ஒரு அரிசனிடம், அரிச்சந்திர மகாராஜா வேலைக்குப் போகிறார். அதுவும் பணமல்ல ; பவுன் கொடுக்கப்படுகிறது. யாரோ எழுதி இருக்கிறார்கள். நம்புகிறீர்களோ, நம்பவில்லையோ, இருக்கிற கதையை நான் சொல்கிறேன். பவுன் கொடுத்து வாங்கிய பொருளாதாரத்தில் முன்னேற்றமாக இருந்த அரிசன சமுதாயம்



இன்றைக்கு பிச்சைக்காரர்களாக நடுத் தெருவிலே இருக்கிறார்கள். அந்த கோஷத்தின் கடைசி எல்லையில், நான் பச்சையாகவே சொல்கிறேன். வெட்டியான் என்றும், பறையன், பறைச்சி என்றும் சொல்லி எங்கு பார்த்தாலும் நாடகம் ஆடுகிறார்கள். அப்படி ஆறுடுகிறபோது, ஒரு சமுதாயத்தை இழிவு படுத்துகின்ற நிலைமை, ஒரு மதத்தை இழிவு படுத்துகின்ற நிலைமை, யார் செய்தாலும் மனத்தை புண்படுத்துகின்ற நிலைமை இருக்கக்கூடாது. இந்த அரசின் மீது உள்ள நம்பிக் கையால் சொல்கிறேன், உடனடியாக இதைத் தடை செய்ய வேண்டும். அது மாத்திரமல்ல. அந்த நாடகத்தை பார்க்கப் போகமாட்டோம் என்று சொன்ன குற்றத்திற்காக, திருவள்ளூர் தாலூகா, சென்னராயன்பாளையம் என்ற ஊரிலே உள்ள அரிசன மக்கள் இது தங்களை அவமானப்படுத்துகிறது, பார்க்க மாட்டோம் என்று சொன்ன ஒரே குற்றத்திற்காக, ராத்திரி வீடு புகுந்து அடிக்கப்பட்டு, அவர்கள் மீது கேஸ் போடப் பட்டிருக்கிறது. அங்கிருந்த ஒரு கல்லூரி மாணவனையும், ஆசிரிய ரையும் பிடித்து பொய் கேஸ் தொடரப்பட்டு, 10 நாட்களுக்கு முன்பு கடிதம் டிபுடி கலெக்டருக்கும், டிபுடி சூபரின்டெண்டுக்கும், சூபரின்டெண்டுக்கும் கொடுத்தும், அவர்கள் மீது தவறு இல்லை என்று சொன்ன பிறகும், இன்றைக்கு இரு சாரார்கள் மீதும் 107 செக்‌ஷன் கேஸ் போடப்பட்டும், கண்டிஷன் பெயில் கொடுக்கப்பட்டும் இருக்கிறதே தவிர, அரசு செய்கிற, சொல் கிற நம்பிக்கையில் அதிகாரிகளுக்கு கவனம் இல்லை. இந்துக்கள் என்ற ஒரே காரணத்திற்காக அல்லது ஏழைமகன் என்ற ஒரே காரணத்திற்காக அவனுக்கு உதவி மறுக்கப்படுகிறது. இந்த அவல நிலையைப் போக்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொண்டு, இந்த சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர் களுக்கு நன்றி சொல்லி என் வார்த்தைகளை முடித்துக் கொள்கி றேன். வணக்கம்.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கிற 'அரிசன - பழங்குடி மக்கள் நலன்' மானியக் கோரிக்கையில் கலந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அரிசன மக்களின் நலன்களுக்காக இந்த ஆண்டு 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும், அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திற்கு 320 லட்ச ரூபாய் ஒதுக்கியும், துப்புறவுப் பணியாளர் கள் பணி நிலையை மேம்படுத்துதல், குடிநீர் வசதி, மின் வசதி, சமுதாய நலக் கூடங்கள், சமுதாய நிலையங்கள், துணி வெளுக்கு மிடங்கள், தீண்டாமை ஒழிப்பு, கலப்புத் திருமணங்கள் போன்ற திட்டங்களை சிறப்பாக வகுத்தும், அத்திட்டங்களை நிறைவேற்று வதில் முனைந்தும் செயல்படுகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள பெரிதும் கடமைப்பட்டிருக் கிறேன்.

மேலும் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் அரிசன குடியிருப்புகளில் சாலை அமைத்தல் குடிநீர் வசதி செய்தல், இடுகாட்டிற்கு சாலை அமைத்தல் ஆகிய பணிகளுக்காக 1980-81-ல் 75 லட்சம் ரூபாய் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதற்கும், அரிசன வீட்டு வசதி மேம்பாட்டு வாரியத்தில் பங்கு மூலதனம் ஈடுபடுத்த ரூபாய் 100 லட்சம் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளதற்கும் இந்த அரசிற்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்வது என்னுடைய நீங்காத கடமையாகும்.

அரசுப் பணிகளில் 18 விழுக்காடு நிறைவேற்றப்படுகிறதா என்பதற்கு விவரக் கணக்குக் கோரி இலாகாக்கள் கண்காணிக்கப்படுவதற்கும் ஏனைய பிற அரசுகளைக் காட்டிலும் தனிக் கவனம் செலுத்தி மிகவும் அக்கறை கொண்டு அரிசன-பழங்குடி மக்களுக்கு ஒதுக்கிய பிரதிநிதித்துவம் குறித்து ஆராய மாண்புமிகு முதல்வரைத் தலைவராகக் கொண்டு உயர்நிலைக்குழு ஒன்று செயல்படுவது அறிந்து, இந்த அரசு குறித்து, பெருமைப்படுகிறோம், பெருமிதம் கொள்கிறோம்.

அதே நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரிசன மக்களின் இட ஒதுக்கிடாக 18 விழுக்காடு என்றிருப்பதை சிறிது உயர்த்தும்படி கோரும் தாழ்த்தப்பட்ட மக்களின் விண்ணப்பங்களை தாயுள்ளம் கொண்ட வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் பரிவோடும் கருணையோடும் பரிசீலனை செய்வார்கள் என்று நான் மனமாற நம்புகின்றேன்.

கீரனூரில் ஹாஸ்டல் கட்டிடம் கட்டுவதற்கு ஆறு ஆண்டுகளுக்குமுன் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் பேரில் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. விரைவில் ஹாஸ்டலைக் கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிள்ளுகோட்டை, வெள்ளனூர், ஆலூர் போன்ற இடங்களில் புதிய விடுதிகள் அமைக்கும்படி கோருகிறேன். வேதாரண்யம் தொகுதி மணக்குடியில் ஒரு தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதி ஒன்று அமைக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மாணவர்கள் நலனில் அக்கறை கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் விடுதியில் பயிலும் மாணவ, மாணவியருக்கு இறைச்சி, முட்டை, பால் வழங்கிட ஏற்பாடு செய்தார்கள். மாணவர்களுக்கு சத்து உணவு இல்லாத காரணத்தால்தான் படிப்பில் சிறப்பம்சம் பெற முடியவில்லை என்பதை உணர்ந்து கொண்டு வந்த இந்தத் திட்டம் சரியாக நடைபெறவில்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். சில கண்காணிப்பாளர்கள் பாதிக்குப் பாதிதான் இறைச்சி, பால், முட்டை வழங்குகிறார்கள். ஆனால், வெகுசிலர் எதுவுமே போடாமல் தூர இடங்களுக்கு உல்லாசப் பயணம் அழைத்துப் போவதாக மாணவர்களிடம் ஆசை காட்டி ஆண்டு இறுதியில் இரண்டு நாள் பயணம் செய்துவிட்டு நடத்தும் மோசடியும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.



அதே போன்று அரிசன நலத்துறையில் நடைபெற்றுவரும் காண்டிராக்டுகளும் இதே கதிதான். தாழ்த்தப்பட்ட மக்களின் பேரால் சாதி இந்துக்கள் தான் இந்த வேலைகளைச் செய்கிறார்கள். இதற்கு முழு உடந்தையாக இருப்பவர்கள் சூப்பர்வைசர்களும், ஓவர்சியர்களும்தான். அவர்களுடைய பணியினை மேல் தணிக்கை செய்பவர்களும் டெக்னிகல் அத்தாரிட்டி வேறு யாருமில்லை. மதிப்பீடெல்லாம் அவர்கள் விருப்பந்தான். ஒரே அளவுள்ள இரு வேலைகளுக்கு மாறுபட்ட தொகைகளில் மதிப்பீடு தயார் செய்து தவறு செய்கிறார்கள். ஆகவே, இந்த மாணவ விடுதிகள், அரிசன காண்டிராக்டுகள் சம்பந்தமாக மாவட்டந் தோறும் ஒரு குழு அமைத்து கண்காணிக்க வழிவகை செய்யுமாறு பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்—தலைமை.]

தீண்டாமை ஒழிப்பிலும் இந்த அரசு காட்டும் தீவிர நடவடிக்கைகள் பராட்டுக்குரிய ஒன்றாகும். ஆயினும் சாதி சமய வேறுபாடற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு ஊக்கமளிக்கும் ஒரு தீவிர நடவடிக்கையாக கலப்பு மணத் தம்பதிகளுக்கு உடனடியாக அரசுத் துறையில் வேலை வாய்ப்பு அளித்தும் அவர்களுடைய குழந்தைகளுக்கு மருத்துவம், கல்வி, வேலை வாய்ப்பு, வீட்டு வசதி அனைத்திலும் உத்தரவாதமுள்ள முன்னுரிமை அளித்திடுவதை திட்டமாகக் கொள்ள பரிசீலனை செய்வது நலம் பயக்கும் என்ற என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை இந்த அரசினுடைய மேலான பார்வைக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஆக, 1980-81 ஆம் ஆண்டிற்கு தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்காக சிறப்புக் கூட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அதன்படி பல்வேறு வளர்ச்சித் தலைப்புகளின்கீழ் பொதுத் துறையில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கத்தின் சுமார் 18 விழுக்காடு தாழ்த்நப்பட்ட பழங்குடி மக்களுக்குக் கிடைக்க சுமார் 80 கோடி ரூபாய் செலவிட மதிப்பிடப்பட்டுள்ள இந்த சிறப்பான திட்டத்தை யாரும் போற்றிப் பாராட்டாமல் இருக்க முடியாது. என்னுடைய இதயம் நிறைந்த பாராட்டைத் தெரிவித்து அரிசன நல மானியக் கோரிக்கையைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்காக மொத்தத்தில் 24.72 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததற்கும், ஏனைய மக்களைப் போல் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் உயருவதில் கண்ணுங் கருத்துமாக இருந்து வரும் வணக்கத்திற்குரிய எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் அவர்களுடைய மேலான எண்ணங்களைச் சீரோடும், சிறப்போடும் நிறைவேற்றி வருகின்ற அமைச்சர் பெரு மக்களுக்கும் என் இதய பூர்வமான நன்றியையும், வணக்கத்தையும் பணிவுடன் சமர்ப்பித்துக் கொண்டு வாய்ப்பளித்த மாமன்றத் தலைவரவர்களுக்கு மீண்டும் நன்றி கூறிக்கொண்டு அமர்கின்றேன்.

வாழ்க பேரறிஞர் அண்ணாவின் புகழ் !
வெல்க தந்தை பெரியார் லட்சியம் !

[1980 ஜூலை 22

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரிசன நலத்துறை என்பது தன்னிச்சையாகச் செயல்படக்கூடிய ஒரு துறை அல்ல. சமூகநலத் துறையின் கீழ் இருக்கக்கூடியது. ஏற்கனவே அது வருவாய்த் துறை அதிகாரிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கக் கூடிய துறையாக இருக்கிறது. மாவட்ட அளவில் வருவாய்த் துறையில் பணியாற்றுகின்ற கிளார்க்குகள், ஆர்.ஐ., ஸ்பெஷல் தாசில்தார்கள் இந்தப் பொறுப்பிலே போடப்பட்டிருக்கிறார்கள். அந்தக் கிளார்க்குகள் ஆர்.ஐ. ஸ்பெஷல் தாசில்தார் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கவோ, மாற்றவோ இந்த அரிசனத் துறையைச் சார்ந்தவர்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. ஆகவே எந்த நடவடிக்கையும்

[முற்பகல் 10. 30]

எடுக்கமுடியவில்லை. எனவே இந்த டிபார்ட்மென்டை இம்போடன்ட் என்றே சொல்லலாம். ஆகவே அவர்களே நடவடிக்கை எடுக்கின்ற முறையிலே வழிவகைகளைச் செய்கிற வகையிலே தனித்தன்மையோடு இந்தத் துறையைச் செயல்படச் செய்வது அரசாங்கத்தினுடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். டாட்கோ அலுவலகம் இருக்கிறது. அதற்கு நிதி வசதியே இல்லை. ஏற்கெனவே அலுவலகங்களை டிசென்ட்ரலைஸ் பண்ணலாம் என்று ஒப்புக்கொண்டதற்கு ஒரே ஒரு பலி இந்த டாட்கோ தான். இங்கிருந்து அதை விழுப்புரத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். இப்போது அது எங்கே இருக்கிறது. அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றே புரியவில்லை. டாட்கோவிலே பணியாற்றுகிறவர்கள் மட்டும் பாவம் செய்தவர்களா? உடனடியாக அந்த டாட்கோவை சென்னைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையிலே ஆண்டு வருமானம் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டுள்ள அரிசன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் போன்ற சலுகைகள் இல்லை என்று சொல்வது சரியல்ல. மத்திய சர்க்கார் 9 ஆயிரம் என்று வைத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு வருமான அளவைக் கூட்ட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே உள்ள மாணவர்களைப் பொறுத்தவரையிலே அதிகமான டிராப் அவுட்ஸ் அரிசன மாணவர்களாகத்தான் இருக்கிறார்கள். மேற்கு வங்க மாநிலத்திலே குறைந்த வருமானத்தை உடைய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுடைய குழந்தைகள் பள்ளிக்கு அனுப்பப்படுகிற முறையிலே ஊக்க போனஸ் என்ற முறையிலே மாதம் ரூபாய் 25 கொடுக்கிறார்கள். அந்தத் திட்டத்தை இங்கேயும் அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1980 ஜூலை 22] [திரு. ரா. கிருஷ்ணன்]

இன்றைக்குப் பள்ளிக்கூடங்களிலே குழந்தைகளுக்கு பாட புத்தகமோ நோட்டுப் புத்தகமோ முறையாக வழங்கப்படுவதில்லை. காலாண்டுத் தேர்வு நெருங்குகிறது. ஆனால் 1, 2வது வகுப்பு மாணவர்களுக்கு இன்னும் புத்தகங்கள் வழங்கப்படவில்லை, 3, 4 மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படவில்லை. 6, 7வது மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்கப்படவில்லை. தனியார் பள்ளிகளிலே மாணவர்கள் நோட்டுப் புத்தகமோ, புத்தகமோ கொண்டுவரவில்லை என்றால் அவர்களை விரட்டியடிக்கிறார்கள். ஸ்காலர்ஷிப் பெற வேண்டுமென்றால் பள்ளி வேலை நாட்களில் 90 சதவீதம் அட்டென்டன்ஸ் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்தக் காரணங்களினால் பள்ளிக்கு அவர்கள் போகமுடியாத சூழ்நிலை இருக்கிறது. இதன் காரணமாக கடைசியிலே அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் இல்லை என்று சொல்கிறார்கள். தேர்வை எழுதுவதற்கு 75 சதவீதம் போதும் என்று சொன்னாலும் ஸ்காலர்ஷிப்பிற்கு 90 சதவீதம் வேண்டுமென்று சொல்வது சரியல்ல. அதற்கும் 75 சதவீதம் இருந்தால் போதும் என்ற முறையிலே அதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஹையர் செகண்டரி என்றாலே பி.யு.சி. அல்லது பர்ஸ்ட் இயர் டிகிரிக்கு சமமாக அந்தத் தரத்திலே உள்ளதுதான். ஸ்காலர்ஷிப்பை பொறுத்தவரையில் ஏற்கெனவே பள்ளிமாணவர்களுக்குக் கிடைத்ததைப் போன்று தான் கிடைக்கிறது. இதற்கு முன்பு பி.யு.சி., பர்ஸ்ட் இயர் டிகிரி மாணவர்களுக்கு கொடுத்ததைப் போல் இவர்களுக்கும் ஏன் கொடுக்கக்கூடாது? அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஹையர் செகண்டரி மாணவர்களுக்கு விடுதி வசதிகள் கிடையாது. பி.யு.சி., பர்ஸ்ட் இயர் டிகிரி படித்த மாணவர்களுக்கு தனியாக விடுதி வசதி இருந்தது. ஆனால் இன்றைக்கு ஹையர் செகண்டரி மாணவர்கள் பள்ளி மாணவர்களுக்காக இருக்கின்ற விடுதியிலே தான் தங்கவேண்டியிருக்கிறது. இதனால் இட நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்த மாணவர்களுக்கு தனியாக விடுதி வசதியை ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் தங்கிப் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கெட்டுக்கொள்கிறேன். இதை உடனடியாக கவனிக்க வேண்டியது அரசினுடைய கடமை.

பழங்குடியினர் அதிகமாக வாழக்கூடிய பகுதிகளில், குறிப்பாக கோவை மாவட்டத்திலே பரணி என்ற இடத்திலே 3 ஆயிரம் குடும்பங்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காக என்று ஒரே ஒரு பள்ளி தான் இருக்கிறது. 30 கிலோ மீட்டர் வரையிலே ஒரே ஒரு பள்ளிதான் இருக்கிறது. அதுவும் பழங்குடி மக்கள் என்றால் அவர்களுக்குச் செய்ய வேண்டுமென்பது கான்ஸ்டிட்யூஷனல் ஆப்ளிகேஷன் என்று இருந்தாலும் இந்த நிலைமை இருக்கிறது. சீனி என்று தாளிலே எழுதி நக்கினால் இனிக்காது. ஆகவே செயல்முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ரா. கிருஷ்ணன்] [1980 ஜூலை 22

அதைப்போலவே தென்காசியிலே ஒரு பகுதியிலேயும் அவர்கள்
வாழ்கிறார்கள். அவர்களும் தங்களுக்கு ஒரு பள்ளிக்கூடம்
வேண்டுமென்று பல ஆண்டுக்காலமாகக் கேட்டுக்கொண்டிருக்
கிறார்கள். அங்கே இரண்டாயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன.
5 கிலோ மீட்டருக்கு பள்ளிக்கூடமே கிடையாது. எந்த இடத்
திலே பள்ளிக்கூடம் வேண்டுமென்றாலும் அரிசன நலத் துறை
தீர்மானிக்க முடியவில்லை. அதை கல்வித் துறையோ, ரெவின்யூ
துறையோ தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு
அனுப்பவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. தாழ்த்தப்பட்ட இனத்
தவர்கள் கல்வியைப் பெறுவதிலே வேண்டிய அனுமதியைக்
கொடுக்கின்ற அதிகாரம் இந்தத் துறைக்கே இருக்கவேண்டும்.
அவர்கள் தங்கள் இஷ்டப்படி செயல்படுவதற்கான வழி இப்போது
கிடையவே கிடையாது. இரண்டாயிரம் குடும்பங்கள் உள்ள
பகுதியாக இருந்தாலும் சரி, மூன்றாயிரம் குடும்பங்கள் உள்ள
பகுதியாக இருந்தாலும் சரி, பள்ளிக்கூட வசதி இல்லாத சூழ்நிலை
இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வு எழுதுவதற்காக கோச்சிங்
கொடுக்கப்படுகிறது. அதேபோன்று பேங்க் தேர்வு எழுதுவதற்
கும் இப்படிப்பட்ட கோச்சிங் அவர்களுக்குக்கொடுக்கப்பட
வேண்டும் என்று கெட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் இருக்கின்றவர்
களுக்கு நிலப் பசி அதிகமாக இருக்கிறது. ஏற்கெனவே இருக்கின்ற
புறம்போக்கு நிலங்களைப் பிரித்துக் கொடுப்பதிலே ஏகப்பட்ட
தகராறுகள் இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல
விரும்புகிறேன். மதுரை மாவட்டம், பழனி வட்டத்தில், பழைய
பட்டி, கோதையிருப்பு அஞ்சல் என்ற இடத்தில் குமரன் மாதாரி
என்பவர், 1965-லிருந்து புறம்போக்கு நிலத்தைத் தனக்கு ஆர்ஜி
தம் செய்து கொடுக்க வேண்டுமென்று மனுச் செய்து, கிட்டத்
தட்ட 37 ஃபைல்கள் உருவாகி, தாலூக்கா ஆபீஸ், ஆர்.டி.ஓ.
ஆபீஸ், கலெக்டர் ஆபீஸ், போர்டு, ரெவின்யூ மினிஸ்டர்,
கோர்ட் என்று இப்படிப் பல விவகாரங்கள் ஆகி, கடைசியிலே
இப்பொழுது, “ கூடி வந்த நேரத்திலே தாழி உடைந்தது ”
மாதிரி ரெவின்யூ மினிஸ்டரிடமிருந்து ஸ்டே ஆர்டர் வந்திருக்
கிறது. 1965 ஆம் ஆண்டிலிருந்து கேட்டவருக்கு இப்படிப்பட்ட
நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நிலத்தை ஜாரி செய்து
கொடுத்தார்கள் ; ஆனால் அங்கே போய் நிலத்தை ஏற்றுக்
கொண்டு விவசாயம் செய்தால், அங்குள்ள ஜாதி இந்து எனக்குத்
தான் அனுபவம் இருக்கிறது என்று புதிதாக ரிகார்ட் கிரியேட்
செய்து, போர்டிலே ஸ்டே, மினிஸ்ட்ரியிலே ஸ்டே, கவர்ன்
மெண்டிலே ஸ்டே, ஹைகோர்ட்டிலே ஸ்டே என்று இப்படித்
தொடர்ச்சியாக இருக்கிறது. இதன் காரணமாக அவர் சொல்கி
றார், எனக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன ; நான் அதைப்
பராமரிக்க முடியாமல் அத்தனை குழந்தைகளும் இறந்து விட்டன.
நான் நடையாக நடந்து காலும் தேய்ந்து விட்டது என்று உருக்க
மாக மனு அனுப்புகிறார். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்
கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1980 ஜூலை, 22] [திரு ரா. கிருஷ்ணன்]

ஏற்கெனவே 15 ஆண்டுகளுக்கு முன்னால் வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டும், அந்த நிலங்களிலே அரிசனங்கள் குடிசை போட்டுத் தங்க முடியாத நிலைமைகள் பல கிராமங்களில் இருக்கின்றன. ஏற்கெனவே ஆர்ஜிதம் செய்தது இருக்கிறது ; ஆனால் குடியேறப் போனால் அங்கே ரகளை நடக்கிறது. அதைக் கண்காணிப்பதற்கு காவல்துறையினரும் செல்வதும் கிடையாது ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலை தொடர்ச்சியாக இருக்கிறது.

கிட்டத்தட்ட இரண்டாண்டுக் காலமாக சிவகிரி என்ற கிராமத்தில் வீட்டு மனை வேண்டுமென்று தொடர்ச்சியாகக் கேட்கப்பட்டு வருகிறது. இரண்டாண்டுக் காலமாகியும், சப்-தாலூக்கா ஆபீசிலேயிருந்து அது மேலே வர மாட்டேன் என்கிறது பலவிதமான ஊழல்கள் நடக்கின்றன. எவ்வளவோ சொன்னாலும்கூட அதைப்பற்றி அக்கறை கொள்ளவில்லை.

விஸ்வநாதபேரி என்ற இடத்தில் சுடுகாட்டுக்குப் பாதை வேண்டும் என்று இரண்டாண்டுக் காலமாகத் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஸ்டேட் வெல்ஃபேர் கமிட்டியிலேயும் சொல்லப்பட்டிருக்கிறது. வெள்ளத்தின் காரணமாக, ஆற்றில் வெள்ளம் போன காரணத்தினால், ஒரு சமயம், ஒரு பிரேதத்தை இரண்டு நாட்களாகச் சுடுகாட்டிற்குக் கொண்டு போக முடியாமல், வீட்டிலேயே வைத்திருந்து, வெள்ளம் வடிந்த பிறகுதான் சுடுகாட்டிற்குக் கொண்டு செல்ல வேண்டிய பரிதாபகரமான நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை உடனடியாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலத்தை ஆர்ஜிதம் செய்து வீட்டு மனைப் பட்டா வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம், நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சரண்டர் செய்யப்படுகிறது. நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. இதற்குக காரணம் என்ன ! சரண்டர் செய்யக்கூடிய அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்க முடிகிறது ! அது இந்தத் துறையால் முடியாது. அதற்குக் காரணம் உங்களுக்குப் பிடிப்பு இல்லை.

ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாக ஒரு ஸ்பெஷல் ஸ்கீம் என்ற முறையில் செய்ய வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

விவசாய நிலமாக இருந்தாலும் சரி, வீட்டு மனைப்பட்டாவாக இருந்தாலும் சரி, துரிதமாக நடப்பதற்கு ஏற்கெனவே சட்டம் இருந்தாலும், அதை முழுமையாக அமல் நடத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக, வெஸ்ட் பெங்காலில் பத்து இலட்சம் ஏக்கரா உபரி நிலங்கள் எடுக்கப்பட்டு, அதில் 5,70,000 ஏக்கர் நிலங்கள் அரிசன மக்களுக்குப் பிரித்துக் கொடுக்கின்ற நிலைமை கையாளப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குக் கொடுத்தால் மட்டும் போதாது ; அதற்கு வங்கிகளின் மூலமாகக் கடன்

வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின்
கடமை. எனவே, அப்படிப்பட்ட சூழ்நிலைகளை மனத்திற்
கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அரிசனங்கள் வாழும் பகுதிகளிலே, குறிப்பாக இந்த மின்சார
விளக்குகள் எரிவது கிடையாது. மற்றப் பகுதிகளில் எரிகிறதோ
இல்லையோ, ஆனால் இந்தப் பகுதிகளிலே நிச்சயமாக எரியாது.

[முற்பகல் 10. 40]

இதை எங்குமே பார்க்கலாம். இதுதான் நிலைமை. அதேமாதிரி
தொழில் நடத்துவதற்குக் கடன் கொடுக்கப்படுகிறது. ஏற்கனவே
அது முறையாகச் செயல்படவில்லை. சில நேரங்களில் ஒதுக்கப்
பட்ட பணம் திருப்பி சரண்டர் செய்யப்படுவதாக நான் அறிகி
றேன் அதைப் போலவே, தீண்டாமை ஒழிப்பு, சிலமாவட்டங்களில்
இதற்காக அதிகாரிகள் இருக்கிறார்கள். ஒரு இன்ஸ்பெக்டர்,
ஒரு சப் இன்ஸ்பெக்டர், 2 ஹெட் கான்ஸ்டபிள்கள், சில கான்ஸ்
டபிள்கள் என்று வைத்திருக்கிறார்கள். அவர்கள் எங்கும் போக
மாட்டார்கள். ஏனென்றால், வெளியே போக அவர்களுக்கு
வாகன வசதி கிடையாது. ஆகவே, இந்த நிலையில் குற்றம்
நடந்திருக்கிறது என்று ஒருவர் புகார் செய்தால், குற்றவாளி
என்று நிரூபிக்கும் பொறுப்பு அவரிடம் இருக்கிறது. ஆனால்
burden of p oof should lie with the accused
ஏற்கெனவே, இருக்கிற கிரிமினல் ப்ரொசிஜர்படி, சந்தேகம்
என்றால் விடுதலை செய்யலாம் என்று இருப்பதை மாற்றி,
அந்தக் குற்றவாளியே நிரூபிக்க வேண்டுமென்ற நிலைமையை
உருவாக்குவது அவசியம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்
ஒட்டன்சத்திரம் பஞ்சாயத்து யூனியனில், புளிமரத்துக்கோட்டை,
என்ற ஊரில், ரூ. 5 கூலி விவகாரத்திற்காக 18 வீடுகள் தீக்கிரை
யாக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சம்பவங்கள் பெரு
வாரியாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

வேலை வாய்ப்புகளில் அரிசனங்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கப்
படவேண்டுமென்று சொல்கிறோம். ஆனால், நான் சவால்
விட்டுச் சொல்கிறேன், எந்தத் துறையிலும் அந்த 18 சதவீதம்
ஒதுக்கப்படவில்லை. கல்வித் துறையிலே எடுத்துக் கொண்டால்,
அசிஸ்டெண்ட் புரஃபசர் 3 சதவீதம், 4 சதவீதம்தான் இருக்கி
றார்கள். புரஃபசர் 1 சதவீதம் கூடக் கிடையாது. பிரின்சிபல்
பதவியிலிருப்பவர்கள் சீரோ. இதே மாதிரி, சர்வீஸ் கமிஷன்
தேர்விலும் உரிய சதவீதம் தேர்வு செய்யப்படவில்லை. எம்.பி.
பி.எஸ். படித்து, பட்டம் பெற்ற அரிசனங்கள், சர்வீஸ் கமிஷனால்
தேர்வு செய்யப் படவில்லை. you are disqualified
என்று சொல்லி, அந்த இடம் பூர்த்தி செய்யப்படவில்லை.
சர்வீஸ்கமிஷன் ரிப்போர்ட்டிலிருந்து இந்தத் தகவல் தெரிய



வருகிறது. அந்நிலையைப் போக்க ஏற்பாடு செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். Reservation is not applicable
to Labour Department இந்து அறநிலையத் துறையில், அந்த
ரிசர்வேஷன் ஏற்பாடே இல்லை என்று நான் அறிகிறேன். ஆகவே
அரிசனங்களுக்கு 18 சதவீதம் ரிசர்வேஷன் முழுமையாக அளிக்கப்
பட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் தர்பார் நடத்தக்கூடிய கர்ணம், முனிசீப்
போன்ற பதவிகளில் அரிசனங்கள் 2 சதவீதம் கூடக் கிடையாது.
1 சதவீதம் கூட இருக்குமா என்றால், இல்லை. அதை அந்தத்
துறை அமைச்சர் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொன்னால்,
ஒரு சிலர் அந்தப் பதவிகளில் இவர்களை அதிகமாகப் போட்டால்
ரத்தக் களறியே வரும் என்று சொல்வதாக அறிகிறேன். எப்படி
ரத்தக் களறி வரும்! எத்தனையோ அரிசனக் குடியிருப்புகள்
தான் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, கர்ணம்,
முனிசீப் போன்ற வேலைகளில், அரிசனங்களுக்கு முக்கியத்துவம்
கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்
பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

*<u>திரு. செ. குப்புசாமி :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, இந்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்த
வந்தவாசி வாக்காளர் பெருமக்களுக்கும், இந்த வாய்ப்பினை
நல்கிய எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்
கும் எனது மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொண்டு
எனது கன்னிப் பேச்சை ஆரம்பிக்கிறேன். ஆரம்பிக்குமுன்,
இதற்குமுன் நான் பேசாத காரணத்தால், எனக்குக் கூடுதலாக
நேரம் கொடுக்க வேண்டுமென துணைத் தலைவர் அவர்களைக்
கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியைப்பற்றி முதலில் சொல்ல விரும்புகிறேன்.
ஒவ்வொரு நபருக்கும் உணவு அவசியம் தேவைப்படுவதாலே,
எங்களது பகுதியிலே ஆற்று நீர்ப்பாசனம் இல்லையென்ற காரண
தாலே, அங்கு பாசன வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். நாகர்மேடு குளம் பாசனத்திற்கு
நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் நாகர்மேடு
கொண்டம் கட்டித் தந்து இப்பொழுது அது நிறுத்தப்பட்டிருக்
கிறது. ஆகவே, அது சம்பந்தமாக ஆவன செய்யவேண்டுமென்று
சம்பந்தப்பட்ட அமைச்சர்களை வேண்டுகிறேன்.

என்னுடைய பகுதி கைத்தறி நெசவாளர்கள் மிகுந்த பகுதி
யாகும். கைத்தறி சங்கங்களில் அங்கத்தினர்களாக உள்ளவர்
களுக்கு அநேக இன்னல்கள் இருக்கின்றன் என்பதை அமைச்சரவர்
களுக்குத் தெரிவித்து, அச்சங்கங்களில் தலைவர்களாக இருப்பவர்
கள் அநேக ஊழல்கள் புரிகிறார்கள் என்பதைத் கவனத்தில்
கொண்டு, அச்சங்கங்களைக் கலைத்து தனி அதிகாரிகளை
நியமிக்கவேண்டுமென்று கோருகிறேன்.

என் தொகுதியில் வீட்டுமனைப் பட்டாக்கள் அதிகம்கொடுத்து அங்குள்ள அனைவருக்கும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வந்தவாசியில் இருந்து இதுவரையில் 4 எம்.எல்.ஏ.-க்கள் வந்திருக்கிறார்கள். நான் 5-வதாக வந்திருக்கிறேன். எனக்கு முன்னால் இருந்தவர்கள் தொகுதியில் வரும்போது எல்லாம் இங்கே தொழிற்சாலை ஏற்படுத்துவோம் என்று வாக்குக் கொடுத்துதான் வந்தார்கள். ஆனால் இதுவரையில் எந்தத் தொழிற்சாலையும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தற்போது இங்கே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தலைவர் புரட்சித் தலைவர் ஆட்சியிலே இந்தக் குறைபாட்டை நீக்கி எனது தொகுதியில் ஒரு தொழிற் கூடத்தை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என் தொகுதியில் உள்ள மருத்துவ மனையில் படுக்கை வசதிகள் அதிகம் இல்லாத காரணத்தினால், நோயாளிகள் எல்லாம் கீழே படுக்கின்ற நிலைமை இருக்கிறது. அதை நிறைவு செய்யும் வகையில் அமைச்சர் அவர்கள் படுக்கைகளை அதிகரித்து கூடுதலான டாக்டர்களை போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிகிறேன். உடனடியாக போடவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இங்கே பெண் நோயாளிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் தற்போது போடப்படுகின்ற டாக்டர்கள் பெண் டாக்டர்களாகப் போடவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு என் தொகுதியிலே உள்ள இரும்பேடு, முக்கல், மூதூர் போன்ற கிராமங்களுக்கு சிறிய ஆஸ்பத்திரிகளைக் கட்டிக் கொடுத்து உதவ வேண்டுகிறேன்.

அடுத்து வந்தவாசி பேரூராட்சி சகல வசதிகளையும் பெற்றிருப்பதால் அதனை நகராட்சியாக ஆக்குவதற்கான அத்தனை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, பின்னர் கவர்னர் ஆட்சிக் காலத்தில் அது நிறுத்திவைக்கப்பட்டது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்து, சகல வசதிகளும் பொருந்திய அந்த பேரூராட்சியை நகராட்சியாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே உயர்நிலைப்பள்ளிகள் 13, 14 இருந்தும் அங்கே எந்தவிதமான தொழிற் கல்வியும் இல்லாத நிலையில் இருக்கிறது. எனவே அங்கே ஒரு ஐ.டி.ஐ. ஏற்படுத்தித் தரவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து என் தொகுதியிலே அநேக கிராமங்கள் பாதை வசதிகள் இருந்தும் அங்கே போக்குவரத்து வசதிகள் செய்து தரப்படவில்லை. அதனால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக வாக்காளர்களும் வாக்குச் சாவடிக்கு வந்து வாக்களிக்க மறுக்கிறார்கள். எனவே இதை எல்லாம் கருத்தில் கொண்டு, அதை உடனடியாக செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



மேலும் என் பகுதி மக்கள் பெரும்பாலானவர்கள் விவசாயிகள் என்ற காரணத்தாலே அவர்கள் விவசாய கிடங்கு ஒன்றைப் பெரிதாக அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை வந்தவாசியில் அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து. என் தொகுதியில் அரிசன மாணவர்களுக்கு விடுதிகள் இல்லாத காரணத்தினால் வந்தவாசியில் உள்ள மாணவர்களுக்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக விடுதிகள் கட்டித்தரவேண்டும் என்று வேண்டுகிறேன்.

அடுத்து, இங்கே வாழ்கின்ற அரிசன மக்கள் மிகவும் ஏழைகள். அவர்களுக்கு திருமணங்கள் செய்ய வசதியில்லாத காரணத்தினால் அவர்களுக்கு வந்தவாசி நகரத்திலே ஒரு திருமண மண்டபம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[முற்பகல் 10-50]

எனது தொகுதியில் விவசாயிகள் அதிகமாக இருக்கின்றனர். அவர்களுக்கு நடவு காலத்தில் அரிசனத் துறை மூலம் வழங்கப்படுகின்ற மானியத் தொகையான ரூ. 2,500 போதாது. அதை ரூ. 5,000 என்கிற அளவிற்கு உயர்த்த வேண்டும் என்று அந்தத் துறை அமைச்சர் அவர்களை நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அந்த மக்களுக்கு உரம் இலவசமாக தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாடுகள் வாங்க கொடுக்கப்படும் மானியம் ரூ. 600 போதாது. அதை ரூ. 1,500 என்ற அளவிற்கு உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பம்பு செட்டுகள் அதிகமாக வாங்கி வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு மின் இணைப்புக் கிடைக்காததால் அதன் பலன் பெறாத நிலையில் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, அவர்களுக்கு மின் இணைப்பு உடனடியாகத் தருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மாணவர்கள் விடுதி அதிக அளவில் கட்டித் தரவேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்கள், அரிசனங்கள், எழுதுபொருள் அச்சுத்துறை ஆகிய மானியக்கோரிக்கைகளின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1979–80 ஆம் ஆண்டுக்கு அரிசனங்களுக்கு ஒதுக்கிய தொகை 18 கோடியே 3 லட்சம் ரூபாய். 1980–81 ஆம ஆண்டுக்கு 24 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருப்பதை வரவேற்கிறேன். ஆனால் மொத்தம் 76 லட்சம் அரிசன மக்கள் தமிழகத்தில் வாழ்கின்றார்கள். அதிலே, 83 சதவிகிதம் பேர் கிராமப் புறங்களில் வசிக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. நகர்ப்புறத்தில் 17 சதவிகிதம் தான் வசிக்கிறார்கள். இப்படி ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, கிராமப்புறங்களில் வாழும் அரிசன மக்கள் எந்த அளவிற்கு பின் தங்கியிருக்கிறார்கள் என்பதை நாம் அறிய இயலுகிறது. ஆகவே, நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது எல்லாம், அந்தப் பகுதி மக்களுக்கு இந்த 24 கோடி ரூபாய் ஒதுக்கீடு என்பது போதாது; மிகவும் குறைவு என்பதைத் தெரிவித்து, சுமார் 1,000 கோடி ரூபாய் அளவிற்கு வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் அரசு இந்த மிகவும் பின் தங்கிய மக்களுக்காக அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து, அவர்களுக்கான நல்ல திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன மாணவர்கள் தங்கிப் படிக்கும் விடுதிகளில் 10-ம் வகுப்பு வரையில் படிக்கிற ஒரு மாணவனுக்கு ரூ. 45 ஒரு மாதத்திற்கு தருகிறார்கள். அப்படியென்றால் ஒரு நாளைக்கு ரூ. 1.50 மேல்நிலைக் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு ரூ. 60 ஒரு மாதத்திற்குக் கொடுக்கிறார்கள். அப்படியென்றால் ஒருநாளைக்கு ரூ. 2. இந்த பணத்தைக்கொண்டு அவர்கள் எப்படி சுகாதாரமான முறையில் வசதியோடு சாப்பிடமுடியும், அவன் சிந்தனையை அபிவிருத்திசெய்ய முடியும். சுகாதார, அடிப்படையில் மாணவர்கள் வாழ்ந்தால் தான் உடம்பை வலுவாகவும், நல்ல சிந்தனைகளை உருவாக்கிக் கொள்ளமுடியும். அந்த வகையில் அவர்கள் நல்ல முறையில் வாழ்ந்து, நல்ல வகையில் சிந்தனையைக் கூர்மைபடுத்திக்கொள்ளும் வகையில். அந்த மாணவர்கள் உணர்வு பூர்வமாக சமுதாயத்தில் வளரவேண்டும். என்ற அடிப்படையில், உத்திரப்பிரதேசம், மற்றும் மாநிலங்களில் தரப்படுவதைப்போல் அதிகமான மானிய தொகைத் தர வேண்டும். அப்படியில்லையென்றாலும் குறைந்தபட்சம் ரூ. 100 என்கிற அளவில் அந்த விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

படிப்பு உதவித்தொகை என்பது ஒரு ஆண்டு படிப்பு முடிந்த பிறகு, அடுத்த ஆண்டு படிப்புக்கு வருகின்றபோது தான் அவர்களுக்குத் தரப்படுகிறது. உதாரணமாக திருத்துறைப்பூண்டி மேல்நிலைப்பள்ளியில் இரண்டாவது ஆண்டு படிக்கும் மாணவர்கள் உதவித்தொகை கிடைக்கவில்லை என்பதற்காக 3 நாள் வேலை நிறுத்தம் செய்து பிறகு, பெற்றார்கள், அரசியல்வாதிகள் தலையிட்டு அந்தப் பணத்தைப் பெற்றுத் தந்து இருக்கிறார்கள்



அதிலேயும் 3 மாணவர்கள் அப்ளிகேஷனை ரிஜக்ட் செய்து இருக்கிறார்கள். ஆகவே, அந்த உதவிப் பணம் முதல் ஆண்டிலேயே அளிக்கப்படவேண்டும், காலத்தோடு அளிக்கவேண்டும் என்கிற முறையில் அந்த அரிசன நலத்துறை இலாகா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதில் இருக்கக்கூடிய அதிகாரிகள் மன்னிக்கவேண்டும்; எந்த அளவுக்கு அரிசனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறார்களோ அந்த அளவுக்கு அதிகாரிகள் கூட அந்த மக்களை துச்சம் என மதிக்கிறார்கள் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல அரிசன மாணவர்கள் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் புத்தகம் கொடுக்கிறது; ஆனால் பள்ளிக்கூடம் திறந்த 4 மாதங்கள் ஆனாலும் அந்த புத்தகங்கள் கொடுக்கப்படாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. அண்மையில் நான் ஊருக்குச் சென்றிருந்தேன். இந்த ஆண்டு கூட இன்னும் அந்த புத்தகங்கள் வழங்கப்படவில்லை. அப்படியிருந்தால் அந்த மாணவர்கள் எப்படி படிக்கமுடியும், எப்படி முன்னேற முடியும் ? ஆகவே, அவர்களுக்கு வழங்கக்கூடிய புத்தகங்களை பள்ளிக்கூடம் திறந்த உடனேயே, காலத்தோடு வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு அரிசன மாணவர்கள் தங்கிப்படிக்கின்ற விடுதிகள் எல்லாம் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டவை. அப்போது மாணவர்கள் மிகவும் குறைவாக இருந்தார்கள். இன்றைக்கு அதிகமாக தங்கிப் படிக்கிறார்கள். ஆனால் கட்டிடம் அந்த அளவுக்கு விரிவாக்கப்படவில்லை. ஆகவே, மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அந்த கட்டிடங்களை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கோட்டூரில் ஒரு மேல்நிலைப்பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளி விடுதி ஒரு தனியார் கட்டிடத்தில் இருந்தது. அரிசன மாணவர் விடுதி அங்கே இருக்கக்கூடாது என்று சொல்லி, அந்த விடுதியை காலி செய்துவிட்டார்கள். ஆதலால் இன்றைக்கு அங்கிருந்து இரண்டு மைல் தூரத்தில், ஈசனக்குடி என்ற கிராமத்தில் வாடகை விடுதியில் அங்கிருந்து மாணவர்கள் தினமும் வந்துபோகிறார்கள். ஆதலால் அவர்களுடைய படிப்பு பாதிக்கப்படுகிறது. ஆகவே உடனடியாக அந்த விடுதியை கோட்டூரில் மாணவர்கள் மேல்நிலைப்பள்ளிக்கு அருகில் அரிசன நலத்துறை மூலமாக தங்கிப்படிக்க விடுதி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே அரிசனங்களுக்கு வழங்கப்படுகிற மனைப் பட்டாக்களும் இருக்கின்றன. தயவு செய்து அரிசன இலாகாவும் அரசும் கவனிக்க வேண்டும். 1967–ம் ஆண்டு என்னுடைய

தொகுதியில் கோட்டூரில அரிசனங்களுக்கு என்று எடுக்கப்பட்ட நிலம் இன்னும் அவர்களுக்கு பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது அதைப்போல நூற்றுக்கணக்கான இடங்களில் இருக்கின்றது. சமீபத்தில் கூட ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் பட்டா வழங் கப்பட முடியாத நிலையில் இருக்கிறது. அதற்குக்காரணம் நிலச் சொந்தக்காரர்கள் அங்கே நடவு நட்டிருக்கிறார்கள். அதற்கு யார் பொறுப்பு? அதிகாரிகள் எடுக்கக்கூடிய நிலத்தை உடனடியாக பட்டா செய்து கொடுக்காமல் இருக்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்கள் வந்து அவர்களைத் தனியாகப் பார்த் தால், அந்த நிலத்தை பட்டா செய்து கொடுக்க முடியாத அள வுக்கு ஏற்பாடுகளைச் செய்துவிடுகிறார்கள் அதிகாரிகள், இப் படிப்பட்ட நிலைமை ஆயிரக்கணக்கான இடங்களில் இருக்கிறது.

அதைப்போல பேரூராட்சிகளில், நகராட்சிகளில் அரிசனங் களுக்கு மனைப்பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. அரசு அதிலே தீவிரமான நடவடிக்கை எடுத்து, எல்லா இடங்களிலும் உடனடியாக பட்டா வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல சுடுகாட்டுப்பாதை. அவர்கள் அயராது உழைக் கிறார்கள்; மண்வெட்டி பிடிக்கிறார்கள்; உழுகிறார்கள்; உற் பத்தியைப் பெருக்குகிறார்கள். இப்படி உழைக்கின்றவன் செத்து விட்டால் கூட அவனைத் தூக்கிச் செல்ல பாதை இல்லை என்று சொல்லி வெட்கப்படக்கூடிய நிலையிலேதான் நாம் இன்னமும் இருந்துகொண்டிருக்கிறோம். சுடுகாட்டுக்குப் பாதை இல்லாமல் எத்தனையோ இடங்கள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் மணலியில் சுடுகாட்டுப் பாதைக்கு நிலம் எடுத்தார்கள். ஆனால் நிலச் சொந்தக்காரர் அந்த இடத்தை வெட்டி, வேலி வைத்திருக் கிறார். அந்த நிலத்தை எடுக்கக்கூட அதிகாரிகளால் முடியவில்லை. ஏனென்றால் இந்த தமிழ்நாடு எப்படிப்பட்ட நிலையில் இருக்கி றது என்பதை நாம் சிந்திக்கவேண்டும். இந்த நாட்டுக்காக உழைக்கின்ற அரிசன் செத்து பிறகாவது அவனைத் தூக்கிச் செல்ல சரியான பாதை வசதி இருக்கவேண்டும்; அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்; அரிசனங்களுக்கு குடியிருக்க நல்ல வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல பென்சன் கொடுக்க, அதுவும் அனாதை என்ற முறையிலே, அரிசன விவசாயி 60 வயதுக்குமேல் போனால் அவன் ஒரு அனாதை. அவனை பாதுகாப்பவர் யாரும் இல்லை. ஆகவே, கேரளத்தில், மேற்கு வங்கத்தில் கொடுப்பதைப்போல தமிழ் நாட்டிலேயும் அவர்களுக்கு தனி இலாகா ஏற்படுத்தி அதன் மூலம் மானியம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு அரசாங்கத்தில் பணியாற்றுகின்ற பெண்கள் கர்ப்பவதியானால் அவர்களுக்கு விடுமுறை அளித்து முழு சம்பள மும் வழங்கப்படுகிறது. அதைப்போல விவசாயத்தில் ஈடுபட்டி



ருக்கிற அரிசன மற்றும் ஏழைத் தொழிலாளி பெண்கள் கர்ப்பவதி யானால் அவர்களுக்கு பிரசவத்திற்கு ஒரு இரண்டு மாதமும் பின்னால் இரண்டு மாதமும உதவித்தொகை வழங்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டி மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கே 4, 5 மேல்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. அங்கே அரிசன மாணவர்கள் ஏழை எளியவர்கள் அதிகமாக படிக்கிறார்கள். அவர்களுக்கு கல்லூரிக்குப் போகக்கூடிய வாய்ப்பு இல்லை. ஆகவே, திருத்துறைப்பூண்டியிலேயே ஒரு கல்லூரி ஏற்படுத்தித்தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக சமூகப்பாதுகாப்பு. சமூகப்பாதுகாப்பு என்று சொல்லும்போது எனக்கு முன்னால் இங்கே பேசினார்கள்.

[முற்பகல் 11-00]

இந்திய நாட்டில் 1980ஆம் ஆண்டிலே கூட பீகார் மாநிலத் திலே 14 அரிசன மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள். நிரப்பிரபுக்களின் ஆதிக்கத்தால், அதேபோன்று உத்திரப்பிர தேசத்தில் அரிசன மக்கள் திருமணத்திற்காகச் சென்றுகொண்டி ருந்த நேரத்தில் மணமகளை பல்லக்கில் வைத்து அழைத்துச் சென்றார்கள் என்ற காரணத்திற்காக 14 அரிசனங்கள் படு கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதே போன்றுகோவை மாவட்டத்தில் பல்லடம் தாலுக்காவில் ஊராட்சி ஒன்றியத்தில் சில மாதங்களுக்கு முன்னால் அவினாசிப் பாளையம் கிராமத்தில் அரிசனக் குடிசைகள் தீ வைத்து எரிக்கப் பட்டிருக்கின்றது. இந்தக்கொடுமை தமிழகத்திலேயே நடந்தி ருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் ஆகி விட்டது. சீக்கிரம் முடியுங்கள். இன்னும் நிறையப்பேர் பேச வேண்டியிருக்கிறது.

திரு. பொ. உத்திராபதி. அதே போல திருச்சி மாவட்டத்தில் ஒரு கிணற்றில் குளித்த நான்கு அரிசன சிறுவர்கள் மின்சாரம் பாய்ந்து இறந்து விட்டார்கள். 7-வது வகுப்பு படிக்கக்கூடிய 15 லிருந்து 17 வயதுக்குட்பட்ட அந்த மாணவர்கள் மின்சாரம் வைத்துக் கொல்லப்பட்டுருக்கின்ற கொடுமையும் நடந்திருக் கின்றது.

அதேபோன்ற மாயவரத்திலே திருவழுந்தூரில் 44 நகரசுத்தித் தொழிலாளர்கள் பயங்கர ஆயுதங்களால் தாக்கப்பட்டிருக்கிறார் கள். இந்தத் தாக்குதல் அந்த ஊர் பட்டாமணியம் தலைமை

யிலேயே நடந்திருக்கின்றது. மேல்சாதி என்று சொல்லக்கூடியவர்
களால் அந்த அரிசன மக்களின் குடிசைகள் எரிக்கப்பட்டு அதிக
மான அளவில் சொத்துக்கு நாசம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.
இதுவரையில் சரியான நடவடிக்கை எடுக்கபபடவில்லை.

அடுத்து செங்கற்பட்டு மாவட்டம், எடையாத்தூருக்கு நானும்
எம். ஆறுமுகம் எம். ஏல். ஏ., ஆர். நல்லகண்ணு ஆகியோரும்
நேரிலேயே சென்று பார்த்தோம். அங்கே மருத்துவமனைக்கு
ஒரு தாயை எடுத்துச் செல்ல முடியாத நிலை கூட இருக்
கின்றது. அங்கே 2½ வயதுப் பாலகன் நாங்கள்
சென்றிருக்கும் போது இறந்து விட்டான் அங்கே
மருத்துவ வசதி கிடைக்காத காரணத்தால். சரியான
இந்த மாதிரி நிலை அந்த ஊரிலே ஆகவே
அங்குள்ள 54 வீட்டு அரிசன மக்கள் இருக்கின்றது
காரர்களால் தாக்கப்பட்டு 10 கிலோ மீட்டருக்கு மேல் சாதிக்
எலுமிச்சமேடு கிராமத்தில் இன்றைக்கும் தங்கி இருக்கிறார்கள்.
இந்தக் கொடுமைகள் இப்போதும் இருந்துகொண்டிருக்கின்றன.
இதையெல்லாம் அரசாங்கம் கவனித்து அரிசனங்களைத் தாக்கு
கிறவர்களுக்கு தண்டனை கொடுப்பது மட்டும் போதாது.
அப்பர்பபட்டவர்கள் எதிர்காலத்தில் ஊராட்சிமன்றம்,
நகராட்சிமன்றம், சட்ட மன்றம், பாராளுமன்றம் ஆகிய
வற்றுக்கான தேர்தலிலே நிற்கக்கூடாது என்ற ஒரு
சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று இந்தச்
சந்தர்பபத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் சென்ற தடவை
பஞ்சாயத்துத் தேர்தல், நகராட்சித் தேர்தல் ஆகிய
வற்றில் அரிசனங்களில் 18 சத விகிதம் பெண்களுக்கும்
20 சத விகிதம் ஒதுக்கப்படும் என்று சொன்னார்கள்.
ஆனால் நேற்று அவர்கள் அதுபற்றிக் குறிப்பிடு
கின்றபோது அதைச்செய்ய இயலாத நிலையில் வருந்து
கிறேன். என்று சொல்கிறார்கள். ஆனால் தமிழக அரசு
தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்ல திட்டங்களைச் செய்வதாக
இருந்தால் இந்த ஊராட்சி மன்றம், நகராட்சிமன்றம், மாநக
ராட்சி மன்றம் ஆகியவற்றின் தேர்தல்களில் தாழ்த்தப்பட்ட
சமுதாயத்திற்கு இட ஒதுக்கீடு கொடுக்கவேண்டும். அப்போது
தான் அவர்களுடைய பிரதிநிதி வந்தால்தான் அந்த மக்களுக்கு
நல்லபல சலுகைகளைச் செய்ய முடியும் என்று நான் இந்த
சந்தர்ப்பத்தில் சொல்லி அதை விரைவில் பரிசீலனை செய்து
அதற்கு உத்தரவாதம் தரவேண்டும் என்று கேட்டு எனக்கு
சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*திரு. சீ. சிவப்பிரகாசம்: பெரும் மதிப்பிற்குரிய பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பெரும் அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய முதல்வர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் பெரு மக்களே, இந்த அவையில் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்ற....



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சபையில் தலைவர் என்று மட்டுந்தான் சொல்லவேண்டும்.

திரு. சீ. சிவப்பிரகாசம்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிற அரிசன, பழங்குடியினர், அச்சுத்துறை, எழுதுபொருள்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்த சேந்தமங்கலம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நான் முதலில் என் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய கன்னிப் பேச்சைத் துவக்குகிறேன்.

தமிழகத்தின் மக்கள் தொகையில் 76 இலட்சம் எண்ணிக்கை கொண்ட மக்களாக இருக்கின்ற அரிசன, பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட, அவர்கள் வாழ்வில் உயர்வு கண்டிட, கல்வி, சுகாதாரம், வீட்டுமனை, தொழில் போன்ற துறைகளில் அவர்களை உயர்த்துவதற்கான இந்த மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு பேசுவதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழக அரசானது அரிசன பழங்குடி மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக, இந்த ஆண்டில் 2,007.31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிகின்றேன். இந்த மானிய ஒதுக்கீட்டினால், இன்றைய நிலையில் அவர்களின் வாழ்வில் ஒரு பெரும் மாறுதலை, பொருளாதாரத்துறையில், கல்வித்துறையில் வேலை வாய்பபுத்துறையில், வீட்டு வசதித்துறையில், நலிந்த அம்மக்களின் நலிவினை உயர்த்துகின்ற அளவில் இருபபதைக் கண்டு, அரசிற்கு எம்முடைய மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழகத்தில் உள்ள சுமார் 4 இலட்சம் பழங்குடி மக்களின் மேம்பாட்டுத் திட்டத்திற்காக 331.60 இலட்சம் ஒதுக்கீடு செய்திருப்பது உள்ளபடியே பாராட்டத்தக்கது. இது சென்ற ஆண்டினைவிட 77 இலட்சம் அதிகமாகும்.

நம்முடைய அன்பிற்குரிய முதல்வர் அவர்கள் குறிப்பிட்டபடி, வறுமைக்கோட்டிற்க் கீழே இருக்கின்ற மக்களின் வாழ்வில் நல்ல நிலையினை உருவாக்குவதே அரசின் சீரிய நோக்கமாக இருந்து வருகிறது. பழங்குடியினருக்கு தரிசாக உள்ள நிலங்களை அளித்து அவர்கள் கிணறு வெட்ட உதவி செய்து பாசன வசதி கொடுத்து மின் வசதி அளித்து அவர்களை ஊக்குவிப்பது போன்ற வகையில் இந்த மானிய ஒதுக்கீட்டில் கிட்டத்தட்ட 5,000க்கு மேற்பட்ட குடும்பங்கள் பயன்பெறுவர் என்று எதிர்பார்க்கப் பெறுகிறது.

[திரு. சீ. சிவப்பிரகாசம்] [1980 ஜூலை 22

1980-81ல் கிணறுகள் வெட்டுவதற்கு என்று 29.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டினைப் பாராட்டக் கடமைபபட்டிருக்கிறேன். அதேமாதிரி புதிய வேலைகளுக்கு தேர்ந்தெடுப்பதில் சீனியாரிட்டி முறையைக் கைவிட்டு தேர்வு நடத்தும்போதே அரிசனப் பழங்குடியினர் அனைவருக்கும் நேர்முகத் தேர்வுக்கான உத்தரவை அரசு அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, படிப்புக்கான உதவித் தொகையை எடுத்துக் கொண்டால், மெட்ரிக் வகுப்பிற்கும் பிந்திய வகுப்புகளில் படிக்கும் அரிசனங்கள் பழங்குடியினர், கிருத்துவர்களாக மதம் மாறிய அரிசனங்கள், ஆகிய மாணவர்கள் அனைவருக்கும் அவர்களின் பெற்றோர்/காப்பாளரின் ஆண்டு வருவாயைக் கருத்தில் கொள்ளாது, படிப்புக் கட்டணம் வழங்கப்பெறும் என்ற அரசு முடிவானது வரவேற்கத்தக்கது.

அடுத்து, பொறியியல், வேளாண்மை, மருத்துவம் முதலிய தொழிற்கல்வி கற்கும் மாணவர்கள் அவர்களுக்கு அளிக்கப்படும் படிப்பு உதவித்தொகையை விட அதிகமான தொகையை செலவிட வேண்டியநிலையில் இருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு ரூ. 19,000 நிதி ஒதுக்கீடு செய்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

அரிசன பழங்குடி மாணவர்கள் கல்விபெறும் வகையிலும் அவர்களின் வசதியினை பெருக்கும் வகையிலும் பரந்த அளவில் மானிய ஒதுக்கீடு செய்யப்பெற்றுள்ளது.

சேலம் மாவட்டத்தில் கொல்லி மலையில் உள்ள பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளை, பழங்குடியினர் தங்கிப் படிக்கின்ற பள்ளிகளாக அரசு மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுதுதான் அவர்கள் நல்லதொரு முன்னேற்றத்தை கல்வியில் பெறமுடியும். ஆகவே, பழங்குடி மக்களின் வேலை வாய்ப்பினையும் பெருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1980–81ஆம் ஆண்டில் அரிசன பழங்குடி மக்களின் வேலை வாய்ப்பினை பெருக்கிடும் வகையில் 80 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. உடனடியாக விற்பனையாகும், தொலைக் காட்சிப் பொருட்கள், பின் பொருட்கள் போன்ற பல்வேறு பொருட்களை தயாரிக்கும் தொழில்களில் அரிசனங்கள் பழங்குடியினர் ஆகியவர்களை ஈடுபடுத்தும் வகையில் மானிய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

கூட்டுறவு முறையில் தொழில் துவங்க அவர்களுக்கு பெரும் அளவில் கடனுதவியை அரசு வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயத்தில் ஈடுபட்டுள்ள அவர்களுக்கு, உழவு மாடு வாங்க, கிணறுகள் தோண்ட உதவித் தொகையை அரசு வழங்க முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது.



1980 ஜூலை 22] [திரு சீ. சிவப்பிரகாசம்]

கொல்லிமலைப் பழங்குடியினர் பொருளாதார நிலையினை மேம்படுத்த பழம் பதனிடும் தொழிற்சாலைகளை அல்லது பழச்சாறு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை அரசு அமைத்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கருமர், தச்சர் தையல் தொழில்கள் மற்றும் ஏனைய 18 தொழில்நுட்பத் தொழிலைக் கற்றிருக்கிற அரிசனங்கள், பழங்குடியினர் ஆகியவர்களுக்கு கருவிகள் சாதனங்கள் வழங்கவேண்டும் என்று திட்டம் செயல்படுத்தவிருப்பது வரவேற்கத்தக்கது.

பொதுவாக பொருளாதார வளர்ச்சித் திட்டத்திற்கு ஆதரவாக பழங்குடியினர் நிலங்களை பழங்குடியினர் அல்லாதவர் உடைமை ஆக்குவது தடுக்கப்பெற வேண்டும். தரிசாக உள்ள நிலங்களை அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்றும் இந்த அரசை பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சாதிச் சான்றிதழ் பெறுவதற்கு, ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் அரிசனப்பழங்குடியினர், மலைவாழ் மக்கள் பெரும் சிரமங்களுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். அதனை தீர்க்கும் வகையில் பாஸ்போர்ட் வழங்குவது போன்று (சாதிச் சான்றிதழ் அட்டை) வழங்கப்படவேண்டும் என்று அரசினை கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆலயங்களுக்குச் சொந்தமாக ஏராளமான நிலங்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அந்த நிலங்களின் வருமானங்களை அந்தக் கோயிலில் வேலை செய்யும் பூசாரி அனுபவித்துக்கொண்டு, மக்களையும், அரசையும் ஏமாற்றிக் கொண்டு வருவதாகக் கூறுகிறார்கள். அவைகளைப்பற்றி தீர விசாரித்து அந்த வருமானங்கள் முழுமையாக ஆலயங்களுக்கு சென்று அடைந்து, அவைகளில் ஒரு பகுதியினை, மலைவாழ் மக்கள் பழங்குடியினர் பயன்பெறும் வகையில் பல திட்டங்களை செயல்படுத்தவேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.10]

சேலம் மாவட்ட மலைப்பகுதிகளில் சாலை வசதிகள் குறைவாக உள்ளன. கொல்லிமலையில் சாலை அமைக்க பணம் செலவு செய்யப்பட்டும்கூட 1967ல் போடப்பட்ட சாலைகூட தொடர்ந்து பராமரிக்கப்படாமல் இருப்பதால் இன்றைக்கு நடைபாதை இல்லாமல் காட்சியளிக்கிறது. (மணியடிக்கப்பட்டது) ஆகவே, அந்தப் பகுதி மக்கள் தங்கள் பொருட்களை தலையில் சுமந்து பதினைந்து மைல்கள் தூரம் சென்று குறைந்த விலையில் விற்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். மேலும் பிரசவம் அல்லது மருத்துவ வசதி நாடிச்செல்ல தடையாக இருக்கிறது. ஆகவே, கொல்லிமலை மக்களின் தேவைகளை உணர்ந்து அவற்றை பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு அனைத்து வசதிகளும் கூட்டுறவுத்துறையில் ஏற்படுத்தித்தரவேண்டும் என்று கேட்டு, இம்மானியத்தை வரவேற்று, விடைபெறுகிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்கள், அரிசனங்
கள் முதலியோர் நலன் மானியக் கோரிக்கையை காந்தி-காமராஜ்
தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் வரவேற்று ஒரு சில வார்த்தை
கள் கூற விரும்புகிறேன்.

பெரும் தலைவர் காமராஜ் அவர்களின் பிறந்த தின விழாவை
எங்கள் கட்சி சார்பில் கொண்டாடுகிற நேரத்தில் தாழ்த்தப்
பட்டோர் மேம்பாடு விழாவாக ஒவ்வொரு அரிசன குடியிருப்புப்
பகுதிக்கும் சென்று அந்த விழாவை நாங்கள் கொண்டாடுகிற
காரணத்தால் தாழ்த்தப்பட்ட அரிசனங்களின் குறைகளை, ஒவ்
வொரு பகுதியிலும் உள்ள குறைகளை நாங்கள் உணர்ந்திருக்கிற
காரணத்தால் சிலபல கருத்துக்களை இந்த அரசு செய்யவேண்டும்
என்பதற்காகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக நகரங்களில் எப்படியோ, கிராமங்களைப் பொறுத்த
வரையில் அரிசனங்கள் அனைவரும் வயல்கள் சூழ்ந்த இடங்களில்
தான் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.
பெரும்பாலோர் விவசாயிகள், விவசாயக் கூலி வேலை செய்து
தான் வாழ்க்கை நடத்தவேண்டியிருக்கிறது. அவர்களில்
விதமான வசதியும் இல்லை. அவர்களுக்கு பாதை வசதி இல்லை.
குடிநீர் வசதி இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலும்,
ஒவ்வொரு அரிசனக் குடியிருப்பிலும் குழந்தைகள் காப்பகம்
ஏற்படுத்தித்தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளவிரும்பு
கிறேன். நில உச்சவரம்பு சட்டத்தின் மூலம் மிச்சமுள்ள நிலங்
களை மற்றவர்கள் பெயரால் எழுதிக்கொண்டிருக்கிற நிலையில்
தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குச்சில் போடக்கூட பட்டாக்கள்
வழங்கப்படவில்லை. எனவே, அதை அரசு பரிசீலனை செய்து
அதிகாரிகள் சரியான தங்கள் கடமைகளை செய்கிறார்களா என்ப
தைக் கண்காணிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சம
தர்மம் உலாவிடும் இடம் என்று சொல்கிறோம். ஆனால்
சாவிலும் கூட தாழ்த்தப்பட்ட மக்கள் சமதர்மத்தைக் காண
முடியவில்லை என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

எந்தவொரு அரிசனக் குடியிருப்புக்கும் சுடுகாடு, இடுகாடு
போன்றவை கிடையாது. பாதை வசதியும் கிடையாது.
சிலயிடங்களில் தனியார் பாதைகள் வழியாக செல்லவேண்டியிருக்
கிறது. அப்படிச் செல்கிற நேரத்தில் மேல்வகுப்பினர் செய்கிற
தகராறு காரணமாக சண்டை சச்சரவுகள் ஏற்பட்டுவிடுகின்றன.
சமீபத்தில் பொள்ளாச்சி அருகில் ஒரு கிராமத்தில் இப்படிப்பட்ட
தகராறு வந்து அந்தத் தகராறு காரணமாக பிணத்தை பாதியி
லேயே போட்டுவிட்டு செல்லக்கூடிய கடுமையான சம்பவங்கள்
எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே, அவற்றை எல்லாம்
கருத்தில்கொண்டு அரிசனமக்களுக்கு சுடுகாடு, இடுகாடு பாதை
வசதி போன்ற மற்ற வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும்
என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



மாணவர்கள் இல்லங்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு இல்லம் என்றளவில் எல்லா ஒன்றியங்களிலும் அரிசன மாணவர்களுக்கு இல்லங்கள் அமைக்கப்பட வேண்டும். எனது ஆலங்குளம் தொகுதியை எடுத்துக்கொண்டால் ஒரு அரிசன மாணவர் இல்லம் கூட கிடையாது. கீழப்பாவூர் வட்டாரம், மானூர் வட்டாரம், ஆலங்குளம் வட்டாரம் போன்ற இடங்களில் மாணவர்கள் இல்லங்கள் அமைத்துத் தரவேண்டும்.

இப்போது மாணவர்களுக்கு இரண்டு ஜதை உடுப்புகள்தான் கொடுக்கப்படுகிறது. அது போதாது. ஆகவே, மேலும் அதிகப்படியான உடுப்புகள் கொடுக்கப்படவேண்டும்.

அதே போல் மதிய உணவிற்காக 15 காசு ஒதுக்கினால் போதாது. ஆகவே, அதற்காக கூடுதலாக ஒதுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூடுதலாக ஒதுக்கப்படுகின்ற நேரத்தில் அது, நல்லமுறையிலே விநியோகிக்கப்படுகின்றதா என்பதை அரசு தீவிரமாக கண்காணிக்கவேண்டும்.

இப்போது கூட நெல்லை மாவட்டத்தில், ராதாபுரம் தொகுதியில் திசையன்விளையில் உலக ரட்சகர் மேல்நிலைப் பள்ளியில் பிற்பட்ட, அரிசன மாணவர்களுக்கு இலவச மதிய உணவுக்காக வெளிநாட்டிலிருந்து கொடுக்கப்பட்ட கோதுமையை தலைமை ஆசிரியர் கையாடல் செய்துவிட்டார் என்றும், ஆதலால் ஊரில் பதட்ட நிலை இருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். இதிலே அரசு உடனடியாக தலையிட்டு, விசாரணை செய்து தலைமை ஆசிரியர் மீது மேற்கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல பிற்பட்ட மாணவர்களை பள்ளிகளிலே சேர்த்துக் கொள்ள மறுக்கிறார்கள். அதனால், அரசு உடனடியாக திசையன்விளையில் ஒரு அரசு உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்தி தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே என்னுடைய அருமைத் தலைவர் அவர்கள் அரிசனங்களைப் பற்றி பேசுகிற நேரத்திலே சொன்ன கருத்தை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இலக்குமயச் செல்வர் அவர்கள் அன்றையதினம் பேசுகின்ற போது, தஞ்சையிலே திருவோணத்திற்கு அருகாமையில் கோவிலிலே அரிசனங்கள் நுழைய முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது, அதற்கு எங்கள் கட்சியின் சார்பாக மட்டுமல்லாமல், அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் அந்தப்பகுதியிலே உள்ள அரிசனங்களை அந்த ஆலயத்திற்குள் அழைத்துச்செல்கின்ற முயற்சியிலே நாம் ஈடுபட

வேண்டும் என்று பேசினார்கள். இந்தச் சமயத்திலே அதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அப்பேர்ப்பட்ட நிலை மீண்டும் தமிழகத்தில் இருக்கக்கூடாது என்பதற்காக, அந்த அரிசனங்கள் ஆலயப் பிரவேசம் செய்வதற்கு எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும். அதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் நேரங்களிலே அரிசன மக்கள் வாக்கு போடாமல் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். என்னுடைய பகுதியிலே அதனாலே கிட்டத்தட்ட 3,000 வாக்குகள் எனக்குக் கிடைக்காமல் போய்விட்டது. எனவே, அப்பேர்ப்பட்ட அரிசன மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே வாக்குச் சாவடிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இப்போது மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பூந்தமல்லியிலே அரசினர் மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களை சேர்த்துக்கொள்வதற்கு அங்கே நேஷனலைஸ்ட் செலவு ரூ.12 என்றும், பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்கு ரூ. 5 என்றும், ஆக 17 ரூபாய் வசூல் செய்தால்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்களே தவிர, அப்படி பணம் செலுத்தாதவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இதை மரியாதைக்குரிய மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் கருத்திலே கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, சலவைத் தொழிலாளர்களும், சவரத் தொழிலாளர்களும் மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கிறார்கள். எந்தவிதமான முன்னேற்ற ஏற்பாடும் இல்லாமல், அவர்கள் மிகவும் கஷ்டப்படுவதால் அவர்களையும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்துக்கொள்வதற்கு இந்த அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யவேண்டும், அதற்கு தீவிரமான பரிசீலனை செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இத்துடன், இந்த **வாய்ப்பு** கொடுத்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம். நன்றி.

*திரு. ப. குருசாமி: மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத்தலைவர் அவர்களே, இந்த அரிசனங்கள்—பழங்குடி மக்களுடைய மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேச வாய்ப்புக்கொடுத்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்த அரிசனங்களுடைய, இருளிலே இருக்கின்ற இந்த மக்களுடைய ஒளிவிளக்காக எங்களுடைய இதய தெய்வம் புரட்சித்தலைவர் இந்த மானிய கோரிக்கையை மக்களுக்கு குறிப்பாக அரிசனங்களுக்கு, அவர்கள் வாழ்க்கைத் தரம்



முன்னேற வேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கத்துடன் உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே எங்கள் இதய தெய்வத்திற்கு காணிக்கை ஆக்கிக்கொண்டு, ஒரு சில கருத்துக்களை மட்டும் வழங்கலாம் என்றிருக்கிறேன்.

இன்று சுதந்திரம் அடைந்ததற்குப் பின்பும், அதற்கு முன்பும் அரிசன மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறார்கள். தாழ்ந்த நிலையிலேயே இருக்கிறார்கள் என்பதை எதிர்கட்சியைச் சார்ந்தவர்களும், அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் தாழ்ந்த நிலையிலே இருக்கிறார்கள் என்பதையெல்லாம் மறந்து அரசு தங்களுக்கு உரிய சலுகைகளை வழங்குகிறார்கள், அந்த சலுகைகளை பெற தகுதி பெற்றவர்கள் என்ற எண்ணம் அந்த மக்கள் மத்தியிலே இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.20]

இந்த மானியக் கோரிக்கைகளில் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய அமைச்சர் அவர்கள் ஏழை எளியமக்களுக்கும் அரிசன மக்ளுக்கும் நல்ல பல திட்டங்களைத் தீட்டித் தந்திருக்கிறார்கள். கல்வியில் அந்தச் சமூக மக்கள், மாணவர்கள் நல்லமுறையில் சலுகைகளைப்பெற்று முன்னேற வேண்டுமென்ற கருத்தும் இதிலே இருக்கிறது. விவசாயம் செய்கிற அரிசன மக்களுக்கு சலுகைகள் போன ஆண்டில் இருந்ததைக்காட்டிலும் இப்போது அதிகமான சலுகைகளைப் பெறும் வகையில் திட்டம் தந்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டியே தீரவேண்டும்.

அதே போல் என்னுடைய தொகுதியில் இருக்கும் ஒரு சில கோரிக்கைகளைப் பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். அந்தியூர் தொகுதியானது வறட்சியான தொகுதி. அந்தத் தொகுதியில் மேட்டூர் அணை இருக்கிறது. அணை நீரானது தொகுதி ஓரங்களில் மட்டுந்தான் செல்லுகிறது. எங்களுடைய தொகுதிக்கு எந்தவிதமான தண்ணீர் வசதியும் இல்லாத காரணத்தால் காவிரி நீரை எங்களுடைய தொகுதிக்குக் கொண்டுவர ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

அந்தியூர் பகுதியில் மலை சாதியினர் அதிகமாக வசிக்கிறார்கள். அப்படிப்பட்ட மலைசாதியினர் தாங்கள் வாழும் பகுதியில் இருந்து டவுனுக்கும் மற்ற இடங்களுக்கும் வர வசதி வாய்ப்பில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மலைசாதி மக்களுக்கும் பாதை வசதியும், பஸ் வசதியும் செய்து கொடுக்க வேண்டும்.

அந்தியூர் பகுதியில் அதிகமான அரிசன மக்கள் இருந்தும் அவர்களுக்கு வீட்டு நிலமும், இடவசதியும், செய்துகொடுக்கப்படாமல் இருக்கிறது. அதை நிச்சயமாக அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன மக்களுக்குள்ளேயே பல பிரிவுகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பிரிவினரிலே ஒரு பிரிவினர் மட்டும் அரசு வழங்குகிற சலுகைகளைப் பெறுகிற அளவுக்கு வசதி வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறார்கள். அரிசன மக்களிடையே அரசு கொடுக்கிற சலுகைகளைப் பெறமுடியாத அளவுக்கு மிகவும் தாழ்ந்த நிலையிலே இருப்பவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பிரிவினர் அரசுச் சலுகைகளைப் பெறாமல் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கில் கொண்டு அமைச்சர் அவர்கள் அந்தப் பிரிவினரும் அரசு கொடுக்கும் சலுகைகளைப் பெறக்கூடிய அளவுக்கு வழிவகைகளைச் செய்யவேண்டும்.

அரிசனங்கள் தங்கள் குடிசையில் ஒரு மின் விளக்கை இலவசமாகப்பெற்றுக் கொள்ளலாம் என்ற திட்டத்தை அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு கொண்டு வந்திருப்பதை நான் அந்த மக்களுடைய சார்பில் பாராட்டுகிறேன்.

அந்தியூர் தொகுதியில் ஒரு சில கிராமங்களில் அரிசனச் சேரிகளுக்குச் செல்ல பாதை வசதிகளும் பஸ்வசதிகளும் இல்லாத குறை இருக்கிறது. உடனடியாக அரசு அதனைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

திரு. நன்னிலம் அ. கலையரசன். —பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் அரிசன நலத்துறை சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று ஒருசில கருத்துக்களைத் துணைத் தலைவர் மூலமாக அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைய தினம் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய பிறந்த நாள் விழாவிலே கலந்துகொண்டு பேசுகின்றபோது தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். காந்தியார் அவர்கள் அரிசன மக்களுடைய இழிநிலையை புரிந்து அவர்களை அரிசன் என்று சிறப்பாக அழைக்கவேண்டுமென்ற வகையில் அவர்கள் கடவுளின் குழந்தைகள் என்று குறிப்பிட்டார்கள் என்று அந்த நேரத்திலே சொன்னார்கள். அவர்களை அரிசனங்கள் என்ற உயர்ந்த நோக்கத்திலே சொன்னாலும், இன்றைய தினம் ஒரு தனி இனமாக அவர்களைப் பிரிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு நாட்டிலே மரியாதைக் குறைவாகப் பேசக்கூடிய முறையிலே இருக்கின்ற நிலைமையைப் போக்குகின்ற அளவுக்கு மாற்றுப் பெயரை வைக்கவேண்டுமென்று அங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் அவர்கள் மற்றவர்களால் தாழ்த்தப்பட்டவர்களே தவிர அவர்களே தாழ்ந்துகொண்டவர்கள் அல்ல என்பதை அந்த நல்ல எண்ணத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த முறையிலே இந்த அரசு தாழ்த்தப்பட்டோர் நலன் என்பதற்கு 20 கோடி ரூபாயாக இருந்ததை இன்றைக்கு 24 கோடி ரூபாயாக





ஆக்கியிருப்பதை பாராட்டுவதோடு இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலே இந்தத் துறையின் மூலமாகத்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை செய்யமுடியும் என்று இல்லாமல் தமிழகத்திலே உள்ள அத்தனை துறைகள் மூலமாகவும், எந்தத் துறையாக இருந்தாலும், அந்தத் துறையின் மூலமாக நன்மைகள் செய்கின்றார்கள். சலுகைகள் அளிக்கிறார்கள். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள்-கிராமங்களிலே இருக்கக்கூடிய கிராம தலைவர்கள் கர்ணங்கள் போன்ற பதவிகளிலே அரிசனங்களை நியமிக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது பழைய காலத்திலே இருந்தாலும் இன்றையதினம் கிராமத்தலைவர்கள், கர்ணங்கள் ஆகிய பதவிகளில் அவர்களை நியமிக்கின்ற முறையிலே தனிப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் தயாராக வைக்கப்பட்டிருப்பதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. அதற்காக நான் வருவாய்த்துறையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மன்றத்திலே பேசிய உறுப்பினர்கள் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வருமானம் உள்ளவர்களுக்கு சலுகைகள் இல்லை, ஆகவே அந்த வருமான வரம்பை உயர்த்தவேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் கடந்த காலத்திலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அவர்கள் சலுகைகள் அடைகின்ற வகையிலே 9 ஆயிரம் என்று வருமான வரம்பு வைத்த நேரத்திலே போர்க்கொடி உயர்த்தியவர்கள் பலர் உண்டு, அதை எதிர்த்து கூக்குரல் எழுப்பியவர்கள் பலர் உண்டு. அந்த அடிப்படையிலே 9 ஆயிரம் என்ற வரம்பை மாற்றி பழைய நிலைமைக்கு பிற்பட்டவர்களுக்கு சலுகைகளை இந்த சர்க்கார் அளித்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சலுகைகள் அளிக்க முன்வருகிறபோது 3 ஆயிரம் என்று இருப்பதை 10 ஆயிரமாகவோ 15 ஆயிரமாகவோ உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்து உறுப்பினர்கள் பலர் பல கூட்டங்களிலே பேசியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் சாதி இந்துக்களோடு கலந்து வாழ வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவுத்துறையின் மூலமாக நிலவள வங்கிகள் மூலமாக ஒரு விவசாயி, தான் விவசாயம் செய்கிற நிலத்தை—அந்தச் சொந்தக்காரர் விரும்பினால்தான் வாங்கிக் கொள்வதற்காக கடன் கொடுக்கப்படுகிறதோ, அதைப்போன்று ஜாதி இந்துக்களோடு வாழவிருப்பமுள்ள அரிசனங்கள் அவர்கள் வாழ்கின்ற இடங்களிலேயே மனக்கட்டு வாங்க விரும்பினால், அல்லது வீடு கட்ட விரும்பினால் அவர்களுக்கு அரிசன வீட்டு வசதி வாரியத்தின் வாயிலாக கடன்களைத் தரவேண்டும். அப்படித்தருகின்ற நேரத்திலே வருமான வரம்புகள் விதிக்கக்கூடாது. ஒருவர் டாக்டராக இருப்பார், செகண்டரி கிரேட் ஆசிரியராக இருப்பார். அப்படி இருப்பவர் தான் சொந்தமாக ஒரு மனைக்கட்டை சாதி இந்துக்கள் வாழக்கூடிய பகுதியில் வாங்க விரும்பினால், அதற்கு தன்னுடைய கையிலே இருக்கின்ற 5 ஆயிரம், 10 ஆயிரம்

போதாது என்று கருதினால் அவர்களுக்கு நில வள வங்கிகள் மூலமாக நீண்டகாலக் கடன்களைக் கொடுக்கவேண்டும் என்று நான் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாநகரத்திலே மேயராக வருவதற்கு எப்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுகிறதோ அதைப்போல மதுரை மாநகராட்சியிலேயும் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதைப் போல, அரிசன வீட்டு வசதிக் கழகத்தின் பொறுப்பில் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் இந்த அரசாங்கம் கடன் உதவி செய்ய முன் வந்திருக்கிறது. அதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டமான நிலைகளை உடனடியாகப் போக்குவதற்குகாக இந்த ஆட்சி, தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட அரிசன மக்களின் முன்னேற்றத்திற்காக சிறப்பு ஐந்தாண்டுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்ற புரட்சித் தலைவரின் ஆட்சியை அந்த மக்களின் சார்பாகப் பாராட்டுகிறேன்.

ஒரு கையைத் தட்டினால் மட்டுமே ஓசை எழாது. இரண்டு கைகளையும் சேர்த்துத் தட்டினால்தான் ஓசை எழும்பும். எனவே, மாநில அரசு, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பத்து கோடி ரூபாய் செலவழிக்கிறது என்றால், மத்திய அரசும் அதற்கு ஈடாகப் பணம் தர வேண்டும். இந்த அறிக்கையிலே கூடக் கூறப்பட்டிருக்கிறது. 100 கோடி ரூபாய் மத்திய அரசு செலவு செய்ய முன் வந்திருக்கிறது. நாம் 50 சதவீதம் போட்டால் 49 சதவீதம் போடத் தயார் என்று சொல்லியிருக்கிறார்கள். அது கடன் தொகைக்கு மட்டும்தான் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்குப் பல கிராமங்களில் குடியிருப்பவர்கள், முழங்கால் தண்ணீரில் இறங்கியும், வாய்க்காலில் இறங்கியும் தான் கடக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலைமைகளைப் போக்குவதற்கு மத்திய அரசும், மாநில சர்க்கார் ரோடு, பாலம் ஆகியவைகளைப் போடுவதற்கு 3,000 ரூபாய், 4 000 ரூபாய் உதவி செய்யக் கூடிய அந்தந் திட்டங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



24 கோடி ரூபாய் என்று சொல்வது, ஒரு தாலுக்காவிற்கு எவ்வளவு செலவு செய்து ரோட்டைப் போட முடியும் ஒரு தாலுக்காவில் மூன்று, நான்கு யூனியன்கள் இருக்கின்றன. ஒவ்வொரு யூனியனிலும் நாற்பது, ஐம்பது பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. சாலை வசதிக்காக 30 இலட்சம் ரூபாய் என்று கணக்கிட்டாலும் கூட எந்த வகையில் போட முடியும் என்பதைக் கவனிக்க வேண்டும். இந்த மானியத்திலே அதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைச் செய்ய வேண்டுமென்று புரட்சித் தலைவரவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற சிறப்பு ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மத்திய அரசு அதிக உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஏ. இராமலிங்கம் :</u> சட்டப்பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1980-81 ஆம் ஆண்டுக்கான அரிசன நல மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களை அவை முன் வைக்க விரும்புகிறேன். நீண்ட நெடுங்காலமாக, தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்குக் குடியிருக்க வீட்டு மனை கோரி அரசுக்கு விண்ணப்பித்தும் இதுநாள் வரையில் குடியிருக்க பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது என்பதை அரசுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் நேரிலே வந்து அரிசன நலக் காலனியைப் பார்வையிட்டு, பட்டா வழங்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருக்க பட்டா வழங்கிய இடம் நஞ்சை நிலத்தில் பள்ளமான இடத்தை, குறிப்பாகக் காட்டுமன்னார் கோவில் வட்டத்திலும், சிதம்பரம் வட்டத்திலும் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இந்த இடங்களை மேடாக்கி வீடு கட்டிக் கொள்ள ஏழை அரிசனங்களுக்கு நிதி வசதி இல்லாமல் இருப்பதால், அரசே நேரடியாக அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிதி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 1974 ஆம் ஆண்டு, டாக்டர் கலைஞர் முதல்வராக இருந்தபொழுது, அரிசன பழங்குடி மக்களுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தினை ஆரம்பித்து, முதன் முதலாக ஒரே ஆண்டில் சுமார் 40,000 வீடுகளை இலவசமாகக் கட்டித் தந்தார்கள். இந்த அரசு பதவியேற்று மூன்றாண்டுகள் ஆகியும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்ததாகத் தெரியவில்லை. சென்ற ஆண்டு மாண்புமிகு முதல்வரவர்கள் கூறினார்கள், மாடி வீடுகளாகக் கட்டித் தரப்படும் என்று. ஆனால் இதுநாள்வரையிலும் அப்படிப்பட்ட மாடி வீடுகள் கட்டப்படவில்லை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதிகளில் உள்ள அரிசன காலனிகளின் தெருக்கள் மிகவும் சகதியாக இருக்கிறது. அங்கு கப்பிச் சாலைகள் போட வேண்டுமென்று அரிசன நலத் துறை அதிகாரிகளை அணுகினால், அது உள்ளாட்சித் துறையைச் சேர்ந்தது, எனவே, அதை ஆணையாளர்தான் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆணையாளரை அணுகினால் இதை அரிசன நலத்துறைதான் செய்ய வேண்டுமென்று கூறுகிறார்கள். இதை லிங்க் ரோடு திட்டத்தில் சேர்த்து அனைத்துக் காலனிகளுக்கும் நெடுஞ்சாலைத் துறை மூலமாகச் சாலை வசதி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி அறிவில் முன்னேற்றம் அடைய மாணவ, மாணவிகள் தங்கிப் படிப்பதற்கு வசதியாக, இப்பொழுது செயல்பட்டு வரும் விடுதிகளில் தங்கிப் படிப்பதற்கு அதிக மாணவ, மாணவிகளைச் சேர்க்க விடுதிகளுக்கு அதிகாரம் தர அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்திலே சிறந்த அரிசன நலக் கல்வி நிறுவனம் தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்திலே இருக்கிறது. அது ஏறக் குறைய 60 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப் பட்டது. அந்தச் சிறந்த நந்தனார் உயர்நிலைப் பள்ளியை கல்லூரியாக மாற்றியமைக்க வேண்டுமென்று இந்தச் சர்க்காரை நான் மிகவும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், தமிழகத்திலே தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக படிக்கின்ற கல்விக் கழகமாக, நந்தனார் கல்விக் கழகம் இருக்கிறது. இந்த அரசு அதைக் கல்லூரியாக மாற்றினால், தாழ்த்தப்பட்டவர்கள்—அந்தப் பள்ளியில் படித்து முடித்தவர்கள், பட்டம் பெற வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நந்தனார் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு குளிக்கக் கூட, கல்விக் கழகத்திலே வசதியில்லையென்று அறிகிறேன். ஆகவே, நந்தனார் கல்விக் கழகத்தில், குளியல் அறைகளும் மற்ற அறைகளும் மற்ற வசதிகளும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குறிப்பாக, கடந்த காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், அரிசனக் காலனிகளில் ஓராசிரியர் பள்ளிகள் அமைக்கப்பட்டன. பாடசாலை இல்லாத இடங்களிலெல்லாம், காலனிகளிலெல்லாம் பாடசாலைகள் அமைக்க திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால், அந்தத் திட்டம் இப்பொழுது விடப்பட்டுள்ளது. ஆகவே பாடசாலை இல்லாத காலனிகளில் பாடசாலை அமைக்க



வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்கள் அரிசன நலப் பள்ளிகளில் படித்தால் மட்டும் இலவசமாகப் புத்தகம், சீருடை வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் படிக்கும் அரிசன மாணவர்கட்கு இலவசப் புத்தகம், சீருடை வழங்கப்பெறுவது இல்லை. ஆகவே, அரிசன மாணவ, மாணவியர் எந்தப் பள்ளிக்கூடங்களில் படித்தாலும் இலவசமாகப் புத்தகம் வழங்குதல், சீருடை வழங்குதல் போன்ற அவர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கொள்ளிடத்தில், வடக்குக் கரையில் வல்லம்படுகையில் இருந்து அணைக்கரை வரை கொள்ளிடத்தின் கரையில் சுமார் 1 இலட்சத்துக்கும் அதிகப்படியான தாழ்த்தப்பட்ட மக்களும, பிற்படுத்தப்பட்ட மக்களும் வாழ்கிறார்கள். அவர்களுடைய நலனைக் கருதி, அந்தச் சாலையை அமைத்தால், குறிப்பாக தாழ்த்தப்பட்ட வர்களுக்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், சாலையை அமைத்தால், குறிப்பாக தாழ்த்தப்பட்ட வர்களுக்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கொள்ளிட வடக்குக் கரையை நல்லமுறையில் தூக்கி தார் சாலை அமைத்தால், கொள்ளிடக் கரையும் வலுப்பெறும். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் சாலை வசதி கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட ஏழை விவசாயிகள் புறம்போக்கு நிலங்களை உழுது பயிரிட்டு நெடுங்காலமாக தனது சுவாதீனத்தில் அநுபவித்து வருகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் புறம்போக்கு நிலங்களில் பயிரிடும் அந்த அரிசனங்களை விரட்டுகிறார்கள். இந்த நிலையைப் போக்கி, அவர்கள் பயிர் வைத்த நிலங்களில், பட்டா வழங்க ஏற்பாடு செய்யும்படி இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட அரிசன நல தாசில்தார்கள் ஒவ்வொருவருக்கும் ஜீப் வழங்கினால் அரசு திட்டங்களை அமுல் நடத்த வசதியாக இருக்கும். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்பொழுது 5 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ள விவசாயிகள் அத்தனை பேருக்கும் கூட்டுறவு சங்கங்களில் வாங்கிய கடனை அரசு ரத்து செய்துள்ளது. அரிசனங்களுக்கு, நேரடியாக தொழில் நடத்தவும், கறவை மாடுகள் வாங்கவும், அரசே கடன்கள் கொடுத்துள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களுக்குக்

கொடுத்த அந்தக் கடன்களையும், 5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிகளது கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்ததுபோல், ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வர இருக்கும் ஊராட்சி ஒன்றியத் தேர்தலில் தாழ்த்தப் பட்டவர்களும் ஒன்றியத் தலைவராக வருவதற்கு சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தலைப் போல், ஒன்றியத் தலைவர் தேர் தலிலும் தனித் தொகுதி ஒதுக்கும் முறையைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அரிசன காலனிகள்தோறும் ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு திருமண மண்டபம் அமைத்து, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள், திருமணம் போன்ற விழாக்கள் நடத்த வசதியாக ஏற்பாடு செய்தது. ஆனால், இந்த அரசு பதவியேற்று ஏறக்குறைய 3 ஆண்டுக்காலமாக அந்தத் திட்டம் செயல்படவில்லையென்று வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்.

கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு 14 காரட்டில் தங்கப்பதக்கம் வழங்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 14 காரட் ஏன்? 22 காரட் தங்கம் வழங்கினால் தாழ்த்தப்பட்டவர்களை ஊக்கு விக்க நல்ல வாய்ப்பிருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

நகர்ப்புறத்திலே இருக்கிற சேரிகள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. நகர்ப்புறத்திலே இருக்கிற அனைத்து அரிசனக் காலனிகளையும் அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.40.)

*திரு. வெ. அரங்கராசன் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே அரிசன மற்றும் பழங்குடி யினர் மானியக் கோரிக்கை மீது பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் தலைமையில் அரசு பொறுப்பேற்ற தற்குப பின்னால்தான், ஏழை, எளிய பாட்டாளி மக்களாகிய அரிசனங்கள், பழங்குடியினர் ஆகியவர் நன்மை பெற்றுள்ளனர். பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது மிகவும் பாராட்டத் தக்கதாகும். பள்ளியில் படிக்கும் அரிசன பழங்குடி மாணவரின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.3,000க்கு மேற்பட்டவர்களுக்கு கல்வி சலுகை கிடையாது. ஆனால்



புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னர் மாணவரின் பெற்றோரின் வருட வருமானம் கணக்கில் கொள்ளாமல் உயர்நிலைப் பள்ளி வரை படிக்கும் ஏழை எளிய மக்களாகிய அரிசன, பழங்குடி மக்களுக்கு எல்லாவித கல்விச் சலுகைகளும் கொடுக்கப்பட்டன. கல்வியில் சிறந்த மாண வர்களுக்கு ''காந்தி அடிகளின் நினைவுச் சிறப்புக் கல்வி உதவித் தொகை'' தற்சமயம் அளிக்கப்படுவது பாராட்டத் தக்கதாக உள்ளது. அரிசன பழங்குடியினர் பள்ளிகளில் அளிக்கப்படும் மதிய உணவின் அளவை உயர்த்தியது பாராட்டத் தக்க ஒன்றாகும்.

அடுத்து தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. இது மிகவும் பாராட்டத் தக்க செயலாகும்.

அடுத்து 1980-81-ல் அரசின் பல்வேறு துறைகளால் அரிசன பழங்குடியினருக்காக சுமார் 80 கோடி ரூபாய் சிறப்பு கூட்டுத் திட்டத்தின் கீழ் செலவிடப்படும் என்றும், இதன் மூலம் வேலை வாய்ப்பு, அதிகரித்து சுமார் இரண்டு லட்சம் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் மேல் கொண்டுவரப்படுவது பாராட்டத் தக்கதாகும். ஆனால் இந்தத் திட்டத்தின் கீழே ஒதுக்கப்படு கின்ற பணம் அத்தனையும் செலவிடப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். ஏன் என்று சொன்னால், இப்படி ஒதுக்கப்படு கின்ற பணம் முழுவதும் செலவிடப்படாமல் ஆண்டு இறுதியில் மீதியாக்கப்பட்டு திருப்பிச் செலுத்தப்படுகிற நிலை ஏற்படுகிறது. எனவே அதிகாரிகள் இதிலே கவனம் செலுத்தி, இதற்கு ஒதுக் கப்படுகின்ற பணம் முழுமையாக செலவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரிகள் ஒத்துழைப்புத் தந்தால்தான் இந்த ஆட்சிக்கு நல்ல பெயர் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் அரிசன, பழங் குடி மக்கள் மற்றவர்களைப் போல உயரவேண்டுமானால் அவர்கள் எல்லா துறைகளிலும் ஈடுபட வேண்டும். இந்த எண்ணத்தை மனதில் கொண்டுதான் நமது புரட்சித் தலைவர் அவர்கள், அவர்களுக்காக தொழிற்கூடம் ஏற்படுத்தி, அதன் மூலம் சுயமாக தொழில் செய்ய வசதி செய்திருப்பதை பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதன் மூலம் ஒரு லட்சம் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று குறிப் பிடப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு தொழில் கருவிகள், உழவு மாடுகள், பாசனக்கிணறுகள் தோண்டுவதற்கு உதவித் தொகை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மலைவாழ் மக்களுக்காக உள்ள லாம்ப் கூட்டுறவு சங்கங்களில் இன்னும் அதிகாரிகள்தான் கமிட்டி உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இதனால் பழங்குடியினர், முன்னேற்றத்திற்கு

எந்தவித பலனும் இல்லை. எனவே அதைக் கலைத்து பழங்குடியினராக உள்ளவர்களை நியமித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மலைகளில் விளைகின்ற பொருள்களை எல்லாம் லாம்ப் கூட்டுறவு சங்கம் மூலமாக வாங்க வழிவகை செய்யவேண்டும். இன்னும் தனி நபர்கள் கொள் முதல் செய்து கொள்ளை லாபம் அடித்து வருகிறார்கள். எனவே இந்த முறை ஒழிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரிசன வகுப்பினர் யாராவது இறந்தால் ரூ. 50 கொடுக்கப்படுவது மிகவும் பாராட்டுக்குரியதாகும். அடுத்து டாப்—செங்காட்டுப்பட்டியில் ஒரு மருத்துவமனை கட்டி முடிக் கப்பட்டு இரண்டாண்டுகள் ஆகின்றன. இன்னும் மருத்துவ மனை திறந்து வைக்கப்படவில்லை. மேலும் மருத்துவர்கள் யாரும் ஒழுங்காக மலைக்கு வருவதில்லை. வந்தாலும தங்கு வதில்லை. எனவே மருத்துவர்களுக்குத தங்கும் இடம் போன்ற வசதிகளை அங்கேயே செய்து கொடுத்து அவர்களை ஊக்கு விக்கவேண்டும். (மணி அடிக்கப்பட்டது.)

மலையில் கிடைக்கும் சந்தன மரங்களைக் கொண்டு சந்தனப் பவுடர், பத்தி, எண்ணை தயாரிக்கும் தொழிற் சாலையை உருவாக்குவதன் மூலம் வேலை வாய்ப்பு பெருகிட வாய்ப்பு இருக்கும். இந்தத் தொழிற்சாலையை மலைப் பிரதேசத்தில் அமைத்தால் அவர்களது வாழ்க்கைத் தரம் உயர வாய்ப்பு உள்ளது.

எங்கள் பகுதியில் 53 கிராமங்கள் உள்ளன. ஒவ்வொரு கிராமத்திற்கும் இணைப்புச் சாலை எதுவும் இல்லாமல் நடை பாதை மட்டுமே உள்ளது. அந்த சாலை வசதிகளை செய்து கொடுக்கவேண்டும். என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பாதையில் பஸ் போக்குவரத்தும் செய்து கொடுக்க வேண்டு கிறேன்.

கொல்லிமலை, சேர்வராயன் மலை போன்ற இடங்களில் அரசு அதிக கவனம் செலுத்தி பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது. அதைப்போலவே எனது பச்சைமலை பகுதியையும் மேம்படுத்தி பழ வகைகள் காப்பி, தேயிலை போன்ற மற்றும் பல புதிய வாணிபப் பயிர்களை பயிர் செய்து, விவசாயிகளின் குறைகளை போக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பச்சை மலைப் பகுதியை ஒரு சுற்றுலா ஸ்தலமாக அறிவித்து அதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



மத்திய அரசு கொடுக்கின்ற சலுகைகள் அரிசன மக்களுக்கு 18% பழங்குடி மக்களுக்கு $7\frac{1}{2}$% என்றும் இதைப் போல வேறு மாநிலங்களில் இருக்கின்றது. அதைப்போல நம்முடைய தமி ழகத்திலும் நடைமுறைப் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இங்கே பேச சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி கூறி, அண்ணா நாமம் வாழ்க, வெல்க புரட்சித் தலைவர் ஆட்சி, என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசு வதற்கு வாய்ப்பளித்ததற்கு முதற்கண் என் நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

என்னை விட நாடு பெரிது, இந்த நாட்டை விட என் சமுதா யம் பெரிது என்று பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் அறிவித் தார்கள். இந்த நாட்டிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்ந்தால் தான், இந்த நாடு உயர்ந்தது என்பதைக் கணக்கில் கொள்ள முடியும் என்று சமுதாய சீர்திருத்தத்தை முன்னாலே வைத்து, இந்த நாட்டுக்கு அறிவுரை ஆற்றினார்கள், டாக்டர் அம்பேத்கார் அவர்கள். அந்த அடிப்படையில் தான் இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம் தான் நாட்டின் முன் னேற்றம் என்பதை கருத்தில் கொள்ளவேண்டும்.

இன்றைக்கு அவர்கள் எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறார் கள் என்பது கடந்த கால அரசியல் வரலாறு நமக்குக் காட்டிக் கொண்டு இருக்கின்றன. இந்த மக்களின் முன்னேற்றத்திற்கு இன்றைக்கு ஒட்டுமொத்தமாக அனைத்துக் கட்சிகளும், அனைத்து சார்புள்ள மதத்தினரும், அனைத்து ஜாதியைச் சேர்ந் தவர்களும் ஒத்துழைத்தால் தான் அந்த மக்கள் முன்னேற்றம் அடைய முடியுமே தவிர அவர்கள் மாத்திரம் போராடிப் பயன் இல்லை. இன்றைக்கு நாட்டிலே ஏதோ ஒரு பிரிவைச் சார்ந் தவர்கள் தான் குறிப்பாக பச்சையாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்—பிரமாணச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்று வெளிப்படையாகச் சொல்லி பிராமணர் எதிர்ப்பு இயக் கத்தை அரசியலில் வளர்த்து வருகின்ற சில பேர், தந்தை பெரி யாரின் வாரிசு என்று சொல்லிக் கொள்கிற வீரமணி பிராமண எதிர்ப்பு என்ற இயக்கத்தை ஆரம்பித்து, அவர்கள் ஏதோ தீண்டாமைக்குக் காரணம் என்பதாக இந்த நாட்டிலே சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். மேல் ஜாதிக்காரர்களும், ஜாதி இந் துக்களும் இதைவிட அதிகமாக அதற்குக் காரணம் என்பதை அவர் கள் மறந்து போனார்கள். இப்படிப்பட்ட ஜாதி துவேஷத்தை தூண்டிவிடுகிறவர்களை மாண்புமிகு தமிழக அரசு கைது செய்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

தமிழ்மொழியில் சொல்வதைப்போல், ''தமிழாய்ந்த தமிழன்
தான் தமிழ் நாட்டை ஆளவேண்டும்'' என்பதுபோல், தாழ்த்தப்
பட்ட மக்களின் பிரச்சனைகளை நன்கு புரிந்துகொண்டு, அறிந்து
கொண்டு இருக்கிற ஒரு நல்ல தலைவனுக்குத்தான் இந்த இலாகா
ஒதுக்கப்படவேண்டும் என்று சொன்னது போல், அந்த இலாகா மக்
களின் குறைகளையும், அந்த இலாகாவையும் நன்கு புரிந்து
கொண்டு இருக்கிற மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர்
இளைஞராக இருப்பதற்காக நான் பாராட்டுக்களைத் தெரி
வித்துக் கொள்கிறேன். அவர் இந்த இலாகா பொறுப்பு ஏற்றுக்
கொண்டு இருப்பது பொருத்தமுடையதாகும் என்று தெரிவித்
துக் கொள்கிறேன். இது பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள்
எண்ணத்திற்கு வடிவு கொடுத்ததுப்போல் இருக்கிறது என்பதற்
காக புரட்சித் தலைவர் அவர்களுக்கு இந்த மன்றத்தின் மூலம்
என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, புரட்சித் தலைவர் அவர்கள், ஒரு பெரிய
மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்கிறார்கள்.
அரிசன் என்ற பெயரை மாற்றவேண்டும் என்று எண்ணி அந்த
மக்களுக்கு ஒரு நல்ல பெயரை வைக்க வேண்டுமென்று தன்
கருத்தை வெளியிட்டதன் காரணமாக தன் நினைப்பாலேயே
அவர் புரட்சித் தலைவராக இருக்கிறார் என்பதை தெரிவித்துக்
கொள்கிறேன்.

பெரியவர்களாயனும், அந்தச் சமுதாயத்தில் வாழ்ந்தவர்
களாயினும் அந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு 'அரிசன'
என்ற பெயர் வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை
யார் வைத்து இருந்தாலும் சரி, எந்த மூலமாக வந்திருந்தாலும்
சரி, அது வேண்டாம். அவர்களை 'ஆதித் திராவிடர்கள்' என்று
அழைப்பது பொருத்தமாக இருக்கும் என்று இந்த மாமன்றத்தில்
நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி அறிவில் முன்னேறினால்
தான் தங்களை அவர்கள் விடுவித்துக்கொள்ள முடியும் என்று
டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சொன்னார்கள். அதன் காரண
மாகத்தான் தான் சம்பாதித்த பல கோடி ரூபாயை கல்விச் சங்
கத்திற்கு அளித்தார்கள். காரணம், அந்த மக்கள் கல்வி வளர்ச்சி
யில் முன்னேற்றம் அடைந்தால் தான், விடுதலை அடைய முடியும்,
சுயமரியாதையோடு வாழமுடியும் என்று அவர்கள் கல்விக்கு முக்
கியத்துவம் கொடுத்தார்கள், முதலிடம் தந்தார்கள். அப்படிப்
பட்ட கல்வியில் தாழ்த்தப்பட்ட மக்களை ஊக்குவிக்கும், சீரான
வாழ்வு வாழவும், அந்த மக்கள் வாழும் பகுதியில் 'கான்வெண்ட்'
பள்ளி ஏற்படுத்தவேண்டும். உயர்நிலைப் பள்ளியிலும், கல்
லூரியிலும் படிக்கும் மாணவர்களுக்கு, மாலை நேரங்களில் டியூஷன்
கற்றுத்தரவேண்டும் அதற்கான வழிவகைகளை அரசு செய்ய
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



பள்ளிகளில் கல்லூரிகளில அவர்களுக்கு இடம் ஒதுக்குகிற
போது, தயவு செய்து இதனை அரிசன நலத்துறை அமைச்சர்
கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்—
75 மார்க் வாங்கிய பிராமண மாணவன் ஜென்ரல் பூலில் வருவது
போல், 75 மார்க் வாங்கிய அரிசன மாணவனும் ஜெனரல் பூலுக்கு
கொண்டுவரப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலம், 35 மார்க்
வாங்கி தாழ்த்தப்பட்ட மாணவன் கோட்டாவில் இடம்
பெற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 75
மார்க் எடுத்த மாணவனை கோட்டாவில் தேர்ந்தெடுத்து விடுவ
தன் மூலம், 35 மார்க் வாங்கியவன் வெளியே நிற்கவேண்டிய சூழ்
நிலை வந்து விடுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
இந்த முறையைக் கையாண்டால்தான் தாழ்த்தப்பட்ட மக்கள்
நல்ல முறையில் முன்னேற்றம் அடைய முடியும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் தாழ்த்தப்பட்ட மக்கள்
இருக்கிறார்கள் என்பதால் தான் அவர்களுக்குச் சலுகைகள் வழங்
கப்படுகின்றன. அதற்கு வருமான வரம்பு வைக்ககூடாது. உயர்
அதிகாரிகள் ஆகிவிட்டார்கள் என்று சொல்வதாலேயே அவர்கள்
முன்னேற்றம் அடைந்து விட்டார்கள் என்பது அல்ல.
அந்த அடிப்படையில் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் அந்தச்
சலுகைகளை வாங்கி தரவில்லை. ஆகவே, அந்த வரையறுக்கப்
பட்டு இருக்கிற இன்கம் சீலிங் எடுக்கப்படவேண்டும். தாழ்த்தப்
பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் ஐ.ஏ.எஸ். படித்து கலெக்
டராகப் பணிபுரிந்தாலும், சாதாரண மேல் ஜாதியைச் சேர்ந்தவர்
கள் தாழ்த்தப்பட்ட கலெக்டர் என்று தான் சொல்கிறார்களே
தவிர, அவர்களை மேல்ஜாதிக்காரன் என்று ஏற்றுக்கொள்வது
இல்லை. ஆகவே, அந்த இன்கம் சீலிங்கை முழுமையாக எடுத்து
விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

அது மட்டுமல்ல. ரிசர்வேஷன் முறையில் ப்ரமோஷன் தர
வேண்டும். இப்போது என்ன காரணம் காட்டி, ப்ரமோஷன் கொ
டுக்காமல் இருக்கிறார்கள் என்றால் தகுதி இல்லை என்றுசொல்லி
தள்ளிவிடுகிறார்கள். அப்படி தள்ளிவிடுவது சரியல்ல. அந்த
மக்களிலே தகுதி உள்ளவர்களைக் கொண்டு அந்த இடத்தை
நிரப்ப வேண்டும். இல்லாவிட்டால் அவர்களை தகுதி உடைய
வர்களாக்கி, அந்த இடத்திலே உட்காரச் செய்ய வேண்டும்.
அதற்கு மத்திய அரசிலே இருக்கிற விதிமுறைகளை நம்முடைய
மாநில அரசும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த நிலை இப்
போது இல்லாத காரணத்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லா
நிலைகளிலும் தாழ்த்தப்படுகிறார்கள்; ஒதுக்கப்படுகிறார்கள்;
அதற்கு அரசாங்கத்தைச்சொல்லி பயனில்லை. முதலமைச்சரையும்

மற்ற அமைச்சர்களையும் சொல்லி பயனில்லை. காரணம்
அவர்கள் இந்த மக்களை சீர்திருத்த வேண்டுமென்று விரும்பு
கிறார்கள். ஆனால் அதிகாரிகளும், போலீஸ்காரர்களும் இந்த
மக்களை முன்னேற முடியாமல் தடுத்துவிடுகிறார்கள். அதற்கு
என்ன காரணம் என்றால் அவரவர் ஜாதிக்காரர்களுக்கு நல்லது
செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள். அவரவர் ஜாதிக்காரர்
என்ற உணர்வு அவர்களுக்கு இருக்கிறதே தவிர தாங்கள் அரசாங்க
ஊழியர்கள் என்ற எண்ணம் வருவதில்லை. அரிசன மக்களுக்கு
நிலம் வழங்க வேண்டுமென்று எங்காவது நிலத்தை ஆர்ஜிதம்
செய்தால், அந்த அதிகாரிகள் இது யாருடைய நிலம், எந்த
ஜாதிக்காரர் நிலம் என்று பார்க்கிறார்கள். அந்த அதிகாரியின்
ஜாதிக்காரர் நிலம் என்றால் ஏதாவது ஒரு காரணத்தைச்சொல்லி,
அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்யாமல் விட்டுவிடுகிறார்கள். அத
னால் அரசாங்கத்தின் எண்ணம் நடைபெறாமல் போகிறது.

என்னுடைய தொகுதியிலே வாணக்காரன்தோப்பு என்ற ஒரு
இடம் இருக்கிறது. சுமார் 30 ஆண்டுகாலமாக அங்கே அரி
சனங்கள் குடியிருக்கிறார்கள். இன்றுவரையில் அவர்களுக்கு பட்டா
வழங்கவில்லை. அதிகாரிகள் அங்கே ஒரு தனிப்பட்ட மனி
தருக்கு சாதகமாக இருக்கிறார்கள். அந்த தனிப்பட்ட மனி
தருக்கு இந்த இலாகா நன்மை செய்கிறதே தவிர அரிசனங்களுக்கு
நன்மை செய்வதாக இல்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் மாறி
இந்தமாதிரியான இடங்களில் எல்லாம் அவர்களுக்கு, அந்த தாழ்த்
தப்பட்ட மக்களுக்கு நிலத்தை பட்டா வழங்க வேண்டும்; அதுவும்
அந்த நிலத்திற்கு எந்தவிதமான நஷ்டயீடும் இல்லாமல் அந்த
மக்களுக்கு எடுத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
(மணியடிக்கப்பட்டது) இன்னும் ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: நேரம் இல்லை.
உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு மேலேயே பேசியிருக்கிறீர்
கள். முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ஜி. மூர்த்தி : டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய
உருவப் படத்தை இந்த மாமன்றத்திலே வைக்க வேண்டுமென்ற
கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்துகொண்டிருக்கிறது. (மணி
யடிக்கப்பட்டது) இந்த நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்
றித்தர வேண்டும்; டாக்டர் அம்பேத்கார் அவர்களின் உருவப்
படத்தை இங்கே திறந்து வைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர்
அழைக்கப்பட்டார்).

*திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணை
தலைவரவர்களே, அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற மானியக்
கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்
படுகிறேன்.



இந்த அரிசன மானியத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை,
அரிசன மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை அவர்களு
டைய தேவைக்கு போதுமானதா என்று பார்த்தால் நிச்சயமாக
போதாது என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். அரிசனங்களுக்கு கம்யூனிட்டி ஹால்
கட்டுவதற்காக 1,50,000 ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். ஒரு
சமூகக்கூடம் அமைக்க ரூ 15,000 என்று ஒதுக்கம் செய்யப்பட்
டுள்ளது. அப்படிப்பார்த்தால் 10கம்யூனிட்டி ஹால்கள்தான் கட்ட
முடியும். இது இந்த தமிழ்நாடு முழுவதற்கும் போதுமா என்றால்
நிச்சயமாக போதாது என்பதை நான் முதற்கண் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக திருமணக் கூடங்கள் பற்றி எனக்கு முன்
னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். திருமணக் கூடங்கள்
இருக்கின்றன. ஆனால் அதை மேல்ஜாதிக்காரர்கள் அரிசனங்
களுக்கு வாடகைக்கு விடுவது கிடையாது; வாடகைக்கு விட மறுக்
கிறார்கள். அப்படிப்பட்ட திருமணக் கூடங்கள் எல்லாம் அரிசன
மக்களுக்கும் வாடகைக்கு கிடைக்க வேண்டிய ஏற்பாடுகளைச்
செய்ய வேண்டும். மேலும் காலனிகளில் அதைப்போன்ற திரு
மணக் கூடங்களை அமைத்து, அரிசனங்களுக்கு வாடகைக்கு
விடும் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து, பட்டா பற்றி குறிப்பிட்டார்கள். என்னுடைய
தொகுதியாகிய ஸ்ரீபெரும்புதூரில் மணப்பாக்கம் என்ற இடத்
தில் அரிசன மக்கள் 1962-லேயே குடியிருக்கிறார்கள். கிட்டத்
தட்ட 18 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்றையதினம் வரையில்
பட்டா கிடைக்கவில்லை என்பதைத தெரிவித்துக்கொள்கிறேன்.
பட்டா அவர்கட்கு வழங்க கோருகிறேன்.

அரிசனங்கள் இருக்கிற குடிசைகளுக்கு எல்லாம் மின்விளக்கு
வசதி செய்து கொடுக்க வேண்டும். மணப்பாக்கத்தைப் பொறுத்த
வரையில் மின் விளக்குப் பொருத்தி இருக்கிறார்கள். அதற்கு
உதவி செய்திருக்கிறவர்கள் கிண்டி லயன்ஸ் கிளப் சங்கத்தார்.
இதைப்போன்ற பெரிய மனம் கொண்ட, மனப்பக்குவம் கொண்ட
நல்ல அமைப்புகள் இருக்கின்றன. அத்தகைய அமைப்புகளைப்
பயன்படுத்தி, மணப்பாக்கம் காலனிக்கு மட்டுமல்ல, அனைத்து
காலனிகளுக்கும் மின்விளக்கு வசதி செய்துதர வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன மாணவர்களுக்கு இலவசப் புத்தகம் வழங்கப்படுகிறது,
இலவசப் புத்தகம் வழங்கும்போது அரிசன நலத்துறை நடத்தும்
பள்ளிகளுக்கு மட்டும் கொடுத்துவிட்டு, மற்ற பள்ளிகளில் படிக்
கும் அரிசன மாணவர்களுக்கு கொடுக்காமல் இருப்பது சரியல்ல.
எல்லா அரிசன மாணவர்களுக்கும், அவர்கள் எந்தப் பள்ளியில்

படித்தாலும் இலவசப் புத்தகம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்
டும்; அரிசன நலத்துறை பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு
மட்டும்கொடுப்பது என்பது நியாயமல்ல. அரிசன நல இலாகா
பள்ளிகளில் மட்டும் இலவசப் புத்தகம்நல்கி மற்றப் பள்ளி அரிசன
மாணவர்கட்கு இலவச புத்தகம் அளிக்காமல் உதவித் தொகையை
ரத்து செய்வது எபபடி நியாயமாகும்?

அடுத்தபடியாக, 18 சதவீதம் வேலைவாய்ப்புக்கு உத்தர
வாதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை சரியாக நடைமுறைப்
படுத்த ஒரு கமட்டி இருக்கிறது, முதலமைச்சர் அந்த கமிட்டிக்குத்
தலைவர்; அரிசன நலத்துறை அமைச்சர் அதற்குத் துணைத்
தலைவர் என்று சொல்கிறார்கள்.

இங்கே இருக்கின்ற தலைமைச் செயலகத்தில் கிட்டத்தட்ட
5 ஆயிரம் பேர்களுக்கு மேலாகப் பணியாற்றுகிறார்கள். இதிலே
900 பேர் அரிசன பழங்குடியினர் பணியாற்றுகிறார்களா என்று
தெரிந்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படி இருந்தால் எந்
தெந்தத் துறையிலே எவ்வளவு எவ்வளவு பேர்கள் இருக்கிறார்
கள் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். 18 சதவீதம் இடங்கள் அரிசன, பழங்குடி மக்
களுக்கு ஒதுக்கப்படுவது குறித்த விதியை நியமன அதிகாரிகள்
ஒழுங்காக பின்பற்றுகின்றனரா என்று கண்காணிக்க மாண்புமிகு
முதலமைச்சரவர்களைத் தலைவராகவும் அரிசன நல அமைச்ச
ரவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்ட உயர்நிலைக்குழு
ஒன்று செயல்படுவதாக மாண்புமிகு அரிசன நல அமைச்சரவர்
கள் தெரிவித்துள்ளார்கள். இந்த உயர்மட்டக் குழுவிற்கு ஆண்டு
தோறும் ஒவ்வொரு துறைத் தலைவரும் விவரக் கணக்கு அனுப்ப
வேண்டுமாம்.

கணக்கு என்று சொல்லும்போது ஒன்றைக் குறிப்பிடாமல்
இருக்க முடியவில்லை. இத்திங்கள் நிதித்துறை 1980–81-ஆம்
ஆண்டுக்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகளை 275 பக்கங்
கள் கொண்டதாக பெரிய அளவில் அச்சிட்டுத் தந்துள்ளது. அதில்
237-ம் பக்கத்தில் தன்னாட்சி நிறுவனங்களிடமிருந்து பெற்ற
கடன்கள்என்கின்றதலைபபில் 1978 ஏப்ரல் 1-ம்நாள் நிலுவையாக
உள்ளவை—இந்த ஆண்டில் பெற்ற கடன்கள் இந்த ஆண்டில்
வழங்கிய தொகை—1979-ஆம் ஆண்டு மார்ச் 31-ம் நாள் நிலு
வையாக உள்ளவை என்ற பிரிவுகளின் கீழ் கொடுக்கப்பட்டிருக்
கும் கணக்கில் 72 ரூபாய் கூடுதல் நிலுவை காட்டப்பட்டிருக்
கிறது. இதுபோலவே மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்கள்
குறித்த விவரங்கள் என்ற தலைப்பின் கீழ் 238-ம் பக்கத்தில்
ஆரம்பித்து 262-ம் பக்கத்தில் பழைய கடன்கள் மொத்தம்
1—4—1978 நிலவரப்படி தொடக்க இருப்பிலிருந்து இந்த ஆண்டு
திருப்பிச் செலுத்திய தொகையைக் கழித்தால் இறுதி இருப்பு ஒரு
கோடி கூடுதலாக திருப்பித் தரவேண்டிய கடன் நிலுவை காட
டப்பட்டுள்ளது.



ஆகவே, இவ்வாறு பண விஷயத்திலேயே கணக்கைக்கூட்டி கொடுத்திருக்கும்போது இட விஷயத்தில் கூடுதல் செய்வது பெரிய காரியமல்ல. 18 சதவீதம் இட ஒதுக்கீடும் கணக்குத்தான். திருப்பித்தரவேண்டிய பொறுபபும் கணக்குத்தான் ஆகவே 18 சதவீதம் அரிசன பழங்குடி மக்கள் இட ஒதுக்கீடுகளை அடைவதறகு தனியாகவே ஒரு தலைவரை நியமித்து ஒவ்வொரு துறையையும் கண்காணிக்கவும் ஆணையிடவும் அவருக்கு அதிகாரம் வழங்கினால் எந்த அரிசன ஏழை மக்கள் உயர்வு பெற வேண்டும் என்று அண்ணல் காந்திஜியும் பெருந்தலைவர் காமாராஜூம் பேரறிஞர் அண்ணாவும் எண்ணி அரும்பணியாற்றினார்களோ அவர்களுடைய எண்ணத்தைச் செயல்படுத்தியவராவீர்கள் என்ற கருத்தினை இந்த நேரத்திலே குறிபபிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொருத்தமட்டிலும் அங்கே பாதை வசதி இல்லை, குடிநீர் வசதி இல்லை, பிரசவ காலங்களிலே தாய்மார்களை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்வதற்குக் கூட சாலை வசதி இல்லாமல் அவர்களை கட்டிலிலே படுக்க வைத்துக் நான்கு ஆடவர்கள் தூக்கிக்கொண்டு செல்கின்ற பரிதாபகாரமான நிலைமை இருக்கின்றது. அந்த இடத்திலே அந்தத் தாய்க்கு ஏதேனும் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் இடையிலேயே திரும்பி வீட்டுக்கு கொண்டுவரவேண்டிய நிலைமை இருக்கின்றது. இப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் சென்னையிலிருந்து கிட்டதட்ட 22 மைல்கள் தூரத்தில் இருக்கின்ற ஸ்ரீபெரும்புதூரில் இருக்கின்றது. கிராமங்களிலே இருக்கின்ற இதுபோன்ற நிலைகள் எல்லாம் போக்கப் படவேண்டும. ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும்.

ஸ்ரீபெரும்புதூர் அருகிலே பக்தவச்சலம் நகர் என்று ஒரு நகர் இருக்கின்றது. அந்த நகரிலே தனிப்பட்ட ஒருவர் அரிசன மக்கள் போகின்ற வழியிலே முள் புதரை அடைத்து வைத்திருக்கின்றார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு. கிருஷ்ணன் அவர்களுடைய தலைமையிலே பஞ்சாயத்து நடைபெற்றிருக்கின்றது. அதன்பின் அனைத்துக் கட்சிக்காரர்களும் ஒப்புக்கொண்டு அந்த நிலத்தின் சொந்தக்காரரும் வழிவிடுவதாக ஒப்புக்கொண்டு பஞ்சாயத்திலே எழுதிக்கொடுத்து விட்டு பிறகு கோர்ட்டிலே சென்று ரிட் வாங்கி இருக்கிறார்கள். அதாவது அந்தப் பாதையிலே யாரும் செல்லக்கூடாதென்று ரிட் வாங்கி இருக்கிறார்கள். மறுபடியும் அந்த அரிசன மக்கள் அத்தனைபேரும் கோர்ட்டுக்குச் சென்று ரிட்டை உடைத்திருக்கிறார்கள். ஆனால் இருக்கின்ற அதிகாரிகள் சரியான நடவடிக்கைகள் எடுக்கவில்லை. இப்போது அந்த மக்கள் நடக்க வழியில்லாமல் அவதிப்படுகிறார்கள். அங்கே முள் புதர்கள் போடப்பட்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் கவனித்து உடனடியாக அதிகாரிகள் மூலம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். ரெவின்யூ டிப்பார்ட்மென்ட்டிலே உள்ள

அதிகாரிகளைக்கொண்டு வந்து போட்டால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட மாட்டாது என்பதைக் கூறிக்கொண்டு அரிசனநலத் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நியமிக்கவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி உரை முடித்து விடைபெறுகிறேன்.

[நண்பகல் 12-00]

*திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற அரிசன பழங்குடி மக்கள் நல மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலாவதாக இந்த மானியத்தை நான் வரவேற்கிறேன்.

1967-லே பேரறிஞர் அண்ணாவின் ஆட்சிக் காலத்தில், அறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக பதவி வகித்த போது ஏறத்தாழ பத்துக்கோடி ரூபாய் அளவிற்கு அரிசன நலத்திற்காக ஒதுக்கப்பெற்றது. ஆனால் இன்றையதினம் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே அந்த ஒதுக்கீடு இரண்டு மடங்காக கிட்டத்தட்ட 24 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தப்பட்டிருப்பதை பார்க்கும்போது, உண்மையிலே புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலனுக்காக எந்த அளவிற்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் புரிந்துக் கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எல்லாம் பேசுகிறபோது, இந்த ஆட்சி தாழ்த்தப்பட்ட மக்களுக்காக எதுவுமே செய்யவில்லை என்ற குறைபாட்டைக் கூறினார்கள். அதற்காகத்தான் நான் இந்த நிதி ஒதுக்கீட்டை சுட்டிக்காட்டினேன் என்று கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி வசதி, வீட்டு வசதி, வேலை வாய்ப்பு வசதி ஆகியவைகள் கட்டாயமாக தரப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அரசு திட்டமிட்டிருக்கிறது, அதிலும் கல்வியைப் பொருத்தவரையில் ஏராளமான அரிசன மாணவர்கள் நல்ல முறையில் கல்வி பெறும் வகையில் திட்டமிட்டு செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன். படிப்பில் திறமைபெற்ற மாணவர்களுக்கு பல்வேறு வகைகளில் உதவி செய்தும், உதவித் தொகை அளிக்கவும் பிற வசதிகள் செய்து கொடுக்கவும் கொண்டுவந்திருக்கிற சட்டங்களை எண்ணிப் பார்க்கும்போது உள்ளபடியே நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

கல்வி என்று சொல்லும்போது, என்னுடைய திருநெல்வேலி மாவட்டத்தில் நல்லம்மாள்புரம் என்ற ஊரில் கடந்த ஆண்டு அரிசன நலப் பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இன்று



வரை அந்தப் பள்ளிக்கு தேவையான மேற்பட்டப்படிப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பெறாத நிலையில் இருக்கிறது. அதை மாற்றி போஸ்ட் கிராஜுவேட் ஆசிரியராக பயிற்சி பெற்ற தேவையான ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று பணிவன்போடு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாணவர்களுக்காக, அதுவும் அரிசன மாணவர்களுக்காக இல்லங்கள் பல ஏற்படுத்தி நல்லமுறையில் நடத்தி வருவது பாராட்டத் தக்கது. இந்த ஆண்டு மேலும் 15 ஹாஸ்டல்கள் தொடங்கப்படவிருப்பதை வரவேற்றாலும், ஏற்கெனவே இருக்கிற விடுதிகளில் மாணவர்களுக்கு இடவசதி அதிகமாக இருக்குமேயானால் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அப்படி அதிகப்படுத்துவதற்கான உத்தரவுகளை உடனடியாக பிறப்பிக்க வேண்டும், என்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வேலை வாய்ப்பை பொருத்த அளவில் 18 சதவீதம் என்ற அளவிற்கு இந்த ஆட்சியிலே கொடுக்கப்பெறவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சொன்னார்கள். நான் அவர்களுக்கு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன், 1967-லேயிருந்து பார்க்கும்போது 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தபோது, அரிசனங்களுக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னவர்கள் ஆட்சியிலே 7.9 சதவீதம் தான் அரிசனங்களுக்கென்று வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த ஆண்டு ஆய்வு செய்ததில் ஏறத்தாழ 13.47 சதவீதம் அவர்களுக்கு வேலை வாய்ப்பிற்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கும்போது, இந்த ஆட்சி எவ்வளவு படிப்படியாக அவர்களின் நிலையை உயர்த்தியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல் அரிசன நலத்துறை வீட்டு வசதி வளர்ச்சி அலுவலகம் (THHADCO) இப்பொழுது விழுப்புரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அது கடந்த ஆண்டில் சென்னையில் இருந்தது; விழுப்புரத்தில் இருக்கும் அந்த அலுவலகத்தை மீண்டும் சென்னைக்கே கொண்டு வந்தால் அதிகாரிகளை நேரடியாக தொடர்புக் கொள்ள வசதியாக இருக்கும் என்பதினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அலுவலகத்தை மீண்டும் சென்னைக்கே மாற்றி அமைக்க உத்தரவு இட வேண்டும்என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வீட்டு வசதி வாரியத்தில் வீடு கட்ட கடன் வழங்கும்போது, ஏற்கனவே 10 ஆண்டுகளுக்கு முன்னதாக பட்டாக்கள் வழங்கப்பெற்றும் வீடு கட்ட வசதி இல்லாத அரிசன மக்களுக்கு முன் உரிமைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்

கொள்கிறேன். அதற்கான உத்தரவுகளை இந்த அவையில் பிறப்பிக்க வேண்டும் என்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தப்படியாக அரிசன மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க வருமான வரம்பை 3,000 ரூபாய் என்று வைத்திருக்கி றார்கள். அதை மத்திய அரசாங்கம் தற்போது கொடுக்கக் கூடிய தொகையான 9,000 ரூபாய் உச்சவரம்பு அளவிற்கு உயர்த்தி கொடுத்தால் பல அரிசன மாணவர்கள் பயன் பெறுவார்கள் என்றும் கூறி, அதற்கான உத்தரவை இந்தக் கூட்டத் தொடரி லேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவர் அவர்களுடன் கலந்தாலோசித்து அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

அடுத்தப்படியாக ஒரே ஒரு விஷயத்தை சொல்லி முடித்துக் கொள்கிறேன். சமூக நலக்கூடங்களை மாநிலம் முழுவதும் கட்டி வருகிறார்கள். அத்தகைய சமூக நலக் கூடம் ஒன்றினை என்னுடைய தொகுதியில் சங்கரன்கோயில் பகுதியில் உருவாக் கித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அந்தப் பகுதி அரிசன மக்கள் அதிகமாக வசிக்கக் கூடிய பகுதி. அதனால் அந்த சமூக நலக்கூடம் அவர்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்று சொல்லி, இந்த வசதியை அந்தப்பகுதி மக்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக மாணவர்கள் இல்லங்களை எடுத்துக்கொண் டால், கடந்த ஆண்டு கொடுக்கப்பட்ட அளவுக்கு மேல் 10 சத வீதம் மாணவர்களை தேர்ந்தெடுத்துக் கொள்ள மாவட்ட கலெக்டருக்கு அதிகாரம் வழங்கப்பட்ட உத்தரவு ஏற்கெனவே அமுலில் இருந்தது. அந்த அனுமதியை சமீப காலத்தில் எடுத்துவிட்டார்கள்.

ஆகவே ஏராளமான மாணவர்கள் விடுதிக்காக மனு செய்வ தால் இந்த 10% கூடுதலாக நியமிக்கப்படும் அதிகாரத்தை மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களுக்காக நில ஆர்ஜிதம் செய்யும் காரி யத்தில், அது நன்செய் நிலமாக இருந்தாலும்சரி, அவசியம் தாழ்த் தப்பட்ட மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து அவர்களுக்குக் கொடுக் வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொண்டு இந்த அளவிற்கு இந்த மானியத்தின்மீது கருத்துக்களை சொல்ல வாய்ப்பளித் தமைக்கு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறு கிறேன். நன்றி வணக்கம்.



*திரு. க. பரமமலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இந்த அரிசன, பழங்குடி மக்கள் நலத்துறை மானியக் கோரிக்கை மீது பேசுகிற வாய்ப்பினை நல்கியமைக்கு தங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானி யக் கோரிக்கையில் பல்வேறு நல்ல அம்சங்கள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் துறை ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு திட்டங்களைப் போட்டு சமுதாயத்தில் புறக்கணிக்கப் பட்ட நலிவுற்ற ஹரிஜன பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற் காக பல்வேறு திட்டங்களைப் போட்டு அவற்றை அமல்படுத்தி வருகிறார்கள். இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் சில நல்ல திட்டங்களை குறிப்பிட்டிருக்கிறார்கள். அவற்றை நான் மனப் பூர்வமாக வரவேற்கிறேன்.

குறிப்பாக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 24 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தாலும் நம் அரசு பல்வேறு வளர்ச்சி தலைப்புக்களின் கீழ் பொதுத் துறையில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளில் சுமார் 18 சதவீதம் இந்தத் துறையில் ஹரிஜன மக்களுக்குப் பயன்படுகிற வகையில் ஒதுக்கிக் கொடுத்து தோராயமாக 80 கோடி ரூபாய் அளவில் செலவு செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதோடு அந்தத் திட்டத்தின் காரணமாக ஏறக்குறைய இரண்டு இலட்சம் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேலே கொண்டு வர அரசு முயற்சி எடுத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இது நல்லதொரு திட்டம்.

அதேபோல், ஆந்திராவில் இருப்பதைப் போல், பஞ்சாபில் இருப்பதைப்போல், அஸ்ஸாமில் இருப்பதைப்போல், தனியாக ஹரிஜன நிதி உதவிக் கார்ப்பரேஷன் இருக்க வேண்டும் என்று நீண்டகாலமாக வற்புறுத்தி வரப்படுகிறது. ஆனால் இந்த ஆண்டு தான் தமிழக அரசால் அரிஜனங்களுக்காக வீடுகள் கட்டுவதற்காக இருக்கிற தமிழ்நாடு வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் அந்தத் துறையை பயன்படுத்திக் கொள்கிற வகையில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி மத்திய அரசு தர வேண்டிய ஒரு கோடி ரூபாயைப் பெற்று இந்தத் திட்டத்தினை செயல்படுத்துவதாக இந்த அறிவிப் பில் சொல்லப்பட்டிருக்கிறது.

அதோடு கூட பல்வேறு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துகிற திட்டங்களை இந்த அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். டி. வி. அண்ட் எலக்ட்ரானிக்ஸ் ப்ரொடக்ஷன் சென்டர் அமைப்பது, திண்டுக்கல், இராணிப்பேட்டையில் லெதர் குட்ஸ் உற்பத்தி சென்டர் அமைப்பது பற்றிய திட்டங்கள் குறித்து சொல்லியிருக் கிறார்கள். அதேபோல் மத்திய அரசில் ஒதுக்கப்பட்டிருக்கிற 100 கோடி ரூபாயில் நமக்குரிய பங்கைப் பெற ஸ்பெஷல் Compo - ent ப்ளானை திருத்தியமைக்க இந்த அரசு முடிவு எடுத் திருக்கிறது என்று சொல்லப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

[திரு. க. பாரமலை] [1980 ஜுலை 22

ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்படுகிற நிலங்களை சீர்திருத்தம் செய்வதற்கும் அவற்றில் கிணறுகள் வெட்டுவதற்கும் அதன்மூலம் அவர்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும் சில திட்டங்கள் அரசு பரிசீலனையில் இருப்பதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அவற்றை நடைமுறையில் அமலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறை சீர்படுத்துவதற்காக, மேம்பாடு அடையச் செய்வதற்காக டி.இ.ஓ., உதவி இன்ஸ்பெக்டர்கள் போடவேண்டும் என்ற திட்டத்தையும் சேர்த்திருக்கிறார்கள். அதையும் நான் வரவேற்கிறேன். நல்ல பல திட்டங்கள் போடப்பட்டு நிறைவேற் றப்பட்டு வந்தாலும் அத்திட்டங்களை அமல் செய்யப்படுவதில் உள்ள கோளாறுகள் காரணமாக எதிர்பார்க்கிற பலன்கள் ஹரி ஜன மக்களுக்குக் கிடைக்கவில்லை.

கிணறுகள் வெட்ட மானியமும் கடனும் நில அடமான பாங்க்ஸ் மூலம் கொடுப்பதாக குறிப்பில் இருக்கிறது. ஏறக் குறைய 200-க்கு அதிகமான நில அடமான பாங்க்குகள் இருந்தும் ஆறு அல்லது எட்டு பாங்குகள் தான் கடன் கொடுக்கிற நிலையில் இருக்கின்றன. 38 பாங்குகள் அரைகுறையாகக் கடன் கொடுக்கிற நிலையில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-10]

மீதமுள்ள 169 வங்கிகள் கடன் கொடுக்கின்ற தகுதியை இழந்திருக்கின்றன. இந்த நிலையில் கிணறு வெட்ட கடன் வழங்கும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தால், எப்படி திட்டம் நிறைவேறும் என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டு மென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

1980 ஆம் ஆண்டு வரையில் மனை நிலம் இல்லாதவர்களுக்கு 2,80,000 பேர்களுக்கு பட்டா வழங்கப்பட்டதாகச் சொல்லப் படுகிறது. நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டும், நிலத்திற்கு பணம் கொடுத்தும், பல இடங்களில் இன்னும் நிலச் சொந்தக்காரர்களே அந்த நிலத்தில் இருக்கிறார்கள்; நிலம் அவர்களிடம் இருக்கிறது. அதற்கு, நில ஆர்ஜித சட்டத்திலே ஒரு புதிய விதியை பிரிவை செக்ஷனை சேர்த்தால் ஒழிய அதை எடுப்பதற்கு வழியில்லை. இதைப்போல் என்னுடைய தொகுதியிலே உளுத்திமடை என்ற இடத்திலே 10 ஆண்டுகளுக்கு முன்பு நிலம் எடுக்கப்பட்டும், பின்னால் பல்வேறு வழக்குகள் போடப்பட்டும், அரசாங்கத்திற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டும், இன்று முனிசீப் கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையை எல்லாம் மாற்ற வேண்டும் என்று சொன்னால், சட்டத்திலே ஒரு குறிப்பிட்ட விதியை போடவேண்டும். (மணியடிக்கப்பட்டது) டி.டி. (Draft Declaratio ) என்று சொல்லுகிற இந்த நிலைமைக்கு



1980 ஜுலை 22] [திரு. க. பாரமலை

123058

வந்த பிறகு, கோர்ட்டு தலையிடக்கூடாது என்ற சட்டத்தைக் கொண்டு வந்தால் ஒழிய, நிலத்தை நாம் எடுக்கமுடியாது. நாம் எதிர்பார்க்கும் பலனை அடையமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல் இன்றைக்கு ஜெனரல் செக்டார் நிதி ஒதுக்கீடுகளிலிருந்தும் அரிசன முன்னேற்றத்திற்கு திட்டங்கள் அமல் செய்ய இருப்பதைப் போல், இன்றைக்கு பொதுத் துறைகளிலும் வழங்கப்படுகின்ற பர்மிட்டுகளும், பஸ் ரூட் பர்மிட், எவர்சில்வர் கோட்டா, தொழிற்பேட்டைகளில் இட ஒதுக்கீடு போன்றவைகளிலும் அவர்களுடைய ஜனத்தொகையின் விகிதாசாரத்தில் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், வீடு கட்டும் வாரியம், வீடுகள் கட்டும்போது, அது நகரமாக இருந்தாலும் சரி, கிராமமாக இருந்தாலும் சரி, இந்த அரிசன மக்களின் ஜனத்தொகை விகிதாசாரத்தில் கட்டிய வீடுகளையோ அல்லது வீடுகட்ட ஒதுக்கப்பட இருக்கும் நிலங்களையோ கொடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நில ஒப்படை பொறுத்தவரையில், அது உபரி நிலமாக இருந்தாலும் சரி, நில உச்சவரம்பு நிலமாக இருந்தாலும் சரி அல்லது பினாமி நிலங்களை கைப்பற்றிய நிலமாக இருந்தாலும் சரி, இன்றைக்கு கர்நாடக மாநிலத்திலே ஒதுக்குவதைப் போல இந்த அரிசன மக்களுக்கு 50 சதவீதம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல், மத்திய அரசாங்கத்திலிருந்து போஸ்ட் கிராஜுவேட் மெடிகல் அல்லது என்ஜினியரிங் கோர்சுகளில் 20 சதவிகிதம் அரிசனங்களுக்கு ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்று மாநில அரசாங்கங்களுக்கு பல்வேறு முறை சொல்லியும், இன்றைக்கு அந்த உத்தரவு அமுல் நடத்தப்படவில்லை, அதை அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு, மத்திய அரசாங்கத்திலே டெல்லியிலே, பார்லி மெண்டரி கமிட்டி என்ற ஒரு கமிட்டி இருக்கிறது. இந்த கமிட்டி, Committee on the 'வெல்ஃபேர் ஆப் தி ஷெடியூல்ட் காஸ்ட்' என்று, இங்கே எப்படி பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி, எஸ்டிமேட் கமிட்டி என்றிருக்கிறதோ அதைப்போல், மாநிலங்களிலேயும் இந்த கமிட்டியை அமைக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் 1974 ஆம் ஆண்டிலே இருந்து வற்புறுத்திக் கொண்டு வருகிறது. அப்படியிருந்தும், தமிழ்நாடு அஸ்ஸாம், குஜராத், ஒரிசா போன்ற நான்கு மாநிலங்களைத் தவிர, மற்ற மாநிலங்களிலே ஒவ்வொன்றி லும் இந்த கமிட்டி இருக்கிறது. அதைப்போல் தமிழ்நாட்டிலும் ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப்பட்டது).

அரசு உத்தியோகங்களில் இன்றைக்கு 18 சதவீதம் ஒரளவுக்கு கொடுக்கப்படுகின்றது என்று சொன்னாலும், குவ சி கவர்ன் மென்ட்டல் Institutions வாரியங்கள், கூட்டுறவு பாங்குகள், அரசு கடன், மானியம் பெற்று ஆரம்பிக்கும் பொது நிறுவனங்கள் ஆகியவைகளிலே இந்த 18 சதவீதம் ஒதுக்கீட்டை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதைப்போல், பஞ் சாயத்துக்களிலும், நகராட்சிகளிலும் தேர்தலில் இவர்கள் பங்கு பெற ரிசர்வேஷன் தரவேண்டுவதுடன் மதுரை ம நகர ட்சியில் மேயரக வருவதற்கு சிறுப ன்மையோருக்கு பிரதிநிதித்துவம் தருகின்ற வகையில், இந்தச் சட்டத்தை மாற்ற வேணடுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஆளும் கட்சியிலே இருந்தும், எதிர்க் கட்சியிலே இருந்தும், பேசிய அங்கத்தினர்கள் விழுப்புரத்திலே இருக்கின்ற THHADCO அலுவலகத்தை சென்னைக்கு மாற்ற வேண்டும் என்று தெரிவித்தார்கள். அப்படி அதை மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். . . . . . .

(மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப் பட்டார்.)

*திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டு அரிசன மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சமுதாயத்திற்கு நன்மைகளைச் செய்து இந்தச் சமுதாய மக்களை முன்னேற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் பல கோணங்களில் தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்த திட்டத்தட்ட 24 கோடி ரூபாய் அளவுக்கு இங்கே இந்த ஆண்டு மானியம் ஒதுக்கி யிருப்பதை பாராட்டுகிறேன். இதன் மூலம் அந்த மக்களை உயர்த்தவும், உழவு மாடுகள் வாங்கவும், குடி தண்ணீர் வசதி செய்து தரவும், வீட்டு வசதி, சாலை வசதி போன்ற இப்படிப் பட்ட வசதிகளையெல்லாம் செய்து கொடுப்பதற்காக 24 கோடி ரூபாய் இந்த அரசு ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப் பாக தாழ்த்தப்பட்ட மக்களை உயர்வடையச் செய்ய எந்த அளவுக்கு ஆர்வம் கொண்டிருக்கிறார்கள் என்பதை இது காட்டு கிறது என்று பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் என்னுடைய தொகுதியான குறிஞ்சிப்பாடி தொகுதியில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் குடியிருக்கும் இடங்கள் எல்லாம் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அந்த மக்கள் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். அவர்கள் குடிதண்ணீர் வசதி இல்லாமலும், சாலை வசதி இல்லாமலும், குடிஇருக்க இடவசதி இல்லாமலும் மிகவும்





கஷ்டப்பட்டு வாழ்ந்து வருகிறார்கள் என்பதைப் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு வீட்டிலும் சின்னஞ்சிறு இடத்தில் பத்து பன்னிரண்டு பேர் வாழ்ந்து வரு கிறார்கள். அவர்கள் பல்லாண்டு காலமாக குடியிருக்க மனை கேட்டு வந்திருக்கிறார்கள். இந்தக் குறைபாடுகளை எல்லாம் நிவர்த்தி செய்ய தொகுதி வாரியாக தொகுதி கமிட்டி ஏற்பாடு செய்ய வேண்டும். தொகுதி கமிட்டி ஏற்பாடு செய்து அந்தக் கமிட்டி பரிந்துரை பேரில் குடிதண்ணீர் வசதி, சாலை வசதி, மனை வசதி போன்றவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக உடனடியாகச் செய்து தரவேண்டும். அப்படிச் செய்வதற்கு தாலூகா வாரியாக ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார்களை நியமித்து நேரடியாக கலெக்டர் மூலம் அந்தக் காரியங்களைச் செய்ய அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன் போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் என்னுடைய குறிஞ்சிப்பாடியில் அரிசன மாணவர் விடுதிக்கு தங்க இட வசதியும், உணவு விடுதியும் கட்டித் தரவேண்டுமென்று பரிந்துரை செய்து அரசாங்கத்திற்கு வந்திருக் கிறது. அதையும் உடனடியாகச் செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு இடம் ஒதுக்கும்போது புறம்போக்கு நிலங்களைத் தவிர தனியார் இடங்களையும் எடுக்க வேண்டியிருக்கிறது. தனியார் இடத்தை எடுக்க உடனடியாக லாண்ட் அக்விசிஷன் மூலமாக எடுத்து பாதை வசதிகள் செய்யவும் வீட்டு மனை தரவும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். கமிட்டி மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதைத் தெரிவித்து உடனடியாகப் பட்டா கொடுக்க முன்வந்தால் அரிசன சமுதாயத்தின் வாழ்க்கை நிலை உயர வழி பிறக்கும், அவர்க ளுடைய வாழ்க்கைத் தரம் உயரவும், செம்மைப் படவும் வழி பிறக்கும். இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று பாராட்டி, வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறு கிறேன். வணக்கம்.

*திரு. பி. மொக்கையன் : மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே,

அன்பும் அறனும் காத்து அரசியலில் நேர்மைகண்டு
துன்பம் எதுவரினும் துணிந்து முன்னேறிடும்
தங்கத் தமிழகத்தின் ஆட்சியாளர்களே,

இன்று இந்த அரிசன மனைவாழ் மக்கள் மானியக் கோரிக்கை பற்றி பேசுவதற்கு வாய்ப்பளித்த உதவித் தலைவர் அவர் களுக்கு நன்றி கலந்த வணக்கத்தை மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலையில் பேசுகிற தோழர்களுக்கு ஐந்து நிமிட நேரம் தாங்கள் கொடுக்கிறீர்கள். அவர்கள் சொல்ல

வேண்டிய நல்ல பல கருத்துக்களை அதற்குள் சொல்ல முடிய
வில்லை. இந்த மக்கள் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.
என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்வ
தற்கு முடியாத வகையில் ஐந்து நிமிஷத்திற்குள் முடித்து விட
வேண்டுமென்று தெரிவிக்கிறீர்கள். அதைப் பார்த்தால் மிக மிக
வருத்தமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மொத்தம் 22
பேர் இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகிறார்கள்.
எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்
துடன் தான் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஐந்து நிமிடம் என்று
நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 12-20]

திரு. பி. மொக்கையன் : அரசிலே இருக்கின்ற மந்திரி
மார்கள் பல திட்டங்கள் போட்டு மக்கள் நல்ல முறையிலே வாழ
வேண்டும் என்ற முறையிலே நல்ல எண்ணத்தோடு திட்டங்களை
வெளியிடுகிறார்கள். அவைகளைச் செயல்படுத்துகிறார்கள்.
ஆனால் ஆங்காங்கே இருக்கின்ற சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்
செய்கிற கொடுமைகளைப் பார்த்தால், நினைத்துக்கூடப் பார்க்க
முடியாது, நேரடியாகப் போய்ப் பார்த்தால், நெஞ்சுவலி வந்து
சாகத்தான் வேண்டும், அந்த நிலைமையிலே ஒவ்வொரு அரிசனக்
தோழரும் இருக்கிறார்.

இப்போது எந்த கிரையப் பத்திரமாக இருந்தாலும் சரி
நிலத்தை சர்க்கார் வேண்டுமென்று கேட்டால் விட்டுவிட வேண்டு
மென்று தான் சொல்லப்பட்டு எழுதப்படுகிறது. ஒரு அரிசனுக்
காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்ட பிறகு அதை சர்க்கார்
வேண்டுமென்று கேட்டால் விட்டுவிட வேண்டுமென்று சொன்
னால் எப்படி முடியும்? வெறும் பட்டாவைக் கொடுத்துவிட்டால்
அதை வைத்துக் கொண்டு அவர்கள் என்ன செய்ய முடியும்.
குடியிருக்க வீடு இல்லாமல், குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல்,
புதைப்பதற்கு சுடுகாடு இல்லாமல், நடப்பதற்குப் பாதை இல்லா
மல் அந்த மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அந்த முறையிலே
அவர்கள் வாழ வழியில்லாமல் சர்க்கார் அதிகாரிகள் ஆங்காங்கே
செய்கிற கொடுமைகளையெல்லாம் சர்க்கார் உன்னிப்பாகக்
கவனித்து அவைகளை நிவர்த்தி செய்து தரவேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்கிறேன்.

இந்த எலக்ட்ரிசிடி வந்ததே அதனாலே ஒரு இனமே அழிந்து
விட்டது, அது யாருக்காவது தெரியுமா என்றால் தெரியாது.
ஒவ்வொருவரும் கிணற்றிலே தண்ணீர் இறைக்கக்கூடிய தோப்
பறையைத் தைத்துக் கொடுத்து அதன் மூலம் இறைத்துக்கொண்



டிருந்த நிலைமை இருந்தது. ஆனால் இன்றைக்கு ஆங்காங்கே கிணறுகளிலே எலக்ட்ரிக் மோட்டார் பம்பு செட்டுகளை வைத்து தண்ணீர் இறைக்கின்ற நிலைமை வந்துவிட்ட காரணத்தினால் அந்தத் தொழிலைச் செய்து வந்த ஆயிரக்கணக்கானவர்கள் இன்றைக்கு கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் இன்றைக்கு அந்த வேலை இல்லாத காரணத்தினால் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் தெருக்களிலே, திண்ணைகளிலே, பஸ் ஸ்டாண்டுகளிலே, ரெயில்வே ஸ்டேஷன்களிலே காற்றினாலும், மழையாலும், வெய்யிலாலும், தூசியினாலும் பாதிக்கப்பட்டுக் கிடக்கிறார்கள். அவர்களை யாராவது கவனித்தீர்களா? ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்றைக்கு தெருவிலே நின்று கொண்டிருக்கின்றன, தோப்பறை தைத்துக்கொண்டிருந்த அந்த அருந்ததியர் கூட்டம் இன்றைக்கு தெருவிலே வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதைத் திரும்பிப் பார்ப்பதற்கு கூட ஆள் இல்லை. இன்றைக்கு அந்த இனத்திலே பிறந்த பெரிய தலைவர்கள் எல்லாம் இருக்கிறார்கள், தாங்கள் அந்த இனம் என்று சொல்லிக் கொள்ளக்கூட வெட்கப்படுகிறார்கள், வேதனைப்படுகிறார்கள். உண்மையிலேயே புரட்சித் தலைவர் தலைமையிலே அமைந்திருக்கின்ற இந்த அரசாங்கம் கிணறுகளில் தண்ணீர் இறைப்பதற்காக தோப்பறை தைத்துக்கொண்டிருந்த அந்த அரிசனங்களை, அருந்ததியர்களை, தெருக்களிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த மக்களை, வாழவைப்பதற்கு நல்ல வழி வகைகளைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திண்டுக்கல்லிலே செருப்புத் தைக்கின்றவர்களுக்காக ஒரு இடம் ஒதுக்கப்பட்டு இருக்கிறதோ அதைப்போன்று அவர்களுக்கும் ஆங்காங்கு இடங்களை ஒதுக்கித் தந்து அவர்கள் வேலை செய்து வாழக்கூடிய வழிவகைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலத்தை ஆர்ஜிதம் செய்கிறபோது சர்க்கார் எடுத்துக்கொள்கிறபோது விட்டுவிடவேண்டும் என்று சொல்லப்படுகிறது. நிலத்தை பட்டாப் போட்டு கொடுத்து விட்டால் பிறகு ஸ்டே என்ற முறையிலே கொடுக்கப்படுகிறது. இதனால் அந்த மக்களுக்குப் பயனே கிடையாது. ஆகவே அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்திற்கு, பின்னாலே அதற்காக ஸ்டே எந்த அதிகாரியும் கொடுக்கக் கூடாது என்ற முறையிலே ஒரு சட்டத்தைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னைப் பேச அனுமதித்ததற்காக தங்களுக்கு நன்றியைக் கூறி முடித்துக்கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே இன்றைய தினம் அரிசன மக்கள், பழங்குடி மக்கள் ஆகியோர் நலன் என்ற மானியங்களின் மீது பேசுகின்ற வாய்ப்பைத் தந்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களைப் போன்றவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நிறையப் பேர்கள் நிறையப் பேசுவதற்கு ஆர்வம் இருந்தாலும்

ஏராளமான பேர்கள் பெயர்கள் கொடுக்கிறார்கள் என்பதால்
எங்களுக்கு கொஞ்ச நேரம் கொடுத்தது பற்றி நான் உள்ளபடியே
வருந்துகிறேன். இந்தத் துறையானது முக்கியமான துறை என்ப
தாலும் மிக நல்ல கருத்துக்களைக் கூறவேண்டுமென்ற ஆர்வம்
இருப்பதாலும் அடுத்த ஆண்டிலேயிருந்தாவது இந்த மானியத்தி
திற்கு இரண்டு வேளைகள் ஒதுக்கித் தரவேண்டுமென்று நான்
அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்
கிறேன்.

இந்த ஆண்டு இந்தத் துறைக்காக ஏறத்தாழ 24 கோடி ரூபாய்
ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் மாண்புமிகு சம்பந்தப்பட்ட
அமைச்சரை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தத்
தொகையை நீங்கள் எவ்வளவு விரைவாக நடவடிக்கை எடுத்துச்
செலவு செய்கிறீர்களோ அப்பொழுது தான்— இன்னும் அதிகப்
படியாகச் செலவு செய்தால்தான்— அடுத்த ஆண்டில் அதிகமான
தொகையைப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

சென்னையைப் பொறுத்தவரையில் இந்த அரிசன நலத்
துறைக்கு ஆங்காங்கு பலயிடங்களில் குந்தகமாக இருக்கிறது.
அங்கெல்லாம் குடிசைகள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.
அவர்களுக்கெல்லாம் உடனடியாக அந்த இடத்தைப் பட்டா
செய்து கொடுத்து, அந்தப் பாதைகளையெல்லாம் நகரசபைக்கு
உட்படுத்தி, நல்ல வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நாம் பார்க்கிறோம், கிராமப்புறங்களில் மேல்
ஜாதிக்காரர்களுக்கும், அரிசனங்களுக்கும் சண்டை சச்சரவுகள்
ஏற்பட்டால், உடனடியாக அரிசனங்களின் வீடுகளுக்கு— அந்தக்
குடிசைகளுக்குத் தீ வைத்து விடுகிறார்கள். ஆகவே, அப்படிப்
பட்ட குடிசைகளில் வாழ்வதால்— அவர்களுக்கு எந்த நேரத்தில்
நம்முடைய குடிசைகளை மாற்றார் எரித்து விடுவார்களோ
என்ற அச்சம் இருப்பதால், உடனடியாக அந்தக் குடிசைகளை
மாற்றி, தீப்பிடிக்காத வீடுகளாகக் கட்டித் தர வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையானது 1968 ஆம் ஆண்டு முதல் சிறுகடன்
என்ற பெயரால் தொழில் நடத்துவதற்காக 125 ரூபாயிலிருந்து
15,000 ரூபாய் வரையில் கடன் கொடுக்கிறார்கள். அதில் ஒரு
சிலர்தான் இரண்டாயிரம் ரூபாய்க்குமேல் அல்லது பத்தாயிரம்
ரூபாய் வரை வாங்கியிருக்க முடியும். மற்றவர்கள் 125 ரூபாய்
முதல் 2,000 ரூபாய் அல்லது 5,000 ரூபாய் வரையில் வாங்கி
யிருப்பார்கள். இவர்கள் இப்படி வாங்கிய கடனைக் கொண்டு
எத்தகைய தொழிலை நடத்த முடியும் என்று பார்க்க வேண்டும்.
இந்தப் பணத்தைக் கொண்டு நல்லமுறையில் தொழிலை நடத்த
முடியுமா என்றால் முடியாது. அதனால்தான் அவர்கள் எந்தவித



மான முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே,
அத்தகைய கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். நீங்கள் யார் யாருக்கோ கடன்களை ரத்து செய்
திருக்கிறீர்கள். விவசாயிகளின் கடன்களை ரத்து செய்திருக்
கிறர்கள்; நகைத் தொழிலாளர்களின் கடன்களை ரத்து
செய்து இருக்கிறீர்கள். எனவே, இவர்களுக்கு இந்த முறை,
இந்த அரசு பொறுப்பேற்றதன் காரணமாக, அதை மனத்தில்
வைத்துக் கொண்டாகிலும், அரிசனங்கள் பெற்ற கடன்களை
ரத்து செய்ய வேண்டும். 125 ரூபாய் முதல் 2,000 ரூபாய்
வரையில் கடன் பெற்றவர்களுக்கு மட்டும் உடனடியாக அந்தக்
கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் இந்த இலாக்காவிற்குச் சொந்தமான பல
பள்ளிகள் நடக்கின்றன. ஆனால் அவைகள் சரிவர நடைபெறு
வது இல்லை. ஏனென்றால் அந்தப் பள்ளிக்கூடங்களைப் பார்க்
கின்ற அதிகாரம் இல்லாத காரணத்தால் அவைகள் சரிவர நடை
பெறவில்லை. அந்தப் பள்ளிகளை உடனடியாக அரசு மூலம்
ஒப்படைத்து நல்லமுறையில் அவைகள் இயங்குவதற்கான நட
வடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகரசபை, பஞ்சாயத்து போன்ற தேர்தல்களுக்கு இந்த
மக்களுடைய அடிப்படையில் விழுக்காடு வகையில் இந்த முறை
கொடுக்க முடியாது என்று மாண்புமிகு நம்முடைய முதல்வரவர்
கள் கூறியிருக்கிறார்கள். அந்தத் தேர்தல்களில்— நகரசபைத்
தேர்தலிலும், பஞ்சாயத்துத் தேர்தலிலும்— அந்த மக்களுக்கு
உரிய உரிமைகளைக் கொடுத்தாக வேண்டுமென்று வற்புறுத்து
கிறேன்.

சென்னையில் மேயர் தேர்தல் நடைபெறுவதைப்போல்,
மதுரையிலும், மேயராக வருவதற்கு இந்த மக்களுக்கு வாய்ப்
பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மாநில அரசு அரிசன நலக்குழு என்று இருக்கிறது.
அது மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பல திட்டங்
களை நிறைவேற்ற சிபாரிசு செய்கிறது. ஆனால் அவைகளைச்
செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்ச
ரவர்கள் இளைஞராக இருப்பதால் சொல்கிறேன், கர்நாடகத்தில்
இருப்பதைப் பார்த்து செய்ய வேண்டும். நிதி நிலைக்குழு என்று
—'ஸ்டாண்டிங் கமிட்டி' என்று சட்டப்பேரவையில் இருக்கிறதே
அதைப்போல நிலையான குழுவை அமைத்து இந்தப் பகுதி
மக்களின் குறைகளை நீக்குவதற்கான வழிவகைகளைச் செய்ய
நிலைக் குழுவை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு, வாய்ப்பளித்த நம்முடைய துணைத் தலைவரவர்களுக்கு
நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன். வணக்கம்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மதிப்புக்கும் மரியா
தைக்குமுரிய சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்
களை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சட்ட
மன்றத்திலே ஆரம்பத்திலே பேசிய கனம் அங்கத்தினர் ஒருவர்,
முன்னாள் முதலமைச்சர் அவர்கள் தனது குடும்பத்தில் கலப்புத்
திருமணம் செய்து வைத்ததன் காரணமாக, அரிசன மக்களுக்கு
எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்ததாகச் சொன்னார்கள்.
நான் இந்தச் சபையிலே அதை எழுப்பியிருக்க வேண்டிய அவசியம்
இல்லை. ஆனால், இன்றைக்கு அந்தக் கலப்புத் திருமணத்தால்
எவ்வளவு கீழ்த்தரமான சூழ்நிலை உருவாகி, எவ்வளவு
மட்டமான சூழ்நிலை ஏற்பட்டு, அந்தக் குடும்பம் சங்கடத்துக்
குள்ளாகி, தவித்துக் கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட
வேண்டுமென்பதற்காக இந்தச் சந்தர்ப்பத்திலே அதை நான்
சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். கலப்புத் திருமணம் செய்துள்ள
அந்தக் குடும்பத்தில் அந்தக் குழந்தை ஒரு புறமும், தகப்பன் ஒரு
புறமும், தாய் ஒரு புறமும் இருக்கக்கூடிய சூழ்நிலை உருவாகி,
அந்த ஹரிஜன் சமுதாயத்திற்கு இழிவு உண்டாக்குகிற நிலைமை
ஏற்படுத்தியதை மறந்து விட்டு, ஏதோ பெருமையாக பேசுவதைப்
பார்த்து நான் வேதனைன்ப்படுகிறேன், வருத்தப்படுகிறேன்,
வெட்கித் தலைகுனிகிறேன் என்பதைச்சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த அரசு பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது.
ஆனால், எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்கள் இதற்கு
ஒதுக்கப்பட்ட பணம் போதாது என்று சொன்னார்கள். நானும்
அதை ஆதரிக்கிறேன். நம்முடைய மதிப்பிற்குரிய ஒப்பற்ற முதல்
அமைச்சர் அவர்கள் அந்தப் பணம் தேவை ஏற்படும்போது
சப்ளிமென்ட்டரி பட்ஜெட் போட்டு, இத்துறைக்குத் தேவையான
பணம் ஒதுக்கி அவர்களது வாழ்வை வளமாக்குவார்கள் என்ற
அந்த நம்பிக்கையில் நான் இதை முழு மனதோடு ஆதரிக்கிறேன்.

இன்றைக்கு அரிசன ஹாஸ்டல்கள் இருக்கின்றன. பல
குறைபாடுகள் இருந்தாலும், அதிலே குறிப்பிடத்தக்க ஒன்று,
அங்கு குழந்தைகளுக்கு ஆடைகள் கொடுக்கிறார்கள், புஸ்தகங்கள்
கொடுக்கின்றார்கள், உணவு கொடுக்கின்றார்கள். ஆனால், அந்த
ஆடைகள் அந்தப் பிள்ளைகளுக்குப் போதவில்லை. கைக்கும்
போதவில்லை, காலுக்கும் போதவில்லை, இடுப்புக்கும் போத
வில்லை. அந்தப் பிள்ளைகள் போட்டுக்கொள்ளக்கூடிய அளவுக்கு
இல்லாத நிலையில் அந்த ஆடைகள் இருக்கின்றன. அந்தக்
குறையெல்லாம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று
கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



அடுத்து, புத்தகங்கள் கொடுப்பது என்பது, ஜூன் மாதத்திலிருந்து, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் வரை காலங்கடத்தப்படுகிறது. நாம் எதற்காகப் புத்தகங்கள் கொடுக்கிறோம்? நாம் காலாகாலத்திலே, ஜூன் மாதம் 15-ஆம் தேதிக்குள் அந்த ஹாஸ்டல் பிள்ளைகளுக்குப் புத்தகங்களைக் கொடுக்க வேண்டும். ஹாஸ்டல் கமிட்டி என்று ஒன்று இருக்கிறது. அந்தக் கமிட்டியை முதலிலே அமைத்து விரைவில் ஹாஸ்டலில் சேர்ப்பதற்கு வழிசெய்ய வேண்டும். ஜூன் 15-ஆம் தேதிக்குள் அந்தக் குழந்தைகளுக்குப் புத்தகம் தர வழிவகை செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, நான் ஏற்கெனவே இரண்டு தடவை சொல்லி இருக்கிறேன். அதாவது, குறைந்த எண்ணிக்கையில் கடனில் வீடு கட்டித் தருகிறோம். கிட்டத்தட்ட ஒரு வீட்டிற்கு ரூ. 5,000 மதிப்பு இருக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். அதே மாதிரி, கிராமங்களில், திருப்பிக் கட்டக்கூடிய சக்தி உள்ளவர்களுக்கு, ரூ. 10,000, ரூ. 15,000 வரையில் கடன் கொடுக்க வேண்டும். அத்துடன், ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் வீடுகளாவது கட்டிக் கொடுத்தால்தான் அரிசன மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்தவர்கள் ஆவோம் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

விகிதாச்சார ஒதுக்கீட்டில் உள்ள பல குறைபாடுகளை எல்லா அங்கத்தினர்களும் சொன்னார்கள். 18 சதவீதம் விகிதாச்சார ஒதுக்கீடு சரிவர அமுல்படுத்தப்படுவதில்லை. சரியாக அமுல் நடத்துகின்றார்களா என்பதைத் தயவு செய்து விசாரிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே, பலமுறை சட்டமன்றத்திலே சொல்லி, சொல்லி தோல்வி அடைந்த ஒன்றை மீண்டும் சொல்ல விரும்புகிறேன். நாம் தொழில் நடத்த அரசாங்கம் 80 சதவீதம் கடன் கொடுக்கிறது. அதிலே, பாக்வார்ட் ஏரியாவிலே, தொழில் துவங்கினால், 15 சதவீதம் மானியமும் கொடுக்கப்படுகிறது. அவ்வாறு அரசு உதவி பெற்று, தனியார்கள் தொழில் துவங்கினால், 20 சதவீதம் அரிசனங்களுக்குக் கட்டாயம் வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற ரீதியில் சட்டம் கொண்டு வந்தால், அவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு அளித்தவர்களாக ஆவோம். தனியார் துறையிலோ, அரசாங்கத் துறையிலோ எங்கெங்கு தொழில்கள் இருக்கின்றனவோ, அங்கேயெல்லாம், அரிசனங்களுக்கு 20 சதவீதம் வேலை வாய்ப்பு தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1980 ஜூலை 22

அரிசனங்களுக்கு உழவு மாடுகள் கொடுக்கிறோம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்துலே உழவு மாடு களுக்கு ரூ. 1,500 இனாமாகக் கொடுத்தோம், கிணறு வெட்ட ரூ. 1,000 கொடுத்தோம். இப் பொழுது, 1/3 பாகம் மாடு வாங்க இனாமாகவும், 2/3 பாகம் கடனாகவும் கொடுக்க அரசு ஆணை இருக்கின்றது. அதைமாற்றி வசதியற்றவர்களுக்கு ரூ. 2,000-ஐயும் இனாமாக, உழவு மாடுகள் வாங்க, கிணறு வெட்ட தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கி றேன்.

அடுத்து நிலக் குடியேற்றம். உபரி நிலங்களை எடுக்கும்போது அதை நிலக்குடியேற்றத்தின் அமைப்பில் வைத்து, அந்த அரிசன மக்களுக்கு—எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் கூறியதுபோல் —50 சதவீதம் மானியம் கொடுத்து, அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து, கிணறு வெட்டிக்கொடுத்து, பம்ப் செட் வைத்து கொடுக்கக்கூடிய எல்லா ஏற்பாடுகளையும் அரசாங்கமே செயல் படுத்தினால், சாலச் சிறந்ததாக இருக்கும். அரிசனப் பெருங்குடி மக்களும் முன்னேற வாய்ப்பிருக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

தமிழ்நாடு அரிசன சேவா சங்கம் என்ற ஒரு நல்ல ஸ்தாபனம் மதுரையிலே இருக்கிறது. அந்த சங்கத்தினர் 8 ஹாஸ்டல்களை நடத்தி வருகிறார்கள். அதன் நிர்வாகத்தில் அங்கத்தினர்களை நியமிக்கும்போது, அரசாங்கம் 3 பேர்களை நியமிக்கிறது. அதே போன்று, 3 பேர்களை, அச்சங்கத்தின் சிபாரிசின் பேரில் போட வேண்டும். அப்படி போட்டால்தான் அந்த ஹாஸ்டல்களை இன்னும் நல்ல முறையில் நிர்வாகம் செய்ய முடியும். அந்த ஸ்தாபனத்தின் மூலமாகத்தான் என்னைப் போன்றவர்கள், இந்த நாட்டிற்கே உத்தமராக வாழ்ந்த கக்கன் போன்றவர்கள் எல்லாம் இந்த சட்டசபையிலே பேச வாய்ப்பு பெற்றுள்ளோம். ஆகவே, அச்சங்கம் கேட்கின்ற உதவிகளை அரசாங்கம் செய்ய வேண்டும்.

அடுத்து அரிசனங்கள் இறந்தால் 50 ரூபாய் கொடுக்கிறோம். அதை மனதாரப் பாராட்டுகின்றேன். அந்தத் தொகை கொடுப் பதில் கால தாமதம் ஆகின்றது. அவன் செத்துப் போய் 4, 5 மாதங்கள் கழித்து அலையோ அலை என்று அலைந்து அதற்குப் பிறகு அந்த 50 ரூபாய் கிடைக்கின்றது. ஆனால், அதைப்பெறு வதற்குள்ளாக அவனுக்கு 100 செலவாகின்றது. ஆகவே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த 50 ரூபாயை உயர்த்தி 100 ரூபாயாக கொடுக்கவேண்டும் என்றும், அதுவும் இறந்த அன்றைக்கே அந்த கிராம கர்ணம் அல்லது முன்சீப் வழி யாக உடனடியாகக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1980 ஜூலை 22] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

அடுத்து மேனூார் தாலூாக்காவில் சில கிராமங்களில் அரிசனர் களை சோசியால் பாய்காட் பண்ணுகிறார்கள். அவர்களை சித்திரவதை செய்கிறார்கள். அப்படிபபட்ட இடங்களில் குவாக் களை ஏலம் எடுப்பதற்கோ, கண்மாய்களை ஏலம் எடுப்பதற்கோ அரிசனங்கள் செனறதால் எடுக்கக்கூடாது என்று சொல்கிறார் கள் (மணி அடிக்கப்பட்டது). இவைகளை எல்லாம் அமைச்சர் அவர்க்ளின் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுகக வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு பூ. மு. நரசிம்மன்</u>: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின, பழங்குடியினர் மானியத்தின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசின நலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையை பள்ளிப்பட்டுத் தொகுதி மக்கள் சார்பாக மனமாற வரவேற்கிறேன் பேரறிஞர் அண்ணா அவர்கன், அரசினங்களுடைய நலன்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள் அவர்கள் சொல்லிய வார்த்தைகளின் அடிச்சுவட்டிலேதான் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு நடந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு பள்ளிப்பட்டுத் தொகுதி மக்களின் பாராட்டுதல் களை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அரிசன மக்கள் மிகவும் தாழ்த்தப்பட்டிருக்கிறார்கள். அடித் தளத்திலே தள்ளப்பட்டிருக்கிறாகள். அவர்களுடைய நலன் பாதுகாக்கப்படவும், உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற கருத்தினை ஒட்டி இங்கே பல திட்டங்கள் கொண்டு வந்திருக்கிறோம். அதைப் பார்க்கின்றபோது நிச்சயமாக இந்த அரசு அரிசன மக்களுடைய நலத்திலே நாட்டம்கொண்டிருக் கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரிசன மக்களில் பெரும்பாலோர் வீட்டு மனை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் இருப்பதற்கு இடம் இல்லாமல் இருக் கிறார்கள். அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் அரிசன மக்களுக்கு மனைப் பட்டாக்கள் வழங்குவதை நான் மனமாறப் பாராட்டுகிறேன்.

அரிசனங்கள் இறந்தால் உடனடியாக ரூ.50 கொடுக்க வேண் டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்த புரட்சித் தலைவர் அவர்களை தமிழகம் முழுவதும் உள்ள அரிசன மக்கள் மனதார பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒரு வேண்டுகோளை வைக்க கடமைப் பட்டிருக்கிறேன். கிராமங்களில் இருக்கின்ற காலனிகளை இன்றும் காலனிகள் என்றே அழைக்கப்படுகின்றன. அவற்றை

மாற்றி அந்தக் காலனிகளுக்கு அரிசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களின் பெயர்களை சூட்டலாம் என்று இந்த நேரத்தில் இந்த மன்றத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக கடன்கள் வழங்கப்படுகின்றன. அரசாங்கத்தின் மூலமாக வழங்கப்படுகின்ற கடன் ரூ. 3,000 அதை உயர்த்திக் கொடுத்து அப்படிக் கடன்கள் வழங்கப்படும்போது உடனுக்குடன் கிடைக்குமாறு வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள் கிறேன் காரணம் அப்படிப்பட்ட கடன்களை வாங்குகிற போது வில்லங்கம் போன்றவைகளை பெறுவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட சிக்கல்களைப் போக்கி அவர்கள் உடனடியாகக் கடன் பெறும் வழியைச் செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பள்ளிப்பட்டு தொகுதி ஆந்திர மாநிலத்தில் இருந்து பிரிந்த பகுதியாகும். அந்தத் தொகுதியை தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கொண்டுவந்து அந்தத் தொகுதியை மேம்பாடடையச் செய்யவேண்டும். காரணம் இந்தத் தொகுதியில் அதிகமான அளவு அரிசன மக்கள், பழங்குடி யினர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்தால் அங்கே உள்ள மக்கள் மிகுந்த நன்றி உடையவர்களாக இருப்பார்கள்.

[பிற்பகல் 12-40]

எனது தொகுதியைப் பொறுத்தமட்டில், பாலபுரம், எஸ். அஜ்ராவரம், முருகம்பட்டு, வெடியங்காடு, தேவலாம்பாபுரம், சகஸ்ரபத்மநாபபுரம் ஆகிய பகுதிகளில் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளாக இருக்கின்றன. அங்கே அரிசன மக்கள் வாழ்ந்த கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் வீடுகள் இல்லாமல் இருக்கி றார்கள். சாலைகள், குடிநீர் இல்லாமல் இருக்கிறார்கள். அப் படிப்பட்ட குறைகளை உடனடியாக்கப்போக்க, இந்த அரிசன மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, இந்த மானியக்கோரிக்கையை மனதார வரவேற்று அண்ணாவின் புகழ் வாழ்க என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

## 7. அறிவிப்பு.

### பேரவையின் 54வது விதியின் கீழ் உறுப்பினர்கள் கொடுக்கும் அறிவிப்புகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.



பேரவையின் 54-வது விதியின் கீழ் கொடுக்கப்படும் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், அனுமதிக்கப்பட்டுத் துறைகளுக்கும் மாண்புமிகு அமைச்சர்களுக்கும் அனுப்பப்படுகின்றன. இவற்றிற் கான அறிக்கைகள் தயாரானதும் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படு கிறது.

இவ்வாறு பேரவையின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டபின் அதே பொருளில் கொடுக்கப்படும் மற்ற மாண்புமிகு உறுப்பினர் களின் அறிவிப்புகள் எடுத்துக்கொள்ளப்பட இயலாதிருப்பதாலும் மறுநாளுக்கான நிகழ்ச்சி நிரல் முதல் நாள் பகல் 12 மணி அளவில் தயாராகி விடுவதாலும், பேரவையில் எடுத்துக்கொள்ளப் பட குறிப்பிடப்படும் நாளுக்கு 2 நாட்கள் முன்னதாகக் கொடுக் கப்படும் அறிவிப்புக்கள்தான் எடுத்துக்கொள்ளப்படமுடியும் என் பதாலும், இதைக் கருத்தில் கொண்டு அறிவிப்புகள் கொடுக்கும் படி மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## (6) வரவு செலவுத் திட்டம் 1980—81 வாக்கெடுப்பு— தொடர்ச்சி.

*திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980—81 ஆம் ஆண்டுக்கான அரிசன பழங்குடி மக்கள் மற்றும் எழுதுபொருள் அச்சுத்துறை ஆகிய மானியக்கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களை தெரிவிப்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுப்பேற்று இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வயதிலே இளையவராக இருக்கிறார் என்று பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும், தங்க ளுடைய பாராட்டுகளைத் தெரிவித்தார்கள். சில நாட்களுக்கு முன்பு நம்முடைய தமிழரசு பத்திரிகையில் நான் பார்த்தேன். நம்முடைய தாழ்த்தப்பட்டோர்நலத்துறைஅமைச்சரின் வாழ்க்கை குறிப்பு இடம் பெற்று இருந்தது. அதில் அவர் 1954ல் பிறந் தார் என்பதை நான் அறிந்த போது உள்ளபடியே மகிழ்ச்சி அடைந்தேன். காரணம், 1954ல் நான் கல்லூரியில் சேர்ந்து விட்டேன். ஆகவே, சரியாக 26ஆண்டு நிரம்பிய ஒரு இளைஞர் இந்தத் துறைக்கு பொறுப்பு ஏற்று இருப்பதற்காக நான் என் மகிழ்ச்சியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்த பொறுப்பு ஏற்று இருக்கும் நம்முடைய அமைச்சர் அவர்கள் நல்ல சுதந்திர உணர்வோடு இந்த அமைச்சு ரவையில் பணியாற்றவேண்டும். நல்ல பாதுகாப்போடும்,

ஒற்றர்கள் யாரும் பின்தொடராமல், சந்தேகத்திற்குரிய நபராக கருதப்படாமலும் அமைச்சரவையில் நல்லஉறவோடும், நல்லஆர் வத்தோடும், உணர்ச்சியோடும், நிச்சயமாக நடந்துகொள்வார் என்று நம்புகிறேன். அவருக்கு சாதகமான நல்லதொரு பின்னணி இருக்கும், இருக்கவேண்டும் என்று நான் நம்புகிறேன், எதிர் பார்க்கிறேன்.

இங்கே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் ''பாராட்டியே தீரவேண்டும்'' என்று சொல்லி, அந்த வார்த்தையையே பயன் படுத்திக்கொண்டு, பாராட்டுகிறோம் என்ற அளவிற்கு மிகச் சிறந்த அளவிலே பாராட்டினார்கள். மற்றொரு ஆளும் கட்சி உறுப்பினர் தற்போதுள்ள அமைச்சவரையில் தான், மாண்பு மிகு எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சியில் தான் நிம்மதியான வாழ்வை தாழ்த்தப்பட்ட மக்கள் பெற்றுள்ளனர் என்று பலப்பட பாராட்டினார். ஆனால், பொதுவாக கவனிக்குமிடத்து பெரும் பாலான உறுப்பினர்கள் பாராட்டினாலும் கூட, அந்தத் துறை யிலே இருக்கின்ற குறைகளைச் சுட்டிக்காண்பித்து ஆளும் கட்சியில் கூட ஒரு மாண்புமிகு உறுப்பினர் இந்தத்துறைக்கு ஒதுக்கப்பட்டி ருக்கிற பணம் முழுமையாக அப்படி ஒதுக்கப்பட்ட மக்களுக்குப் போய் சென்று சேர்ந்து இருக்கிறதா என்பதை கவனிக்க வேண்டும் என்ற வகையில் அக்கரை காட்டிப் பேசினார்கள். நான் இந்த விவாதத்தில் சில முக்கியமான பிரச்சனைகளை அடிப்படையான விஷயங்களை கிளப்புவதற்கு உங்களின் அனுமதியை வேண்டுகிறேன்.

நான் ஒரு பரந்த மனப்பான்மையோடு, கட்சி சார்பற்ற முறையில், கடமை, கருணை ஆகியவற்றின் மொத்த உணர்வோடு இந்தப்பிரச்சனையைத் தொடுவதற்கு விரும்புகிறேன்.

நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் 'தொகுத்த ஜாதியினரின் பிரச்னையை தேசிய மனப்பான்மையோடும், தொண்டு உள்ளத்தோடும் i.e. "with National spirit and National zeal" not "seal" but zeal கவனிக்கப்பட வேண்டும் என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தவகையில் இந்த தாழ்த்தப்பட்ட மக்களுடைய தொகை தமிழ் நாட்டிலே எவ்வளவு இருக்கிறது என்பதை இந்த புள்ளிவிவரத்திலேயும் தயாரிக்கப்பட்ட அறிக்கை யிலேயும் கொடுத்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள், பழங் குடிமக்கள் 75 இலட்சம் என்று தரப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த கணக்கெடுப்பு 1971லே நடைபெற்றது என்று நான் நம்பு கிறேன். 1971 முதல் 1980 வரையிலே இந்த 9 ஆண்டு காலத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அத்தனை பேர்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பின்பற்றி தங்களுடைய சந்ததியினரை விருத்தி செய்யாமல் போய்விட்டார்களா என்று கருதத்தோன்றுகிறது. இப்போது 1980 ஆம் ஆண்டு நடக்கிறது. ஏறத்தாழ ஒரு கோடி தாழ்த்தப்பட்ட, மலைஜாதி மக்கள் தமிழ் நாட்டிலே வாழ்வார்கள் என்று நாம் நிச்சயமாக நம்பலாம். ஆக ஒரு கோடி மக்களுடைய பிரச்சனைகளை நாம் இந்த



மன்றத்திலே விவாதிக்கிறநேரத்தில் எல்லோரும் குறிப்பிட்டதைப் போல, நான். ஒரு பொதுவான வேண்டுகோளை விடுக்க விரும் புகிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அடுத்தாண்டிலே அதை நிச்சயமாக நிறைவேற்றித்தருவார்கள் என்று நான் நம்பு கிறேன்..அந்த வேண்டுகோள், இந்த மானியத்தை விவாதிப்பதற்கு நேரத்தை அதிகமாக்க வேண்டும். அல்லது இரண்டு நாட்கள் விவாதிக்க வேண்டும் என்பதுதான்.

1967லே பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தபோது, நம்முடைய முதலமைச்சர் இருந்த இடத்திற் குப் பக்கத்திலே தான் எனக்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. பிறகு அவர்கள் முன்னால் வந்து உட்கார்ந்து விட்டார்கள். அப்போது எதிர்க்கட்சியிலே இருந்த திரு. கருத்திருமன் போன்ற வர்கள் இரண்டு நாள் விவாதிக்க வேண்டுமென்று கேட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருந்தன்மையோடு ஒப்புக் கொண்டார்கள். அதைப்போல நம்முடைய முதலமைச்சர் அவர் கள் வருகிற ஆண்டிலேயிருந்து அதிகமான நேரத்தை இந்த மானி யத்திற்கு ஒதுக்குவார்கள் அல்லது இரண்டு நாள் விவாதிப்பதற்கு வழிவகை செய்வார்கள் என்று நம்புகிறேன். நாம் பேசுகின்ற இந்த பிரச்சனை மிக முக்கியமானது. கட்டிய துணிக்கு மாற்றுத் துணி இல்லாத மக்கள் சட்டை போடாத மக்கள் அணிந்த புடவைக்கு மாற்று இல்லாத மக்கள், நிச்சயமாக படுப் பதற்கு பாய் இல்லாத கூட்டம், தலையணை பற்றி நிச்சயமாகத் தெரியாத மக்கள்: குடியிருக்க சொந்த மனை இல்லாத, இருந் தாலும் பாதுகாபான சொந்த வீடு இல்லாத மக்கள். ஆக அப்படிப் பட்ட மக்களைப் பற்றித்தான் இன்று விவாதிக்கிறோம்.

ஒருவேளை உணவு என்றால் சாம்பார் அல்லது குழம்பு, ரசம், மோர் என்றுதான் பொதுவாக கருதுகிறோம். ஆனால் தமிழ் நாட்டில் வாழ்கின்ற இலட்சக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சோறு என்றால் ஒரு வேளை சமைக்கப்பட்ட சோறு தான். குழம்பு, ரசம் எல்லாம் ஒன்றுதான். இப்படிப்பட்ட நிலையிலிருக்கும், உழைத்து ஓடாகி நிற்கும் ஒரு கோடி மக்களைப் பற்றிய பிரச்சனை இது. ஆகவே இதிலே அதிகக் கவனம் செலுத்தவேண்டும். இப்படிப்பட்ட ஜனங்கள் தமிழ்நாட்டிலே 1893 ஆம் ஆண்டில் 10 ஜாதியாக இருந்தார்கள். அது நாள் ஆக ஆக, பெருகி, இன்றைக்கு 70 ஜாதிகளாக பெருகிவிட்டது.

பலர் இங்கே பெருமையாகச் சொல்வார்கள். நான் அதை தடுக்கவில்லை. போன ஆண்டு 19 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு 25 கோடி என்று கூறினார்கள். மிக்க மகிழ்ச்சி. ''ஆண்டொன்று போனால் வயதொன்று கூடும்'' என்பார்கள். அதைப்போல இருக்கிற விலைவாசிகள் அடிப்படையில் பார்த்தால் இப்படி உயர்வது தேவைதான். ஆனால் இருக்கிற தேவைகளுக்கு

இந்தத்தொகை போதாது. குறைவாகத்தான் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். அவர்களுக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுகிறோம் என்பதை பல்வேறு நிதி நிலை அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக டாக்டர் கலைஞர் ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என் னென்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

''ஏழைகளுக்கு இல்லம் வழங்குவதிலிருந்துதான் சோஷலிசம் தொடங்கப்படவேண்டும்; வீட்டுவசதி என்பது வறுமையின் மீது தொடுக்கப்படும் மிக சக்தி வாய்ந்த ஆயுதம்; உண்மையான சோஷலிசத்தை ஏழைகளையும் தாழ்த்தப்பட்டவர்களையும் நல்ல நிலைக்கு உயர்த்துவதிலிருந்துதான் பெறமுடியும். இது வெறும் முழக்கமல்ல; செயல்முறைத்திட்டம்'' என்ற இலட்சிய முழக் கோடு கலைஞர் இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கான வீட்டுவசதித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

வீடு இனாமாகக் கட்டித் தரும் திட்டத்தை முன்னால் முத லமைச்சரும் தற்போதைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரு மான நம்முடைய கலைஞர் அவர்கள் 1973–74 ஆம் ஆண்டில் கொண்டு வந்தார்கள். அப்போது கலைஞர் அவர்கள் குறிப்பிட் டார்கள். ''எந்தவிதமான அரசியல் பிரதிபலனையும் எதிர்பார்க் காமல் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற பேரறிஞர் அண்ணாவின் இலட்சியம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இந்தத் தியாகத் திருப்பணியைத் தொடங்குகிறேன்' என்று.

இத்திட்டத்தைத் தொடங்கியபோது பலரும் பாராட்டினார் கள். நிபுணர்கள் எல்லாம் பாராட்டினார்கள். 'கேரவன்' ஏடு அல்ஜீரியா, நைஜீரியா, பிலிப்பைன்ஸ், பிரேசில் போன்ற இந்தியாவைப்போலவே ஏழ்மையில் வாடுகின்ற நாடுகளில்கூட கலைஞரின் குடிசை மாற்று வாரியம் தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதிக் கழகம் போன்ற திட்டங்கள் தீட்டப்படவில்லை என்று புகழ்ந்தது, பாராட்டியது.

[பிற்பகல் 12.50]

அதுமட்டுமல்ல. ''தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், குடிசைவாசி களுக்கும் குறிப்பாக கடைநிலையில் இருக்கின்ற மக்களுக்கும் வீடுகள் கட்டித்தந்த கலைஞர் அவர்களின் பணி சேவையின் சின்ன மாக இருக்கின்றது. கலைஞரின் அரசு உண்மையிலேயே மகாத்மா காந்தியின் பாதையில் நடைபோடும் அரசாக இருக்கின்றது. கடைநிலை தாழ்ந்த மக்களின் முன்னேற்றமே சர்வோதயத்தின் நோக்கம். தமிழக அரசின் திட்டம் சோஷலிச சமுதாயத்தை





உருவாக்கும் மதிப்பு வாய்ந்த நன்கொடையாகும்'' என்று பெரு மதிப்பிற்குரிய ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் சென் னைக்கு வந்திருந்தபோது குறிப்பிட்டார்கள்.

அதோடு மட்டுமல்லாமல் ''பாமர மனிதனுக்கு வீட்டு வசதி செய்து தருவதில் கலைஞர் அரசு இந்தியாவின் மற்ற பகுதி களுக்கு வழி காட்டுகிறது'' என்றார் திரு. வி.வி. கிரி. கலைஞரின் இந்த அருமையான திட்டத்தை எனது சொந்த மாகாணத்தில் நிறைவேற்ற முடியுமா என்று நான் ஆசைப்படுகிறேன் என்று பாபு ஜகஜீவன்ராம் அவர்கள் குறிப்பிட்டார். அப்படிப்பட்ட திட்டம் 1976 ஆம் ஆண்டுக்குப்பிறகு இன்றுவரை நல்லமுறையில் தொடர்ந்து பணியாற்றவில்லை என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களும் இந்த மன்றத்திலே இருப்பவர்களும் நிச்சயமாக அறி வார்கள் என்று நம்புகிறேன். அதற்காக ஒரு வாரியம் ஏற்படுத் தப்பட்டது. ஒரு டைரக்டர் இருக்கிறார். டெபுட்டி டைரக்டர் இருக்கிறார். அசிஸ்டெண்ட் டைரக்டர் இருக்கிறார். அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர்கள் இருக்கிறார்கள். இன்னும் பணியாளர்கள், கடைநிலை ஊழியர்கள். இவ்வளவு பேர் இருந்தும் கூட இந்த 3 ஆண்டுகளில் மிக குறைந்த அளவுக்கு அதாவது குறிப்பிட்டுச்சொல்ல முடியாத அளவுக்கு தான்தாழ்த்தப்பட்டோர் வீட்டுவசதிக்கழகம்செயல்பட்டுக்கொண் டிருக்கின்றது. இவ்வாறு மூன்று நான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இன்று மதிப்பிற்குரிய திரு. எஸ். எம். துரைராஜ் அவர்களைத் தலைவராகக் கொண்டு இந்தத்திட்டம் மீண்டும் நடைபெறும் என்ற உணர்வோடு அறிக்கை வெளியிடப்பட்டி ருக்கின்றது. இது மிகப் பெரிய திட்டம். சுதந்திரத்திற்குப் பிறகு நல இலாகாவில் தரப்பட்ட மனைகளில் பெரும் பகுதி கட்டப் படாமல் இருக்கின்றது. இந்த ஆண்டு 5 ஆயிர வீடுகள் கட்டிக் தருவதாக சொல்லி இருக்கிறார்கள். இப்படி 5,000 என்பது மிகக் குறைந்த கணக்கு. இந்த நிலை தொடர்ந்தால் பற்பல தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்க வீடில்லாமல் இருப்பார்கள். ஆகவே இந்த வீடுகளை அதிகமாகக் கட்டித்தரவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

]மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

அடுத்து ''தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தரப் படவேண்டும்'' என்று அண்ணா அவர்கள் ராஜ்ய சபையிலே பேசும்போது குறிப்பிட்டார்கள். சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் தண்ணீர் கிடைக்கவில்லை என்ற நிலை யில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் அவலம் ஒழிக்கப்படவேண் டும் என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கும் அந்தக்குரல் எழுப் பப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றது. தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற எத்தனை பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டது? கணக்கு இல்லை, எத்தனை தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்பெறு கிறார்கள்? கணக்கு இல்லை. எத்தனை கிராமங்களுக்கு குடிநீர்

வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது? கணக்கு இல்லை. இந்த ஆண்டு எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கப்போகிறீர்கள்? அதற்கும் கணக்கு இல்லை. மொத்த மாக ஏதோ குடிநீர் கிணறுகளை வெட்டப் போவதாகக் குறிப் பிட்டிருக்கிறீர்கள்.

அடுத்து கிராமப்புறங்களை எடுத்துக்கொண்டால் பல இடங் களில் குடிநீர் உப்பு நீராக இருக்கின்றது. காலம் காலமாக அந்த உப்பு நீரைத்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் குடித்துக்கொண்டு வருகிறார்கள். வேறு தொலைதுாரத்து இடங்களிலே இருந்து தண்ணீர் கொண்டுவரவேண்டும் என்றால் அதற்கு அதிக செலவாகும், அந்தத் செலவை ஏற்கும் வகையிலே அரசிடம் ஏதாவது திட்டங்கள் இருக்கின்றதா? இல்லாவிட்டால் அதற் கான திட்டங்களை அரசு கொண்டு வருமா என்று கேட்கவிரும்பு கிறேன்.

அடுத்து தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற கிராமப்புறங்க ளுக்கு தெருவிளக்குகளுக்கு மின் இணைப்பு கொடுக்கவேண்டும். இதிலே மிகப்பெரிய குற்றச்சாட்டு என்னவென்றால் விளக்கு இருக்கின்றது. இணைப்பு இருக்கின்றது. ஆனால் விளக்குகள் எரிவதில்லை. 25,526 தாழ்த்தப்பட்ட தெருக்களுக்கு இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அவற்றுக்கு மின்சாரம் வந்து அவை எரிகின்றனவா என்றால் இல்லை என்ற குற்றச் சாட்டை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நிச்சய மாக இது ஒரு பெரிய குறை. இதிலே கற்பனை எதுவும் கிடையாது. இந்த அரசைத் தாக்கவேண்டும என்ற எண்ணம் துளிக்கூட கிடையாது. பல விளக்குகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் பொருத்தப்பட்டன. அவைகள் அப்போது தொடர்ந்து எரிந்துகொண்டிருந்தன. ஆனால் இப்போது அவை எரிவதில்லை. நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு வச னத்தை மந்திரி குமாரி என்ற படத்திலே பேசுகிறார். ''கண்ணின் கடைக் கூட்டில், கனி இதழின் ஓரத்தில், கன்னத்துச் சரிவுகளில் ஒளிந்துகொண்டிருக்கும் இருளை நான் ரசிக்கின்றேன் ஜீவா'' என் பதுதான். அந்த வசனம் கலைஞர் அவர்கள் எழுதிய வசனம்தான் இந்த இருளை வேண்டுமானால் நாம் எல்லாம் ரசிக்கலாம். ஆனால் இயற்கையின் இருளை இராக்காலத்தில் ரசிக்கக்கூடிய கலையை ஏனோ இன்னும் தாழ்த்தப்பட்ட குடிமக்கள் கற்றுக் கொள்ளவில்லை.

ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளபடியே இருட்டிலே வசிக்கிறார்கள். அவர்களால் அதை ரசிக்கமுடியவில்லை. ஏனென் றால் இருட்டில் வாழும் அவர்களை பாம்பு, பூச்சி, தேள், பூரான் நட்டுவாக்களி ஆகியவை கடிக்கின்ற அபாயம் இருக்கிறது. ஆகவே அந்த மக்களை இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு அழைத்துச் செல்லும் வகையில் மின்சார வசதி அமைத்துத் தரவேண்டும் என்பதை மாண்புமிகு மின் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



அடுத்து அரிசன மாணவர்களுக்கு ஹாஸ்டல் நடத்தப்படு கிறது. அங்கே தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு, சென்னை நகர மாணவர்களுக்கு 80 ரூபாய், வெளியூர் மாணவர்களுக்கு 65 ரூபாய் என்று உதவிப்பணம் வழங்கப்பெறுகிறது. அது மட்டு மல்ல: சென்னையிலேயே பி. ஏ. படிப்பவர்களுக்கு 80 ரூபாய் உதவிப்பணம், பி. எஸ்.சி. படிப்பவர்களுக்கு 80 ரூபாய் உதவிப் பணம், ஆனால் பி. ஈ. படிக்கும் மாணவர்களுக்கு 185 ரூபாய். ஒரே மாதிரி பி.யூ.சி படித்து முடித்து, அல்லது பிளஸ். 2 படித்து முடித்து பட்டப்படிப்பு படிக்க வரும் மாணவர்கள், ஒரே வய தினர், ஒரே வளரும் பருவத்தினர், இவர்களுக்குள் பேதம் பார்ப்பது ஏன்? ஏதோ பி.ஏ., பி.எஸ்.சி. படிப்பது தரக்குறை வானது போல்ஒரு எண்ணத்தை ஏன் மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துகிறீர்கள். அந்தமுறை இப்போது ஏற்பட்டதல்ல. காலம் காலமாக இருந்துவரும் ஒன்று என்று சொன்னாலும் கூட, அதை மாற்றி அமைக்கவேண்டும். எல்லோருக்கும் ஒரே மாதிரி ஸ்காலர் ஷீப் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த விடுதிகளிலே சேருகிற மாணவர்களுக்கு டிரஸ் தருகிறார்கள். நமது மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள் எடுத்துச் சொன்னது போல் அந்த டிரஸ்களை யாருமே போட்டுக்கொள்ள முடியாது. வேண்டுமானால் வார்டன் வீட் டுக்கு எடுத்துக்கொண்டு போகலாம், ஆசிரியர்கள் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போகலாம். அது யாருக்கும் எந்த மாண வனுக்கும் பொருந்தாது. As was said by Charles Dickens in his Book "Do the Boy's Hall" என்ற கதையில் எழுதியிருப்பதுபோல, மாணவர்கள் யாருமே அந்த ஆடைகளைப் போட்டுக்கொள்ளமுடியாது. ஏன் அப்படித் தைக்கிறீர்கள். எல்லாமே காண்டிராக்ட். அதனால்தான் அப்படி இருக்கிறது. துணி வாங்குவது காண்டிராக்ட் வெட்டுவதற்கு ஒரு காண்டிராக்ட் தைப்பதற்கு ஒரு கடிண்டிராக் நல்லவேளை காஜா எடுப்பதற்கும் தனியாக காண்டிராக்ட் வைக்காமல் போனீர்கள். இதற்கு என்ன செய்யவேண்டும் என்று சொன்னால், நல்ல துணியாக தரமாக வாங்கி அவர்களிடம் கொடுத்து விடுங்கள். அவர்களே தங்கள் அளவிற்கேற்ப தைத்துக்கொள்ளட்டும். இதை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 90 சதவிகிதம் அட்டெண்டன்ஸ் இருந்தால்தான் மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் என்று ஒரு விதிமுறை வைத்திருக் கிறார்கள். இதுதேவைதானா என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எவ்வளவோ தடைகள் இருக்கலாம், உடல்நலம் சரியில்லாமல், குடும்ப விழாக்களுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம், இப்படி எத்தனையோ இருக்க லாம், ஆகவே இதை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஜே.எஸ் இராசு] [1980 ஜூலை, 22

அடுத்து நமது தமிழக அரசு 'கம்யூனல் ரெப்பரசன்டேஷன் என்ற வகையில் 50 சதவீதம் பின் தங்கியவர்களுக்கு அளித்தது மிக்கமகிழ்ச்சி. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீத தான், இன்னும் இருக்கிறது. அது ஏன்? அவர்களுக்கும் நிச்சய மாக அந்த 50 சதவீத ரேஷியோவிற்கு தக்கபடி உயர்த்திக் கொடுக்கவேண்டும். அந்த அடிப்படையில், ஷெட்யூல்ட் டிரைப்ஸ் போன்றவர்களுக்கு 2 அல்லது 3 சதவீதம் வைத்தால் நலமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசு உருவாக்கும் அனைத்து கார்ப்பரேஷன்கள், போர்டுகள், வாரியங்கள் ஆகியவைகளில் தாழ்த்தப்பட்ட மக்க ளுக்கு ஒதுக்கப்பட்ட (ரிசர்வேஷன்) இடங்களை முறையாகப் பயன்படுத்தவேண்டும்.

உதாரணமாகச் சொன்னால் தேவையான அளவுக்கு தாழ்த் தப்பட்ட வகுப்பில் டெபுடி கலெக்டர்கள் 12 பேர் தேவை என்றால், அந்த இடத்தை டைரக்ட் ரெக்ரூட்மெண்டில் தாழ்த் தப்பட்ட மக்களை நியமனம் செய்யுங்கள். எனவே, தாழ்த்தப் பட்ட வகுப்பில் உள்ளவர் பிரமோஷனுக்கு காத்திருந்தால் அவர்களுக்கு முன் உரிமை தர வேண்டுகிறேன். அப்படி வருவாய் துறை ஆனாலும், வேறு எந்த இலாகாவானாலும் இன்று வரை ரிசர்வேஷன் கவர் ஆகாமலிருந்தால் உடனே கணக்கெடுத்து காலி இடங்களை பூர்த்தி செய்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுகொள்கிறேன்.

மத்திய அரசாங்கத்திலே வேலைக்கு சேர்க்கும்போதும், பிர மோஷன் தருவதிலும் அரிசனங்கள், தாழ்த்தப்பட்டவர்களுக் கான ரிசர்வேஷன் இடங்களை கண்டிப்பாக பின்பற்றுகிறார்கள். அவர்களுக்கு முன் உரிமை அளிக்கிறார்கள். அது போல் நீங்களும் அந்த ரிசர்வேஷன் முறையை பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாநில அரசு கட்டும்-கட்டிடங்கள் கூடங்கள் அரசு அலுவலகங்கள் ஆகியவை தாழ்த்தப்பட்டோர்வசிக்கின்றதெருவை ஒட்டி இருக்கவேண்டும். இது மத்திய அரசின் கொள்கை. இதை இங்கும் பின்பற்றினால் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றவர் களோடு சமமாக பழக அதிக வாய்ப்பு ஏற்படும். அவர்களை ஜாதிவித்தியாசம் என்று பேதம் இல்லாமல் இருக்க தீண்டாமை என்பதை ஒழிப்பதற்காக மத்திய அரசு கொண்டு வந்த கொள்கை அது. அதை மாநில அரசும் பின்பற்றவேண்டும். ஏனென்றால் ஜாதி வித்தியாசம் என்பது ஒரு பெரிய டிசீஸ்—வியாதி. மற்ற வியாதிகளையைப்போக்க, அல்லது குற்றங்களை தவிர்க்க சட்டம் கொண்டுவருவதைப்போல், இதற்குக் கொண்டுவரப்படவேண்டும்.



1980 ஜூலை, 22] [திரு. ஜே. எஸ். இராசு]

Act of "Prevention of Cruelty to Animals" "Prevention of Immoral Traffic Act"

என்றும் சட்டங்கள் இருக்கின்றன. இன்று காலை கூட ஒரு நடிகை அதன்கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார் (மணியடிக்கப் பெற்றது).

சரி நான் அதற்கெல்லாம் போகவில்லை, தலைவர் அவர்கள் மன்னிக்கவேண்டும். இன்னும் சில முக்கியமான பிரச் சினைகள் இருக்கின்றன. மானியக்கோரிக்கைகள், சம்பந்தப்பட்ட பிரச்னை அவைகளைக் கூறிக்கொண்டு முடித்துவிடுகிறேன்.

இப்படி இந்த ஜாதி வெறி நாம் சுதந்திரம் அடைந்து 33 ஆண்டுகாலமாகியும் மாறவில்லை என்று சொன்னால், அதற்காக நாம் வெட்கப்படவேண்டும். நீங்கள் சாதியை ஒழிக்க சட்டம் கொண்டுவரவேண்டாம். சாதிக் கலவரம் அல்லது சண்டைகள் தகராறுகள் ஏற்பட்டால் உடனே அதைக்கவனிக்க, அவைகளை தீர்த்துவைக்க ஆந்திராவில் அந்த அரசு மொபைல் ஸ்குவாடுகளை ஆங்காங்கே போட்டிருக்கிறது. மொபைல் கோர்ட்டுகளில் கல வரம் நடக்கும் இடத்திலேயே உடனுக்குடன் தீர்ப்பு வழங்கப்படு கிறது. அந்த மாதிரி நீங்கள் இங்கேயும் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

மேலும் தொழில் இலாகாவோடு தாழ்த்தப்பட்ட இலாகாவை இணைக்கவேண்டும். டிஸ்ட்ரிக்டில் டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபீஸர் இருக்கிறார். மதராசில் டயரக்டர் இருக்கிறார். இடையில் லிங்க் இல்லை. ஆகவே மூன்று அல்லது நான்கு மாவட்டங்களைச் சேர்த்து ஜாயின்ட் டைரக்டர் என்று போட்டால் கீழேஉள்ள அதிகாரிகள் பயந்து வேலை கடமை உணர்வுடன் செய்வார்கள். போலீசில் டி.ஐ.ஜி.க்கள் இருப்பதுபோல் செய்யவேண்டும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு நல்ல வேலைவாய்ப்பு அளிக்கவேண்டும். இப்போது 32 அல்லது33பேர்கள் எஸ். சி. அண்ட் எஸ்.டி.ஸ் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருக்கிறார் கள். செகரட்டரி for சோஷியல் வெல்பேர், ஹரிஜன வெல் பேர் டயரக்டர், பிஷரீஸ், ஹௌவுசிங் என்று இத்துறைகளில் அதிகாரிகளாக இருக்கிறார்களே தவிர அவர்களுக்கு எங்கரேஜ் மென்ட் இருக்கவேண்டும். திரு. வெங்கடேசன் ஹோம் செகரட்டரி யாக இருந்தார். அதனால் நாடு தலைகீழாகப் போய்விடவில்லை. எவ்வளவோ நல்ல டாக்டர்கள் இருக்கிறார்கள் இம்மக்களிடையே ஆகவே அமைச்சர் அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு நல்ல பொறுப்புக்களைத் தரவேண்டும். அதோடு அவர்கள் சில தீவிரமான திட்டங்களை அமல் நடத்தும்போது அவர்களுக்கு பாதுகாப்பு தரவேண்டும். எங்கேயும் சாதி

இருக்கிறது. எங்கேயும் தொல்லைகள் இருக்கும், வம்புதும்புகள் இருக்கும். ஆகவே, நாம் அண்ணா வழி வந்தவர்கள். ஐயா வழி வந்தவர்கள் என்பதால் தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்தி அவர் களுக்கு நல்ல பொறுப்புக்களைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து அரிசன் என்ற வார்த்தைபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசி னார்கள். அரசியலமைப்புச் சட்டத்தில் விதிகளில் எந்த விதி யிலும் There is no word as 'Harijan' ஆம்! அரிசன் என்ற வார்த்தையே கிடையாது. திரு. இளையபெருமாள் அவர்கள் சொன்னதுபோல் குஜராத்தில் ஒரு முனிவரால் மான சீகமாகக் கண்டுபிடிக்கப்பட்டு மகாத்மா காந்தியடிகளால் ஏனோ பின்பற்றப்பட்டது. The word 'Harijan' should not be there.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் விவரம் தெரிந்தவர்கள். பறை யர்கள், பள்ளர்கள், சக்கிலியர்கள் என்று இல்லாமல் யார் யார் தாழ்த்தப்பட்டவர்களோ, யார் யார் நசுக்கப்பட்டவர் களோ அவர்கள் எல்லாம் செட்யூல்ட் காஸ்ட்ஸ். ஷெட்யூல்ட் காஸ்ட் என்று சொல்வதே நன்றாக இருக்கிறது என்று சட்டத்தில் பெயரிட்டார். அரிசன் என்ற வார்த்தையை இந்த இலாகா எப்படி ஏற்றுக்கொண்டது? மாநில அரசு இவ்வளவு ஆண்டுகாலமாக அதை எப்படி ஏற்றுக்கொண்டது? அதை மாற்றியே தீரவேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் இந்த அரிசன் என்பதற்கு வேறு பெயர் கண்டுபிடிக்கலாம் என்று குறிப்பிட்டார்கள். மன்னிக்கவேண்டும். இது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரான காரியம். இதை அமென்ட் செய்வது என்பது டெல்லியில்தான் செய்யவேண்டும். ஷெட்யூல்ட்காஸ்ட்ஸ் என்றிருக்கலாம், வேறு பெயர் வேண்டாம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: வேறு பெயர் என்று சொன்னால் வேறு வகையில் சொல்லப்படவேண்டும் என்று தான் சொல்லியிருக்கிறேன். தாழ்த்தப்பட்டவர்கள் பிற்படுத் தப்பட்டவர்கள் என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறேன். அதை உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

திரு. ஜே. எஸ். இராசு: முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. நான் அவர்களுடைய கருத்தை ஆதரித்து தான் பேசுகிறேன். பெயர் மாற்றம் செய்கிறபோது தாழ்த்தப் பட்டவர்கள்என்று வந்தால் தாழ்த்தப்பட்டவர்கள் என்றஸென்ஸ் வருகிறது. அந்த அட்ரிப்யூஷன் வரக்கூடாது. தொகுக்கபபட்டப் ஜாதி என்றிருக்கட்டும். ஷெட்யூல்ட்காஸ்ட்ஸ் என்றால் தொகுக்க பட்ட ஜாதி, அதற்கு மேல் எந்தவித அர்த்தமும் வராது. ஆகவே இதுபற்றி டிஸ்கஸ் செய்து ஒரு முடிவு எடுக்கவேண்டும்.





ப்ரெஸ். நமது அச்சகத்தில் ஜெர்மனி போன்ற நாடுகளில் இருந்து பல லட்சம் ரூபாய் செலவு செய்து வாங்கியுள்ள இயந்தி ரங்கள் நாலைந்துக்கு மேல் சும்மா கிடக்கின்றன. நமக்கு தேவை யானவற்றை வேறு இடங்களிலிருந்து அச்சடித்துக் கொண்டிருக் கிறோம். வேறு இடங்களுக்கு நிறைய ஆர்டர்ஸ கொடுக்கிறோம். ஆகவே நான் கேட்பது, அவற்றை ரிப்பேர் செய்ய கம்பெனிகள் இல்லையா? இல்லை ஜெர்மனிக்குத்தான் போகவேண்டுமா? நம் அரசிடம் அதற்கு பணம் இல்லையா? எச்.எம்.டி. மெஷின் வாங் கப்போகிறோம் என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இருக்கக்கூடிய இயந்திரங்களையே பயன்படுத்த முடியாத நிலை இருக்கும்போது இந்த எச். எம்.டி. மெஷின் எதற்காக?

வேலைவாய்ப்பு தரும்போது எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சி லிருந்து வேலைக்கு ஆள்களை எடுக்கிறோம். சட்டதிட்டங்கள் படி 33 வயது என்றிருக்கிறது. ஆனால் அரசு அச்சகத்தில் 13 நபர்களை, கல்கியில் வேலை செய்தவர்சளை அரசு அச்சகத்தில் வேலைக்கு சேர்த்துள்ளார்கள். என்ன காரணத்தோடு சேர்த் தீர்கள் என்பதை இந்த அவை அறியவிரும்புகிறது. எல்லோரும் நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள். அங்கே வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களின் பிள்ளைகளாக இருந்தாலே வயது வரம்பு இருக்கிறது. ஆகவே 40 வயதுக்கு மேல் உள்ளவர்களை ரொம்ப அனுதாபத்தோடு சேர்த்திருக்கிறீர்கள். அது சட்ட விதிகளுக்கு முரணானது. தர்ம நியயத்திற்கு முரணானது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று. மாதவன் நாயர், எஸ்.எஸ்.எல்.சி. பயின்ற வர். நிர்வாக உதவியாளராக இருந்தார். அவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் ஆட்சியில் அத்துறையின் இணை இயக்குநராக பதவி உயர்த்தப்பட்டிருக்கிறார். டிபுடி டைரக்டர். அவர் அங்கேயே வேலை பார்த்திருந்தால், ஸ்டோர் செக்கிங் ஆபிசராக பதவி பெற்று, ஓய்வு பெற்றிருப் பார். செகரடேரியட்டிலிருந்தோ அல்லது ஆர்.டி.ஓ. போன்ற வர்கள் டிபுடி டைரக்டராக போவார்கள். ஆனால், நம் முடைய புரட்சித் தலைவர் ஆட்சியில் அவர் டிபுடி டைரக்டராகி இருக்கிறார். மன்னிக்கவேண்டும். அவரை டைரக்ட ராக ஆக்கிவிட வேண்டாம். அவர் எஸ்.எஸ்.எல்.சி. படித்த வர், குவாலிபிகேஷன் இல்லை. இதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்?

இவரைத் தவிர, இன்னொரு மாதவன் நாயர், ஸ்டோர் கீப்பராக அதாவது அண்ணா சாலை விற்பனை நிலையத்தில், ஏற்கனவே கையாடல் செய்து சஸ்பெண்ட் செய்யப்பட்ட ஒருவர், மறுபடியும் வேலைக்கு அமர்த்தப்பட்டார். நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதனால் அங்கே தமிழ் அதிகாரிகள் பல்வேறு வகையிலே பாதிக்கப்படுகிறார்கள். இவை முதல்வர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[ஜே. எஸ். இராசு] [1980 ஜுலை, 22

எல்லா நலன்களும் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.
இங்கே மெடிகல் அட்டெண்டென்ஸ் ரூல் கிடையாது.
சர்வீஸ் ரிஜிஸ்தர் கிடையாது. பிரஸ்ஸிலே
களுக்கு $1\frac{1}{2}$ ஆண்டு காலம் மெடிகல் விடுப்பு
ஆர்டர் போடப்பட்டுள்ளது. சாதாரணமாக, குமாஸ்தாக்
லாளர்களுக்கு ஒரு ஆண்டுதான். ஆனால், இந்த தொழி
அதற்கு என்ன காரணம்? 6 மாதங்கள் என்ன ஆயிற்று?
முதல்வர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். தெரியவில்லை. அதையும் தரப்படுகிறது,

இப்படி பல்வேறு பிரச்னைகள் உள்ளதாக இருக்கிறது.
இந்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காகவும்,
தாங்கள் மேலும் அனுமதி தந்தமைக்காகவும் எனது நன்றியைத்
தெரிவித்துக் கொண்டு, இந்த மானியம் திருப்தி தரவில்
என்பதையும் தெரிவித்துகொண்டு, என்னுடைய உரையை
முடித்துக் கொள்கிறேன். வணக்கம், நன்றி

*மாண்புமிகு. திரு எம். விஜயசாரதி.—பேரவைத் தலைவர்
அவர்களே, அரிசன-பழங்குடி மக்கள் நலத்துறை மான்யக்
கோரிக்கை எண் 31, எழுதுபொருள்-அச்சுத் துறையின் மான்யக்
கோரிக்கை எண் 44 ஆகியவைகளின் மீது விவாதத்திற்கு பதில்
அளிக்கின்ற வாய்ப்பை நான் பெருமகிழ்ச்சியோடு தொடர
இருக்கிறேன்.

இங்கே 22 உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். பேசிய
ஒவ்வொரு கருத்தும் அவர்கள் சுட்டிக் காட்டிய திட்டங்களும்
இந்த அரசாங்கத்தின் எண்ணத்திலே இருக்கும் என்பதை
நான் முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மதிப்பிற்
குரிய உறுப்பினர்களின் சீரிய கருத்துக்கள் அனைத்தும், இந்த
அரசு மிக்க கவனத்துடன் பரிசீலிக்கும் என்பதை உறுதியுடன்
தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாநிலத்திலே ஏறத்தாழ 76 லட்சம் தாழ்த்தப்பட்ட-
பழங்குடி மக்கள் இருக்கிறார்கள். இங்கே இதற்கு முன்பு
பேசிய மாண்புமிகு உறுப்பினர் ராசு அவர்கள் எந்தக் கணக்கிலே
76 இலட்சம் என்று கேட்கிறார். 1980-ல் கணக்கெடுப்பு
நடந்த பிறகு, இப்போது இருக்கின்ற மக்கள் தொகையின்
கணக்கு புள்ளி விவரங்களுடன் இங்கே வைக்கப்படும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த தாழ்த்தப்பட்ட-பழங்குடி மக்களின் வாழ்க்கைத்
தரத்தை உயர்த்தவும், சமுதாயத்தில் சம உரிமை பெற்று
அவர்கள் தலைநிமிர்ந்து வாழவும் பல்லாண்டுகளாக நாம்
திட்டங்களைத் தீட்டியும், அவற்றை அமுலாக்கியும், அந்த
மக்களுடைய வாழ்க்கைத் தரத்தின் நிலை மன நிறைவைத்
தருவதாகத் இல்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் மன
வருத்தத்துடன் ஒத்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலையிலே
இன்றைய தினம் இருக்கிறோம்.



1980 ஜுலை, 22] [திரு. எம். விஜயசாரதி]

பல்வேறு திட்டங்களை இந்த மக்களின் நலனுக்காக இன்றையதினம் பல்வேறு பகுதிகளிலும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கிராமப் புறங்களிலே தீண்டாமை என்பது மிக அதிகமாகவும், நாம் வெட்கப்படுகின்ற அளவிலே இருப்பதையும் காண்கிறோம்.

[பிற்பகல் 1-10]

அந்த சிறுபான்மையினர் மீது ஆங்காங்கு நடக்கின்ற கொடுமைகளையும் மனிதனை மாக்களாக நடத்துகின்ற அட்டூழியங்களையும் குறைக்கவும், முடிந்தால் முழுமையாக நீக்கவும் இந்த அரசு முயற்சிகளை எடுத்து வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் தீண்டாமை தொடர்பான குற்றங்களும் நிகழ்ச்சிகளும் நடைபெறக் சாதகமாச உள்ள வட்டாரங்களில் தனி கவனம் செலுத்தும் வகையிலே நடமாடும் குழுக்களின் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் நடமாடும் நீதிமன்றங்கள் அமைப்பதன் மூலமும் இதிலே கவனம் செலுத்தப்படுகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரிய இளையபெருமாள் அவர்கள் பேசுகின்ற சமயத்திலே வழக்கு மன்றங்களிலே நீதி அவ்வளவு விரைவாக வழங்கப்படுவதில்லை என்றும் பல வருஷங்கள் அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்றும் எடுத்துரைத்தார்கள். அதைப் போக்குகின்ற வகையில் நடமாடும் நீதிமன்றங்கள் அமைப்பதன் மூலம் தீண்டாமைக் குற்றங்களில் துரிதமாக நீதி வழங்கும் திட்டம் அரசின். பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருபுறம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அவர்கள் வாழ்கிற பகுதிகளுக்கும் வேண்டிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் இங்கே பேசிய அனைத்து உறுப்பினர்களும் கூறியுள்ள கருத்தினை ஏற்று குடிதண்ணீர் வசதியையும், மின் வசதியையும், இணைப்புச் சாலைகளையும், மயானத்திற்குச் செல்ல பாதை வசதிகளையும், கல்வி, சுகாதார வளர்ச்சி, குழந்தைகளுக்குக் காப்பகங்கள், வீட்டு மனைப் பட்டாக்கள், இலவச வீடுகள், விவசாயத்திற்கு நிலப்பட்டாக்கள், சமுதாயக் கூடங்கள் போன்ற அடிப்படைத் தேவைகளை அரசு செய்து வருகிறது. அதனால் கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலும் மாற்றங்களை நாம் காண்கிறோம்.

அரசு அவர்களுக்கு 18 சதவிகித விகிதாச்சாரப்படி வேலைகளை ஒதுக்கி வருகிறது. என்றாலும் இங்கே பேசிய பலர் அதனைக் குறையாக எடுத்துச் சொன்னார்கள். நான் அந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கூற விரும்புவது எல்லாம்—இந்த அரசு 25—3—1979 ஆம தேதியன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பட்டு வளர்ப்பு பயிற்சிப்

பள்ளி ஒன்றினை ஹோசூரில் துவக்குவது குறித்த வணக
இயக்குநர் செயற்குறிப்பு குறித்து கூறியுள்ள அந்த வாசகங்களை
இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன்.—

தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள், பிற்பட்ட சமூகத்தினர்
இப்படிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய விகி
தாச்சாரப் பிரதிநிதித்துவம் தற்போது முழுமையாக்கப் படா
திருப்பது வருந்தத்தக்கது என்றும் எனவே இனி அரசு சம்பந்தப்
பட்ட வேலைகளுக்கு ஆட்களை எடுக்கும்போது இந்த விகிதாச்
சாரத்தை முழுமைப்படுத்தும் வகையில் ஆட்கள் தேர்ந்தெடுக்கப்
பட வேண்டும் 18-31 என்ற அளவில் முழுமையாக முறைப்படி
தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தாழ்த்தப்பட்டோர் மலை
வாழ் மக்கள் முதலியவர்கள் 50 சதவீதம் பிறப்பட்டோர்
50 சதவீதம் தொடக்கத்தில் சேர்க்கலாம். பிறகு விகிதாச்
சாரபபடி தேர்ந்தெடுக்கலாம். என்று குறிப்பிட்டுள்ளார்.

அது சுற்றறிக்கையாக அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது.

An extract of the note for circulation and the orders of Chief Minister relating to the reservation of posts for Scheduled Castes, Scheduled Tribes and Backward Classes in this file No. 85278/SIG/78 may be communicated to the Personnel and Adminstrative Reforms and Social Welfare Department for necessary action.

THIRU L. ILAYAPERUMAL: What is the date?

THE HON. THIRU M. VIJAYASARATHI: 17-4-79.

பல இடங்களிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட
இடங்கள் தகுதிபடைத்தவர்கள் இல்லை என்ற காரணத்தாலும்
மற்ற சில சூழ்நிலைகளின் காரணத்தினாலும் பூர்த்தி செய்யப்
படாமல் இருப்பது அரசுக்குத் தெரியும். அதை விரைவிலே
பூர்த்தி செய்ய அரசின் திட்டமொன்று பரிசீலனையில் இருக்
கிறது. இந்தக் குறைபாட்டினை அகற்றி, சட்டப்படி ஒதுக்கப்
பட்ட இடங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கிற
வகையிலே இந்த அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஒரு புறம் அடிப்படைத்
தேவைகளைப் பூர்த்தி செய்தல், மற்றொரு புறம் தாழ்த்தப்
பட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டினை மையமாகக்
கொண்டு அவர்கள் வாழ்வு மலர, தமிழக வரலாற்றிலேயே
பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுகின்ற அளவிலே
நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு புதிய
திட்டத்தை இன்றைய தினம் வகுத்திருக்கிறார்கள். தாழ்த்தப்
பட்ட மக்களுடைய பொருளாதாரத்தை மேம்பாடு அடையச்
செய்யும் வண்ணமும், அதைப் போல் தீண்டாமைக்கு, பொரு
ளாதார ரீதியாக அரிசன மக்கள் தாழ்ந்து இருப்பதும் ஒரு
காரணம் என்ற அடிப்படையிலேயும் இந்தப் புதிய திட்டத்தை
நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கி இருக்கி
றார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரம்
மேம்பட பல்வேறு துறைகளிலே அவர்களுக்கு என்று தொழில்
கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு



அளிப்பதுடன் நில்லாமல் முதன்முறையாக சமுதாயத்தின் அடித் தளத்திலே உள்ள ஆதி தமிழர்களை தொழில் உலகத்திற்கு அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தொன்றுதொட்டு தோல் பதனிடும் தொழிலிலே ஈடுபட்ட இம்மக்கள் தங்களுக்கு என ஒரு கூட்டுறவு கூடத்தை ஏற்படுத்தி அதன் மூலம் நிரந்தர மான வேலை வாய்ப்புப் பெறுவதோடு இல்லாமல் இடைத் தரகர்களின் பிடியிலிருந்தும் அடிமைத் தளையிலிருந்தும் அவர்கள் விடுவித்துக்கொள்ளும் வாய்ப்பினை அவர்கள் பெறுவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

பனைப் பொருட்களையும், அதன் மூலம் தயாரிக்கப் படுகிற பொருட்களையும் கூட்டுறவு தொழில் கூடங்கள் மூலமாகவும் தீக்குச்சி தயாரித்தல் போன்ற தொழில்கள் மட்டு மல்லாமல் பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களும் அதிலே குறிப்பிடத்தக்கவை. அத்தகைய சங்கங்களை அமைக்க தமிழக அரசு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திற்கு ஒரு கோடி ரூபாயை மானியமாக ஒதுக்கியுள்ளது, மேலும் ஒரு கோடி மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. பல்வேறு நிதிவழங்கும் நிறுவனங்களிலிருந்தும் சுமார் 6 கோடி ரூபாய் பெற்று ஆக மொத்தம் இந்த ஆண்டுக்கு 8 கோடி அளவில் மேற்கூறிய பொருளாதார வளர்ச்சித் திட்டங்களையும் தீட்டி, சுமார் ஒரு லட்சம் ஏழை தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு வேலைவாய்ப்புத் தர அரசு முயற்சிகள் எடுக்கும் என்பதை இந்த மன்றத்திலே தெரிவிப்பதிலே நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தொடக்கத்தில் இம்மக்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பும் அடுத்து வறுமைக் கோட்டைக் கடக்கும் வழியும் செய்வதே முதற்கண் நோக்கமாக இருந்தாலும், நமது முதல் அமைச்சரின் இறுதியான, உறுதியான கொள்கை, தாழ்த் தப்பட்ட மக்களை சிறு சிறு தொழில் அதிபர்களாக ஆக்க வேண்டும் என்பதுதான் என்பதையும் தெரிவிப்பதிலே பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும் மற்றொரு முயற்சியிலும் இவ்வாண்டு தமிழக அரசு ஈடுபட திட்டமிட்டுள்ளது. அதாவது, ஆதி திராவிட மக்கள் பல்லாண்டு நிலமற்ற பயிரிடும் கூலிகளாக இருந்து வரும் நிலையினை மாற்றி அவர்கள் நிலச்சுவான்தார்களாக ஆக வேண்டும், என்ற சீரிய நோக்கத்துடன் நிலங்களை பட்டா செய்து வந்துள்ளது. ஆனால் எந்த நல்ல எண்ணத்துடன் அந்தத்திட்டம் அமலாக்கப்பட்டதோ அது பெருமளவில் நிறை வேறாமல் இருப்பதை இன்று பார்க்கிறோம். காரணம் கொடுக்கப்பட்ட நிலங்கள், கல்லும், முள்ளும் பாறைகளும் பாசன வசதியற்றவைகளாகவும் இருந்ததால், அவர்கள் பயிர் செய்ய முடியாத நிலைமையில இருந்ததால் அந்த மக்கள் அன்றாடம் கூலி வேலை செய்து, அதில் கிடைக்கின்ற

[திரு எம். விஜயசாரதி] [1980 ஜூலை, 22

[பிற்பகல் 1-20]

ஊதியத்தை வைத்துத் தன்னையும், தன்னை நம்பியிருக்கின்ற குடும்பத்தையும காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையிலே இருக்கின்றார்கள், அவர்களுக்குப் போதுமான பண வசதி இல்லாத காரணத்தினால் அந்த நிலங்கள் இன்றைய தினம் பயிரிடப்படாமல் இருக்கின்றதை நாம் பார்க்கிறோம். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் பயிரிடப்படாத காரணத்திற்கு அவர்களுடைய பண வசதியைத்தான் நாம் குறிப்பிட வேண்டிய நிலையிலே இன்றைய தினம் இருக்கின்றோம். நிலக்கூலியாக, நிரந்தரத் தன்மையற்ற நிலையிலே மேங்குடி மக்களின் கைப்பொம்மைகளாக இன்றையதினம் இருக்கும் அந்த ஆதி தமிழர்களைச் சிறு சிறு நிலச்சுவான்தாரகளாக ஆக்க வேண்டுமென்ற எண்ணத்தை நிறைவேற்றிட தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவர்வர்கள் இம்மக்களுக்கு என்று ஒரு தனித் திட்டத்தினை இம்முறை அரிசன வீட்டு வசதி வாரியத்தின மூலம் அமலாக்க எண்ணியிருக்கின்றார்கள். கொடுக்கப்பட்ட நிலங்களைச் சீர்ப்படுத்தி, அவற்றிற்குப் பாசன வசதி கொடுத்து, உடனடியாகப் பயிரிடும் வாய்ப்பினை இந்த அரசு செயல்படுத்த இருக்கிறது. முதல் கட்டமாக இந்த வருடம் 5,000 விவசாயக் குடும்பங்களை இத்திட்டத்தின் மூலம் மேம்படுத்த உத்தேசித்திருக்கிறோம்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரின் பதில் முடிந்த பிறகு கேட்கலாம்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, இதைத் தவிர, பொதுத் துறைகளாகிய, கால்நடை, பால் நிறுவனம், தொழில், கூட்டுறவு, விவசாயம், கல்வி, ஊரக வளர்ச்சி, மின்துறை, வீட்டு வசதி, மருத்துவம், போன்றவை மூலமாகவும் சுமார் 80 கோடி வரையிலே தாழ்த்தப்பட்டோர் நலனுக்காகச் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய அரசும் இதற்கென 10 கோடி ரூபாய் ஒதுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் சுமார் 2 இலட்சம் அரிசன குடும்பங்கள் வறுமைக் கோட்டைக் கடப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதனையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

இதேபோல் பழங்குடியினருக்காகவும் இவ்வாண்டு சுமார் மூன்றரை கோடி ரூபாய் அளவில் திட்டங்களைத் தீட்டி, அவர்களுக்குப் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் சுமார் 30,000 பழங்குடி மக்களின் பொருளாதாரத்தையும் மேம்படுத்த முடியும் என்றதோர் நம்பிக்கையும் நமக்கு இருக்கிறது.



1980 ஜூலை, 22] [திரு. எம். விஜயசாரதி]

1980-81-க்கு மாணவ மாணவியர் கல்விக்காக உதவிப் பணமும் ரூபாய் 455 இலட்சமும், அவர்கள் தங்கிப் படிக்கின்ற இல்லங்களுக்காக 297 இலட்சமும், பள்ளிகளுக்காக 140 இலட்சமும், புதிய பள்ளிக்கட்டிடத்திற்காக 202 இலட்சமும், மதிய உணவுக்காக 43 இலட்சமும், கொடுக்கின்ற உடைகளுக்காக 80 இலட்சமும், வீட்டுமனைக்காக 100 இலட்சமும், இணைப்புச்சாலை, மயானத்திற்குச் செல்ல சாலை போன்றவற்றிற்கு 3 இலட்சமும், குடிநீர் வசதிக்காக 30 இலட்சமும் வீடுகள், 'தாட்கோ' மூலம் கட்டித் தருவதற்காக 220 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்காக இவ்வாண்டு எல்லாத் துறைகள் மூலமாகவும் சுமார் 130 கோடி அளவிலே திட்டங்கள் தீட்டப் பட்டுள்ளன. அவற்றின் மூலம் சுமார் 3 இலட்சம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்பளிக்கவும், சுமார் 2 இலட்சம் தாழ்த்தப்பட்ட குடும்பங்களை வறுமைக் கோட்டிலிருந்து மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி அவர்கள் பேசுகின்ற சமயத்திலே, இந்த மாமன்றத்திலே அம்பேத்காரின் சிலையை—மன்னிக்கவேண்டும்—அம்பேத்காரின் படத்தினைத் திறந்து வைக்க வேண்டும் என்ற கருத்தினை வெளியிட்டார்கள். ஏற்கனவே, புரட்சித் தலைவரவர்கள் அண்ணல் அம்கேபத்கார், முத்துராமலிங்கத் தேவர், காயிதே மில்லத் போன்ற பேரறிஞர்களின் படங்களை இந்த மாமன்றத்திலே திறந்து வைக்க முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள் என்பதையும், அதையும் இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்கு முன்னேயே ஏற்படுத்த, திறந்து வைக்க இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதனையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, எழுதுபொருள் அச்சுத் துறையின் பணி சீரும் சிறப்புமாக நடந்து வருகிறதென்பது, இங்கே வைக்கப்பட்டுள்ள குறிப்பிலிருந்து புலனாகும். சென்னை மைய அச்சகம் ஆசியா கண்டத்திலேயுள்ள பெரிய அச்சகங்களில் ஒன்றாகும். அமைப்பில் மாத்திரமன்று. வேலைத் திறனிலும் சிறந்து விளங்குகிறது என்பது நான் இந்தப் பதவியினை ஏற்று கொஞ்ச தினங்களிலே கண்ட உண்மை என நான் கூற விரும்புகிறேன்.

அரசு அச்சகத்தின் கதை, பழைய கதை தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. அங்கே அடிக்கடி கூச்சலும் குழப்பமும் தகராறும் ஏற்படும் சூழ்நிலைகள் இருந்து வந்திருக்கின்றன.

[திரு. எம். விஜயசாரதி] [1980 ஜூலை, 22

எனினும் கடந்த $2\frac{1}{2}$ ஆண்டு காலமாக அங்கே நிலவி வருகின்ற
அமைதியினைப் பார்க்கின்றபொழுது, அதுவே இந்த அரசிற்கு
ஒரு சாதனையாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே நிர்வாகத்திற்கும்
தொழிலாளர்களுக்குமிடையே சுமூகமான உறவு ஏற்பட்டிருக்
கிறது என்பதையும் இவ்வச்சகத்தில் நிலவும் சுமூகமான
சூழ்நிலை இவ்வச்சகம் நல்லமுறையில் நடைபெற வழி செய்
கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
இந்தச் சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்குத் தொழிலாளர்கள்
எப்படி ஒத்துழைப்பு கொடுத்தார்களோ, அதேபோல் நிர்
வாகமும் முழு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும்
தொழிலாளர்களின் நலனில் அக்கறை காட்டியிருக்கிறது என்
பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் துறையிலே மொத்தம் 6,167 தொழிலாளர்கள்
பணிபுரிகின்றார்கள். அவர்களில் 424 பேர்கள் பெண்கள்,
75 பேர் உடல் ஊனமுற்றவர்கள் ஆவர். அச்சகங்களிலே
பணிபுரியும் தொழிலாளர்களின் குறைகளை அவ்வப்பொழுது
நிவர்த்திக்கும் பொருட்டு கடந்த $2\frac{1}{2}$ ஆண்டு காலத்திலே பல
வசதிகள் செய்து கொடுத்திருக்கின்றோம்.

அரசு மைய அச்சகத்தில் அலுவலர்கள், பணியாளர்கள்
இட நெருக்கடியைத் தவிர்க்க ரூ. 5.92 இலட்சம் செலவில்
இரண்டாவது தளம் அமைக்கப்பட்டிருக்கிறது. தண்டையார்
பேட்டையிலுள்ள அரசு அச்சக பணியாளர் குடியிருப்பில் 300
அங்கணங்கள் உள்ளன. அவற்றிலே, தொழிலாளர்களின்
பாதுகாப்பை முன்னிட்டு, குடியிருப்பைச் சுற்றி, ரூ. 2.58
இலட்சம் செலவில் சுற்றுச் சுவர் கட்டும் பணி நடைபெற்று
வருகின்றது. மேலும், ரூ. 1.06 இலட்சம் செலவில் எல்லா
அங்கணங்களுக்கும் மின்விசிறி பொருத்துகின்ற வேலையும் நடை
பெற்று வருகின்றது.

'சி' பிரிவு குடியிருப்புக்கு கம்பி வலைப் பொறுத்த
ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ரூ. 1.07 இலட்சம்
செலவில் ஒரு கிணறும் நீரேற்றுக் குழாய் அறையும் மைய மேல்
நிலை நீர்த் தேக்கத் தொட்டியும் 300 குடியிருப்பிற்கும் தண்ணீர்
விநியோக குழாய்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அரசு மைய அச்சகம், அதன் கிளை அச்சகங்கள் ஆகிய
அனைத்திலும் பணிபுரியும் எல்லா தொழிலாளர்களுக்கும் பன்,
டீ, போன்றவற்றிற்குப் பதிலாக மாதம் ஒன்றுக்கு ரூ. 7.50
வழங்கப்படுகின்றது. ஈயம் உருக்கும் பகுதியில் பணிபுரியும்
பணியாளர்களுக்குப் பணியின் போது ஏற்படும் கெடுதியிலிருந்து



1980 ஜூலை, 22] [திரு. எம். விஜயசாரதி]

பாதுகாப்பு அளிக்கப் பாலுக்குப் பதிலாக ஒரு நாளைக்கு 40 காசுகள் வீதம் வழங்கப்படுகிறது. இந்தப் பணத்தை உயர்த்துவது குறித்து இந்த அரசு இப்பொழுது பரிசீலனை செய்து வருகிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விருத்தாசலத்திலே, இதுவரையிலே வாடகைக் கட்டிடத்திலே இயங்கி வந்த நிர்வாகப் பிரிவு தற்பொழுது சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அச்சுப் பிரிவிற்கான நிரந்தரக் கட்டிடம் ரூ. 17.85 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு முடிவடையும் தருவாயில் இருக்கிறது. இந்த அச்சகத்திற்கு நான்கு தானே இயங்கும் அச்சு இயந்திரங்கள் ரூ. 13 இலட்சம் செலவில் வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

திருச்சி வட்டார அச்சகத்திற்கு நிரந்தரமான கட்டிடம் கட்டுவதற்காகவும் சேலத்தில் அரசு வட்டார அச்சகத்திற்கு நிரந்தரமான கட்டிடம் கட்டுவதற்காகவும் செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் அனுமதியுடன், பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

[பிறபகல் 1.30]

<u>மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :</u>

சென்னை மைய அச்சகத்தில் ரூ. 3.24 இலட்சம் மதிப்புள்ள மோனா டைப் சூப்பர் காஸ்டர் இங்கிலாந்து நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது. காகிதம் வெட்டும் இரண்டு நவீன தானியங்கி இயந்திரங்கள் ரூ. 4 இலட்சம் செலவில் வாங்கி நிறுவப்பட்டு உள்ளது.

இதைத் தவிர ஒரு பார்வை படி இயந்திரமும் 200 தானே எண்ணிடும் பெட்டிகளும், 200 இயந்திர எண்ணிக்கை இடும் பெட்டிகளும், 119 கையால் எண்ணிக்கை இடும் பெட்டிகளும், 4 கம்பி அடிக்கும் இயந்திரங்களும் வாங்கப்பட்டுள்ளன.

வரியச்சுத் தனிப்பிரிவுக்காக ரூ. 44,000 செலவில் ஈய உருக்கு உலைகள் நிறுவப்பட்டுள்ளன. ரூ. 27,000 மதிப்பீட்டில் வெட்டும் இயந்திரத்தின் கத்தியை சாணை பிடிக்கும் இயந்திர வசதி செய்யப்பட்டு உள்ளது.

திருச்சி வட்டார அச்சகத்தில் உள்ள பழைய இயந்திரங்களுக்குப் பதிலாக ரூ. 8·15 இலட்சத்தில் 5 தானே இயங்கும் அச்சு இயந்திரங்கள் பொருத்தப்பட்டு இயங்கி வருகின்றன. புதுக்கோட்டையில் உள்ள கிளை அச்சகத்தில் பழைய இயந்திரங்களுக்குப் பதிலாக ரூ. 4.9 லட்சத்தில் 3 தானியங்கும் அச்சடிக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டு இயங்கி வருகின்றன.

உயர்நீதி மன்ற கிளை அச்சகத்தில் ரூ. 45,000 மதிப்பீட்டில் ஒரு குரோவர் அச்சு இயந்திரம் பொருத்தப்பட்டு, இயங்கி வருகிறது. சென்னை மத்தியச் சிறைச்சாலையில் உள்ள கிளை அச்சகத்தைச் சீரமைக்கும் வகையில் ரூ. 4.05 லட்சம் செலவில் 9 புதிய அச்சு இயந்திரங்களை, பழைய இயந்திரங்களுக்குப் பதிலாக மாற்றியமைக்கக் கொள்முதல் ஆணை கொடுக்கப்பட்டுள்ளது.

விருத்தாசலத்திலே உள்ள வட்டார அச்சகத்திற்கு ஒரு புதிய அச்சு இயந்திரம் ரூ. 45,000 செலவில் வாங்க கொள்முதல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர 4 தானே இயங்கும் அச்சு இயந்திரங்கள் ரூ. 13 இலட்சம் செலவில் வாங்க அரசு அனுமதி வழங்கி உள்ளது. சென்னை மைய அச்சகத்தில் அச்சுக்கோர்க்கும் பிரிவில் 80 மின் விசிறிகளும் இயந்திரப் பிரிவில் 12 மின்விசிறிகளும் ரூ. 60,000 செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

எழுதுபொருள் அச்சுத் துறையில் பணிபுரியும் செய்தியாட்கள், காவற்காரர்கள், மற்றும் மின் பணியாளர்கள் ஆகிய 98 பணியாளர்கள் மழையில் நனையாமலிருக்க மழைக் கோட்டும் தொப்பியும் ரூ. 5,480 செலவில் வாங்கி வழங்கப்பட்டது.

தொழிலாளர்களின் குறைகளைக் களைவதில் அரசு அதிகமாக அக்கறை காட்டுகிறது என்று சொன்னேன். இயக்குநர் அவர்கள் தொழிலாளர்களுக்காக குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி அவர்களின் குறைகளைக் குறைப்பதில் வெகு அக்கறை காட்டி ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்தி தொழிலாளர்கள் உற்சாகத்துடன் பணியாற்ற உதவுவதற்காக அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து அச்சகப் பணியாளர்கள் ஆற்றுகின்ற இந்த அரும்பணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் சார்பிலும் இந்தத் துறையின் சார்பிலும் அந்தத் தொழிலாளர்களுக்கும், இயக்குநர் போன்றவர்களுக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, நல்ல மனதோடு இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று விரும்பி வேண்டிக்கேட்டு, முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ திரு. மாதவன் நாயர் போன்றவர்களுக்குச் சலுகை காண்பித்ததாகச் சொன்னார்கள். அந்த உத்தரவு போடப்பட்டது எப்போது என்பதை நான் சொல்லியாக வேண்டும். அவர் மிகக் கவனமாகவும், உன்னிப்பாகவும் அதை கவனிப்பார் என்று கருதுகிறேன். அந்தத் தேதி 27—3—1980.



திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, 1978-79 ஆம் ஆண்டிலிருந்து 31—3—1980 வரை நிதி ஒதுக்கியிருந்தும் செலவு செய்யாமல் இருந்த தொகை எவ்வளவு? ஏன் செலவழிக்காமல் விட்டார்கள்? விளக்கம் தேவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் விவாதத்தில் கலந்து கொண்டு பேசும்போது இத்தகைய புள்ளி விவரங்களைக் குறிப்பிடலாம். அமைச்சர் பதிலுரை ஆற்றிக் கொண்டிருக்கும் போது இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கக் கூடாது. இப்போது அமைச்சரிடம் சரியான புள்ளிவிவரத் தகவல் இல்லாமல் இருக்கலாம்.

திரு. எல். இளையபெருமாள்; I agree. அடுத்தபடியாக, Department of Personnel and Administrative Reforms கொடுத்த உத்திரவில் எல்லாத் துறைகளிலும் இருக்கிற ரிசர்வ் செய்யப்பட்ட காலியிடங்களைப் பொறுத்த வரையில், அவற்றை Director of Scheduled Castes & Scheduled Tribes அவர்களுக்கு அனுப்ப வேண்டும். ஆனால் அவருக்குத் தெரிவிக்காமல், அரிசன நல இலாகாவிற்குத் தெரிவிக்காமல் பல்வேறு இடங்கள் 'டீ-ரிசர்வ்' செய்யப்பட்டு, கொடுக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் தகுதி வாய்ந்த நபர்கள் இருந்தும் அப்படி டீ-ரிசர்வ் செய்யப்பட்டு கொடுக்கப்பட்டு இருக்கிறது. அப்படி டீ-ரிசர்வ் செய்ய வேண்டிய அவசியம் என்ன? நான் கூட இங்கே கேள்வி கேட்டபோது, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில், செக்ரடேரியட்டைப் பொறுத்த வரையில் 'ப்ரமோஷன்' கமிட்டி இருக்கிறது. அதற்கு முதலமைச்சர் சேர்மனாக இருக்கிறார். சீப் செக்ரடரி இருந்து நடத்துகிறார்கள் என்றார். அப்படி இருந்தும்கூட செக்ரடேரியட்டில் கூட தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கவேண்டிய முறையில் 'ரிக்ரூட்மென்ட் அன்ட் ப்ரமோஷன்' பார் சர்வீஸ் பர்சானலுக்குக் கொடுக்கவில்லை. மத்திய அரசு இது குறித்து கொடுத்துள்ள உத்தரவு இங்கே அமல் நடத்தப்படாமல் இருப்பதைப் பற்றி இந்த அறிக்கையில் விளக்கம் தரப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன என்டதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் 1979-ம் ஆண்டில் உத்தரவிட்டதை இங்கே அமைச்சர் அவர்கள் படித்துக் காண்பித்தார்கள். அந்த உத்தரவை எப்படி நடைமுறைப்படுத்துகிறார்கள் என்பதை நாங்கள் மீண்டும் இப்போது பதவிக்கு வந்துதான் கவனிக்க வேண்டியிருக்கிறது. அவசர அவசரமாக நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டு உங்களுக்குத் தரப்பட்டு இருக்கிறது. திருத்தப்பட்ட மதிப்பீடுகள் தருகிறபோது நிறைய விவரங்கள் தெரியும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த அரிசன நல இலாகா, ரெவின்யூ இலாகாவில் தான் இன்னும் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. ஒரு ஸ்பெஷல் ரெவின்யூ இன்ஸ்பெக்டரை மாற்றவேண்டும் என்று சொன்னால் கூட, மாவட்ட ஆட்சித் தலைவர்தான் மாற்றவேண்டும். ஆகவே ஏதாவது தவறு நடந்தாலும், அந்த ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் தான போகவேண்டும். ஆகவே, அந்தத் துறையை தன்னிச்சையாகச் செயல்படும் ஒரு துறையாக மாற்ற வேண்டும். இப்போது விழுப்புரத்தில் இருக்கிற 'தாட்கோ' அலுவலகத்தை சென்னைக்கு மாற்ற வழி வகை செய்யவேண்டும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கம் தனியார் நடத்துகின்ற தொழிலுக்கு கோடிக் கணக்கான ரூபாய் மானியமாகவும், கடனாகவும் கொடுத்து வருகிறது. அப்படிப்பட்ட தொழிற்சாலைகளிலும் அரிசனங்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. தயவுசெய்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதைக் கருணையோடு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு கருணையோடு அல்ல, கடமையாக அதை எடுத்துக் கொள்ளும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நலத் துறையால் அரிசனங்களுக்குப் பட்டா கொடுப்பதற்காக கோயில் மனைகளை எடுக்கிறபோது சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, ஒட்டு மொத்தமாக அரிசனங்களுக்கு என்று நில ஆர்ஜிதம் செய்கிறபோது எந்த விதமான இடையூறும் இல்லாமல் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்கள் என்று அழைக்கப் படுகின்ற தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனியாக இடம் ஒதுக்க வேண்டும் என்று இந்த அரசு விரும்பவில்லை. மற்ற மக்களோடு சேர்ந்து வாழும் வாய்ப்பை உருவாக்கவேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கை. அதற்கு ஏற்ப இந்த அரசு செய்யும்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு தலைவரவர்களே, மாதவன் நாயர் நியமனம் பற்றிச் சொன்னேன்..........





[பிற்பகல் 1.40]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முடிந்துவிட்டது. 27-3-1980 அப்பாயிண்ட்மென்ட் முடிந்துவிட்டது.

திரு. ஜே. எஸ். இராசு : அந்தக் காலத்திலே நியமனம் செய்யப்பட்டு இருந்தாலும் கூட அது முறைதான் என்பதை நம்முடைய முதலமைச்சர் நிச்சயம் அறிவார். அதற்கு முடிவு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மன்னிக்கவும். தொடக்கத்தில் இதைப்பற்றிய ஒரு நியதியை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இத்துறையிலே பணியாற்றும் அதிகாரிகளுக்குத் தற்சமயம் உதவி இயக்குநர் பதவிக்குமேல் உயர்வதற்கு வழியில்லை. மேலும் முதுநிலை மற்றும் தகுதி வாய்ந்த உதவி இயக்குநர்கள் உள்ளதால் தகுதி வாய்ந்த அதிகாரிகள் பதவி உயர்வு பெறுவதற்கு வாய்ப்பு செய்து கொடுப்பது நல்லது என்று கருதப்படுகிறது. எனவே உதவி இயக்குநராக 5 வருடங்கள் பணியாற்றிய அச்சுத்துறை அதிகாரிகளில் ஒருவரைத் தேர்வு செய்து நிலையான துணை இயக்குநர் பதவிகளைப் பொது அதாவது தனித் துறை, கூறுகிறபடி நிறுத்தி வைத்து தற்காலிக துணை இயக்குநர் பதவிகளை தோற்றுவித்து அதில் அவரை நியமனம் செய்ய வேண்டுமென்ற இயக்குநர் கருத்துரையை இந்தத் துறை ஏற்றுக் கொள்கிறது. இப்போது நியமனம் ஏற்பட்ட பிறகு அதை வைத்துக் கொண்டு நாங்கள் எச்சரிக்கையாகப் பணியாற்றினோம். அப்போது என்னுடைய குறிப்பில் நான் குறிப்பிட்ட போது இவர்களுடைய கோரிக்கை நியாயமானது ஆகும் ' ஆனால் தகுதியுள்ள ஒருவரை அந்தப் பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சரே தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும் என்று 23-1-1980-ல் நான் மீண்டும் கையெழுத்து இட்டிருக்கிறேன். ஆனால் அதற்குப் பிறகு 22-2-1980-ல் அங்கே உத்தரவிட்டிருக்கிறார்கள். அது கையெழுத்திடப்பட்டிருப்பது 27-3-1980ல்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவரவர்களே, ஒரே ஒரு விளக்கம். நான் வேறு ஒன்றும் கேட்க விரும்பவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாசித்த குறிப்பு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாதவன் நாயர் நியமனம் முடிந்துவிட்டது. அதோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். அவர் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார். தமிழர்கள் வேலை இல்லாமல் அதிகம் பேர்கள் இருக்கிறார்கள் ; அதை இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று ஒரு வாக்கியத்தையும் சேர்த்தார். தயவுசெய்து இதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இப்படிச் சொல்வதால் **மட்டும்**

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1980 ஜூலை 22

இந்த அரசு யாருக்கோ தயவு தாட்சண்யம் காட்டுகிறது. சலுகை காட்டுகிறது என்ற நம்பிக்கையை மக்கள் மத்தியிலே ஏற்படுத்தி விடமுடியாது என்பதை மட்டும் இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவரவர்களே, தமிழர்களுக்கு வேலையில்லை என்று நான் குறிப்பிடவில்லை. இவர்களுடைய நியமனத்தால் தமிழ் அதிகாரிகள் தொல்லைக்கு ஆளாகிறார்கள் என்று குறிப்பிட்டேனே தவிர, தமிழர்களுக்கு வேலை இல்லை என்று குறிப்பிடவில்லை.

மண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

## கோரிக்கை எண். 31.

திருவாளர்கள் சு. பாலன், என். எஸ். வி. சித்தன், கு. ரமணி, எம். ஆறுமுகம், க. பாரமலை ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—'' மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள், முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 20,07,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

## கோரிக்கை எண். 44.

திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளபெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— '' மானியக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள் அச்சுத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,83;54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.



1980 ஜூலை, 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.45 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

53. தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு வரி விதிப்புப்பெறாத நிலங்களின்மீது ரயத்துவாரி வரி விதிப்புச் சட்டத்தில் (தமிழ் நாடு சட்டம் 31/1973) விதிகள் செய்வது குறித்து, வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 15-4-1980ஆம் தேதி யிடப்பெற்ற 341 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு, வரி விதிப்புப் பெறாத நிலங் களின் மீது ரயத்துவாரி வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1973) 22(2) பிரிவின்கீழ் பேரவையின் முன் வைக்கப் பெற்றது].

54. 1979ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகம்—மதுரை-காமராஜர் பல்கலைக் கழகச் (இரண்டாவது திருத்த) (தமிழ்நாடு சட்டம் 8/1980) சட்டம் செயலுக்கு வரும் தேதி குறித்து, கல்வித் துறையின் 22—3—1980 ஆம் தேதியிடப் பெற்ற 545ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு, [1923 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகச் (தமிழ்நாடு சட்டம் 7/1923) சட்டத்தின் 50(2) பிரிவு மற்றும் 1965ஆம் ஆண்டு மதுரை-காமராஜர் பல்கலைக் கழகச் (தமிழ்நாடு சட்டம் 33/1965) சட்டத்தின் 58(2) பிரிவு ஆகியவற்றின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

55. தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு பதிப்பு எழுத்தர் உரிம விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 18—12—1979 ஆம் தேதி யிடப்பெற்ற 1941 ஆம் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 26/1908) 52 ஆவது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவு மற்றும் 89.அ பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*87. கோரிக்கை எண். 28-க்கான சமுதாய வளர்ச்சி, ஊராட்சி வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1980-81 (தமிழ் ஆங்கிலம்).

*88. கோரிக்கை எண். 44 (எழுதுபொருள் மற்றும் அச்சு)க்கான எழுதுபொருள் அச்சுத் துறையின் கொள்கை விளக்க ஆய்வுரை, 1980-81 (தமிழ், ஆங்கிலம்).

@89. கோரிக்கை எண். 31-க்கான அரிசன-பழங்குடி மக்கள் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1980-81(தமிழ், ஆங்கிலம்).

@90. கோரிக்கை எண். 31க்கான அரிசன-பழங்குடி மக்கள் நலத்துறை பற்றிய இணைப்புகள், 1980-81 (தமிழ், ஆங்கிலம்).

@91. 1980-81 ஆம் ஆண்டில் அரிசன-பழங்குடி மக்கள் நலத்துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

@92. 1980-81-ஆம் ஆண்டில் சமுதாய வளர்ச்சி கோரிக்கையைச் சார்ந்த நிதி இணைப்பு வெளியீடு (தமிழ், ஆங்கிலம்).

---

*19—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

@21—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.



## இணைப்பு - I.

[341-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### அரிசன - பழங்குடி மக்கள் நலத் துறை.

### மானியக் கோரிக்கை எண் 31.

### கொள்கை விளக்கக் குறிப்பு (1980-81)

'' அரிசன - பழங்குடி மக்கள் நலன் '' என்ற தலைப்பின்கீழ் 1980-81 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண் 31—இல் ரூபாய் 2,007.37 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்ய ஒப்புதல் அளிக்குமாறு இச்சட்டமன்றப் பேரவையினை வேண்டுகிறேன்.

இம்மாநிலத்திலுள்ள அரிசன பழங்குடியினரின் மக்கட் தொகை 76 இலட்சமாகும். இது இம்மாநிலத்தின் மொத்த மக்கட் தொகையில் 18 சதவீதமாகும். இதில் சுமார் 83 சதவீத மக்கள் கிராமப்புறங்களிலும் மீதி 17 சதவீத மக்கள் நகர்ப்புறங்களிலும் வசித்து வருகின்றனர். இம்மாநிலத்தில் அரிசன நல முன்னேற்றத்துக்காக அரசு கொண்டுவந்துள்ள பலமுனைத் திட்டங்களின் கீழும், கல்வி, வேளாண்மை கால்நடை பராமரிப்பு கூட்டுறவு, தொழில்கள் போன்ற பல பொதுத் துறைகளின் மூலம் ஏனைய பொதுமக்கள் பெரும் நலனையும் பெறுகின்றனர். மேலும், அரிசன-பழங்குடியினர் நலத் துறையினர் செயல்படுத்தும் திட்டங்களின் வாயிலாகவும் அரிசன மக்கள் பலன் பெறுகிறார்கள்.

பழங்குடி மக்களின் நலனுக்காகப் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் தனித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கல்வி, பொருளாதார முன்னேற்றம், சுகாதாரம், வீட்டு வசதி, ஏனைய திட்டங்களின் கீழுள்ள இயல்பான துறைத் திட்டங்களுடன் இந்தத் திட்டங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இதைத்தவிர, பழமையான மலைச் சாதியினர், பரவலாக வாழும் பழங்குடியினர் ஆகியோர்களின் முன்னேற்றத்திற்காக இரண்டு புதுத் திட்டங்கள் இருக்கும்.

பழங்குடியினர் துணைத் திட்டம் செயல்பட்டதால், பழங்குடி மக்களின் மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1980-81ஆம் ஆண்டில், பழங்குடி மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 331.60 இலட்சமாக உயர்த்தப் பட்டுள்ளது.

அரிசனங்கள், பழங்குடியினர் ஆகியோரின் நலனுக்காக அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

அரிசன-பழங்குடியினர் நலக் கோரிக்கையின் கீழ் '' மூலதனச் செலவு '' என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 418.79 இலட்சம் ஒதுக்கியிருப்பதுடன் 1980-81 ஆம் ஆண்டிற்கான அரிசன-பழங்

குடியினர் நலத் திட்டத்திற்காக ''கடன்களும் முன் பணங்களும்'' என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 41.66 இலட்சமும், ''கொத்தடிமை'' என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 0.30 இலட்சமும் ''சாட்டியது'' என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 0.62 இலட்சமும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன நிதி ஒதுக்கங்கள் அனைத்தும் கணக்கிற் கொள்ளப்பட்டால் அரிசன-பழங்குடி மக்கள் நலத் திட்டங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கம் ரூபாய் 2,468.84 இலட்சமாகும்.

அரிசன-பழங்குடியினரின் நலனை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைக் கீழ்க்காணும் மூன்று பெருந் தலைப்புகளின்கீழ் வகைப்படுத்தலாம் :—

(1) கல்வி.

(2) வேலை வாய்ப்பும், பொருளாதார முன்னேற்றமும்.

(3) பொதுச் சுகாதாரமும், வீட்டு வசதியும்.

1. கல்வி—

ஆண்டுதோறும் அரிசன-பழங்குடி மக்களின் நலத்திற்கென ஒதுக்கப்படும் நிதியில் பெரும்பகுதி கல்விக்காகச் செலவிடப்படுகிறது. அரிசனங்கள்-பழங்குடியினர் அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. (1) | அரிசன-பழங்குடியினர் நலனுக்கான மொத்த நிதி ஒதுக்கம். (2) | அரிசனங்கள்-பழங்குடியினரின் கல்விக்காக மட்டும் ஒதுக்கப்பட்ட தொகை. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1978-79 .. .. .. | 1,694.99 | 1,009.16 |
| 1979-80 .. .. .. | 1,941.70 | 1,164.71 |
| 1980-81 .. .. .. | 2,468.25 | 1,607.80 |

<u>படிப்புதவித் தொகைகள்.</u>

1976-77ஆம் ஆண்டு இறுதி வரையில், 1 முதல் 11ஆம் வகுப்பு வரையில் படிக்கும் அரிசன-பழங்குடி மாணவர்களுக்கும், கிறித்துவர்களாக மதம் மாறிய அரிசன மாணவர்களுக்கும்,



(மெட்ரிக் படிப்புக்கு முந்திய படிப்புக்கு) புத்தகச் செலவுக்கும், சிறப்புக் கட்டணங்களுக்கும், படிப்புதவித் தொகை பணமாக வழங்கப்பட்டது. தேவையானபோது படிப்புதவித் தொகையுடன் தேர்வுக் கட்டணமும் பணமாகவே வழங்கப்பட்டது. மேற்கூறிய படிப்புதவித் தொகையை வழங்குவதற்கு பெற்றோர், காப்பாளரின் ஆண்டு உயரளவு வருமான வரையறை ரூபாய் 3,000 ஆகும். 1977-78ஆம் ஆண்டிலிருந்து 4 முதல் 10ஆம் வகுப்பு வரையில் படிக்கும் அரிசன-பழங்குடியினர், கிறித்துவர்களாக மாறிய அரிசன மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரது ஆண்டு வருமானத்தைக் கருத்திற் கொள்ளாமல் எல்லாப் பாடப் புத்தகங்களையும் இலவசமாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. (ஏனெனில் 1 முதல் 3 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்குக் கல்வித் துறை இலவசமாக புத்தகங்களையும் எழுது பலகைகளையும் வழங்குகிறது.) சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு, மாணவர் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணத்தை செலுத்துவது, தேர்வுக் கட்டணங்களைச் செலுத்துவதும் குறித்த சலுகை, மாணவர்களது பெற்றோரின் காப்பாளரின் வருமானத்தை கருத்திற் கொள்ளாமலேயே, அரிசனங்கள், பழங்குடியினர், கிறித்துவர்களாக மாறிய அரிசனங்கள் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு நீட்டிக்கப்பட்டது. இச்சலுகைகள் வழங்கப்படுவதன் மூலம், 1979-80-ல் 4—10 ஆம் வகுப்பு வரையில் படிக்கும் அரிசன, பழங்குடி, கிறித்துவர்களாக மாறிய மாணவர்கள் 7.75 இலட்சம் பேர் பயனடைந்தனர். இதனைத்தவிர, 6—10 ஆம் வகுப்பு வரையில் படிப்பவர்களும், பள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ள மாணவர் இல்லங்களில் தங்கியிருப்பவர்களுமான அரிசன, பழங்குடி, கிறித்துவர்களாக மாறிய அரிசன மாணவர்களுக்குத் தங்கிப் பயில்வதற்கான உதவித் தொகையும் தொடர்ந்து வழங்கப்படும்.

மெட்ரிக் வகுப்பிற்குப் பிந்திய வகுப்புகளில் படிக்கும் அரிசனங்கள், பழங்குடியினர், கிறித்துவர்களாக மாறிய அரிசனங்கள் ஆகிய மாணவர்களனைவருக்கும் அவர்களது பெற்றோரின் காப்பாளரின் வருவாயைக் கருத்திற் கொள்ளாமல் படிப்புக் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது. இவ்வாறாக, அரிசன பழங்குடிச் சிறாருக்கு எல்லா நிலைகளிலும் இலவசமாகக் கல்வி கற்பிக்கப்படுகிறது. பள்ளி இறுதிப் படிப்பு வரையில் இலவசமாகப் கல்வி பெறுவதுடன், இலவசமாக எல்லாப் பாடப் புத்தகங்களையும் இம்மாணவர்கள் பெறுவர்.

அரிசன பழங்குடி வகுப்பைச் சார்ந்த (மதம் மாறியவர்கள் உட்பட) மாணவர்களுக்கு இல்ல மாணவர் படிப்புதவித் தொகை பகல் நேர மாணவர் படிப்புதவித் தொகை, தொடரா இன, மானியங்கள் ஆகியவை, பள்ளி மேல்நிலை படிப்பு கலைப் படிப்பு அறிவியற் படிப்பு, தொழிற் படிப்பு ஆகிய படிப்புகளுக்கு தொடர்ந்து வழங்கப்படும். 1977-78, 1978-79, 1979-80

(1980 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31 ஆம் நாள் வரை) ஆகிய ஆண்டுகளில் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த மாணவர் களின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட படிப்புதவித் தொகை ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன ;—

| ஆண்டு. | தமிழ்நாடு அரசு படிப்புதவித் தொகை. | | | இந்திய அரசுப் படிப்புதவித் தொகை. | |
|---|---|---|---|---|---|
| | பள்ளியில் பயில்வோர். | கல்லூரியில் பயில்வோர். | தொகை. (ரூபாய் இலட்சத்தில்). | கல்லூரியில் பயில்வோர். | தொகை. (ரூபாய் இலட்சத்தில்). |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| அரிசன மாணவர்கள். | | | | | |
| 1977-78 .. | 610,070 | 4,930 | 83.48 | 18,050 | 153.67 |
| 1978-79 .. | 669,688 | 3,819 | 102.46 | 18,254 | 153.02 |
| 1979-80 .. | 774,965 | 5,887 | 160.67 | 22,890 | 213.41 |
| பழங்குடி மாணவர்கள். | | | | | |
| 1977-78 .. | .. | .. | .. | 225 | 2.52 |
| 1978-79 .. | 3 | .. | 0.01 | 218 | 1.97 |
| 1979-80 .. | .. | 1 | 0.01 | 69 | 0.74 |

குறிப்பு.—(1) இந்திய அரசு படிப்புதவித் தொகை திட்டத் தின் கீழ் 1978-79-ஆம் ஆண்டு இறுதியில் ஏற்பட்ட அளவுக்கு மேற்பட்ட செலவுத் தொகையை மட்டுமே இந்திய அரசு தருகிறது. எஞ்சிய தொகை பொறுப்பேற்ற செலவாக மாநில அரசால் ஏற்கப்படுகிறது.

(2) இந்திய அரசு படிப்புதவித் தொகைக்கான ஆண்டு வருமான வரம்பு ரூ. 9,000 மாநில அரசு படிப்புதவித் தொகைக் கான ஆண்டு வருமான வரம்பு ரூ. 3,000 அரிசனங்கள் பழங்குடி மக்களுக்காக வாழ்க்கைப்படி விகிதத்தையும் இந்திய அரசு உயர்த்தியுள்ளது. மாணவ விடுதிகளில் உள்ள மருத்துவ, பொறி யியல் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு 1978ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து மாதமொன்றுக்கு ரூ. 60 வழங்கப் படுகிறது.



(3) புத்த மதத்திற்கு மாறிய அரிசன மாணவர்களும் இந்திய அரசு படிப்புதவித் தொகையைப் பெறத் தகுதியுடை யவர்களாவர்.

## காந்தியடிகள் நினைவு படிப்புதவித் தொகை.

கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு வழக்கமாக, அளிக்கப் படுகின்ற படிப்புதவித் தொகையுடன் ''காந்தியடிகள் நினைவு சிறப்புக் கல்வி உதவித் தொகை'' தனிப்பட்ட முறையில் அளிக்கப் படுகிறது.

## தகுதி வழிவகைப் பரிசுத் திட்டம்.

பழங்குடியினர், அரிசனங்கள், கிறித்தவர்களாக மதம் மாறிய அரிசனங்கள் ஆகியோரின் பயனுக்காக, தகுதி வழிவகைப் பரிசுத் திட்டம் ஒன்று ''காந்தி நினைவுப் பரிசு''த் திட்டத்தைப் போன்று 1976-77ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுகிறது.

## செயலூக்கத் திட்டம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் முதலாவதாகவும், இரண்டாவதாகவும் வெற்றி பெறும் அரிசன மாணவர்கள் (ஆண்கள்) இருவரும், கிறித்துவர்களாக மதம் மாறிய அரிசன மாணவர்கள் (ஆண்கள்) இருவரும் தெரிந்தெடுக்க பட்டு அவர்கள், கல்லூரிக் கல்வியைத் தொடருவதற்கு உதவி செய்யப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 80 சிறப்புக் கல்வி உதவிப் பணம் அளிக்கப்படுகிறது. அம்மாணவர்கள், மாணவர்கள் இல்லத்தில் தங்க வேண்டு மென்ற நிபந்தனையோ வருமான வரையறையோ இத்திட்டத்தின் கீழ் இல்லை. 10+2+3 என்ற கல்வி முறை கொண்டு வரப் பட்ட பின்னர், பத்தாம் வகுப்பில் முதலாவதாகவும், இரண்டாவ தாகவும் வெற்றி பெறும் மாணவர்களுக்கும் இத்திட்டமானது 1978-79 ஆம் ஆண்டிலிருந்து நீட்டிக்கப்பட்டது.

1979-80ஆம் ஆண்டிலிருந்து அரிசன மாணவிகள், கிறித்துவர் களாக மாறிய அரிசன மாணவிகள், பழங்குடி மாணவ மாணவியர் ஆகியோருக்கும் இத்திட்டத்தின் பயன் அளிக்கப்படுகிறது.

''கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு படிப்புதவித் தொகைகள் வழங்கும் திட்டம்'' என்னும் பெயர், கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு பரிசுகள் என்று மாற்றப் பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுத் தேர்வில் மிக அதிக மான மதிப்பெண், அதற்கு அடுத்த அதிகமான மதிப்பெண் பெறும் இரண்டுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இப்பரிசு

வழங்கப்படுகிறது. இப்படிப்புதவித் தொகை முழுவதும் (இப் பரிசுத் தொகை முழுவதும்) மாணவர் இல்லங்களில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு, அவர்களது உணவுக் கட்டணம், மாணவரில்ல வாடகைக் கட்டணம் ஆகியவற்றைக் கழித்துக் கொள்ளாமல் வழங்கபபடுகிறது.

இந்நோக்கத்திற்காக 1980-81ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.48 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

## தகுதிக்கென்று வழங்கப்படும் தனி மானியம்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 60 சதவீதம் மதிப்பெண்களும் அதற்கு அதிகமாகவும் பெற்றுள்ள அரிசனப் பழங்குடியினர், கிறித்துவ மதத்திற்கு மதம் மாறிய அரிசன மாணவர் ஒவ்வொரு வருக்கும் தகுதி மானியமாக ரூ. 300 ஒவ்வொரு ஆண்டும் வழங் கப்பட்டு வருகிறது. இதேபோல் கல்லூரி புகுமுக வகுப்புத் தேர்வில் முதல் வகுப்பில் தேறிய அரிசன பழங்குடி, கிறித்துவ மதத்திற்கு மாறிய அரிசன மாணவர்களுக்கு ரொக்க மானியம் 1979-80 ஆம் ஆண்டு வரையில் வழங்கப்பட்டது. புகுமுக வகுப்புப் படிப்பை நீக்கிவிட்டு மேல்நிலைக் கல்வி படிப்பைக் கொண்டு வந்ததன் விளைவாக 1980 மார்ச்சு/ஏப்ரல் திங்களில் நடைபெற்ற மேல்நிலைக் கல்வி படிப்பின் 2ஆம் ஆண்டிற்குரிய தேர்வில் முதல் வகுப்பில் தேரிய அரிசனங்கள் பழங்குடியினர், கிறித்துவர்களாக மாறிய அரிசனங்கள் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர் ஒவ்வொருவருக்கும் தகுதிக்கென்று ரூ. 300 மானியம் வழங்குவதற்குரிய செயற் குறிப்பு 1980-81 ஆம் ஆண்டிற்காக பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அடையாள நிதி ஒதுக்கம் ரூ. 1,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கடன் படிப்புதவித் தொகைகள்.

பொறியியல், வேளாண்மை, மருத்துவம் முதலிய தொழிற் கல்வி கற்கும் மாணவர்கள் அவர்களுக்கு அளிக்கப்படும் படிப்பு உதவித் தொகையைவிட அதிகமான தொகை செலவிட வேண்டி யுள்ளது. எனவே, அரசு உரிய முறையில் ஆய்வு செய்த பிறகு, நிதியுதவி தேவையான மாணவர்களுக்குக் கடன் வழங்குமாறு ஆணை பிறப்பித்துள்ளது. பட்டக் கல்வி பயிலும் மாணவர் களுக்குக் கடன் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம் 1974-75ஆம் ஆண்டிலிருந்து நீட்டிக்கப்பட்டது. 1978-79ஆம் ஆண்டில், 3,917 அரிசனங்கள்—பழங்குடியினருக்கு படிப்புதவித் தொகைகளுக்கு ஒப்புதல் வழங்க ரூ. 28.47 இலட்சம் செலவும், கிறித்துவர்களாக மதம் மாறிய அரிசனங்கள் 144 பேருக்கு ரூ. 0.88 இலட்சம் செலவும் ஏற்பட்டது. 1979-80ஆம் ஆண்டில் அரிசன-பழங் குடியினரை சேர்ந்த 4,912 மாணவர்களுக்கு ரூ. 36.09 இலட்சமும், கிறித்துவர்களாக மாறிய அரிசன



வகுப்பைச் சேர்ந்த 153 மாணவர்களுக்கு ரூ. 0.89 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. அரிசனங்கள் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு 28.85 இலட்சம் ரூபாயும் கிறித்தவர் களாக மாறிய அரிசன வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு 0.80 இலட்சம் ரூபாயும் 1980-81ஆம் ஆண்டில் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ், நீரடி வசதியற்ற கழிப்பிடங்களைச் சுத்தம் செய்தல், தோல் பதனிடுதல், தோல் உரித்தல் ஆகிய தொழில் களில் ஈடுபட்டுள்ள அரிசனங்கள், பழங்குடியினர், அரிசனங்கள் அல்லாத வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்திய படிப்பைக் கற்பதற்காக வழங்கப்படுவதற்கு 60 படிப்புதவித் தொகைகளை மத்திய அரசு இம்மாநிலத்திற்கு ஒதுக்கியது. இத்திட்டம் 1980-81 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். அதற்காக ரூ. 19,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## அரிசன பழங் குடியினர் நலப் பள்ளிகள்.

(அ) அரிசனங்கள்.—இம்மாநிலத்தில் அரிசன நலப்பள்ளிகள் 942 உள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | தொடக்கப்பள்ளிகள் .. .. .. | 840 |
| 2. | நடுநிலைப்பள்ளிகள் .. .. .. | 79 |
| 3. | உயர்நிலைப்பள்ளிகள் .. .. .. | 19 |
| 4. | மேல்நிலைப்பள்ளிகள் .. .. .. | 4 |
| | மொத்தம் .. | 942 |

இப்பள்ளிகளில் அரிசன, பழங் குடியினர் மற்றும் ஏனைய வகுப்பைச் சேர்ந்த சுமார் 1.62 இலட்சம் மாணவர்கள் பயிலு கின்றனர்.

1979-80 ஆம் ஆண்டில் 23 அரிசன நல மேல்நிலை உயர் நிலைப் பள்ளிகளுக்கும், 3 பழங்குடியினர் உயர் நிலைப்பள்ளி களுக்கும் நூலக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

## (ஆ) பழங்குடியினர்.

இத்துறையால் பழங்குடியினர் நலத்திற்காக 104 பழங்குடியினர் பள்ளிகள் நடத்தப்பட்டன. அவற்றின் விவரம் பின் வருமாறு :—

| | |
|---|---|
| (1) பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு தொடக்கப்பள்ளிகள் .. | 87 |
| (2) பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு நடுநிலைப்பள்ளிகள் .. | 11 |
| (3) பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு உயர்நிலைப்பள்ளிகள் .. | 3 |
| (4) பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசு மேல் நிலைப்பள்ளிகள் .. | 2 |
| (5) பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் சேர்ந்தில்லாத பள்ளி .. .. .. | 1 |
| மொத்தம் .. | 104 |

மேற்சொன்ன இந்த மாணவர் இல்லங்களுடன் கூடிய பள்ளிகளில் இலவசமாக உணவு வழங்குதல் என்னும் திட்டத்தின்கீழ் 6,338 மாணவர்கள் பயனடைகிறார்கள்.

1979-80 ஆம் ஆண்டில் தென் ஆற்காடு மாவட்டம், கோமுகி அணை என்ற ஊரிலுள்ள பழங்குடி மாணவர் இல்லத்துடன் கூடிய அரசு நடுநிலைப்பள்ளியை உயர் நிலைப்பள்ளியாக உயர்த்துவதற்கு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. இங்கு உணவு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 225-லிருந்து 400ஆக அதிகரிக்கப்பட்டது.

1979-80 ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறையிலுள்ள பழங்குடியினர் மாணவர் இல்லத்துடன் கூடிய அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளியாகவும், உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், 1979-80 ஆம் ஆண்டில், தென்ஆற்காடு (5 பள்ளிகள்), சேலம் (4 பள்ளிகள்), தருமபுரி (1 பள்ளி) ஆகிய பகுதிகளில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் துணைத்திட்டத்தின் கீழ், பழங்குடியினருக்காக மாணவர் இல்லத்துடன் கூடிய அரசுப்பள்ளிகள் 10 தொடங்கப்பட்டன. 1979-80ஆம் ஆண்டில், சேலம் மாவட்டம், அரனூத்து மலையில் உள்ள பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் தொகை 60-லிருந்து 120ஆக **உயர்த்தப்பட்டது**.



1980-81ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில், பேச்சிப்பாறை, பத்துகாணி, மணலோடை ஆகிய இடங்களிலும் சேலம் மாவட்டத்தில், ராமன் பட்டியிலும் உள்ள பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய அரசுபள்ளிகளில் தங்கி உணவுண்ணும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கூடுதலாக்க கருதப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில், மணலோடையில் உள்ள பழங்குடியினர் மாணவர் இல்லத்துடன் கூடிய பள்ளிக்காக கட்டிடம் கட்டுவதற்கும் கருதப்பட்டுள்ளது. இதற்காக, 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1980-81-ல் செங்கல்பட்டு மாவட்டம் நாகல்கேணியிலும், தென்னாற்காடு மாவட்டம் சிங்கனூரிலும் உயர்நிலைப்பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 8.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அரிசன பழங்குடியினர் நலத்துறையினரால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு புதிய திட்டமாக ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் கட்டிட, நூல் நிலையம் இன்ன பிற வசதிகள் 1980-81-ல் செய்து கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1980-81-ல் சென்னை அரிசன பழங்குடியினர் நல இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த கல்விப் பிரிவில் மாவட்டக் கல்வி தனி அதிகாரிகளையும் பள்ளிகள் துணை ஆய்வாளர்களையும் நியமனம் செய்வதன் மூலம் அவற்றை வலுப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது; இப்பணிக்காக வரவு-செலவு மதிப்பீட்டில் ரூ. 1.02 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## மாணவ, மாணவியருக்கு உடைகள் வழங்குதல்.

அரிசன பழங்குடியினர் நலப் பள்ளிகளில் அல்லது அரசினர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் அனைவருக்கும் ஒவ்வோர் ஆண்டும் இரண்டு ஜதை உடைகள் வழங்கப்படுகின்றன.

4 முதல் 10 வரையில் உள்ள வகுப்புகளில் பயிலுகின்றவர்களும் அரசினர் அரிசன நல மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலுபவர்களுமான மாணவர்களுக்கு இரண்டு ஜதை உடைகள் வழங்கப்படுகின்றன. அரிசன பழங்குடியினர் நலப்பள்ளிகளில் 1 முதல் 8 வரையில் உள்ள வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் ஒவ்வோர் ஆண்டும் ஒரு ஜதை **உடை வழங்கப்படுகிறது.**

## கல்விச் சுற்றுலா.

மாணவர்கள் தங்களது பொது அறிவை வளர்த்துக் கொள்வ தற்கு வசதி அளிக்கும் வண்ணம் அரிசன பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவர்களை முக்கியமான இடங்களுக்குக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்வதற்கான திட்டம் 1969-70 ஆம் ஆண்டிலிருந்து செயல் படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் 50 மாணவர்களைக் கல்வி சுற்றுலாவில் அழைத்துச் செல்வதற்கு 1977-78 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இதற்காக 1980-81 ஆம் ஆண்டில் அரிசன பழங்குடி மாணவர்களுக்காக 0.24 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## நண்பகல் உணவு.

அரிசன நலப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது. மாணவர்கள் பள்ளிக்குத் தவறாது வருகை தர அவர்களை ஊக்குவிப்பதும், பொருளீட்டுவதற்காக மாணவர்களை அவர்களது பெற்றோர்கள் வேலை பார்க்க அழைத்துச் செல்வதைத் தவிர்ப்பதும் நண்பகல் உணவு அளிப் பதன் நோக்கமாகும்.

''கேர்'' நிறுவனத் திட்டத்தின் கீழ் கல்வித் துறை ஒரு கல்வியாண்டில் 100 நாட்களுக்கு ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 90 கிராம் உணவுத் தானியம் வழங்கி வருகிறது. எஞ்சி யுள்ள 120 நாட்களுக்கு நுகர் பொருள் வாணிபக் கழகத்தி லிருந்து கொள்முதல் செய்யப்படும் அரிசியைக் கொண்டு மாணவர் களுக்கு நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. அரிசி உணவு வழங்கப் படும்(120 நாட்கள்) நாட்களில், மாணவர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் நண்பகல் உணவின் அளவு பின்வருமாறு :—

| | ரூ. | காசு. |
|---|---|---|
| 80 கிராம் .. .. .. .. | 0 | 15 |
| சுவையூட்டும் பொருட்கள் காய், கறிகள் .. | 0 | 05 |
| எரிபொருள் .. . .. .. | 0 | 01 |
| மொத்தம் .. .. . | 0 | 21 |



''கேர்'' நிறுவனம் வழங்கும் உணவுக்கான செலவு 0.29½ காசாகும். அதன் விவரம் வருமாறு—

| | ரூ. | காசு. |
|---|---|---|
| 90 கிராம் உணவு தானியங்கள் .. .. | 0 | 21½ |
| 6 கிராம் எண்ணெய் .. .. .. | 0 | 04½ |
| சுவையூட்டும் பொருட்கள், எரிபொருட்கள் | 0 | 03½ |
| மொத்தம் .. | 0 | 29½ |

குறிப்பு.—அரசு ஒரு மாணவனுக்காக வழங்கப்படும் அரிசி யின் அளவை 90 கிராமிலிருந்து 100 கிராமாகவும் எண்ணெயின் அளவை 7 கிராமாகவும் அதிகரித்துள்ளது.

அரிசனநலப் பள்ளிகள் 942-ல் பயிலும் மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்குவதற்காக 1980-81 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 42.66 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

பயிலும் மாணவர்களில் 70 சத வீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற அரிசன நலப் பள்ளிகள் அல்லாத பிற பள்ளிகள் சுமார் 350-ல் அரிசனக் குழந்தைகளுக்கு நண்பகல் உணவு அளிக்கும் பொறுப்பு சென்னைப் பள்ளிக் கல்வி இயக்குனரிடம் ஒப்படைப்பட்டுள்ளது.

## மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் எழுது பலகைகள் முதலியவற்றை வழங்குதலும் பள்ளி களுக்குச் சாதனங்கள் வழங்குதலும்.

இம்மாநிலத்தில் அரிசனங்களுக்காகவும் பழங்குடியினருக்காக வும், 1,046 பள்ளிகளை இத்துறை நடத்தி வருகிறது. இக்கல்வி யாண்டில் அரிசன -பழங்குடியினர் நலப்பள்ளிகள் திறக்கப்பட்ட பிறகு, இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு, அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் அதனைக் கருதிப்பாராது அவர்களுக்குப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் எழுது பலகைகள் ஆகியவை இலவசமாக வழங்கப் பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 1979-80 ஆம் ஆண்டில் 1,68,000 மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக 1980-81—ம் ஆண்டில் 26.97 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட் டுள்ளது.

## ஆசிரியர்களுக்கான இல்லங்கள்.

அரிசனப் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்
களுக்குச் சமவெளிகளில் 15,080 ரூபாய் செலவிலும், மலைப்
பகுதிகளில் 17,000 ரூபாய் செலவிலும் வீடுகள் கட்டிக்கொடுக்கப்
படுகின்றன. இதற்காக 1980-81 ஆம் ஆண்டில் 3.56 இலட்சம்
ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதில் ஆசிரியர்கள்
குடியிருப்புகளைப் பராமரிப்பதற்கான செலவும் அடங்கும்.

## குழந்தைகள் காப்பகம்.

அரிசனக் குடியிருப்புகளில் 50 குழந்தைகள் காப்பகங்களை
ஏற்படுத்த 1979-80 ஆம் ஆண்டில் அரசு கட்டளையிட்டது.
குழந்தைகள் காப்பகம் ஒவ்வொன்றிலும் 70 குழந்தைகள் இருப்
பர். பணிபுரியும் மகளிரின் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும்
பொறுப்பினை அவர்களிடமிருந்து ஏற்றுக்கொள்வதும், வளர்ந்து
வரும் வயதில் அவர்களுக்கு தூய சுகாதாரமான நல்ல பழக்க
வழக்கங்களைக் கற்பிப்பதும், பள்ளிப் படிப்பைத் தொடராமல்
பள்ளிகளிலிருந்து இடையே நின்றுவிடுவதைக் குறைப்பதற்கு
உதவும் வண்ணம் அக்குழந்தைகளுக்குப் பள்ளி செல்லும்
பழக்கத்தை உருவாக்குவதும் இதன் நோக்கமாகும். 3-5 வயது
துள்ள குழந்தைகள் இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்.
பள்ளி செல்லும் வயதடையும் நிலைக்கு முன்னரே அக்குழந்தை
களுக்குச் சரிவிகித உணவு அளிப்பதும் இதன் நோக்கமாகும்.
1980-81 ஆம் ஆண்டில் குழந்தைகள் காப்பகங்கள் 50-ஐ ஏற்
படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக வரவு-செலவுத்
திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 7.48 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்
பட்டுள்ளது.

## தட்டச்சு சுருக்கெழுத்துக் கல்வியில் பயிற்சி அளிப்பதற்கான திட்டம்.

தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சி பெற்ற அரிசன பழங்குடி
மாணவர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லையாதலால், மேற்
சொன்ன பதவிகளில் அவர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள
இடங்களை நிரப்ப இயலவில்லை. இதனைக் கருத்திற்கொண்டு
தனியார் வணிகக்கல்வி நிறுவனங்களில் அரிசன மாணவர்களுக்
கும் பழங்குடி மாணவர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கான சிறப்புத்
திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்தது. இத்திட்டத்தின்படி
900 மாணவர்களுக்கு தட்டச்சுபயிற்சியும், 450 மாணவர்களுக்கு
சுருக்கெழுத்துப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதற்காக
1980-81 ஆம் ஆண்டில் ரூ. 4.38 இலட்சம் நிதி ஒதுக்கப்
பட்டுள்ளது.



## சட்டப் பட்டதாரிகளுக்கு நிதி உதவி.

சட்டத் தொழிலை மேற்கொள்ள அரிசன, பழங்குடியினரைச் சேர்ந்த சட்டப் பட்டதாரி மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு, அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு கொண்டுவந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சட்டத்தொழிலை மேற்கொள்ள விரும்புகிற ஐந்து சட்டம் பயின்ற பட்டதாரிகளுக்கு (அரிசனங்கள், பழங்குடியினர்) 1974-75 முதல் அரசு கீழ்க்கண்ட நிதி உதவியை அளிக்கிறது:—

(1) வழக்குரைஞராகப் பதிவு செய்துகொள்வதற்கான கட்டணம், வழக்குரைஞர்கள் அறைக்கான வாடகைக் கட்டணம் முதலியவை வகையில் ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 750 கடன்.

(2) புத்தகங்கள், மேசை, நாற்காலி முதலியவை வாங்க ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 500 உதவித் தொகை.

இத்திட்டத்தின்கீழ் 1979-80 ஆம் ஆண்டில் ஐந்து பட்டதாரிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டிலிருந்து உதவித் தொகை ரூபாய் 500 லிருந்து 750 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சித் திட்டம்.

கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ், பொருளாதாரம், அரசியல், கணிதம் போன்ற பாடங்களில் சிறப்புப்பயிற்சி அளிக்கும் பொருட்டு, சென்னை மாநகரில், மாணவர்களுக்காக ஒரு நிலையமும், மாணவிகளுக்காக ஒரு நிலையமும், ஆக இரண்டு நிலையங்கள் இரு திங்களுக்குச் செயல்பட்டன. இந்த வசதி மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. 1976-77 ஆம் ஆண்டில் கல்லூரிகள் அனைத்திற்கும் (189) இந்தப் பயிற்சி வசதி மூன்று திங்களுக்கு அளிக்கப்பட்டது. இத்திட்டம் 1978-79 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படவில்லை. இப்பயிற்சிக்கான அளவில் ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ. 1,000 ஒரு மொத்தத் தொகை கொடுக்கப்படும். 1979-80-லும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. இதற்காக 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## மாணவர் இல்லங்கள்.

பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு மாணவர் இல்ல வசதிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன, தேவை, நிதிநிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் புதிய மாணவர்

இல்லங்கள் திறக்கப்படுகின்றன. தனியார் மாணவர் இல்லங்
களும் அரசினரால் ஒவ்வோராண்டும் படிப்படியாக எடுத்துக்
கொள்ளப்பட்டு வருகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ளவீதத
தில் அரிசன, பழங்குடி நல மாணவர் இல்லங்களில் மாணவர்கள்
சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

அரிசன மாணவரில்லங்கள்

| | சதவிதம். |
|---|---|
| அரிசனங்கள், பழங்குடியினர் .. .. | 75 |
| பிற்பட்ட வகுப்பினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தினர் .. .. .. | 20 |
| முன்னிலை வகுப்பினர் .. .. .. | 5 |

பழங்குடியினர் மாணவர் இல்லங்கள்.

| | |
|---|---|
| பழங்குடியினர் .. .. .. .. .. | 60 |
| அரிசனங்கள் .. .. .. .. | 30 |
| பிற்பட்ட வகுப்பினரும், குற்றபட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தினரும் .. .. | 10 |

1978-79 ஆம் ஆண்டில் அரிசனங்களுக்கென்று 615 மாணவர்
இல்லங்கள் இருந்தன. இவற்றில் மொத்தம் 38,639 மாணவர்கள்
இருந்தனர். பழங்குடியினரைப் பொறுத்து மட்டில் 19 மாணவர்
இல்லங்கள் உள்ளன. இதில் மொத்தம் 845 மாணவர்கள்
உள்ளனர். 1979-80 ஆம் ஆண்டில் அரிசனங்களுக்காக
16 புதிய மாணவர் இல்லங்கள் திறப்பதற்குக் கட்டளையிடப்
பட்டுள்ளது. அரிசனங்களுக்காக 15 புதிய மாணவர் இல்லங்
களும், பழங்குடியினருக்காக ஒரு புதிய மாணவர் இல்லமும்
(நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஆனைப் பள்ளம்) திறப்பதற்கு
1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் நிதியொதுக்கம்
செய்யப்பட்டுள்ளது.

புதிய மாணவரில்லங்கள் ஏற்படுத்தும் பொருட்டும், 650
மாணவரில்லங்களைப் (அரிசனங்களுக்கு 631, பழங்குடியினருக்கு
19) பராமரிக்கும் பொருட்டும் 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 297.23
இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சென்னை
மாநகரிலுள்ள அரசு அரிசன மாணவர் இல்ல மாணவர்களுக்கு
ஆண்டொன்றுக்கு, மாணவர் ஒருவருக்கு ரூ. 2 என்ற வீதத்தில்



விளையாட்டுப்பொருட்கள் வழங்குவதற்கான செலவிற்கு அரசு ஒப்புதல் அளித்து வருகிறது. எனவே, 1979-80 ஆம் ஆண்டு முதல், வெளியூர்ப் பகுதிகளில் அரசு மாணவர் இல்லங்களிலுள்ள அரிசன-பழங்குடியினர் மாணவர்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

அரிசன மாணவர்கள் தங்கியுள்ள அரசு இல்லங்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு உணவுக் கட்டண வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| மாணவர்களின் இல்லங்களின் வகை. | மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ஆகும் கட்டணம். |
|---|---|
| (1) | (2) |
| | ரூ. |
| 1. சென்னை நகரிலுள்ள அரசுக் கல்லூரி மாணவ-மாணவியர் இல்லங்கள், சென்னை மாநகரிலுள்ள அரசுத் தொழிற் பயிற்சி மாணவர் இல்லங்கள் .. .. .. | 80 |
| 2. வெளியூர்களிலுள்ள அரசுக் கல்லூரி மாணவ-மாணவியர் இல்லங்கள், அரசுத் தொழில் பயிற்சி மாணவர் இல்லங்கள் .. .. | 65 |
| 3. உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான அரசு இல்லங்கள் .. .. .. .. | 45 |

அரசு இல்லங்களிலுள்ள மாணவர்களுக்குக் கட்டுப்பாட்டு விலைகளில் இன்றியமையாப் பொருள்களை வழங்குதல்.

இத்துறை நடத்திவரும் இந்த இல்லங்கள் அனைத்திற்கும் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாட்டு விலைகளில், நுகர் பொருள் வாணிபக் கழகம் மூலமாகவும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வாங்கப்படுகின்றன.

மாணவர் இல்லங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல்.

அறுநூற்று ஐம்பது (650) அரசு இல்லங்களில் (அதாவது அரிசன மாணவர்களுக்கு 631, பழங்குடி மாணவர்களுக்கு 19) 127 மாணவர் இல்லங்கள் (அரிசன மாணவர்களுக்கு 115, பழங்குடி மாணவர்களுக்கு 12) அரசு கட்டிடங்களில் அமைந்துள்ளன.

[1980 ஜூலை 22

அரிசன பழங்குடி மாணவர்களுக்கான இல்லங்களைக் கட்டும்
பணியை அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மேற்கொண்
டுள்ளது. அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் இதுவரை 71இல்
லங்களை (20பிற்பட்ட வகுப்பினருக்கும் 51 அரிசனங்களுக்கும்)
கட்டி முடித்துள்ளது. 1978-79 ஆம் ஆண்டு முடிய
தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திடம்
ரூ. 291.32 இலட்சம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1979-80 ஆம்
ஆண்டு 85 அரிசன மாணவர் இல்லங்கள் கட்டுவதற்காக
அனுமதிக்கப்பட்ட ரூ. 204.69 இலட்சம் அரிசன வீட்டு வசதி
வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

1980-81 ஆம் ஆண்டில் அரிசன மாணவர் இல்லங்கள் கட்டு
வதற்காக ரூ. 201.27 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1979-80
ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிப்பாறை
யில் பழங்குடியினர் தங்கிப் பயிலும் இல்லங்கள் கட்டுவதற்காக
ரூ. 2.66 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் பத்துக்காணியில் ரூபாய் 2.08
இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 40 பழங்குடியினர் மாணவியர்
தங்குவதற்கான ஒரு அரசு பழங்குடியினர் மாணவியர் இல்லம்
கட்டும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்காக ரூபாய்
0.50 இலட்சம் 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட
மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பகுதி நேரச் சிற்றாசிரியர்கள்.—அரசினர் உயர்நிலைப்பள்ளி
அரிசன மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்கள்
தேர்வுகளைச் சிறப்பாக எழுதத் துணைபுரியும் பொருட்டு பகுதி
நேரச் சிற்றாசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். இத்தகைய
பகுதி நேர சிற்றாசிரியர்கள் பதவிகள் 248 உள்ளன. இவை
களைத் தவிர (அதாவது 248 பகுதி நேரச் சிற்றாசிரியர்கள்
பதவிகள் தவிர) கல்லூரி மாணவர் இல்லங்களுக்காக 3 பகுதி
நேரச் சிற்றாசிரியர்கள் பதவிகளும், சிதம்பரத்திலுள்ள நந்தனார்
அரசு மாணவர்-மாணவியர் இல்லங்களுக்காக 5 பதவிகளும்
உள்ளன. அக்டோபர் முதல் நாள் தொடங்கி ஓர் ஆண்டில்
ஆறு மாதங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படுவர். மேல்நிலைக்
கல்வி புதியதாகத் தொடங்கப்பட்டதால் 9, 10 ஆவது வகுப்பு
களில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 15-ம் அதற்கு மேற்
பட்டும் உள்ள உயர்நிலைப் பள்ளி-மாணவர் இல்லங்களில் பகுதி
நேரச் சிற்றாசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

தனியார் இல்லங்களுக்கான உதவித் தொகை.—அரிசனங்கள்-
பழங்குடி மாணவர்களுக்கான 729 அரசு இல்லங்களைத் தவிர,
அரிசன மாணவர்களுக்காக 41 இல்லங்களையும் (உதவித்
தொகைப் பெறுபவை) பழங்குடி மாணவர்கள் தங்கிப் பயிலும்
இல்லங்கள் இணைந்த 4 பள்ளிகளையும் தொண்டு நிறுவனங்கள்
நடத்தி வருகின்றன.



1980 ஜூலை 22]

உதவித் தொகை பெறும் இல்லங்களுக்கு உணவு மானியத் தொகையை 1978, டிசம்பர் திங்களில் உயர்த்தியுள்ளது. சென்னை மாநகரிலுள்ள மாணவர் இல்லங்கள், மற்றும் மாவட்ட, வட்ட தலைமை இடங்களிலுள்ள உதவித் தொகை பெறும் அனைத்து இல்லங்களுக்கும் ஒவ்வொரு மாணவருக்கான கட்டணங்களும் மாதம் ஒன்றுக்கு ரூ. 25-லிருந்து ரூ. 35-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. ஏனைய இடங்களிலுள்ள அனைத்து மாணவர் இல்லங்களுக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 25லிருந்து ரூ. 30-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. தனியாரால் நிர்வகிக்கப்படும் 4 பழங்குடி மாணவர் தங்கிப் பயிலும் இல்லம் இணைந்த பள்ளிகளுக்கான மானியம் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 25-லிருந்து ரூ. 36-க்கு 1977-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதலே உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கென 1980-81-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ8.42 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## II. வேலை வாய்ப்பும் பொருளாதார முன்னேற்றமும்.

இந்திய அரசு கொடுத்துள்ள வழிகாட்டிக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு, 1980-81 ஆம் ஆண்டிற்கு அரிசனங்களுக்காச் சிறப்புக் கூட்டுத் திட்டம் ஒன்றை அரசு தயாரித்துள்ளது. இதன்படி பல்வேறு வளர்ச்சித் தலைப்புகளின் கீழ் பொதுத் துறையில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கத்தில் சுமார் 18 சதவீதப் பயன் அரிசனங்கள்-பழங்குடியினருக்கு கிட்ட வேண்டும். 1980-81 ஆம் ஆண்டில் அரசின் பல்வேறு துறைகளால் அரிசனங்கள் பழங்குடியினருக்காக சுமார் 80 கோடி ரூபாய் இவ்வாறு செலவிடப்படும் என்று தோராயமாக மதிப்பிட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டில், அரிசனங்கள், பழங்குடியினர் வகுப்புகளைச் சேர்ந்த சுமார் 2 இலட்சம் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டு வரப்படவேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும்.

இந்நாட்டில் உள்ள அரிசனங்கள், நலிவுற்ற பிரிவினர் ஆகியோரை மேம்படுத்துவதற்காக தனியாக 100 கோடி ருபாயை மத்திய அரசு உதவித் தொகையாக வழங்கத் திட்டம் ஒன்றை இந்திய அரசு தயாரித்துள்ளது. இத்தொகை, சிறப்புக் கூட்டுத் திட்டத்தின்கீழ் மாநில அரசுகள் தயாரிக்கும் திட்டங்களுக்கிணங்க மாநிலங்களுக்குப் பிரித்தளிக்கப்படும். இந்திய அரசின் தனி உதவியைப் பெறுவதற்கு சிறப்புக் கூட்டுத் திட்டத்தை மீண்டும் திருத்தி உருவாக்குவது பற்றிய கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

அரிசனங்கள்-பழங்குடினர் வகுபபுக்களைச் சேர்ந்தவர்களின் நபர்வாரி வருமானத்தை அதிகரிக்க அரிசனங்கள் வளர்ச்சிக் கழகம் ஒன்றை அமைக்க, இந்திய அரசு கருத்துத்

தெரிவித்துள்ளது. அமைக்கக் கருதியுள்ள இக்கழகத்தின் பங்கு மூலதனத்தில் இந்திய அரசு 49 சதவீதத்திற்கு தொகை வழங்க சம்மதித்துள்ளது. மாநில அரசு 51 சதவீதத்திற்கு வழங்க வேண்டும். இம்மாநிலத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் ஒன்றை இந்த அரசு ஏற்கனவே அமைந்துள்ளது. பல்வேறு பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை மேற்சொன்ன கழகம் மேற்கொள்ளும். மாநில அரசின் பங்கு மூலதனமாக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைப் போன்று ஒரு கோடி ரூபாய் இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அரிசனங்கள், பழங்குடியினருக்கு வேலை வாய்ப்பளிக்க வசதி செய்வதோடு மட்டுமல்லாமல், அவர்கள் வறுமைக் கோட்டைக் கடக்க இயலுவதற்கு வகை செய்யும் நோக்கத்தோடு பொருளா தார வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுதத பல்வேறு நிதி உதவி நிறுவனங்களிலிருந்து அத்தொகையை இரண்டு அல்லது மூன்று முறை பெறக் கருதப்பட்டுள்ளது. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றை ஏற்படுத்துவதன் மூலமும், அரிசனங்கள்-பழங்குடியினரில் தகுதி வாய்ந்தவர்களைத் தெரிந்தெடுப்பதன் மூலமும் அவர்களைத் தொழில் துறையில் ஈடுபடுத்துவதன் மூலமும் புதிய வகைத் தொழில் முனைவர்களை ஏற்படுத்துவது அரசின் நோக்கமாகும். இம்முயற்சி அரிசனங்கள், பழங்குடியினரின் பொருளாதார நிலையை மேம்படுத்தக் கருதுவதோடு மட்டுமல்லாது, அவர்களிடையே மிகவும் தேவையான தன்னம்பிக்கையையும் பாதுகாப்பு உணர்வையும் வளர்க்கவும் கருதுகிறது.

அரிசனங்கள், பழங்குடியினருக்குரிய தொழிற் கூடம்.—உடனடியாக விற்பனையாகும் தொலைக்காட்சிப் பட்டிப்பெட்டிகள், மின் பொருட்கள் முதலியன போன்ற பல்வேறு பொருட்களை தயாரிக்கும் சிறு தொழில்களில், அரிசனங்கள்-பழங்குடியினரை ஈடுபடுத்துவது என்பது அத்தகைய திட்டங்களில் ஒன்றாகும். இதுபோல் தோல் அதைச் சார்ந்த பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்ய திண்டுக்கல்லிலும், இராணிப் பேட்டையிலும் தொழில் பிரிவுகள் ஏற்படுத்தப்படும். பனைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காகப் பல தொழில் கூட்டுறவுச் சங்கங்களை தொடங்குவதன் மூலம் அரிசனங்களுக்கு தவறாது வேலை வாய்ப்பு அளிக்க வகை செய்யக் கருதுவதோடு இடைத் தரகர்களின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும் கருதப்பட்டுள்ளது. தீக்குச்சி தயாரிக்கும் தொழிற்கூடங்கள், வழக்கமாக இத்தொழில் நடைபெறும் இடங்களில் அல்லாது, பிற பகுதிகளில் அமைக்கவும், செயலிழந்த அரிசன மக்கள்பால் கூட்டுறவு சங்கங்களை புதுப்பித்தல், தமிழ்நாடு பால் பண்ணை மேம்பாட்டுக் கழகத்தில் இணைந்துள்ள சங்கங்களில் அரிசன உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், புதிய சங்கங்களை துவக்குதல் போன்ற மும்முனைத் துரித திட்டம் உருவாக்கி செயல்படுத்தவும் அரசு முனைந்துள்ளது. இத்தகைய பல்வேறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதன் மூலம் சுமார் ஒரு



லட்சம் அரிசனக் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு முயற்சிக்கும், தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் பொறுப்பில் சிறு தொழில் துறையில் அரிசனங்கள்-பழங்குடியினருக்கென்றே பல தொழில் பிரிவுகளைத் தொடங்குவதே இவ்வரசின் நோக்கமாகும். முன்னர் தெரிவித்ததைப் போன்று, தொடக்கத்தில் அரிசனங்கள்-பழங்குடியினருக்கு வேலை வாய்ப்புக்கு வகை செய்தல்: ஆனால் இறுதியாக அவர்களைச் சிறிய தொழிலதிபர்களாக ஆக்குவது ஆகியவையே அரசின் நோக்கமாகும்.

நில மேம்பாட்டுத் திட்டம்

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு தற்போது தரிசாக இருக்கும் நிலங்களைச் சீர் திருத்தி, கிணறுகள் வெட்டி, அவற்றிற்கு மின் இணைப்புக் கொடுத்து, அவற்றினின்று மகசூல் அதிகரிக்கவும், மேலும் அவற்றினை அதிக இலாபகரமாக ஆக்கவும் ஒரு கருத்துரு அரிசன வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தினரின் தீவிர கவனத்தில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின் முதற் கட்டமாக ஏறத்தாழ 5,000 குடும்பங்கள் பயனடையும் என்று உத்தேசிக்கப்படுகிறது.

உழவு மாடுகள் வாங்கவும் பாசனக் கிணறுகள் தோண்டவும் உதவித் தொகை.—அரிசனங்கள், பழங்குடியினரின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் பொருட்டு உழவு மாடுகள், விதைகள், பிற வேளாண்மைக் கருவிகள் ஆகியவற்றை வாங்குவதற்காக ஒவ்வொருவருக்கும் 600 ரூபாய் என்ற வீதத்தில் நிதி உதவி அளிக்கப்படுகிறது. பாசன கிணறுகளுக்கான உதவித் தொகையைப் பெருக்கும் நோக்கத்துடன் அரசு பாசனக் கிணறு வெட்டுவதற்காக உதவித் தொகை அளிக்கும் திட்டத்தை மாற்றி அமைத்துள்ளது. அதன்படி, கிணறு வெட்டுவதற்காகும் மொத்தச் செலவில் 1/3 பாகம் உதவி தொகையாகவும், 2/3 பாகம் நிலவள வங்கியிலிருந்து பெறும் கடனாகவும் கொள்ளப் படும். 1980-81-ல் இதற்காக அரிசனங்களுக்கு ரூ. 7.50 இலட்சமும் பழங்குடியினருக்காக ரூ. 1.95 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவை தவிர இதே காரியத்திற்காக கிறித்துவர்களாக மாறிய அரிசனங்களுக்கு 1.00 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

தோட்டக்கலை.—சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லி மலை, சின்னக்கல்ராயன் மலை, பெரியகல்ராயன் மலை ஆகிய இடங்களில் (தோட்டக்கலையை மேம்படுத்துவதற்கு இந்த இடங்களில் தட்ப-வெட்ப நிலை சாதகமாக உள்ளது) வாழும் பழங்குடி மக்களின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு சென்னை வேளாண்மைத் துறை இயக்குநரின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் திட்டம் ஒன்று 1960 முதல் செயல்படுத்தப்

பட்டு வருகிறது. இதற்கு அரிசன-பழங்குடியினர் நல நிதி
யிலிருந்து நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி
பழங்கள், காய்கறிகள் முதலியவற்றை வெற்றிகரமாகவும், ஆதா
யம் தரத்தக்க வகையிலும் வளர்ப்பதற்காக பழங்குடியினருக்கு
நடைமுறை ஆலோசனை, அறிவுரை, தொழில்-நுட்ப உதவி
ஆகியவை அளிக்கப்படுகின்றன. பழங்கள், நறுமணப் பொருள்
கள், காய்கறிகள் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கான பொருள்கள்
அவர்களுக்கு இலவசமாக கொடுக்கப்படுகின்றன.
இத்திட்டத்தின் கீழ் சுமார் 8,088.56 ஏக்கர்கள் (1980, மார்ச்
வரை) பரப்பளவில் இவை பயிரிடப்பட்டுள்ளன. இதுவரை
1980-81-ல் ரூபாய் 3.14 இலட்சம் ஒதுக்கபபட்டுள்ளது. இதற்காக

<u>கருவிகள் இலவசமாக வழங்குதல்.</u>—கருமார், தச்சர், தையல்
தொழில்கள் மற்றும் ஏனைய 18 தொழில்களில் தொழில் நுட்பப்
பயிற்சிப் பெற்ற அரிசனங்கள், பழங்குடியினர்கள், கிறித்துவர்க
ளாக மாறிய அரிசனங்கள் ஆகியவர்களுக்கு கருவிகள், சாதனங்கள்
ஆகியவற்றை இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து
செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1980-81-ம் ஆண்டில் இத்
திட்டத்திற்காக, ரூ. 3.67 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

<u>சிறு வணிகக் கடன்.</u>—சைக்கிள் கடைகள், ஓட்டல்கள்
(சிற்றுண்டிச்சாலைகள்), மளிகைக் கடைகள், முதலியன
போன்ற முப்பத்தொன்று (31) தொழில்களை நடத்துவதற்
காக அரிசனங்களுக்கு சிறு வணிகக் கடன் வழங்கும் திட்டம்
1968–69-லிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்
றது. கடன் வரம்பு, தொழிலைப் பொறுத்து ரூ. 125லிருந்து
ரூ. 15,000 வரை வழங்கப்படுகிறது.

1980–81-ம் ஆண்டில் அரிசனங்களுக்காக ரூ. 10.00
இலட்சமும், கிறித்துவர்களாக மாறிய அரிசனங்களுக்காக
ரூ. 1.30 இலட்சமும் பழங்குடியினருக்காக ரூ. 0.50 இலட்ச
மும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## <u>பயிற்சி நிலையங்கள்.</u>

வேலை வாய்ப்பு-பயிற்சித் துறையிலிருந்து மாதம் ஒன்
றுக்கு 25 ரூபாய் பெறும் அரிசன வகுப்பு பயிற்சியாளர்களுக்கு
அரிசன நல நிதியிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 20 கூடுதலாக
பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஏனைய
அரிசன மாணவர் அனைவருக்கும் ரூ. 45 பயிற்சி உதவித்
தொகையும், பழங்குடி மாணவர்களுக்கு ரூ. 82.50 ரூபா
யும் வழங்கப்படுகின்றன. இத்தொகை அரிசன நல நிதியிலிருந்து
சரிக் கட்டப்படுகிறது. 1980–81ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்
திற்காக ரூ. 13.85 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
இத்திட்டம் சென்னை வேலை வாய்ப்பு பயிற்சித் துறை
இயக்குநரால் செயல்படுத்தப்படுகிறது. இந்தியத் தொழில்



நுட்ப நிறுவனப்பயிற்சி நிலையகங்ளில் பயிற்சி பெறும் அரி
சனங்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி உதவித்தொகையை
உயர்த்துவதை பாகம் II திட்டமாக அரசு பரிசீலித்து வருகிறது
இதற்காக 1980–81 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில்
ரூ. 2.95 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

<u>வானொலி-தொலைக்காட்சி இயந்திரவியல் பயிற்சி.</u>—
சென்னை மாநகரத்தில் உள்ள அரிசனங்கள் அரிசன பழ
குடி வகுப்பைச் சேர்ந்த பெண்கள் 7 பேருக்கு அவர்களது
தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் முதல் முறையாக
1978–79-ம் ஆண்டில் வானொலி-தொலைக்காட்சி இயந்திர
வியல் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறும் 5 பேருக்கு
1979–80-ல் ரூ. 3,500 செலவிடப்பட்டுள்ளது. 1980–81-ல்
ரூ. 0.30 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

<u>கூட்டுறவு.—(அ) அரிசனங்கள்.</u>—தொழில் துறையில்
அரிசனங்கள் விரைந்து முன்னேற குடிசைத் தொழில் கூட்டு
றவுச் சங்கங்கள் பயிற்சி உற்பத்தி நிலையங்கள், பணி நிலையங்
கள் பலவற்றை அரசு நிறுவியுள்ளது. இத்துறையில் போதிய
தொழில் நுட்ப அறிவைப் பெற்றுள்ள தொழில் வணிக இயக்குநர்
சமூக நலத்துறை இயக்குநர், கைத்தறி துணி இயக்குநர், தமிழ்
நாடு கதர்-கிராம தொழில்கள் வாரியம் ஆகியவர்களால் நடத்தப்
படுகின்றன. இந்த நிலையங்களையும் சங்கங்களையும் நடத்து
வதற்குத் தேவையான செலவுத் தொகை அரிசன-பழங்குடியினர்
நலத்துறையால் ஏற்கப்படுகிறது.

<u>(ஆ) பழங்குடியினர்.</u>—சுரண்டல்காரர் பிடியிலிருந்து பழங்
குடியினரை விடுவிக்கும் பொருட்டும் அவர்களின் காடுபடு
பொருள்களை விற்பனை செய்து தங்களின் பொருளாதார
நிலையை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டும், இம்மாநிலத்தில்
பழங்குடியினருக்காக ஐந்து கூட்டுறவு விற்பனைச் சங்கங்
களையும் நான்கு வனத் தொழிலாலளர் ஒப்பந்தக் கூட்டுறவுக்
சங்கங்களையும், நான்கு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும்
அரசு ஏற்படுத்தியுள்ளது. நிதியுதவி அளிக்கும் நிறுவனங்
களின் மூலம் நியாயமான வட்டி வீதத்தில் பழங்குடியினருக்கு
மாற்றுக் கடன் வசதி அளிக்கும் பொருட்டு பழங்குடியினர் வாழும்
பகுதிகளில் பெரிய அளவிலான பல் நோக்குக் கூட்டுறவுச் சங்
கங்கள் ஒன்பது ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பெரிய அளவிலான இந்த பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
உற்பத்திக்கான கடன் வசதிகள் மட்டுமின்றி நுகர்வோர் கடன்
வசதிகளையும் அளிக்கின்றன. வேளாண்மை பயிரிடு பொருட்
களை வழங்குவது குறித்து அளிக்கப்பட்ட உதவித்தொகையை
சரிக்கட்டுவதற்கும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிட
மிருந்து கடன் அளிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

[1980 ஜூலை 22

## பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள்.

வேலை குறைவாக உள்ள காலங்களில், ஏழை அரிசன
மக்களுக்கு உதவி செய்தலையும், வேலை வாய்ப்பளித்தலையும்
நோக்கமாகக் கொண்டு பால் வழங்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள பால் வழங்கு
கூட்டுறவுச் சங்கங்களில் அரிசன உறுப்பினர் ஒவ்வொருவருக்கும்
ஒரு கால் நடைக்கு ரூ. 1,500 என்ற வீதத்தில் நிதியுதவி அளிக்கப்
படுகிறது. அவர், ஒவ்வொரு கால்நடைக்கும் அரிசன
நிதியிலிருந்து ரூ. 500 உதவித்தொகையும், நாட்டுடைமையாக்
கப்பட்ட வங்கியிடமிருந்து ரூ.1,000 கடனும் பெறத் தகுதியுடைய
வராவார். ஒவ்வொருவரும் இரண்டு கால்நடைகள் மட்டுமே
வாங்க மேற் கூறிய உதவித் தொகையைப் பெறுவதற்குத்
தகுதியுடையவராவார். இந்நோக்கத்திற்காக 1980-81 ஆம்
ஆண்டில் அரிசனங்களுக்கும் கிறித்துவ மதத்திற்கு மாறிய அரி
சனங்களுக்கும் ரூ. 11.48 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

<u>பயிற்சியும், வேலை வாய்ப்பும்.</u>—தமிழ்நாடு அரசுப் பணி
யாளர் தேர்வாணைக் குழு தேர்விற்குப் பயிற்சியளித்தல்—
அரிசனங்கள், பழங்குடியினர், மதம் மாறிய அரிசன வகுப்பைச்
சேர்ந்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரிக்கும் நோக
கத்துடன், ஒவ்வொரு ஆண்டும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்
தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் தொகுதி 4 பணிக்கான
போட்டித் தேர்வு எழுத விண்ணப்பித்துள்ளவர்களுக்குச் சிறப்புப்
பயிற்சி அளிக்கப்படுகிறது. தொகுதி 4 பணிக்கான போட்டித்
தேர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் 5 மாதங்களுக்குப் பயிற்சி
அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு மாத
மொன்றுக்கு ரூ. 45 பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது.
1976-77ஆம் ஆண்டு வரை இம்மாநிலத்தில் 15 நிலையங்கள்
செயல்பட்டன. 1977, 1978, 1979ஆம் ஆண்டுகளில் தொகுதி
4 பணிக்கான தேர்வை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்
வாணைக் குழு நடத்தாததால் இத்திட்டம் 1977-78லும்,
1978-79லும், 1979-80லும் செயல்படுத்தப்படவில்லை. இருப்
பினும் 1980-81ஆம் ஆண்டிற்கு ரூ. 1.55 இலட்சம் நிதி ஒதுக்கப்
பட்டுள்ளது.

<u>அகில இந்தியப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத
அரிசன பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு
தேர்விற்கு முன்பு பயிற்சி அளிக்கும் நிலையம்.</u>—ஐ.ஏ.எஸ்.,
ஐ.பி.எஸ். போன்ற அகில இந்திய பணிகளுக்கான போட்டித்
தேர்வுகள் எழுத அரிசன, பழங்குடி மாணவர்களுக்குத் தேர்விற்கு
முன்பு பயிற்சியளிக்கும் நிலையம் 1979-80ஆம் ஆண்டிலும்
தொடர்ந்து செயல் பட்டது. இப்பயிற்சிக்கு இந்தியா முழுவதும்
உள்ள மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்நிலையத்
துடன் இணைக்கப்பட்ட மாணவர் இல்லம் ஒன்றும் உள்ளது.



1980 ஜூலை 22]

பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு உணவுக் கட்டணமாக ரூ. 100 வழங்கப்படுகின்றது. அகில இந்திய பணிகளுக்கான தேர்வுகளில் தேறிய ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 மானியம் அளிக்கப்படுவதாக கடந்த ஆண்டு கொண்டு வரப்பட்ட இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டுவருகிறது. 1979 ஆம் ஆண்டில் இந்நிலையத்திலிருந்து 30 மாணவர்கள் தேர்வு எழுதினர். மூவர் தேர்வில் தேறியுள்ளனர். அவர்கள் இறுதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## III. பொதுச் சுகாதாரமும், வீட்டு வசதியும்

எங்கெல்லாம் அரசு புறம்போக்கு நிலங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் இந்த நிலங்கள் மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக அரிசனங்களுக்கு வீட்டு மனைகளாக வழங்கப்படுகின்றன. அரசு நிலங்கள் இல்லாதபோது, 1894ஆம் ஆண்டு நிலங்களை கையகப் படுத்துதல் சட்டத்தின் கீழ், தனியார் நிலங்களை கையகப்படுத்தி, அரிசனங்களுக்கு வீட்டு மனைகளாகக் கொடுக்கப்படுகிறது.

வரையறுக்கப்பட்ட அதிகாரிகளுக்கு அதிகாரங்களை வழங்கு வதன் மூலம் நிலம் கையகப்படுத்துதல் முறையை விரைவுபடுத்த வும் தவணைகளில் இழப்பீட்டுத் தொகையை வழங்கி அரசின் நிதிச் செலவைப் படிப்படியாக ஏற்க தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு அரிசன நலத் துறை திட்டங்களுக்காக நிலம் கையகப் படுத்துதல் சட்டத்தையும் அதன் கீழ் விதிகளையும் 24-9-1979 ஆம் நாளிலிருந்து செயல்திறன் அளித்து அரசு சட்டம் ஒன்றை இயற்றி உள்ளது. குடும்பம் ஒன்றிற்கு வழங்கப்படுகின்ற ஒவ் வொரு மனையின் அளவு 3 சென்ட் முதல் 5 சென்ட் வரை இருக்கும். அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்கு 1949ஆம் ஆண்டிலிருந்து 1979-80ஆம் ஆண்டு வரையில் 3,38,303 மனைகள் வழங்குவதற்குரிய 21,431.75 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. இதில் 2,82,633 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை இந்நிலங்களைக் கையகப்படுத்து வதற்காக ரூ. 765.84 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இயன்ற வரையில் சாதி இந்துக்கள் வாழுகின்ற குடியிருப்புகளுக்கு அருகா மையிலேயே அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற் குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அரிசனங்கள் பழங்குடி மக்களுடன் கிறித்துவ சமயத்திற்கு மாறிய அரிசனங் களும் வீட்டு மனைகளைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களா வார்கள். இத்திட்டத்திற்காக 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>வீட்டு வசதி.</u>—தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் 1973-74 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இக்கழகம் தமிழ்நாடு முழுவதிலும் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின் கீழ் வீடுகளைக் கட்டித் தரும் பணியை மேற்கொண்டுள்ளது.

மீனவர்களுக்கும், அரிசனங்களுக்கும் வீடுகள் கட்டித்தருவதற்காக, 1979-80ல் தமிழ்நாடு அரிசன வீட்டு வளர்ச்சிக் கழகத்துடம் ரூ. 270 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. மீனவர்களுக்கும், அரிசனங்களுக்கும் வீடுகள் கட்டித்தரும் பொருட்டு, 1980-81 ஆம் ஆண்டிலும் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திற்காக ரூ. 320.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் 1980-81-ல் ரூ. 220 இலட்சம் அரிசன மக்களுக்கு வீடு கட்டுவதற்காக செலவிட கருதப்பட்டுள்ளது.

1976-77 ஆம் ஆண்டு வரையில் பின்பற்றப்பட்டு வந்த வடிவ அமைப்பின் கீழ் ஒவ்வொரு இல்லத்தின் கட்டிடப் பகுதியில் உட் பரப்பளவு 207 சதுர அடியாகும். அதாவது 10 சதவீத நிர்வாக செலவு உட்பட சமவெளிகளில் ஓர் இல்லத்திற்கு 4,000 ரூபாய் செலவாகும் என்றும், மலைப்பகுதிகளில் இல்லம் ஒன்றுக்கு 6,000 ரூபாய் செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இம்முறை 1980-81 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து பின்பற்றப்படும். இவ்வாண்டில் சுமார் 5,000 இல்லங்களை கட்டக் கருதப்பட்டுள்ளது.

<u>பெருக்குபவர்கள் துப்புரவுப் பணியாளர்களின் பணி நிலைமையை மேம்படுத்துதல்.</u>—சில நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் துப்புரவுப் பணியாளர்கள் மலத்தைத் தலை சுமையாக எடுத்துச் செல்லும் பழக்கம் இன்னும் நீடித்து வருவதுபற்றி இவ்வரசு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. இப்பழக்கத்தைப் படிப்படியாக ஒழிப்பதற்காக, துப்புரவுப் பணியாளர்களுக்குத் தள்ளு வண்டிகள், கையுரைகள், புதை காலணிகள், தட்டுகள், சுரண்டு கருவிகள் ஆகியவற்றை இலவசமாக வழங்குவது போன்ற திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. 1977-78 ஆம் ஆண்டில் 432 தள்ளு வண்டிகளும், 216 தட்டுகளும் சுரண்டு கருவிகளும் 1.76 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டன. இத்திட்டத்தை செயல்படுத்த 1979-80-ல் ரூபாய் 9,66,400 அனுமதிக்கப்பட்டது. எனினும் இந்த வசதிகளினால் பிரச்சினை ஓரளவுதான் தீர்ந்துள்ளது.

பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் நீரடிக் கழிப்பிடங்கள் கட்டப்படாத வரையில் அருவருக்கத்தக்க இந்தப் பழக்கத்திற்கு முடிவு கட்ட முடியாதென்று அரசிடம் வலியுறுத்திக் கூறப்பட்டது. இக்குறிக்கோளை எய்தும் பொருட்டு 1974-75 ஆம் ஆண்டில் செங்கற்பட்டு, தஞ்சாவூர், மதுரை மாவட்டங்களில் சாதாரணக் கழிப்பிடங்களை ஆராய்ச்சி-செயல் திட்டக் கழிப்பிடங்களாக (நீரடிக் கழிப்பிடவகை) மாற்றும் திட்டம் கொண்டு வரப்பட்டது. 1975-76 ஆம் ஆண்டில் இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட்டது. 1978-79 வரை நான்கு ஆண்டுகளில் 17.70 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. இம்மாவட்டங்களில் 7,623 சாதாரண கழிப்பிடங்கள் ஆராய்ச்சி-செயல் திட்டக் கழிப்பிடங்களாக மாற்றப்பட்டன.



<u>குடிநீர்க் கிணறுகள்</u>—

அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் நல்ல குடிநீர் வழங்குவதற்கென அரிசனக் குடியிருப்புகளில் குடிநீர்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன. ஒரு குடிநீர்க் கிணறு தோண்டுவதற்காகும் உயர் அளவு செலவு வரம்பு 5,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. குடிநீர்க் கிணறுகள் தவிர, அரிசனங்கள் பழங்குடி மக்களுக்காக ஆண்டு தோறும் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின் கீழ் நிலமட்ட நீர்த்தேக்கங்களும் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு நிலமட்ட நீர்த்தேக்கம் கட்டவும் ஆழ் கிணறு ஒன்று தோண்டவும் உயரளவு செலவு வரம்பு 10,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. சாதாரண திறந்த கிணறுகளுக்குப் பதிலாக இயன்ற அளவிற்கு துளைக் கிணறுகள் அமைக்கப்படும். அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் கிறித்துவ மதத்திற்கு மாறிய அரிசனங்களுக்கும் குடிநீர்க் கிணறுகள் அமைத்து கொடுப்பதற்காக 1980-81 ஆம் ஆண்டில் 29.18 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

<u>மின் வசதி</u>.—

அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்வசதி செய்து கொடுக்கும் வகையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் இழப்பைச் சரிக்கட்ட, ஒவ்வோராண்டும் அரசு இழப்பீட்டுத் தொகை வழங்குகிறது. இதற்கென்று 1957-58 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. புதிதாக உருவான அரிசனக் குடியிருப்புகள் தவிர ஏனைய அரிசனக் குடியிருப்புகளுக்கு (25,526) 1-4-1979 அன்றுள்ளவாறு மின்வசதி அளிக்கப்பட்டதென்றும், புதிய அரிசன குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிப்பது குறித்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்றும் சென்னை தமிழ்நாடு மின்வாரியத்தின் தலைமை பொறியாளர் தெரிவித்துள்ளார்.

<u>சமுதாய நலக் கூடங்கள்</u>—

அரிசனக் குடியிருப்பில் வாழும் மக்கள் திருமணம், கூட்டங்கள் முதலியன நடத்துவதற்கென்று அக்குடியிருப்புகளில் படிப்படியாக நிறைவேற்றும் திட்டங்களின் கீழ் 1971-72 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொன்றும் ரூபாய் 10,500 செலவில் சமுதாய நலக் கூடங்கள் கட்டித் தரப்படுகின்றன. 1974-75 ஆம் ஆண்டு முதல், ஒவ்வொன்றும் ரூபாய் 15,000 மதிப்பீட்டுச் செலவில் தற்போது சமுதாய நலக் கூடங்கள் கட்டப்படுகின்றன. இதற்கென 1980-81 ஆம் ஆண்டில் ரூபாய் 1.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சமுதாய நிலையங்கள்—**

அரிசனங்கள், அவர்தம் குழந்தைகள் ஆகியோரிடையே நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பரவச் செய்ய, ஆண் சமுகப் பணியாளர் ஒருவரும், பெண் சமூகப் பணியாளர் ஒருவரும் குற்றேவலர் (பெண்) ஒருவரும் கொண்ட 25 சமுதாய நிலையங்கள் இம்மாநிலத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. அவர்கள், தங்கள் தலைமையிடத்திலிருந்து 5 முதல் 8 கிலோ மீட்டர் வரையுள்ள கிராமங்களில் தீவிர பிரச்சாரம் செய்கின்றனர். குழந்தைகளுக்கு நீராட்டி, சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருக்கும் பழக்கத்தை அவர்கள் கற்றுக் கொடுக்கின்றனர். இந்நிலையங்களில் மதிய உணவும் பல வைட்டமின் சத்துள்ள மாத்திரைகளும் அரிசனக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. இக்குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 14 ரூபாய் செலவில் ஆண்டுக்கு இருமுறை உடைகளும் வழங்கப்படுகின்றன. இதற்கென 1980-81 ஆம் ஆண்டில் 3.70 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**துணி வெளுக்குமிடங்கள்—**

1978-79 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வண்ணார் சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்குத் துணி வெளுக்குமிடங்களை அமைத்துத் தரும் திட்டம் கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம், பேரூராட்சியில் செயற்படுத்தப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேலும் இரண்டு பேரூராட்சிகளில் மணவாளகுருச்சி, அருமனை துணி வெளுக்குமிடங்கள் கட்டித் தரப்பட்டன. 1980-81-ல் கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்திலும் துணி வெளுக்குமிடங்களை அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

**தீண்டாமை ஒழிப்பு—**

திருத்தி இயற்றப்பட்ட ''குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டம்'' 1976 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ஆம் தேதி முதற்கொண்டு செயலுக்கு வந்துள்ளது.

இச்சட்டத்தைச் செயற்படுத்துவதில் அரசுக்கு, ஆலோசனை நல்க, மாநில அளவில் அமைந்த குழுவை மீண்டும் அமைப்பது குறித்த செயற்குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளன.

இச்சட்டம் கண்டிப்பாகச் செயல்படுத்தப்படுவதை கவனித்துக் கொள்ள, காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவித் தரத்தில் காவல்துறை அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.



தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், மாவட்டங்களில் ஏற்கனவே ஆறு சுற்றுக்காவல் படைகள் இயங்கி வருகின்றன. செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தருமபுரி, சேலம், நீலகிரி, கன்னியாகுமரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் மேலும் ஏழு சுற்றுக் காவல் படைகளுக்கு 1979 ஜனவரித் திங்களில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவை, 1979ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் செயல்படத் தொடங்கின. ஒவ்வொரு சுற்றுக் காவல் படையிலும் காவல்துறை இன்ஸ்பெக்டர் ஒருவரும் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும் தலைமைக் காவலர் இருவரும் காவலர் இருவரும் இருப்பர்.

சுற்றுக் காவல் படைகள், 1972-ல் செயல்படத் தொடங்கி 30—4—1980 வரையில் 8,255 வழக்குகளைப் பதிவு செய்துள்ளன. இவற்றுள் 4,020 வழக்குகளில் நீதிமன்றம் தண்டனை வழங்கியுள்ளது.

தீண்டாமையை விரைவில் ஒழிக்கத் தூய்மையும் துப்புரவும் பெரிதும் துணைபுரிவதால், ஒவ்வொரு வட்டத்திலும் மிகவும் தூய்மையாக பராமரிக்கப்பட்டுவரும் அரிசனக் குடியிருப்பு ஒவ்வொன்றுக்கும், வானொலி பெட்டியை பரிசாக வழங்கும் திட்டமொன்றுள்ளது. இதற்கு 1980-81 ஆம் ஆண்டில் 0.60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை மாவட்டம் நீங்கலாக) தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடும் இரண்டு கிராமங்களுக்கு 2 பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் பரிசின் மதிப்பு 1,000 ரூபாயும், இரண்டாவது பரிசின் மதிப்பு 500 ரூபாயும் ஆகும். இதற்கென 1980-81ஆம் ஆண்டில் 0.23 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24-ம் தேதி முதல் 30 ஆம் தேதி வரை அரிசன வாரம் (தீண்டாமை ஒழிப்பு வாரம்) கொண்டாடப்படுகிறது. இந்த அரிசன வாரத்தில் தீண்டாமை ஒழிப்பினை மக்களின் கவனத்திற்கு கொண்டுவர மாநிலம் முழுவதும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. 1-7-1977 முதல் 31-12-1978 வரை அரிசனங்கள், பழங்குடி மக்கள் ஆகியோரின் நலனுக்காக அரிசன பழங்குடியினர் நலத்துறை எடுத்த நடவடிக்கைகளை விளக்கும் சிறப்பு வெளியீடு ஒன்று, 1978-79ல் அரசால் வெளியிடப்பட்டது.

1977 ஜூலை முதல் 1979 டிசம்பர் வரை அரிசன-பழங்குடியினர் நலத்துறை எடுத்த பல்வேறு நடவடிக்கைகளை விளக்கும் சிறப்பு வெளியீடு 1980 சனவரியில் நடைபெற்ற அரிசன வாரவிழாவில் வெளியிடப்பட்டது.

[1980 ஜூலை 22

## கலப்புத் திருமணங்கள்

சாதி-சமய வேறுபாடற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு ஊக்கமளிக்கும் ஒரு நடவடிக்கையாக, கலப்புத் திருமணங்கள் செய்து கொண்டுள்ள தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கும் திட்டம் 1968-69-ல் கொண்டுவரப்பட்டது. கிறித்துவ மதத்திற்கு மாறிய அரிசன மக்களுக்கு 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம் தேதி முதல் இத்திட்டம் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளது. தற்போது, கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் கீழ்காணப் பெறும் பரிசுகளும் சலுகைகளும் பெறத் தகுதியுடையவராவர்.—

1. 8 கிராம் (14 காரட்) எடையுள்ள தங்கப் பதக்கமும் பாராட்டுச் சான்றிதழும்.

2. தம்பதிகளின் ஆண்டு வருமானம் 6,000 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக இருந்தால், திருமணச் செலவு வகையில் 300 ரூபாயும், யாதொரு நாட்டுடமையாக்கப்பட்ட வங்கியில் தம்பதிகளின் பெயரில் கூட்டாக 5 ஆண்டுக்கால கெடுவைப்பீட்டுக் கணக்கில் முதலீடு செய்ய 4,000 ரூபாயும் அவர்களுக்கு வழங்கப்படும்.

3. கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியினருக்குப் பிறக்கும் குழந்தைகள் அபபெற்றோர்கள் அளிக்கின்ற உறுதி மொழிக்கு ஏற்ப தந்தையின் சாதியைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது தாயின் சாதியைச் சேர்ந்தவர்களாகவோ கருதப்படுவர். ஒரு குழந்தை தொடர்பாக அளிக்கப்படும் உறுதி மொழி இத் தம்பதியினரின் எல்லா குழந்தைகளுக்கும் பொருந்தும்.

4. 1979-80-ம் ஆண்டு முதல் புதுமுக வகுப்பு அளவின்கீழ், ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ். முதலாம் ஆண்டு பட்டப்படிப் பிற்காக, ஆறு இடங்கள், கலப்புத் திருமணத் தம்பதிகளின் குழந்தைகளுக்கென்று ஒதுக்கப்படுகின்றன.

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 31-3-1980 வரை 845 தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

இதற்காக, 1980-81-ம் ஆண்டில் ரூபாய் 1.30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## இறுதிச் சடங்குகளுக்கு தொகை கொடுத்தல்

அரிசனங்கள், பழங்குடி மக்கள், கிறித்துவ மதத்திற்கு மாறிய அரிசனங்கள் குடும்பத்தினரில் ஒருவர் இறந்துவிட்டால் இறுதிச் சடங்குகளுக்காக ரூபாய் 50 நிதியுதவி வழங்கும் திட்டத்



1980 ஜூலை 22]

திற்கு அரசு அனுமதியளித்துள்ளது. இக்குடும்பங்களின் எளிய
பொருளாதார நிலையையும் வறுமைச் சூழ் நிலையையும் கருத்
திற் கொண்டு ஒவ்வொரு ஈமக்கடனுக்கும் இந்த நிதியுதவியளிக்
கப்படுகிறது. 1979-80ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட
மதிப்பீட்டில் இதற்காக ரூபாய் 5.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு
இருக்க, இறுதி ஒதுக்கீட்டில், ரூபாய் 18,80,000 ஒதுக்கப்பட்டது.
இதற்காக, 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்ட மதிப்
பீட்டில் ரூபாய் 5.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## அரிசன குடியிருப்புகளின் மேம்பாட்டுத் திட்டங்கள் —

ஒருங்கிணைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் அரிசன குடியிருப்பு
களில் சாலை அமைத்தல், குடிநீர் வசதி செய்தல், இடுகாட்
டிற்கு செல்ல சாலை வசதி செய்தல் ஆகிய பணிகளுக்காக
1980-81-ல் ரூபாய் 75 இலட்சம் செலவு செய்ய திட்டமிடப்
பட்டுள்ளது.

## அரிசன வீட்டு வசதி மேம்பாட்டு வாரியத்தில் மூலதன முதலீடு—

அரிசன வீட்டு வசதி மேம்பாட்டு வாரியத்தில் பங்கு மூல
தனம் ஈடுபடுத்த ரூபாய் 100.00 இலட்சங்கள் 1980-81-ல் நிதி
ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## பழங்குடி மக்கள் நல்வாழ்வுக்கான சிறப்புத் திட்டம்—

1971 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி
இம்மாநிலத்தில் 3.11 இலட்சம் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர்
அவர்கள் ஆங்காங்கே பரவலாக வாழ்ந்து வருகின்றனர். தமிழ்
நாட்டில் 36 பழங்குடிவகையினர் வாழ்ந்து வருகின்றனர்.

பழங்குடி மக்கள் துணைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டதை
யடுத்து, அந்த மக்களின் மேம்பாட்டிற்கான பணிகளில் நல்ல
முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1976—77 ஆம் ஆண்டில் பழங்குடி
மக்கள் துணைத் திட்டத்தின்கீழ், வழக்கமான வரவு-செலவுத்
திட்ட நிதி ஒதுக்கீட்டிற்குமேல் ரூபாய் 1,01.82 இலட்சம்
கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டது. 1977—78, 1978—79 ஆம் ஆண்டு
களில் முறையே, ரூபாய் 144 இலட்சமும், ரூபாய் 168.84
இலட்சமும் செலவிடப்பட்டது. 1979—80 ஆம் ஆண்டிற்கு
ரூபாய் 254 இலட்சமும் ஒதுக்கப்பட்டது. 1980-81-ல் ரூபாய்
331.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பழங்குடி மக்கள் மேம்பாட்டுக்கான துணைத் திட்டத்தின்கீழ்
மின்சாரம், குடிநீர் வழங்கல், சிறுபாசனம், பழங்குடியினர் புது
வாழ்வும் அரசுப் பள்ளிகளில் சம்பந்தப்பட்ட [illegible]ங்களுக்கு,

[1980 ஜூலை 22

அரிசன–பழங்குடியினர் நல இயக்குநரின் திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்படுகின்றது. வரவு-செலவுத் வசதிக்கு ரூபாய் 12.00 இலட்சமும், 1980-81-ல் ரூபாய் 12.00 இலட்சமும், சிறுபாசனத்திற்கு குடிநீர் மின் சமும், பழங்குடியினர் புதுவாழ்வு ரூபாய் 3.22 வழங்குதலுக்கு 10.70 இலட்சமும் ஒதுக்கீடு செய்யக் அரசுப் பள்ளிகளுக்கு இலட் துறை சம்பந்தபபட்ட திட்டங்களுக்கான கருதப்பட்டுள்ளது. ரூபாய் களுக்கான துறைகளின் கீழ் பற்றுவைக்கபபடுகின்றன. செலவு அந்தந்த பிற மக்கள் மேம்பாட்டுக்கான துணைத் திட்டத்தின் கீழ் பணி திட்டங்களை, இரண்டு புதிய திட்டங்களின் கீழ் பழங்குடி மிகப்பண்டைய பழங்குடியினர் திட்டம், வராத வரும் பழங்குடியினர் திட்டம் ஆகியவற்றின் கீழ்) (அதாவது பரவலாக வாழ்ந்து திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கொள்ளத்

பொதுவான பொருளாதார வளர்ச்சித் திட்டத்திற்கு ஆதர வாக, பழங்குடியினர் நிலங்களைப் பழங் குடியினர் அல்லாதவர் களுக்கு உடைமையாக்குவதைத் தடுக்கவும் பழங்குடியினருக்குக் கடன் நிவாரணம் அளிக்கவும் தனிச் சட்டங்கள் இயற்றத் திட்ட மிடப்பட்டுள்ளது.

பல்வேறு திட்டங்களை உருவாக்குவதற்கும் பழங்குடியினர் குறித்து பிறகு ஆராய்ச்சிகளை நடத்துவதற்கும் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை அரசு அமைத்துள்ளது. பழங்குடியினர் துணைத் திட்டத் தின் கீழ் அனுமதிக்கப்பட்ட திட்டங்களைக் கண்காணித்து அவை செயற்படுத்தப்படும் விதம் குறித்து ஆராய இக் குழுவின் பணி யாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கக் கருதப்பட்டுள்ளது. இத்துணைத் திட்டத்தின்கீழ், திட்டங்கள் நிறைவேற்றுவதைப் பரிசீலனை செய்ய, முதமைச்சரைத் தலைவராகவும், அரிசன நல அமைச்சரைத் துணைத் தலைவராகவும் கொண்ட பழங்குடி யினர் மேம்பாட்டு அதிகார குழு மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு பழங்குடியினர் ஆலோசனைக் குழுவும் மாற்றி அமைக்கப்பட வேண்டியுள்ளது.

<u>அரிசனங்களுக்கும் பழங்குடியினருக்கும் இடம் ஒதுக்குவதற் கான விதி</u>—(1) <u>கல்வி நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளப் படுதல்</u>.—

மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி, ஏனைய தொழில் கல்வி நிறுவனங்கள் உட்பட, கல்வி நிறுவனங்களில் அரிசனங்களுக்கும் பழங்குடியினருக்கும் உரிய இடம் கொடுக்க, 18 சதவிகித இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

(2) <u>அரசுப் பணிகளில் நியமனம்</u>.—மாநில அரசுப் பணி களில் 18 சதவிகித இடங்கள், அரிசனங்களுக்கும் பழங்குடியின ருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறைத் தலைவரும் தலைமைச் ·செயலகத் துறைகளும் ஆண்டு தோறும் விவரக் கணக்கு ஒன்றை அனுப்ப வேண்டும் என்று வரையறுக்கப்பட்



1980 ஜூலை 22]

டுள்ளதன் மூலம், இட ஒதுக்கீடு குறித்த விதியை நியமன அதிகாரிகள் ஒழுங்காகப் பின்பற்றுகின்றனரா என்பது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அரசுப் பணிகளில் அரிசனங் களுக்கும், பழங்குடியினருக்கும் அளிக்கப்பட்டுள்ள பிரதிநிதித்து வம் குறித்து ஆராய, முதலமைச்சர் அவர்களை தலைவராகவும் அரிசன நல அமைச்சரைத் துணைத் தலைவராகவும் கொண்ட உயர் நிலைக் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது.

<u>கண்காணிப்புத் துணைக் குழு</u>.—பணியாளரைமப்பு நிர்வா கச் சீர்திருத்தத் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு ''உயர் அதிகாரக் கண்காணிப்புக் குழு'' ஒன்றை அரசு அமைத் துள்ளது, இது, உயர் நிலைக் குழுவின் நிலையான துணை குழுவாகும். அரிசனங்களுக்கும், பழங்குடியினருக்கும் இட ஒதுக்கீடு குறித்த விதிகளை பதவி உயர்வு, பதவி மாற்றல் மூலம் செய்யப்படும் அனைத்து நியமனங்களுக்கும் பொருந்தச் செய்வது பற்றிய செயற்குறிப்பை இக்குழு ஆராயும். மேலும் பல நிலை களில் செய்யப்படும் பணி நியமனங்களை மீண்டும் ஆராய்ந்து தற்போதுள்ள நிலையினை மதிப்பீடு செய்து, அரசுப் பணிகளில் அரிசனங்கள்—பழங்குடியினருக்குப் போதுமான பிரதிநிதித் துவம் கிடைப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வழிவகைகளைத் தெரிவிக்கும்.

<u>கொத்தடிமையிலிருந்து விடுதலை பெற்ற தொழிலாளர்களுக் குப் புதுவாழ்வு அளிக்கும் திட்டங்கள்</u>.—கொத்தடிமையிலிருந்து விடுதலைப் பெற்ற தொழிலாளர்கள் மீண்டும் அடிமைத்தளையில் வீழ்ந்து விடாமல் நல்வாழ்வு வாழ வகை செய்வதில் அரசு எப் போதும் ஆர்வம் காட்டி வருகிறது. இவர்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதற்கான திட்டங்கள் வகுக்கபபட்டு வருகின்றன. இது வரையில் தமிழ் நாட்டில் 2,883 கொத்தடிமைகள் உள்ள 2,271 குடும்பங்கள் 9 மாவட்டங்களில் கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்டு உள்ளனர். இவர்களில் 2,366 பேருக்கு ஏற் கனவே நிலம் வழங்கப்பட்டும், வேலை வாய்ப்பு அளித்தும், பயன்பாட்டுக் கடன் வேளாண்மைக் கடன்களும் வழங்கப்பட்டு உள்ளன. இன்னும் 517 பேர் இவ்வசதிகளைப் பெற்று புது வாழ்வு பெறவிருக்கின்றனர். இப்போதுள்ள திட்டங்களையும், மாவட்ட ஆட்சியருடனும், அரிசன-பழங்குடி மக்கள் நல இயக்கு நருடனும் கலந்தாலோசித்து மேலும் பல நல்ல திட்டங்களை வகுத்து அவற்றை பழங்குடி மக்கள் மேம்பாட்டு ஒருங்கிணைப்புத் திட்டம், மற்றும் மிகப்பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்துடன் செயல்படுத்தினால், கொத்தடிமையிலிருந்து விடுதலை பெற்ற தொழிலாளர்களின் சமூக பொருளாதார அந்தஸ்து உயரும் என்பதில் சிறிதும் அய்யமில்லையென அரசு கருதுகிறது.

31 ஆம் எண்ணுள்ள இம் மானியக் கோரிக்கையின் கீழ் 20.80 கோடி ரூபாய் (சாட்டிய செலவு உட்பட) செலவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதோடு, ஏனைய மூன்ற மானியக் கோரிக்கையின் கீழ் அரிசனங்கள், பழங்குடியினர் நலத்திற்காகச் செலவு செய்யக் கருதியுள்ள தொகை பற்றிய விவரங்கள் பின்வருமாறு—

| | ரூபாய் கோடியில் |
|---|---|
| மானியக் கோரிக்கை எண் 55 (பல்வகை மூலதனச் செலவு) | 4.19 |
| மானியக் கோரிக்கை எண் 56 (கடன்கள்) | 0.42 |
| மானியக் கோரிக்கை எண் 51—(பணிகள்) | 0.03 |
| மொத்தம் | 4.64 |

அரிசனங்கள், பழங்குடியினரின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்காக மேற் சொன்ன மானியக் கோரிக்கைகள் அனைத்தின் கீழும் மொத்தத்தில் 24.72 கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆகவே, இம்மாநிலத்தில் நல்வாழ்வு வாழ்ந்து வரும் ஏனைய மக்களைப் போல் அரிசனங்கள், பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த அரசு அயராது பாடுபட்டு வருகிறது.



## இணைப்பு I.

அரிசன-பழங்குடி மக்கள் நலத்துறை.

வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு 1980-81

(ரூபாய் ஆயிரத்தில்)

(2,46,825)

| தொடர் எண்ணும் திட்டத்தின் விவரங்களும் | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். **மத்தியஅரசும் மாநில அரசும் சமமாகப் பங்கிட்டுக் கொண்ட திட்டங்கள். | | மாநிலத் திட்டங்கள் | | திட்டத்தில் சாராதவை | | மொத்தம். | | பெரு மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அரிசனங்கள். | பழங்குடியினர். | அரிசனங்கள். | பழங்குடியினர். | அரிசனங்கள். | பழங்குடியினர். | அரிசனங்கள். | பழங்குடியினர். | |
| | 30,766 | 210 | 96,126 | 5,947 | 1,07,731 | 6,035 | 2,34,633 | 12,192 | 2,46,825 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. கல்வி— | | | | | | | | | |
| 1 படிப்புதவித்தொகைகள் | 10,312<br>19 | 58 | 3,935<br>56*<br>1<br>80(க)*<br>2,785(க) | 100 | 11,316<br>16,498<br>100(க) | 127<br>107 | 45,102 | 392 | 45,494 |
| 2 பள்ளிகள் .. .. | .. | .. | 142 | 162 | 29,695 | 1,916 | 29,837 | 2,078 | 31,915 |

இணைப்பு I—தொடர்ச்சி.

வரவு-செலவு திட்ட மதிப்பீடு—1980—81— தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 நண்பகல் உணவு .. | .. | .. | 176 | .. | 4,090 | .. | 4,266 | .. | 4,266 |
| 4 பள்ளிக்கூடங்களைக் கட்டுதல் பழுதுபார்த்தல் | | | 890 | 150 | 658 | 92 | 12,887 | 512 | 13,399 |
| 5 உடைகள் .. .. | .. | .. | 11,429 (மூ) 1,930 | 270 (மூ) .. | 5,967 | 126 | 7,897 | 126 | 8,023 |
| 6 பாடப் புத்தகங்கள், நோட்டுகள், எழுதுபலகைகள் பள்ளிச் சாதனைங்கள் ஆகியவற்றை வழங்குதல். | .. | .. | 2,607 | 90 | .. | .. | 2,607 | 90 | 2,697 |
| 7 ஆசிரியர்களுக்கு வீடுகள் | .. | .. | 169 | 165 | 15 | 7 | 184 | 172 | 356 |
| 8 சுற்றுலா .. .. | .. | .. | 21 | 3 | .. | .. | 21 | 3 | 24 |
| 9 பரிசுப் பொருட்கள் .. | .. | .. | .. | .. | 50 | .. | 50 | .. | 50 |
| 10 மாணவ இல்லங்கள் பராமரிப்புச் செலவுகள். | .. | .. | 557 | 39 | 26,181 | 2,946 | 26,738 | 2,985 | 29,723 |
| 11 மாணவர் இல்லங்கள் கட்டுதல். | 10,001** (மூ) | 50** (மூ) | 1(மூ) 10,125 (மூ) | 1 (மூ) | .. | .. | 20,127 | 51 | 20,178 |
| 12 பகுதி நேர சிற்றாசிரியர்கள் .. | .. | .. | .. | .. | 114 | 3 | 114 | 3 | 117 |
| 13 உணவு மானியம் .. | .. | .. | .. | .. | 725 | 117 | 725 | 117 | 842 |
| 14 தேர்வு முன் பயிற்சி நிலையங்கள். | 444** | .. | 1 | .. | .. | .. | 445 | .. | 445 |
| 15 தொழிற் பயிற்சிநிலையங்கள் கல்வி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிற்கு இழப்பீட்டுத்தொகை. | .. | .. | .. | .. | 1,385 | .. | 1,385 | .. | 1,385 |
| 16 கல்லூரி மாணவர்களுக்கான தனிப்பயிற்சி. | .. | .. | 100 | .. | .. | .. | 100 | .. | 100 |
| 17 திறமையான மாணவர்களுக்குப் படிப்புதவித்தொகை (பயிற்சி நிலையங்கள்) | .. | .. | .. | .. | 148 | .. | 148 | .. | 148 |
| 18 பட்டயக்கணக்கர்தேர்வுகள் | .. | .. | .. | .. | 10 | .. | 10 | .. | 10 |
| 19 தட்டெழுத்து, சுருக்கெழுத்துப்பயிற்சி. | .. | .. | 100 44* | .. | 294 | .. | 438 | .. | 438 |
| 20 திறமையான மாணவ-மாணவிகளுக்குத் தனிப்பயிற்சி. | .. | .. | .. | .. | 25 | .. | 25 | .. | 25 |
| 21 குழந்தைகள் நல நிலையங்கள் திறத்தல். | .. | .. | 748 | .. | .. | .. | 748 | .. | 748 |
| 22 அரிசன நலத்துறையின் கல்விப் பிரிவை வலுப்படுத்துதல். | .. | .. | 102 | .. | .. | .. | 102 | .. | 102 |
| 23 தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சிபெறும் அரிசனப் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி உதவித் தொகை. | .. | .. | 295 | .. | .. | .. | 295 | .. | 295 |
| மொத்தம்—கல்வி .. | 20,776 | 108 | 36,204 | 980 | 97,271 | 5,441 | 1,54,251 | 6,529 | 1,60,780 |

## இணைப்பு I—தொடர்ச்சி.

### வரவு-செலவு திட்ட மதிப்பீடு—1980—81—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| II. வேலைவாய்ப்பு—பொருளாதார முன்னேற்றம். | | | | | | | | | |
| 24. வேளாண்மை .. .. | .. | .. | 750<br>100* | 195 | .. | .. | 850 | 195 | 1,045 |
| 25. கூட்டுறவு .. .. | .. | 50** | 1 | .. | .. | .. | 1 | 50 | 51 |
| 26 பால்வழங்குக் கூட்டுறவுச் சங்கங்கள். | .. | .. | 1,048<br>100* | .. | .. | .. | 1,148 | .. | 1,148 |
| 27 குடிசைத் தொழில்கள் .. | .. | .. | 168<br>1* | .. | 264 | 87 | 433 | 87 | 520 |
| 28 பயிற்சி—உற்பத்தி நிலையங்கள் | .. | .. | .. | 64 | .. | .. | .. | 64 | 64 |
| 29 தொழில் நுட்பப்பயிற்சி பெற்றோர்க்கு உதவித் தொகை. | .. | .. | 300<br>42* | 25 | .. | .. | 342 | 25 | 367 |
| 30 பயிற்சி வேலை வாய்ப்பு பிரிவு(IV) | .. | .. | 100<br>55* | .. | .. | .. | 155 | .. | 155 |
| 31 தோட்டக் கலை .. .. | .. | .. | .. | .. | .. | 314 | .. | 314 | 314 |
| 32 சிறுதொழில்களுக்கான கடன் | .. | .. | 1,000<br>(க)<br>130*(க) | 50<br>(க) | .. | .. | 1,130 | 50 | 1,180 |
| 33 அலுவலகத் தேர்வுகளில் வெற்றிபெற சிறப்புப் பயிற்சி அளித்தல். | .. | .. | 2<br>1* | .. | .. | .. | 3 | .. | 3 |
| 34 முப்படைகளில் கமிஷன் பதவித்தரத்தில் நியமனம் பெற அரிசனங்களுக்கும் பழங்குடியினருக்கும் சிறப்புப் பயிற்சி அளித்தல். | .. | .. | .. | .. | 7 | .. | 7 | .. | 7 |
| 35 அரிசன பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மகளிருக்கு வானொலி தொலைக்காட்சிப் பெட்டிகளை இயக்குவதற்காக பயிற்சியளிக்கும் திட்டம். | .. | .. | 30 | .. | .. | .. | 30 | .. | 30 |
| 36 உடுமலைப்பேட்டை மலைவாழ் பழங்குடியினர் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்காக பணியாளர் குடியிருப்பு கட்டுதல். | .. | .. | .. | 35 | .. | .. | .. | 35 | 35 |
| மொத்தம்—II. வேலை வாய்ப்பும் பொருளாதார முன்னேற்றமும். | .. | 50 | 3,828 | 369 | 271 | 401 | 4,099 | 820 | 4,919 |
| III. சுகாதாரம், வீட்டுவசதி, ஏனைய திட்டங்கள். | | | | | | | | | |
| 37 வீட்டு வசதி .. .. | .. | .. | 32,000<br>1(க)<br>1(மூ) | 150 | .. | .. | 32,002 | 150 | 32,152 |
| 38 வீட்டு மனைகள் .. .. | .. | .. | 60(சா)<br>40<br>10,000 | .. | .. | .. | 10,100 | .. | 10,100 |
| 39 பொதுச் சுகாதாரம் .. | .. | .. | 3,552 | .. | .. | .. | 3,552 | .. | 3,552 |
| 40 குடிநீர்க் கிணறுகள் .. | .. | .. | 2,400<br>218* | 300 | .. | .. | 2,618 | 300 | 2,918 |

## இணைப்பு I—தொடர்ச்சி.

### வரவு-செலவு திட்ட மதிப்பீடு—1980—81—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 41 மருத்துவம் .. .. | .. | .. | .. | 25 | 97 | 193 | 97 | 218 | 315 |
| 42 மின்வசதி .. .. .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 | .. | 1 |
| 43 சாலைகள் .. .. .. | .. | .. | .. | 100 | .. | .. | .. | 100 | 100 |
| 44 விளம்பரம் .. .. | .. | .. | .. | .. | 33 | .. | 33 | .. | 33 |
| 45 தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்குப் பரிசு | .. | .. | .. | .. | 23 | .. | 23 | .. | 23 |
| 46 துப்புரவான அரிசன குடியிருப்புகளுக்குப் பரிசு | .. | .. | .. | .. | 60 | .. | 60 | .. | 60 |
| 47 சமுதாய நிலையங்கள் கூடங்கள். | .. | .. | 150 | .. | 370 | .. | 520 | .. | 520 |
| 48 கலப்புத் திருமணங்கள் .. | .. | .. | 130 | .. | .. | .. | 130 | .. | 130 |
| 49 தமிழ்நாடு பழங்குடியினர் வளர்ச்சி அதிகாரமன்றம் | .. | .. | .. | 1 | .. | .. | 1 | 1 | 1 |
| 50 துணி வெளுக்கும் துறைகள் கட்டுதல் | .. | .. | 20<br>20(க) | .. | .. | .. | 40 | .. | 40 |
| 51 துப்புரவு பணியில் ஈடுபட்டுள்ள அரிசனங்களுக்கு வீடுகள் கட்டுதலும், துப்புரவாளர்கள், சுத்தித் தொழிலாளர்கள் பணியை மேம்படுத்தலும். | .. | .. | 2 | .. | .. | .. | 2 | .. | 2 |
| 52 பழங்குடியினர் ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல். | .. | 51** | .. | .. | .. | .. | .. | 51 | 51 |
| 53 ஈமக் கடன்கள் செய்வதற்காக தொகை அளித்தல். | | .. | .. | .. | 500 | .. | 500 | .. | 500 |
| 54 அரிசன குடியிருப்பு பகுதிகளை மேம்படுத்தும் திட்டம். | .. | .. | 7,500 | .. | .. | .. | 7,500 | .. | 7,500 |
| 55 தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி மேம்பாட்டு கழகத்திற்கு மூலதனம்—முதலீடு. | 10,000**(மூ) | .. | .. | .. | .. | .. | 10,000 | .. | 10,000 |
| மொத்தம்—III. சுகாதாரம், வீட்டுவசதி ஏனைய திட்டங்கள். | 10,000 | 51 | 56,094 | 576 | 1,084 | 193 | 67,178 | 820 | 67,998 |
| V. பழங்குடியினர் பகுதிகள் துணைத்திட்டம். | | | | | | | | | |
| 56 பழங்குடியினர் மேம்பாட்டுக்கான துணைத் திட்டம் குறித்து முன்னோடி நடவடிக்கைக்காக வேளாண்மை மும்முர வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கான வல்லுநர் குழு. | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 57 பழங்குடியினரின் விடுதிகளுடன் கூடிய பள்ளிகளை திறத்தலும் பராமரித்தலும். | .. | .. | .. | 1,075 | .. | .. | .. | 1,075 | 1,075 |
| 58 பழங்குடியினர் கிராமங்களுக்கு நீர் வழங்கல் திட்டம். | .. | .. | .. | 1,200 | .. | .. | .. | 1,200 | 1,200 |
| 59 பழங்குடியினரின் கிராமங்களுக்கு மின்வசதித்திட்டம் | .. | .. | .. | 1,200 | .. | .. | .. | 1,200 | 1,200 |

## இணைப்பு I—தொடர்ச்சி.

### வரவு செலவு திட்ட மதிப்பீடு—1980—82—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 60 பழங்குடியினர் பகுதி துணைத் திட்டத்தின்கீழ் சிறுபாசனத் திட்டம். | .. | .. | .. | 322 | .. | .. | .. | 322 | 322 |
| 61 கல்வராயன் மலைகளுக்கான நிர்வாக அமைப்பை ஏற்படுத்தல். | .. | .. | .. | 180 | .. | .. | .. | 180 | 180 |
| 62 பழங்குடியினர் ஆராய்ச்சி வளர்ச்சி. | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 63 பழங்குடியினர் வளர்ச்சித் திட்டப் பகுதியில் "பெஞ்சு சர்வே" (Bench Survey) திட்டம். | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 64 தொன்மை பழங்குடியினர் மேம்பாடு. | .. | .... | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 65 பரவலாக வாழும் பழங்குடியினர் தொகுதிகள். | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 66 ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தொலை நோக்கர் இல்லம் கட்டுதல். | .. | .. | .. | 10 (1மு) | .. | .. | .. | 11 | 1 |
| மொத்தம் IV—பழங்குடியினர் பகுதிகளின் துணைத் திட்டம். | .. | .. | .. | 3,993 | .. | .. | .. | 3,993 | 3,993 |
| V. கொத்தடிமைகள் புதுவாழ்வுத் திட்டம். | | | | | | | | | |
| 67 கொத்தடிமைகள் புதுவாழ்வு | .. | 1 | .. | 1** | .. | .. | .. | 2 | 2 |
| 68 விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு வீட்டு வசதிக்கான உதவி. | .. | .. | .. | 8 | .. | .. | .. | 8 | 8 |
| 69 கொத்தடிமைகளுக்கான நிலக் குடியேற்றத் திட்டங்கள். | .. | .. | .. | 20 | .. | .. | .. | 20 | 20 |
| மொத்தம் V.—கொத்தடிமைகள் புதுவாழ்வு திட்டம். | .. | 1 | .. | 29 | .. | .. | .. | 30 | 30 |
| VI. நெறிப்படுத்தலும் நிர்வாகமும். | | | | | | | | | |
| 70 தலைமையிடம் மற்றும் மாவட்டப் பணியாளர்கள். | .. | .. | .. | .. | 9,103 | .. | 9,105 | .. | 9,105 |
| மொத்தம் VI.—நெறிப்படுத்தலும் நிர்வாகமும். | .. | .. | .. | .. | 9,105 | .. | 9,105 | .. | 9,105 |

2

(சாட்டப்பட்டது.)

* கிறித்துவ மதத்திற்கு மாறிய அரிசனங்கள்.

மத்திய அரசும், மாநில அரசும் சமமாக பங்கு கொண்ட திட்டங்கள்.

## இணைப்பு I—தொடர்ச்சி.

### வரவு செலவு திட்ட மதிப்பீடு—1980—81—தொடர்ச்சி.

**சுருக்கம்.**

(ரூபாய் ஆயிரத்தில்.)

| தொடர் எண் மற்றும் விபரங்கள். | மத்தியஅரசுப்பொறுப் பேற்கும் திட்டங்கள். **மத்திய மாநில அரசுகள் சம அளவில் செலவுப பொறுப்பேற்கும் திட்டங்கள். | | மாநிலத் திட்டங்கள். | | திட்டத்தில் சேராதவை. | | மொத்தம். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அரிசனங்கள். | பழங்குடியினர். | அரிசனங்கள். | பழங்குடியினர். | அரிசனங்கள். | பழங்குடியினர். | அரிசனங்கள். | பழங்குடியினர். | பெரு மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| I. கல்வி .. .. .. | 20,776 | 108 | 36,204 | 980 | 97,271 | 5,441 | 1,54,251 | 6,529 | 1,60,780 |
| II. வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு | .. | 50 | 3,828 | 369 | 271 | 401 | 4,099 | 820 | 4,919 |
| III. சுகாதாரம், வீட்டுவசதி, ஏனைய திட்டங்கள். | 10,000 | 51 | 56,094 | 576 | 1,084 | 193 | 67,178 | 820 | 67,998 |
| IV. பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம். | .. | .. | .. | 3,993 | .. | .. | .. | 3,993 | 3,993 |
| V. கொத்தடிமைகள் புதுவாழ்வுத் திட்டம். | .. | 1 | .. | 29 | .. | .. | .. | 30 | 30 |
| VI. நெறிப்படுத்தலும் நிர்வாகமும்—தலைமையக பணியாளர்கள்/மாவட்டப்பணியாளர்கள். | .. | .. | . | .. | 9,105 | .. | 9,105 | .. | 9,105 |
| | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | | | | | | | | | |
| சாட்டியது .. .. | .. | .. | 60 | .. | 2 | .. | 62 | .. | 62 |
| வருவாய் .. .. .. | 10,775 | 160 | 70,494 | 5,625 | 1,07,629 | 6,035 | 1,88,898 | 11,820 | 2,00,718 |
| மூலதனம் .. .. | 20,001 | 50 | 21,556 | 272 | .. | .. | 41,557 | 322 | 41,879 |
| கடன்களும் முன் பணங்களும் | .. | .. | 4,016 | 50 | 100 | .. | 4,116 | 50 | 4,166 |
| பெரு மொத்தம் .. .. | 30,776 | 210 | 96,126 | 5,947 | 1,07,731 | 6,035 | 2,34,633 | 12,192 | 2,46,825 |



## இணைப்பு II.

அரிசன நலப் பள்ளிகள் மாணவ மாணவியரின் மொத்த எண்ணிக்கை.

| தொடர் எண்ணும் மாவட்டமும். | தொடக்கப்பள்ளிகள். ஓராசிரியர் பள்ளிகள் உட்பட பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை. | மாணவர்கள். | மாணவிகள். | மொத்தம். | நடுநிலைப்பள்ளிகள். பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை. | மாணவர்கள். | மாணவிகள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 சென்னை .. .. .. .. | 5 | 2,101 | 2,331 | 4,432 | 1 | .. | 115 | 115 |
| 2 செங்கல்பட்டு .. .. .. .. | 105 | 13,832 | 12,570 | 26,402 | 18 | 2,248 | 1,540 | 3,788 |
| 3 வட ஆர்க்காடு .. .. .. | 156 | 11,058 | 10,302 | 21,360 | 4 | 1,239 | 1,064 | 2,303 |
| 4 தென் ஆர்க்காடு .. .. .. | 177 | 12,821 | 11,894 | 24,715 | 6 | 1,849 | 919 | 2,768 |
| 5 தஞ்சாவூர் .. .. .. .. | 154 | 8,098 | 7,959 | 16,057 | 7 | 1,398 | 1,154 | 2,552 |
| 6 திருச்சிராப்பள்ளி .. .. .. | 118 | 8,594 | 8,788 | 17,382 | 23 | 4,831 | 4,231 | 9,062 |
| 7 இராமநாதபுரம் .. .. .. | 24 | 1,817 | 1,474 | 3,291 | 3 | 273 | 87 | 360 |
| 8 மதுரை .. .. .. .. | 20 | 1,890 | 1,964 | 3,854 | 8 | 471 | 505 | 976 |
| 9 சேலம் .. .. .. .. | 12 | 814 | 661 | 1,475 | 2 | 474 | 386 | 860 |
| 10 தர்மபுரி .. .. .. .. | 8 | 363 | 365 | 728 | 2 | 559 | 405 | 964 |

## இணைப்பு II—தொடர்ச்சி.

அரிசன நலப் பள்ளிகள் மாணவ, மாணவியரின் மொத்த எண்ணிக்கை—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 11 கோயம்புத்தூர் (பெரியார் மாவட்டம் உட்பட). | 22 | 1,176 | 995 | 2,171 | 2 | 359 | 342 | 701 |
| 12 நீலகிரி .. .. .. .. | 5 | 106 | 110 | 216 | 2 | 317 | 219 | 536 |
